விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

தமிழ்த்தந்தி

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

★ விளம்பரங்கள்

★ வாழ்த்துகள்

மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:

Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 38 ஞாயிற்றுக்கிழமை 18.08.2019 Sunday 18th August 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com



13ஐ பிளஸ் (+) ஆக்குவதாகக் கூறி மைனஸ் (-) ஆக்கும் சிங்களத் தலைவர்கள்

முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரத்தியேக செவ்வி

ஒருகையால் கொடுத்து மறுகையால் பிடுங்கும் 13ஆவது திருத்தச் சட்டம் என்று அப்போது பேராசிரியர் பீரிஸ் கூறியிருந்தார்

மகாவலி அதிரசபை, தீவிநெகும போன்றவற்றால் படிப்படியாக சில மாகாண அதிகாரங்கள் பறிக்கப்பட்டன

மாகாணங்களுக்கு அதிகாரங்களை பிரித்தொதுக்கு வதாக கூறியதன் பிற்பாடு அவற்றிற்கு புறம்பான, அவற் றிற்கு முரணான வகையில் அந்தச் சட்டம் நிர்வகிக்கப் பட்டு வருகின்றது இன்றைக்கும்.

இவ்வாறு முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்விதமான ஒரு வருக்கு வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டீர்களானால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆதியோடு அந்தமாக

02 ஆம் பக்கம் பார்க்க

தற்போது தேர்தலில் நிற்கப்போகின்றவர்கள் தமிழ் மக்களின் உரித்துகளை தரமாட்டார்கள்

மத்தல விமான நிலைய வளர்ச்சிக்கு இந்தியாவுடன் கைகோர்ப்பு

மத்தல விமானநிலையத்தை வளர்ச்சிக்கு கொண்டுவரும் நோக் கில் இந்திய விமான நிலைய அதிகாரிகள், இலங்கை விமான அதிகாரிகள் கலந்துரையாடலில் ஈடு படுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசி ங்க அவர்கள் தீர்மானமெடுத்துள்ள தாக சிங்கள வாரப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இந்தியாவுடன் கைக்கோர்த்து மத்தல விமானநிலை யத்தை செயற்படுத்துவதற்கும் வளர்ச் சியடையச் செய்யும் நோக்குடனும் இந்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருப்பதாக பிரதமர் ரணில்

02 ஆம் பக்கம் பார்க்க

செப்.2 இற்குப் பின் எந்நேரமும் அறிவிப்பு வெளியாகலாம்

எதிர்வரும் செப்ரெம்பர் இரண் டாம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு எந்த நேரத்திலும் வெளியிடப்படலா மென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

02 ஆம் பக்கம் பார்க்க

தேர்தலுக்கு முன்னர் அனைத்து பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்க கோரிக்கை!

பட்டதாரிகளிடத்தில் பாகுபாடு காட்டாமல் தேர்தல் வருவதற்கு முன் னர் அனைத்துப் பட்டதா ரிகளுக்கும் நியமனத்தை வழங்க வேண்டுமென வடக்கு மாகாண பட்டதா ரிகள் பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக் கிரமசிங்க யாழ்.மாவட்ட செயலகத்திற்கு

02 ஆம் பக்கம் பார்க்க

2019 ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களுக்கு தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் தேவை!

வவுனியா காணாமல்போனோரின் உறவுகள் கோரிக்கை

ஜனநாயகத் தேர்தலில் தமி ழர் பங்கேற்க வேண்டும். சி ங்களக் கட்சிகளான ஸ்ரீலசு மற் றும் ஐதேக ஆகியவற்றுக்கு வாக்களிப்பது வீணானது என் பது வெளிப்படையானது. 2015 இல், சிறிசேனாவுக்கு வாக்க ளித்ததன் மூலம் வளர்ச்சி வழி யில் தமிழர்களுக்கு எதுவும் நடக்கவில்லை. உண்மையில் சிறிசேனாவின் கீழ் தமிழர்கள் இன்னும் பலவற்றை இழந்த னர். வடகிழக்கில் எதுவும் மாற வில்லை.

இவ்வாறு வவுனியாவில் உள்ள காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

உண்மையில், தமிழ்த்

02 ஆம் பக்கம் பார்க்க

இலஞ்ச ஊழலைத் தடுப்பதற்கு ஐந்து ஆண்டு வேலைத்திட்டம்

இலஞ்சம், ஊழல் என்ப வற்றை ஒழிப்பதற்காக 5 ஆண்டு செயற்றிட்டம் அமுலாவதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வின் தலைவர் சட்டத்தரணி சரத் ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சட்டங்கள் காலம் கடந்தவையாகும், 7 வரு டங்களின் பின்னர் இந்த சட்டம் திருத்தி அமைக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஆணைக்குழுவில் விளக்கம் அளிக்கும் பிரிவு ஒன்றும் ஸ்தா பிக்கப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் நாடளாவிய ரீதியில் விளக்கம் அளிக்கும் வேலைத் திட்டங்களும் அமுலாவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆண்குழந்தையின் சடலம் மீட்பு

க.கிஷாந்தன்

அட்டன் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வனராஜா தோட்டம் ஓர்லி பிரிவு பகுதியில் அமைந் துள்ள காசல்ரீ நீர்தேக்கத்திலி ருந்து 17.08.2019 அன்று காலை 10 மணியளவில் உடல் உருகுலைந்த நிலையில் ஆண் சிசுவின் சடலம் ஒன்று அட்டன் பொலி ஸாரால் மீட்டகப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மீனவர்கள் சிலர் மீன்

02 ஆம் பக்கம் பார்க்க

இன்னும் தீர்மானம் இல்லை!

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் பிரதான அரசியல் கட்சிகள் தமது வேட்பாளரை அறி முகப்படுத்தியதன் பின்னர் கட்சி என்ற வகை யில் தமது ஆதரவு எந்த குழுவினருக்கு என்று தீர்மானிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு இதனை அவர்

02 ஆம் பக்கம் பார்க்க

எதிர்வரும் அக்டோபரிலிருந்து விமான சேவைகள் ஆரம்பம்

எதிர்வரும் அக்டோபர் மாதத்திலிருந்து பலாலி சர்வதேச விமான நிலையத்திலிருந்து விமான சேவைகள் ஆரம்பிக்கப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழிற்கு விஜயம் செய்த பிரமர் ரணில் விக்கிரமசிங்க

02 ஆம் பக்கம் பார்க்க

தனியார் பேரூந்துகளில் ஆண்டுக்கு 240 கோடி ரூபா கப்பம்

தனியார் பேரூந்துகளில் பெறப்படும் கப்பம் நிறுத்தப்பட வேண்டி யது தொடர்பாகவும் இந்த ஆண்டு வரை யில் தீர்மானம் எடுக் கப்படாதது குறித்தும் தனியார் பேரூந்து உரிமையாளர்களிடம் ரூபாய் 240 கோடி அற வி ட ப் ப ட் டு ள்ள தாகவும் தனியார் பேரூந்து சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன அவர்கள் வுறி யுள்ளார்.

தனியார் பேரூந்துகளில் அறவிடப்படும் கப்பம் தொடர்பாக போக் கு வ ர த் து அ தி கா ரி களுக்கு தெரியப்படுத்தியும் இதுவரையில் எந்த நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை

02 ஆம் பக்கம் பார்க்க

காற்றின் வேகம் அதிகரிக்கும்

முல்லைத்தீவு தொடக்கம் திருகோணமலை ஊடாக பொத் துவில் வரையான கடற்பிராந்தி யங்களில் மணித்தியாலத்திற்கு 70 முதல் 80 கிலோமீட்டர் வரை காற்றின் வேகம் அதிக ரிக்கும் என வளிமண்டலவி யல் திணைக்களம் எதிர்வுகூறி யுள்ளது.

02 ஆம் பக்கம் பார்க்க

மகாசங்கத்திடம் உறுதியளிக்க வேண்டும்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் நாட்டின் இறை யாண்மையை பாதுகாப்பதாக மகா சங்கத்தின ரிடம் உறுதியளிக்க வேண்டும் என எல்லே குண வங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் அனைவரும் தமது தேர்தல் விஞ் ஞாபனத்தை உடனடியாக வெளியிட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன் றில் கலந்து கொண்டு அவர் இதனை தெரிவித் தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த எல்லே குணவங்ச தேரர், 13 ஆவது அரசியலமைப்பு காரணமாக பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதாக தெரிவித்திருந்தார்.

நெடுந்தீவு வைத்தியசாலைக்கு விரைவில் இரண்டு நவீன அம்பியூலன்ஸ் படகுகள்

யாழ். தீவகப்பகுதிகளிலி ருந்து நோயாளிகளை கொண்டு செல்வதற்காக 15 மில் லியன் ரூபா செலவில் அதிநவீன அம்பியூலன்ஸ் படகுகள் இரண்டை பெற்றுக் கொடுப்பதாக சுகாதார அமைச் சர் ராஜித சேனாரட்ண உறுதிய ளித்துள்ளார்.

02 ஆம் பக்கம் பார்க்க

முச்சக்கரவண்டி விபத்து - இருவர் பலி மூவர் பலத்த காயம்

க.கிஷாந்தன்

கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுவரெலியா உடபுஸ்ஸலாவ பிரதான வீதியில் எஸ்கடேல் தோட்டம் ஐஸ் பீலி என்றழைக்கப்படும் இடத்தில், சுமார் நூறு அடி பள்ளத்தில் முச்சக்கரவண்டி ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில், இருவர் உயிரிழந்துள்ளதுடன், 3 சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

17.08.2019 அன்று இடம்பெற்ற இந்த விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த ஐவரில் இருவர் பலத்த காயங்களுடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே, உயிரிழந்ததாக கந்தப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

வலப்பனை - மந்தாரநுவர - எலமுல்ல பிரதேசத்தைச் டி.பி.ரூபசிங்ஹ (வயது 50) ரோஹினி குமாரி (வயது 45) ஆகியோரே, இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவ்விருவரும் கணவன், மனைவியென விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

17.08.2019 அன்று எலமுல்லை பிரதேசத்திலிருந்து நுவரெலியாவை நோக்கி குறித்த முச்சக்கரவண்டியில் தாய், தந்தை, 06,16,19 வயதுடைய சிறுவன், சிறுமிகள் ஆகியோர் பயணித்துள்ளனர்.

முச்சக்கரவண்டியை தந்தை செலுத்தி வந்த நிலையில், கந்தப்பளை எஸ்கடேல் ஐஸ் பீலி என்ற இடத்தில் பிரதான பாதையை விட்டு விலகி 100 அடி பள்ளத்தில் பாய்ந்து இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையில் வீசிய கடும் காற்று காரணமாக பயன் தருமரங்கள் சேதம்; விவசாயிகள் கவலை

கந்தளாய் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் வீசிய கடும் காற்று காரணமாக விவசாயிகளின் தென்னை மற்றும் வாழைத் தோட்டங்கள் முறிந்துள்ளதாக விவசாயிகள்கவலை தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் கந்தளாய், கிண்ணியா,மூதூர்,தோப்பூர்,புல்மோட்டை போன்ற பகுதிகளில் நேற்று வெள்ளிக்கிழமை (16) மாலையிலிருந்து சனிக்கிழமை (17) காலை வரை கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக செய்கை பண்ணப்பட்ட தென்னம் தோட்டங்கள் மற்றும் வாழை தோட்டங்கள் முறிந்து விழுந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நீண்ட வரட்சியான கால நிலையின் பின்பு மழை பெய்துள்ளதோடு பலத்த காற்றும் வீசி பயிர்களுக்கு சேதத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு அரசாங்கம் தமக்கு நஷ்டஈட்டினை பெற்றுத்தர வேண்டும்எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முதூர் நகர் பகுதியில் வைத்து ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த மூன்று சந்தேக நபர்கள் கைது

கந்தளாய் நிருபர்

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூதூர் நகர் பகுதியில் வைத்து ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த மூன்று சந்தேக நபர்களை(17)கைது செய்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 40 மில்லி கிராம், 45 மில்லி கிராம்,70 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதோடு 35,26,22 வயதுகளையுடைய ஹெரோயின் வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

வட மாகாணத்தின் சமகால சுகாதார மேம்பாடுகளை அவதானிக்கும் முகமாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண வடக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்தார். இதன்போது அங்கு இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நெடுந்தீவு மாவட்ட மருத்துவமனை, நயினாதீவு மாவட்ட மருத்துவமனை, அனலைதீவு பிராந்திய மருத்துவமனை, ஊர்காவற்றுறை ஆரம்ப மருத்துவமனை மற்றும் வேலணை பிராந்திய மருத்துவமனை ஆகியவற்றின் சுகாதார மேம்பாட்டு திட்டங்களை ஆய்வுக்கு உட்படுத்தினார்.

நெடுந்தீவு மாவட்ட மருத்துவனையில் ரூ.18.2 மில்லியன் செலவில் அமைக்கப் பட்டுள்ள புதிய மகப்பேறு கிளினிக் கட்டடத் தொகுதி, ரூ.7 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டுள்ள நோயாளர் விடுதி, ரூ.2 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டுள்ள பிரேத அறை, ரூ.6 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டுள்ள வைத்தியர்களுக்கான வீட்டுத்திட்டம் என்பவற்றை இதன்போது சுகாதார அமைச்சர் பார்வையிட்டார். நெடுந்தீவில் 300 குடும்பங்களைச் சேர்ந்த 5,750 பேர் வசிக்கின்றனர். இவர்கள் இந்த வைத்தியசாலையிலேயே சிகிச்சையை பெற்றுக்கொள்கின்றனர்.

கடந்த சில வருடங்களாக வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகளை மேம்படுத்த அரசாங்கம் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. எமக்கு கிடைத்த வெளிநாட்டு நன்கொடைகளை வடக்கு மாகாணத்துக்கே அதிகமாக கொடுத்தோம். தீவகங்களில் வசிக்கும் மக்களின் சுகாதார சேவைகளை பலப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். மருந்துகளை தட்டுப்பாடின்றி பெற்றுக்கொடுக்குமாறு மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

தெற்கிலிருந்து இங்கு வந்தும் பணிபுரிபவர்கள் வடக்கில் பணிபுரிய மிகவும் விருப்பமென என்னிடம் கூறினார்கள். இது ஒரு நல்ல முன்னுதாரணமாகும். அரசாங்கத்தை முன்னெடுக்கும் அனைத்துத் திட்டங்களுக்கும் ஊழியர்கள் சிறந்த ஆதரவை கொடுக்கின்றனர்.

தீவகப்பகுதிகளில் அவசர நோயாளிகளை கொண்டு செல்வதற்காக 15 மில்லியன் ரூபா செலவில் நவீன அம்புலன்ஸ் படகுகள் இரண்டை நெடுந்தீவு வைத்திய சாலைக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தனியார்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

எனவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு தாக்கல் செய்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி இனிவரும் காலங்களில் கப்பம் பெறப்படுமாயின் தனியார் பேரூந்துகளை வழிநடத்தி செல்வது கடினம் எனவும் அவர் கூறினார்.

தனியார் பேரூந்து உரிமையாளர்கள் அக்கறையுடனும், பொறுப்பு நோக்குடனும் கடமையில் ஈடுபடுகின்றனர் எனவும் இவர்களுக்கு இந்த போக்குவரத்து அதிகாரசபை உறுப்பினர்கள் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கவில்லை எனவும் கெமுனு விஜே ரத்ன அவர்கள் கூறியுள்ளார்.

காற்றின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இந்த கடற்பிராந்தியங்களை பயன்படுத்தும் போது அவதானத்துடன் செயற்படுமாறு மீனவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டின் கிழக்கு கடற்பிராந்தியத்தில் வினைத்திறன் மிக்க மேகக்கூட்டம் விருத்தியடைவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது மணித்தியாலத்திற்கு 70 முதல் 80 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்காக முன்னிறுத்தப்படும் வேட்பாளர்களின் கொள்கை மற்றும் தூரநோக்கு தொடர்பில் உரிய வெளிவுப்படுத்தலை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

பலாலி விமான நிலையத்திற்கும் சென்றிருந்தார்.

இதன் போது அவருடன் விமான போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க உட்பட பலர் உடனிருந்தனர்.

இதன்போது அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே பலாலி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து எதிர்வரும் அக்டோபர் முதல் விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், அதற்கான பூர்வா அலுவலக வேலைகள் அடுத்த மாதம் முதல் இடம்பெறும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆண்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

பிடிக்க அப்பகுதிக்குச்செல்லும் வேளையில் குறித்த நீர்தேக்கத்திலிருந்து சடலம் ஒன்று மிதப்பதை கண்டுள்ளனர்.

இதனையடுத்து அட்டன் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய தகவலையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தினை மீட்டுள்ளனர். சிசு யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

பிரேத பரிசோதனைக்காக சிசுவின் சடலம் அட்டன் கிளங்கன் மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை அட்டன் பொலிஸாரும், கைரேகை பிரிவினரும் இணைந்து மேற் கொண்டு வருகின்றனர்.

மத்தல...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

மத்தல விமானநிலையத்தை வளர்ச்சிக்கு கொண்டுவருவது மாத்திரமன்றி கதிர்காமத்திற்கு வருகை தரும் இந்திய யாத்திரிகளுக்கும் உதவியாக அமையக் வுடும் என்றும் இது நாட்டிற்கும் இலாபத்தை இஈட்டும் நோக்குடனும் இதனை செயற்படுத்துவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விக்ரமசிங்க இதனை தெரிவித்துள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

தேசியக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் சிறினோ, ஜனாதிபதியான பின்னர், அவர் உயிர் உள்ள வரை, இலங்கையில் வடகிழக்கு இணைப்பு அல்லது கூட்டாட்சி அரசியலமைப்பை ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன் என்று கூறியுள்ளார்.

இந்த ஜனாதிபதி தமிழர்களிடம் பொய்யுரைத்துக்கொண்டே இருக்கிறார், ஆனால் இந்த ஜனாதிபதியால் கூட்டமைப்பு மட்டுமே நன்மை அடைந்தது.

இப்போது ஜனாதிபதித் தேர்தலைக் கையாள தமிழர்கள் புதிய யோசனைகளைக் கொண்டு வர வேண்டும். நாம் புறக்கணித்தால், ஜனநாயக வழிமுறையில் பங்கேற்காததற்கு மேற்கு நாடுகள் தமிழர்களைக் குறை கூறும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் பங்கேற்பதன் மூலம், நாங்கள் எங்களை பலப்படுத்துகிறோம், நமது ஜனநாயக விழுமியங்களை நமக்குள் வைத்திருக்கிறோம். நாங்கள் ஐதேக அல்லது ஸ்ரீலசுக்கு விலைபோகவில்லை என்று சர்வதேசத்திடம் கூறுகின்றோம். வலுவான வழியில், நாங்கள் எங்கள் இறையாண்மை தேவை என்று சொல்கிறோம்.

எனவே, வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு தமிழ் வேட்பாளரை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

பின்வருவன பற்றி நாங்கள் சிந்திப்பதற்கான சிறந்த விடயம்:

1. தமிழர்களின் அரசியல் தேவைகளை சரியாக வெளிப்படுத்தக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் பங்கேற்க எங்களுக்கு இளம் தமிழர் தேவை.

2. ஜனாதிபதி பிரச்சாரத்திற்காக காங்கேசன்துறையில் இருந்து கல்முனை வரை அடிக்கடி பயணிக்க முடிந்த தமிழர் தேவை.

3. தென் சூடான், கொசோவோ, போஸ்னியா, கிழக்கு திமோர் போன்ற புதிதாக உருவான நாடுகளின் கடந்தகால அரசியலைப் புரிந்து நடந்து கொள்ளக்கூடியவர் தேவை.

4. வடகிழக்கில் தமிழர்கள் ஆட்சியின் விழிப்புணர்வையும் பயனையும் தமிழ் மக்களுக்கு புரியவைக்க கூடியவர் தேவை.

5. தமிழர்களின் இறையாண்மையின் முக்கியத்துவத்தையும் தமிழர்களின் தேசியவாதத்தையம் மீண்டும் கொண்டுவர கூடியவர் தேவை.

6. தந்தை செல்வாவின் கீழ் நாம் அனைவரும் கொண்டிருந்த அரசியல் கலாச்சாரத்தை கொண்டு வரக்கூடியவர் தேவை. அதாவது நேர்மை மற்றும் நற்பெயர் கொண்ட, உண்மைத்தன்மை, ஊழல் அல்லாதவை உள்ளவர் தேவை.

6. அவருக்கு வாக்களிக்க தமிழர்களிடையே ஒரு உற்சாகத்தை கொண்டு வர கூடியவர் தேவை. தமிழ் ஜனாதிபதி வேட்பாளரை தமிழர்கள் நேசிக்க வேண்டும்.

7. சர்வதேச சமூகங்களுடன் பேச சரளமாக ஆங்கிலம் பேச கூடியவர் தேவை

8. தமிழர்களின் அரசியல் தேவைகளில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்க கூடியவர் தேவை.

தமிழர்கள் உலகிற்கு தமக்கு ஏன் சுய ஆட்சி வேண்டியதன் அவசியத்தை அம் பலப்படுத்த நாம் ஜனாதிபதி பிரச்சாரத்தைப் பயன்படுத்தவேண்டும்.

சிங்களவர்களிடமிருந்து தமிழர்கள் வேறுபட்டவர்கள் என்பதை அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் காட்ட இந்த தேர்தல் ஒரு நல்ல நேரம். தமிழர்கள் தனியாக வாழ விரும்புகிறார்கள் என்பதை ஒரு தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் காண்பிப்பார். தமிழர்கள் தங்கள் சுய ஆட்சியில் ஆர்வம் காட்டுபவர்கள்.

முதலில், தமிழர்களின் வாக்குகளை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிறுத்த வேண்டும். ஜனாதிபதி வேட்பாளரிடமிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பணம் சம்பாதிக்கிறது. இது இரண்டு முறை நடந்தது.

கடந்த இரண்டு இலங்கை ஜனாதிபதித் தேர்தல்களில், தமிழர்களை அரசியல் விபச்சாரிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்தியது.

2019 ஜனாதிபதித் தேர்தலில் எங்களுக்கு ஒரு தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் தேவை, எனவே இந்த வேட்புமனுக்காக மணிவண்ணன் அல்லது காண்டீபன் ஆகியோரை நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

தேர்த...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

சென்றிருந்த வேளையில், பட்டதாரி நியமனங்கள் அனைவருக்கும் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக வட மாகாண பட்டதாரிகள் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அருகில் கூடியிருந்தனர்.

இந்நிலையில், பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் சிலரை வரவழைத்து பிரதமர் சில நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதன்போது மகஜர் ஒன்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

சந்திப்பு தொடர்பாக கருத்துத் தெரிவித்த வட மாகாண பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள், வேலையற்ற பட்டதாரிகள் அரசுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் அல்ல. பட்டதாரிகளில் உள்வாரி வெளிவாரி என்ற பகுபாடு எதற்கு? இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் அரசின் உடமை, பின்பு எதற்கு வேறுபாடு. இதுவரை பட்டம் பெற்றவர்களுக்கு தேர்தல் அறிவிப்புக்கு முன்னர் நியமனங்களை வழங்குங்கள்.

முன்னைய அரசு 50 அல்லது 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கிய வரலாறு உண்டு. அவர்களை கொடுங்கோல் ஆட்சியாளர்கள் என்று கூறுகின்றீர்கள். இந்த அரசில் தமிழ் அமைச்சர்களும் இருக்கிறார்கள். நியமனம் வழங்கப்பட்டவர்கள் தவிர எஞ்சிய சொற்பமானவர்களே உள்ளனர்.

இந்த நியமனத்தை வழங்காது விட்டால், அரசின் தலைவிதியை மாற்றும் வல்லமை மாணவர்களிடம் உள்ளது என்பதை மறவாதீர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

செப்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் எதுவும் அரசாங்கத்துக்கு இல்லை.

எவர் என்ன திட்டத்தை தீட்டினாலும், அரசியலமைப்பின் படி இந்த ஆண்டு செப்ரெம்பர் 02 ஆம் திகதி முதல் டிசம்பர் 08 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டியது அவசியம்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்றால் எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி வரை பதவியில் இருக்க முடியும்.

மாறாக வேறு கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற்றால், அவர் உடனடியாகவே நிறைவேற்றுத் தலைவராக பதவியேற்க முடியும், என்று அவர் மேலும் கூறினார்.

ஜனாதிபதி தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதிக்குப் பின்னர் எந்த நாளிலும் அறிவிக்க முடியும். மற்றும் டிசம்பர் 8 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். தற்போதைய ஜனாதிபதியைத் தவிர வேறு எந்த வேட்பாளரும் தேர்தலில் வெற்றி பெற்றால், ஜனாதிபதி சிறிசேன தனது ஜனாதிபதி பதவிக்கான பல வாரங்களை இழக்கும் வாய்ப்பு உள்ளது. இந்த அரசியலமைப்பு நிலைப்பாடுகள் அரசியலமைப்பில் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் மேலும் கூறினார்.

13ஐ..

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

உணர்ந்து மனிதாபிமான முறையிலே அவர்களுக்கு உரியதான தீர்வை நியாயமான முறையில் கொடுக்கக்கூடிய ஒரு வருக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்.ஆனால் அவ்வாறனவர்கள் தேர்தல் களத்தில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அது மகிந்தவாக இருந்தால் என்ன, கோத்தாவாக இருந்தால் என்ன, ரணிலாக இருந்தால் என்ன, சஜித்தாக இருந்தால் என்ன அவர்கள் எந்தக் காலத்திலும் தமிழர்களுடைய நியாயமான கோரிக்கைகளை செவிமடுக்க மாட்டார்கள். அவர்களுக்கான தீர்வையும் தரமாட்டார்கள். காரணம் சிங்கள மக்களிடையே பல வருடங்களாக நச்சுத் தன்மையைப் பாய்ச்சியிருக்கின்றார்கள் சிங்கள அரசியல் தலைமைகள். இந்த நாடு சிங்கள பௌத்த நாடு, நாங்கள்தான் இந்த நாட்டிற்கு உரித்தாளிகள், தமிழர்கள் வந்தேறு குடிகள், அவர்கள் தமக்கு உரியதான உரிமைகளிலும் பார்க்க கூடக் கேட்கின்றார்கள், அவர்களுக்கு எதனையும் கொடுக்கக் கூடாது. நாங்கள் கொடுப்பதனை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனையில் வளர்ந்த வர்கள்தான் இப்பொழுதிருக்கும் சிங்களத் தலைவர்கள் அல்லது கட்சித் தலைவர்கள்.

இவ்வாறானவர்கள் அரசியலில் இருக்கும் வரையில், தமிழ் மக்கள் தங்களுடைய எந்தவிதமான பாரம்பரிய உரித்துக்களையும் நியாயமான உரித்துக்களையும், சட்ட ரீதியான உரித்துக்களையும், பெற முடியுமென்பது எதிர்பார்ப்பது முட்டாள்தனமென்றுதான் நான் சொல்லுவேன்.

ஆகவே அவர்கள் யாராக இருந்தாலும் நாங்கள் வேண்டுமென்றால், எங்களின் மனோ நிலையைப் பிரதிபலிப்பது போன்று ஒரு மூன்றாவது நபருக்கு அதாவது, தேர்தலில் கட்சிரீதியான இருவரையும் தவிர்த்து, யாராவது ஒரு மூன்றாவது நபருக்கு நாங்கள் வாக்களித்து, வாக்களித்த மக்களின் தொகையை அதிகரித்து அந்த இருவருமே ஐம்பது சதவீத வாக்குகளைப் பெறாமல் நாங்கள் எடுத்துக் காட்டலாம்.

அதாவது மக்களின் எதிர்பார்ப்புக்கு குறைந்த எதிர்பார்ப்பை உடையவர்தான் அந்தத் தேர்தலில் வெற்றி கொள்ளக்கூடிய தாக இருக்குமாறு எடுத்துக்காட்டும் விதத்தில் நாங்கள் நடந்து கொள்ளலாம்.

தற்போது தேர்தலில் நிற்கப்போகின்றவர்கள் என்று கூறப்படுகின்றவர்கள் எவருமே தமிழ் மக்களின் நியாயமான உரித்துக்களை தரமாட்டார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து.

1987ஆம் ஆண்டிலே இந்திய- இலங்கை உடன்பாடு எழுதிய அந்தக் கால கட்டத்திலே எம்முடைய தமிழ்த்தலைவர்கள், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் மற்றும் இரா.சம்பந்தன் ஆகியோர் இந்தியப் பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தில் நீங்கள் தரப்போவதாகக் கூறும் அதிகாரங்கள் எந்தவிதத்திலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப்போவதாக இல்லை என்று. அது எல்லா விதத்திலும் குறைபாடுடையது என்று கூறினார்கள். அதற்குப் பின்னர் கூட இதனுடைய குறைபாடுகள் எடுத்துக் கூறப்பட்டன எப்படியென்றால், ஒருகையால் தந்து மறுகையால் எடுப்பதுபோன்று இந்தச் சட்டம் இருக்கின்றது என்று அப்போது எங்களால் மதிக்கப்பட்ட பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்கள் கூடக் கூறியிருந்தார்.

ஆகவே அவ்வாறானஒரு குறைந்த எமக்கு வலுவான அதிகாரங்களைத் தராத, ஆளுனருக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் கூடிய உரித்துக்களையும் உள்ளீடுகளுக்கு சந்தர்ப்பங்களையும் வழங்கக்கூடிய அந்தச் சட்டத்தை அவர்கள் தந்ததன் பின்னர் 1992ஆம் ஆண்டில், முக்கியமான சிலரை எங்களின் ஆதிக்கத்திலிருந்து வெளியே எடுத்தார்கள். மத்திய அரசாங்கத்தின் ஆளுமைக்குள் கொண்டுவந்தார்கள். அதாவது, அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர்கள், கிராம சேவகர்கள். இவர்கள் எல்லோரும் தற்போதும் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருகின்றார்கள். உண்மையில் 87இல் எங்களின் அதிகாரத்தின் கீழ் இருந்தவர்கள்.

இதற்குப் பின்னர் 1979ஆம் ஆண்டில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை முழு நாட்டிற்கும் உரியதாக சில சட்டங்களை ஏற்படுத்தியிருந்தது. 87ஆம் ஆண்டு 13ஆம் திருத்தச்சட்டத்திற்கு முன்னர். அதே உரித்துக்களை தற்போதும் அவர்கள் தொடர்ந்தும் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதாவது, மாகாணங்களுக்கு அதிகாரங்களை பிரித்தொதுக்குவதாக கூறியதன் பிற்பாடு அவற்றிற்கு புறம்பான, அவற்றிற்கு முரணான வகையில் அந்தச் சட்டம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது இன்றைக்கும்.

கடந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட திவிநெகும மூலம் முன்னர் இருந்த அதிகாரங்களையும் தான் எடுத்துக் கொள்வதாக அமைகின்றது. மகாவலி அதிகார சபை முன்னர் இருந்தமாதிரி தொடர்ந்து நடைபெறுவதால், இங்கு கொண்டு வந்து மக்களைக் குடியேற்றும் பொழுது, முழுஇலங்கையின் மக்கள் செறிவின்படி, அந்த சதவீதத்தின் அடிப்படையிலேயே சிங்கள மக்களை வடமாகாணத்திலே குடியமர்த்தியிருந்தார்கள். அவ்வாறான பல சட்டங்களின் மூலமாக, வேறு சட்டங்களும் இருக்கின்றன. தொல்பொருள் சம்பந்தமான சட்டங்கள், கனிவளம் சம்பந்தமான சட்டங்கள். இவ்வாறு பலவிதமான சட்டங்கள் நாடுமுழுவதற்குமான சட்டங்களாக கொண்டு வரப்பட்டவை. தற்பொழுது மத்திய அரசாங்கத்திற்கு சட்டமாக நடைமுறைப்படுத்தப் படுகின்றதேயொழிய மாகாணத்திற்கு உரிய உரித்துக்கள் எந்தவிதத்திலும் கவனத்திற்கு எடுக்கப்படவில்லை. இதுதான் இன்றைய நிலை இதற்காகத்தான் நாங்கள் பலவிதத்திலும் போராட வேண்டி வந்தது.

ஐம்பது வருடங்களுக்கு பின் தென்னமரவடி வரசித்தி விநாயகருக்கு மஹாகும்பாபிஷேகம்

சேனையூர் நிருபர்

கடந்தகால யுத்தத்தின் போது அழிவடைந்த திருகோணமலை, தென்னமரவடி அருள் மிகு வரசித்தி விநாயகர் கோவிலின் புனராவர்த்தன பஞ்சகுண்டபக்சஷ அசஷ்டபந்தன நூதன பிரதிசஷ்டா மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெரும் சாந்தி விழா ஐம்பது வருடங்களுக்கு பின் 28-08-2019 புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரையுள்ள கன்னி லக்கினத்தில் வரலாற்று சிறப்பு மிக்க மஹா கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 27-08-2019 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பக்தர்கள் சுவாமிக்கு எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 27, 28 ம் திகதிகளில் விசேட போக்குவரத்து புல்மோட்டையிலிருந்து கோவில் வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மஹா கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதம குருவாக திருகோணமலை, உவர்மலை கண்ணகி அம்மன் கோவிலின் பிரதமகுரு சிவஸ்ரீ சுந்தரசாந்தமூர்த்தி குருக்கள் கிரியைகளை நடாத்துவார். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும்.

அட்டன் - டயகம பிரதான வீதி தாழிறக்கம்

க.கிஷாந்தன்

அட்டனிலிருந்து போடைஸ் வழியாக டயகம செல்லும் பிரதான வீதியில் அக்கரபத்தனை எல்பியன் பகுதியில் பிரதான வீதி தாழிறக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியினூடான போக்குவரத்து ஒருவழி போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் ஆங்காங்கே மண் திட்டுகள் சரிந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனால் பொது மக்களை அவதானமாக செயற்படுமாறுகோரப்பட்டுள்ளது.

தாழிறக்கம் ஏற்பட்ட பகுதியை சீரமைப்பதற்கு அக்கரப்பத்தனை பிரதேச சபையின் ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் சீரமைக்கும் வரை அவ்வீதியினூடாக பயணங்களை மேற்கொள்ளும் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் செல்லுமாறும், கனரக வாகனங்களை அவ்வீதியினூடாக செலுத்த வேண்டாம் எனவும்பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அத்துடன் இந்த பகுதி மேலும் தாழிறங்கும் அபாயம் இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அம்பாறையில் மழை

கடந்த பல மாதங்களாக வரட்சியான காலநிலை நிலவி வந்த வேளையில் அம்பாறை மாவட்டத்தில் பரவலாக வெள்ளிக்கிழமை (16) மாலை முதல் திடீரென பெய்து வருகின்றது.

இம்மாவட்டத்தின் பெரும் பாலான பகுதிகளில் மாலை பெய்த பலத்த மழையின் காரணமாக தாழ் நிலப் பகுதிகள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளன. கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வரட்சி நிலவியால் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கினர்.அம்பாறை மாவட்டத்தில் வரட்சி நீடித்ததால் விவசாயச் செய்கை மேட்டு நிலப் பயிர்ச் செய்கை போன்றன வெகுவாகப் பாதிக்கப்பட்டன. நீர் நிலைகள் வற்றி வரண்டு காணப்பட்டன. குடிநீருக்காக சில பிரதேச மக்கள் நீண்ட தூரம் சென்று குடிநீர்த் தேவையை பூர்த்திச் செய்தனர்.

கால் நடைகள் நீரின்றி பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தன. போதிய மழை வீழ்ச்சி மற்றும் நீர் நிலைகளில் போதிய நீர் இன்மையால் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாயச் செய்கையை இம்மாவட்ட மக்கள் கைவிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

போடைஸ் தோட்ட மக்களுக்கு வீடுகள் அமைப்பத்தில் இழுபறி

க.கிஷாந்தன்

அட்டன் டிக்கோயா போடைஸ் தோட்டத்தில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக 24 வீடுகள் முற்றாக தீக்கிரையாகின.

இத்தீவிபத்து காரணமாக அம் மக்கள் அனைத்து உடைமைகளையும் இழந்து 20 குடும்பங்களைச் சேர்ந்த 108 பேர் நிர்கதி நிலைக்கு தள்ளப்பட்டனர்.

அதனை தொடர்ந்து நாட்டின் பல பாகங்களிலிருந்து அவர்களுக்கு நிவாரண உதவிகள் பெற்றுக்கொடுக்கப் பட்டன. அதனை தொடர்ந்து தோட்ட நிர்வாகமும், இராணுவமும் இணைந்து இவர்களுக்குபோடைஸ் விளையாட்டு மைதானத்தில் தற்காலிக கொட்டில்கள் அமைத்து கொடுக்கப்பட்டன.

குறித்த கொட்டிலகள், கட்டிக்கொடுத்து எட்டு மாதங்கள் கடந்த நிலையில் அவர்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுப்பதில் இழுபறி நிலவுவதாக அங்கு வாழும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

தோட்ட நிர்வாகம் இவர்களுக்குரிய காணிகளை சுமார் ஐந்து கிலோமீற்றர் தொலைவில் அமைத்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இதனால் தங்கள் பிள்ளைகள் படிப்பதற்கும் நகரங்களுக்கு செல்வதென்றாலும்,வைத்தியசாலைக்கு செல்வதென்றாலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தோட்டத்தில் வீடுகளை கட்டுவதற்கு எவ்வளவோ பொருத்தமான இடங்கள் இருக்கின்ற போதிலும் அதனை வழங்காது. பல்வேறு சாக்கு போக்குகளை சொல்லி தோட்ட நிர்வாகம்தட்டிக்கழிப்பதாகவும்,இது குறித்து பொறுப்பு வாய்ந்தவர்கள் மௌனம் காத்துவருவதாகவும் இவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

தற்போது அமைத்து கொடுக்கப்பட்டுள்ள கொட்டில்களுக்கு மழை நேரங்களில் வீட்டினுள் தண்ணீர் கசிவதனால் படுக்கவும் முடியாது. பலர் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

ஒரு சிலரின் வீடுகளின் மூங்கில்கள் இத்துப்போய் கொட்டில்களும் உடைந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக குறித்த மூங்கில் களிலிருந்து தூசிகள் கொட்டுவதாகவும் அவற்றிருந்து வண்டுகள் உருவாகிதமக்கு சாப்பிட கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கொட்டில்களில் கடும் குளிர் காரணமாக பலர் கை குழந்தைகள் சிறுவர்களை வைத்து கொண்டு சொல்லொண்ணா துயரங்களை அனுபவித்து வருவதாகவும் இவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட 20 குடும்ங்களைச் சேர்ந்த 108 பேரில் பாடசாலை மாணவர்கள் 25 பேர் அடங்குவதாகவும் இம்முறை உயர்தர பரீட்சைக்கு இருவரும்,க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு ஒரு இந்தகொட்டில்களிலிருந்தே தங்களது கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது இடர்படுவதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் வெகுசன தொடர்பு அதிகாரி பழனி விஜயகுமாரிடம் கேட்ட பொழுது,

போடைஸ் தோட்டத்தில் தீயினால் பாதிக்கப்பட்டு தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு கட்டாயமாக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். இதற்காக தோட்ட அதிகாரி மற்றும் மனிதவள அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் கவனத்திற்கு எமது அமைச்சு கடிதம் மூலம் கொண்டு வந்துள்ளது.

இருந்த போதிலும் அத்தோட்டத்தில் மக்களுக்கு வீடுகள் அமைத்து கொடுக்க ஒதுக்கப்பட்ட இடத்தை அம்மக்கள் நிராகரித்துள்ளனர்.

அதேசமயத்தில் குறித்த ஒரு இடம் தோட்ட நிர்வாகம் வழங்கும் பொழுது அவ்விடம் வீடுகள் அமைப்பதற்கு உகந்ததா என தேசிய கட்டிட ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் ஊடாக உறுதி செய்யுமாக இருப்பின் உடனடியாக அங்கு வீடுகளை அமைத்து கொடுப்பதில் எமக்கு தயக்கம் இல்லை.

ஆனால் அங்கு பாதிக்கப்பட்ட 108 பேர் வசிக்ககூடிய வீடுகளை அமைத்து கொடுக்க நிர்வாகம் கொடுத்த இடத்தினை நிராகரிக்கும் படியாக சில அரசியல் தலைமைகள் அம் மக்களை தூண்டி விடுகின்றனர்.

இதன் காரணமாகவே அங்கு நிலங்கள் கிடைக்காமல் வீடுகள் கட்டி முடிக்க முடியாமல் உள்ளது. ஆனால் எமது கட்சிக்கு வாருங்கள் வீடுகளை கட்டி தருகின்றோம் என்று சொல்வது உண்மைக்கு புறம்பான விடயமாகும். இதை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இது மாற்று கட்சியின் சதி திட்டமாகும்.

ஆகையால் முதலில் இடத்தை தெரிவு செய்ய அதற்கான நடவடிக்கைகளை எடுத்து உடனடியாக வீடுகளை அமைத்து கொடுப்பதற்கு மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சு எவ்வேளையிலும் தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை கண்டுகொள்ளாத வவுனியா பொலிஸார்

வவுனியா நிருபர்

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை 15 நாட்கள் கடந்தும் பொலிஸார் நடைமுறைப்படுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

உதிர்த்த ஞாயிறு தினத்தில் இடம் பெற்ற தீவிரவாத தாக்குதலையடுத்து நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன. இதன்போது பேரூந்து நிலையங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்தவகையில் வவுனியா புதிய பேரூந்து நிலையத்தில் பொலிஸார் சோதனைச் சாவடி அமைத்து பேரூந்து நிலையத்திற்குள் செல்வோரின் பயணப் பொதிகளை சோதனை செய்து வருகின்றனர். இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் காணப்படும் பேரூந்து நிலையங்களில் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் வவுனியா புதிய பேரூந்து நிலையத்தில் மட்டுமே சோதனைகள் தொடர்கின்றது. இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

குறித்த பொலிஸ் சோதனையை நீக்குமாறு மக்கள் பிரதிகள், மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடமும் தெரிவித்திருந்தார்கள். அதனைத் தொடர்ந்து கடந்த முதலாம் திகதி வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக கௌரவ அமைச்சர் றிசாட் பதியுதீன், குழுக்களின் பிரதித்தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சிவமோகன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற கூட்டத்தில் சோதனை சாவடியை அகற்ற நடவடிக்கை எடுப்பதாக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்த போது கூட்டம் முடிந்தும் 15 நாட்கள் கடந்தும் சோதனை கெடுபிடிகள் தொடர்கிறது.

இதனால் மக்கள் பலரும் பேரூந்து நிலையத்திற்குள் செல்லாது வீதியில் நின்று பேரூந்துகளில் ஏறுகின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்பட கூடிய நிலை உருவாக்கியுள்ளது. எனவே பொலிஸார் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சஹாயபுரம் மீள்குடியேற்ற கிராம மக்கள் பல்வேறு அடிப்படை வசதிகளற்ற நிலையில் உள்ளனர்

கந்தளாய் நிருபர்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் சஹாயபுரம் மீள்குடியேற்ற கிராம மக்கள் பல்வேறு அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தம் காரணமாக, 2006 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்ற இவர்கள் மட்டக்களப்பிலுள்ள நலன்புரி முகாம்களிலிருந்து, பின்னர் 2008ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டார்.

தற்போது இக்கிராமத்தில் 112 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் வசிப்பதோடு பலர் வீடுகள் இன்றி தற்காலிகக் குடிசைகளில் வசித்து வருகின்றனர். அத்துடன் மின்சாரம், மலசல கூடம், வாழ்வாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றனர்.

மேலும் இக்கிராமத்தில் பாடசாலையொன்று இல்லையென்றும் போக்குவரத்து வசதியில்லாமல் இருப்பதால் கிராமத்திலுள்ள 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல கிலோமீற்றர் தூரம் நடந்துசென்று இருதயபுரம் வித்தியாலயத்துக்குச் செல்ல வேண்டிய நிலையும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த கிராமங்களின் அடிப்படை வசதிகள் குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம்

நீலமேகம் பிரசாந்த்

மலையகத்தில் தொடர்ந்த மழை காரணமாக பல்வேறு இடங்களில் பல சேதங்கள் ஏற்பட்டதோடு பல குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அவ்வாறு இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்க மத்தியமாகாண ஆளுனர் கீர்த்தி தென்னக்கோன் நவடிக்கை எடுக்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

நுவரெலியா மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளர் திருமதி சைலஜா அலகூஷாண்டரின் கோரிக்கைக்கு அமையவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.இயற்கை சீற்றத்தால் அனர்த்தத்திற்கு உள்ளாகிய இடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டு அதற்கான தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் மத்தியமாகாண ஆளுனர் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது.





தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவரும், முன்னாள் பிரதிச் சபாநாயகரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய அமரர் மு.சிவசிதம்பரம் அவர்களின் நினைவாக கடந்த 12.08.2019 திங்கட்கிழமை நடைபெற்ற அமரரின் திருவுருவச்சிலை திறப்பு விழாவும், நினைவுப் பேருரையும் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது.

படம்: தங்கராஜா குமுந்தன்

கிரீன்லாந்தை விலைக்கு வாங்க விரும்பும் ட்ரம்ப்

உலகின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்தை விலைக்கு வாங்க, அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஆர்வம் காட்டுவதாகத் தகவல்கள் வெளியாகின.

டென்மார்க்கை ஒட்டிய வடக்கு அட்லாண்டிக் மற்றும் ஆர்டிக் கடல் பகுதிகளுக்கு இடையில் உள்ள தீவு, கிரீன்லாந்து. பொருளாதாரரீதியாக டென்மார்க்கை சார்ந்திருந்தாலும், கிரீன்லாந்து தன்னாட்சி அதிகாரம்கொண்டது. அதன் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை ஆகியவற்றை டென்மார்க் பார்த்துக்கொள்ளும். டென்மார்க்கின் கோபன்ஹேஹனில், வரும் செப்டம்பரில் நடைபெற இருக்கும் நிகழ்ச்சி ஒன்றில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கலந்துகொள்ள இருக்கிறார். அவர், தனது கோபன்ஹேஹன் பயணத்தின்போது, டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து பிரதமர்களையும் நேரில் சந்தித்துப் பேச இருக்கிறார்.

இந்த நிலையில், கிரீன்லாந்தை விலைக்கு வாங்குவதுகுறித்து தன்னுடைய ஆலோசகர்களுடன் ட்ரம்ப் விவாதித்ததாகத் தகவல் வெளியானது. இந்தத் தகவலை முதன்முதலில் அமெரிக்க பத்திரிகையான ‘வால்ஸ்டிரீட் ஜர்னல்’ வெளியிட்டது. ட்ரம்ப் பேசியதைக் கேட்ட ஆலோசகர்கள் சிலர், அவர் விளையாட்டாகக் குறிப்பிடுவதாக வாய்விட்டு சிரித்ததாகவும் கூறப்படுகிறது. அதேநேரம், ஆலோசகர்கள் சிலர் அதுகுறித்து தீவிரமாக விவாதித்ததாகவும் தெரியவருகிறது.

ட்ரம்ப்பின் டென்மார்க் பயணத்துக்கு முன்பாக இந்தத் தகவல்கள் வெளிவந்துள்ளன. தங்கள் நாட்டை விலைக்கு வாங்குவதுகுறித்து அமெரிக்க அதிபர் ஆலோசனை நடத்துவதாக வெளியான தகவலை கிரீன்லாந்து மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் ரசிக்கவில்லை.

இதுகுறித்து தி ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் பேசிய கிரீன்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் ஆன் லோன் “எங்கள் கதவுகள் வியாபார வாய்ப்புகளுக்காக எப்போதும் திறந்திருக்கும். ஆனால், எங்கள் நாடு விற்பனைக்கல்ல என்று தெரிவித்திருக்கிறார்.

கிரீன்லாந்து மக்களில் பெரும்பலானோர், அமெரிக்காவைவிட டென்மார்க்குடன் இருப்பதையே விரும்புவார்கள் என்று நம்புகிறேன் என கிரீன்லாந்தின் இரண்டாவது மிகப்பெரிய Inuit Ataqatigiit கட்சியின் டென்மார்க் எம்.பி ஆஜா செம்னிஸ்ட் லார்ஸன் கூறியிருக்கிறார். இந்த விவகாரம் குறித்து டென்மார்க் பிரதமர் மெட் ஃப்ரிடெரிக்ஸன் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெப் கோஃபோட் ஆகியோர் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. அதேபோல், கோபன்ஹேஹனில் உள்ள அமெரிக்கத் தூதரகமும் எந்த விளக்கமும் கொடுக்கவில்லை. இந்த விவகாரம், சர்வதேச அளவில் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

செப்டம்பர் மாதத்தில் கோபன்ஹேஹன் செல்லும் ட்ரம்ப், டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து பிரதமர்களைச் சந்தித்துப் பேசுகிறார். அந்த சந்திப்புகளின்போது, ஆர்ட்டிக் பிரதேசம் குறித்தும் பருவநிலை மாறுபாடு குறித்தும் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது. ஆனால், கிரீன்லாந்தை விலைக்கு வாங்குவது குறித்து அதிகாரபூர்வமாக ட்ரம்ப் தரப்பில் இருந்து எந்த தகவலும் வெளியாகவில்லை. அந்த சந்திப்புகளின்போது, இதுகுறித்து பேசப்படுமா என்பது குறித்தும் தகவல் இல்லை.

கனடா பிரதமர் சட்டத்தை மீறினார்!

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒரு ஊழல் வழக்கு விசாரணையில் கனடா சட்டத்தை மீறி உள்ளார் என்று நெறிமுறைகள் கண்காணிப்பு அமைப்பு ஒன்று கண்டுபிடித்துள்ளது.

எஸ்.என்.சி லவாலின் விவகாரத்தில் முன்னாள் அமைச்சர் ஒருவர் மீது செல்வாக்கு செலுத்த ஜஸ்டின் முயன்றதாக அந்த அமைப்பின் ஆணையர் கூறி உள்ளார். ஆணையரின் அறிக்கையை தாம் ஏற்றுக் கொள்வதாகவும், ஆனால் அதே சமயம் அவரது அறிக்கையின் இறுதி முடிவில் சில கருத்து வேறுபாடுகள் இருப்பதாகவும் ஜஸ்டின் தெரிவித்துள்ளார். கனடா நாட்டில் அக்டோபரில் நடக்க இருக்கும் பொதுத் தேர்தலில் இந்த விசாரணை முடிவானது ஒரு பிரச்சனையாக ஜஸ்டினுக்கு உருவெடுக்கலாம்.

எஸ்.என்.சி லவாலின் என்பது கனடா நாட்டைச் சேர்ந்த உலகின் மிகப்பெரிய கட்டுமான நிறுவனம். இந்த நிறுவனத்தில் 9,000க்கும் அதிகமான கனடா மக்கள் பணிபுரிகிறார்கள். லிபியாவில் கடாஃபி ஆட்சி காலத்தில் ஒரு கட்டுமான ஒப்பந்தத்தைப் பெற இந்த நிறுவனம் லிபிய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தது என்பதுதான் குற்றச்சாட்டு. இந்த விவகாரமானது விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்துக்கு சாதகமாக ஜஸ்டின் செயல்படுகிறார் என்று குற்றம்சாட்டப்படுகிரது.

ஒருபாலுறவு பென்குவின்கள் கைவிடப்பட்ட முட்டையை தத்தெடுத்து அடைகாப்பு

பெற்றோர் ஆவதற்கு நீண்டகாலமாக முயற்சித்து வரும் பெர்லின் உயிரியல் பூங்காவிலுள்ள இரண்டு ஆண் பென்குவின்கள், கடந்த ஜூலை மாதம் முதல் கைவிடப்பட்ட முட்டை ஒன்றை பாதுகாத்து வரும் சம்பவம் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒரே பாலினத்தை சேர்ந்த இணையரான ஸ்கிப்பர் மற்றும் பிங் எனும் இரண்டு பென்குவின்கள் வெகு காலமாக தங்களுக்கென குழந்தை ஒன்றை பெறும் நோக்கத்தில் இருந்ததாக அந்த உயிரியல் பூங்காவின் செய்தித் தொடர்பாளர் மாக்ஸிமிலியன் ஜாகெர் உள்ளூர் செய்தித்தாளியிடம் தெரிவித்துள்ளார்.

முட்டையிட்ட பென்குவின் அதை அனாதையாக விட்டுச்சென்றுவிட்ட நிலையில், இந்த ஒருபாலுறவு இணை அதன் உண்மையான பெற்றோரை போன்று கவனிப்பதில் அக்கறையாக உள்ளன என்றும் முட்டையின் வெப்ப நிலையை காப்பதற்கு முயற்சித்து வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பூங்கா பராமரிப்பாளர்கள் அளித்த ஒரு சிறிய ஊக்கத்திற்குப் பிறகு, பொறாமைமிக்க போட்டியாளர்களிடமிருந்து தங்கள் விலைமதிப்பற்ற முட்டையை பாதுகாக்க இந்த பென்குவின்கள் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருகின்றன.

முட்டையின் வெப்பநிலையை பாதுகாப்பது மிகவும் அவசியமான ஒன்று. அதற்கு முட்டை பென்குவினின் காலுக்கடியில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். அவற்றிற்கு இது ஏற்கனவே நன்கு தெரிந்திருக்கிறது” என்று கூறுகிறார் நொர்பேர்ட் சஹ்மேல் எனும் உயிரியல் பூங்காவின் பராமரிப்பாளர் ஒருவர்.

பத்து வயதாகும் இந்த பென்குவின்கள் ஜெர்மனியின் ஹாம்பர்க் பூங்காவிலிருந்து கடந்த ஏப்ரல் மாதம் பெர்லினுக்கு கொண்டுவரப்பட்டன.

மனிதர்களை போன்றே, பென்குவின்கள் போன்ற விலங்கினங்களிலும் ஒருபாலுறவு என்பது இயல்பான ஒன்றாகவே உள்ளது. இவற்றில் காட்டில் வாழ்பவை, பூங்காக்களில் வாழ்பவை என்று எவ்வித வித்தியாசமும் இல்லை.

இந்தாண்டு லண்டனில் நடைபெற்ற ஒருபாலுறவு நிகழ்வு மற்றும் அயர்லாந்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் மூலம் எட்டு பென்குவின்கள் தங்களது பாலினத்தை சேர்ந்த இணையை தேர்ந்தெடுத்து ஒன்று சேர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த ஒருபாலுறவு பென்குவின்கள் அடைகாத்து வரும் முட்டை முழுமையாக கருவுற்ற ஒன்றா என்று எங்களுக்கு இன்னும் தெரியவில்லை என்று கூறும் மாக்ஸிமிலன், இதன் முடிவு பென்குவின்களுக்கு எப்படிப்பட்ட மனமாற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என்று நினைத்து வருந்துவதாக கூறுகிறார்.

உண்மையிலே நற்பேறுகொண்டதாக இருந்தால், பெர்லின் உயிரியல் பூங்கா வரலாற்றில் முதல் முறையாக ஒருபாலின இணையினருக்கு பிறந்த பெங்குவின் செப்டம்பர் மாதம் முட்டையிலிருந்து வெளிவரும்.

பழமையான ஆலிவ் மரம்

மத்திய கிழக்கு நாடுகளில் மிகவும் புகழ்பெற்ற நாடு மான்டினிக்ரோ. இந்த நாட்டில் உள்ள ஒரு ஆலிவ் மரத்தின் வயது 2,244 ஆண்டுகள் எனத் தற்போது தெரியவந்துள்ளது.

அதாவது இயேசுவின் வயதை விட இந்த மரத்தின் வயது அதிகம் என்று கூறப்படுகிறது. இந்த மரத்தை உள்ளூரை சேர்ந்தவர்கள் ஸ்டாரா மஸ்லீனா என்ற பெயரில் அழைக்கிறார்கள். இந்த மரத்திலிருந்து தயாரிக்கப்படும் ஆலிவ் எண்ணெய்க்கு உள்ளது.

முதலில் தனியாரின் பராமரிப்பில் இருந்த அந்த மரம், அதனுடைய வயது 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு அதிகம் என்று தெரிந்த பிறகு அதனை அரசு தன்னகப்படுத்தி கொண்டது. இந்த செய்தி வெளியான பின்பு பலர் இந்த மரத்தைக் காண வருகின்றனர். இதனால் அந்த பகுதி முழுவதும் சுற்றுலா தளம் போல் மாறிவிட்டது. இந்த இடங்களில் ஆலிவ் எண்ணெய் விற்பனையும் பெரும் அளவில் அதிகரித்துள்ளது.

தென்கொரியா உடன் இனி பேச்சுவார்த்தை இல்லை- வடகொரியா அறிவிப்பு

இரண்டாம் உலகப்போரின் முடிவில் கொரியா, வடகொரியா, தென்கொரியா என இருநாடுகளாக பிரிந்தது. அதனை தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே பகைமை உருவானது. இதனால் கொரிய தீபகற்பம் பதற்றமான சூழலுக்கு தள்ளப்பட்டது.

2011-ம் ஆண்டில் வடகொரியாவின் தலைவராக கிம் ஜாங் அன் பொறுப்பு ஏற்றது முதல் இருநாடுகளுக்கு இடையேயான மோதல் மேலும் தீவிரம் அடைந்தது.

தென்கொரியாவை அச்சுறுத்தும் விதமாகவும், தனது படை பலத்தை நிரூபிக்கும் வகையிலும் வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை மற்றும் அணுகுண்டு சோதனைகளை நடத்தி வந்தது.

இது ஐ.நா. சபையின் தீர்மானங்களை மீறும் செயல் என்பதால் சர்வதேச அளவில் வடகொரியாவுக்கு எதிர்ப்பு கிளம்பியதோடு, அந்த நாடு தனிமைப்படுத்தப்பட்டது. ஆனாலும் வடகொரியா தனது போக்கை மாற்றிக்கொள்ளவில்லை.

ஆனால் கடந்த ஆண்டு இந்த சூழல் மாறியது. தென்கொரியாவில் நடந்த பாரா ஒலிம்பிக் போட்டியில் வடகொரிய வீரர்கள் கலந்து கொண்டதன் மூலம் பரம எதிரிகளாக இருந்து இருநாடுகளுக்கு இடையே பரஸ்பர நட்பு உருவானது.

வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன்னும், தென்கொரியா அதிபர் மூன் ஜே இன்னும் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சந்தித்து பேசினர். அதேபோல் தென்கொரியா மத்தியஸ்தம் செய்ததின் மூலம் வடகொரியா-அமெரிக்கா உறவிலும் இணக்கமான சூழல் உருவானது.

இந்த சூழலில் கொரிய எல்லையில் அமெரிக்கா மற்றும் தென்கொரியா படைகள் கூட்டு போர்ப் பயிற்சியில் ஈடுபடுவதை எச்சரிக்கும் விதமாக வடகொரியா அண்மையில் அடுத்தடுத்து ஏவுகணைகளை சோதித்தது. ஆனால் அதை மீறியும் கூட்டுப்பயிற்சி தொடங்கப்பட்டது.

இந்த நிலையில், ஜப்பானிய ஆட்சியில் இருந்து கொரியா விடுதலை பெற்ற தினத்தில் நாட்டு மக்களிடம் உரையாற்றிய தென்கொரிய அதிபர் மூன் ஜே இன் 2045-ம் ஆண்டுக்குள் கொரிய தீபகற்பம் ஒன்றிணைக்கப்படும் என கூறினார். இதனால் கடும் கோபம் அடைந்த வடகொரியா, இனி தென்கொரியாவுடன் அமைதி பேச்சுவார்த்தை கிடையாது என அறிவித்துள்ளது. தென்கொரிய அதிபரின் உரைக்கு எதிராக வடகொரியா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

இந்த தருணத்தில் கூட தென்கொரியா தனது கூட்டு ராணுவ பயிற்சியைத் தொடர்கிறது. அதே சமயம் அமைதியான பொருளாதாரம் அல்லது அமைதியான ஆட்சியை பற்றி பேசுகிறது. இது முரணானது.

90 நாட்களில் நமது பெரும்பாலான படைகளை அழிக்கத் திட்டமிடும் யுத்த காட்சிகளை அரங்கேற்றும் அதே வேளையில், வடக்கு மற்றும் தெற்கிற்கு இடையிலான பேச்சுவார்த்தையை அவர் குறிப்பிடும்போது அவரது சிந்தனை செயல் முறை சரியாக இருக்கிறதா? என்று நாங்கள் கேள்வி எழுப்புகிறோம்.

அவர்(மூன் ஜே இன்) உண்மையிலேயே ஒரு வெட்கமில்லாத மனிதர். கொரிய தீபகற்பத்தை மீண்டும் ஒன்றிணைப்பது குறித்த அவரது கருத்துகள் மிகவும் மோசமானவை. அவை ஒரு பசுவின் வேகவைத்த தலையை சிரிக்க வைக்கும் முயற்சியை போன்றது.

அணு ஆயுதங்களை கைவிடுவது குறித்த பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முட்டுக்கட்டைக்கு தென்கொரியா கூட்டுப்பயிற்சியை நடத்த முடிவெடுத்ததுதான் காரணம். எனவே தென்கொரியாவுடன் பேச எங்களுக்கு இனி வார்த்தைகள் இல்லை.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

இதற்கிடையில், வடகொரியா தனது கிழக்கு கடற்கரையில் 2 ஏவுகணைகளை ஏவி சோதனை செய்ததாக தென்கொரிய ராணுவம் தெரிவித்துள்ளது.

இது ஒரு மாதத்திற்குள் நடத்தப்பட்ட 6-வது ஏவுகணை சோதனை ஆகும்.

10 ஆண்டுகளாக ஒரு ஆண் குழந்தை கூட பிறக்காத அதிசய கிராமம்

கடந்த 10 ஆண்டுகளாக ஒரு ஆண் குழந்தை கூட பிறக்காத அதிசய கிராமம் ஒன்று போலந்து நாட்டில் இருப்பது தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

போலந்து நாட்டில் உள்ள மீஜிஸ் ஓட்ரன்ஸ்கி என்ற கிராமத்தில் தான் இந்த அதிசயம் நடந்துள்ளது. சமீபத்தில் இளம் தீயணைப்பு வீரர்கள் என்ற தலைப்பில் குழந்தைகளுக்கான சாகச நிகழ்ச்சி ஒன்று அந்நாட்டில் நடந்துள்ளது. அதில் பல ஊர்களை சேர்ந்த சிறுவர்கள், சிறுமியர்கள் கலந்துகொண்டுள்ளனர். அப்போது குறிப்பிட்ட இந்த ஒரு கிராமத்திலிருந்து சிறுமிகள் மட்டுமே கலந்துகொண்டனர். இதனையடுத்து அங்கிருந்த அரசாங்க அதிகாரிகள் அந்த சிறுமிகளின் பெற்றோரிடம் இது குறித்து விசாரித்துள்ளனர். அப்போதுதான் அந்த கிராமத்தில் கடந்த 10 ஆண்டுகளாக ஒரு ஆண் குழந்தை கூட பிறக்கவில்லை என தெரிய வந்துள்ளது.

பல ஆண்டுகளாக ஆராய்ந்து பார்த்தும் இன்று வரை அதற்கான காரணத்தை கண்டறிய முடியவில்லை என்கின்றனர் அக்கிராம மக்கள். ஆண் குழந்தை பெரும் தம்பதிகளுக்கு பணம், பரிசு பொருட்கள் வழங்கப்படும் என அப்பகுதி மேயர் கடந்த சில ஆண்டுகளாக அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். ஆனால் அறிவிப்புகள் மட்டும் வந்தவண்ணம் உள்ளனவே தவிர அந்த கிராமத்தில் ஆண் குழந்தைகள் மட்டும் பிறக்கவே இல்லை. தற்போது இந்த செய்தி உலகம் முழுவதும் பிரபலமான நிலையில் இது குறித்து ஆராய்ச்சி செய்ய பலர் ஆர்வமாக அக்கிராமத்தை நோக்கி சென்று வருகின்றனர்.

550 ஆண்டுகள் பழமையான இசைகுழு மீது வழக்கு தொடர்ந்த சிறுமி

ஜெர்மனியின் பெர்லின் நகரில் தேவாலயத்தில் பாடும் கதீட்ரல் இசைக்குழு 1465 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த இசைக்குழுவில் ஆண்கள் மட்டுமே பாடல்கள் பாடுவது வழக்கம். இந்த நிலையில் பெர்லின் பகுதியை சேர்ந்த சிறுமி ஒருவர் இந்த இசைக்குழுவில் சேர விண்ணப்பித்துள்ளார். கடந்த மார்ச் மாதம் இவருக்கு ஆடிஷன் நடந்தது. அந்த ஆடிஷனில் சிறப்பாக செயல்பட்டும் அவர் அந்தக் குழுவில் சேர்க்கப்படவில்லை. இது குறித்து காரணம் கேட்டபோது, பெண் என்பதால் அவரை சேர்க்கவில்லை என இசைக்குழு நிர்வாகம் சார்பில் தெரிவித்துள்ளது. இதனையடுத்து பெண்ணுரிமை பேசும் இந்த காலத்தில் பெண் என்பதால் இசைக்குழுவில் சேர்க்க மறுப்பதாக கூறி அந்த சிறுமி தரப்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நள்ளிரவில் நடமாடும் மர்ம மனிதன்... பொதுமக்கள் அச்சம்...

அமெரிக்காவின் விர்ஜினியா மாகாணத்தில் மர்ம மனிதன் ஒருவன் நடமாடுவது அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

வினோதமான டிவி போன்று வேடமணிந்த அந்த மனிதன் நள்ளிரவு நேரத்தில், வெர்ஜீனியாவில் வசிக்கும் மக்களின் வீட்டு வாசல்களில் டிவி பெட்டிகளை விட்டு சென்றுள்ளான். தலையில் ஒரு டிவியை அணிந்துக்கொண்டு இரவு நேரத்தில் சுமார் 60 பழைய தொலைக்காட்சி பெட்டிகளை அங்கு வசிக்கும் மக்களின் வீட்டு வாசல்களில் விட்டு சென்றது அங்குள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகியுள்ளது.

அந்த வினோதமான நபர் குறித்து இதுவரை எந்த தகவல்களும் கிடைக்கவில்லை. இதே போன்ற ஒரு சம்பவம் கடந்த ஆண்டும் நடந்ததாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இந்த மர்ம டிவி மனிதன் குறித்து காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். நள்ளிரவில் வீதிகளில் உலாவும் இந்த மர்ம மனிதனால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் வருகின்றனர்.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..
ஞாயிற்றுக்கிழமை 18.08.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

தெரிவுக்காக காத்திருக்கும் தமிழ் பேசும் சமூகம்

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல்களம் சூடுபிடித்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டபாய ராஜபக்ஷ என்பதை அறிவித்து விட்டார்கள். ஆனால் ஐக்கிய தேசிய கட்சி அல்லது ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதற்கு இன்னமும் விடை கிடைக்கவில்லை. தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புக்களை அதிகமாக சம்பாதித்து வைத்திருக்கும் கோட்டபாயவை துணிந்து களமிறக்கியிருக்கிறது பொதுஜன பெரமுன. ஆனால் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குள்ள சஜித் பிரேமதாச போன்ற ஒருவரை தேர்தல் வேட்பாளராக்க ஐக்கிய தேசிய கட்சி தலைமைத்துவம் தயக்கம் காட்டுகிறது. சர்வதேச இராஜதந்திர ஆதரவும் இலங்கையின் மேட்டுக்குடி வாக்குகளும் சஜித் பிரேமதாசாவுக்கு கிடைக்குமா என்பதைக் காரணமாக்கி ஐக்கிய தேசிய கட்சி தலைமை வேட்பாளர் தெரிவை இழுத்தடிப்புச் செய்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமது வாக்குகளாளேயே ஜனாதிபதியாக உருவாக்கப்பட்டதா மார்தட்டிக் கொண்ட தமிழ் பேசும் சமூகம், அவர் எதனையும் சாதித்துக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டதாகவும் பெரும்பான்மை சமூகத்தைத் திருப்திப் படுத்தும் ஒருவராகவே தற்போதைய ஜனாதிபதி மாறிவிட்டதாகவும் எண்ணக்கிடக்கை தமிழ் பேசும் சமூகத்திடம் காணப்படுகின்றது. இவர்களிடையே தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை குறைசொல்லும் நிலையே காணப்படுகின்றது. தற்போதைய ஜனாதிபதியை மீண்டும் தான் அதே கதிரையில் அமர்த்திப் பார்க்க வேண்டும் என்ற அவா முளைவிட்டிருந்தது. நாட்டின் ஸ்திரத்தன்மை, ஊக்கமிக்க செயற்பாடு, தேசிய பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்ற பொழுது மீண்டும் அவர் அரியாசனம் ஏறுவதென்பது சாத்தியமற்றுப் போயிருக்கின்றது. இலங்கையின் பெரும்பான்மை சிங்களத் தலைவர்களைப் பொறுத்தவரையில் கடந்த ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் நாடு என்ற எண்ணம் ஏற்கனவே இருந்ததைவிட அது அவர்களுக்கு இப்போது தேசியவாதமாகத் தலைதூக்கியுள்ளது. தொடர்ச்சியாக தமிழ் பேசும் சமூகத்தின் தாக்குதல்களால் தமது நாடு அழிந்து விடும் தன்மையை ஏற்றுக் கொள்ள முடியாத அடிப்படைவாத தேசிய வாத சிந்தனை வலுவூட்டப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே இலங்கை தேர்தல் வேட்பாளர் தேர்வுகளில் நகர்கிறது.

சிங்கள மக்களின் மனங்களை வென்று சிங்கள வாக்குகளை கவரக்கூடிய ஜனாதிபதியாக வேண்டுமாக இருந்தால், அவர் பயங்கரவாத தடுப்பு மற்றும் பௌத்த கொள்கையில் கடும் போக்குடையவராக இருக்க வேண்டும். மேற்குலக சித்தாந்தத்தை தலையில் வைத்து நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடியவராக இருக்க வேண்டும். அதற்கு அப்பால் முடிவு எடுக்கும் வலிமை கொண்ட நபராகவும் அவர் திகழ வேண்டும்.தனிச்சிங்கள வாக்குகளால் ஜனாதிபதி உருவாகிட முடியுமா என்ற கேள்வியை எழச்செய்து விழிக்கும் நிலையில் தமிழ் பேசும் மக்களை பொறுத்தவரையில் தற்போது தாம் அனுபவிக்கும் சுதந்திரமான நடமாட்டமும் காணச் செய்யப்படுதல் உட்பட அவர்களின் கடந்த காலங்களில் அனுபவித்த துன்ப, துயரங்களில் இருந்து விடுதலை பெற்ற ஒருவரை எதிர்பார்க்கின்றனர். இதில் முஸ்லிம் சமூகமும் தமக்கு அண்மையில் ஏற்பட்ட இடர்பாடுகள் மற்றும் சந்தேகங்கள் இன்றி வாழும் சூழல் தற்போது உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணப்பாடுடையவர்களாகவே உள்ளனர். தற்போது களமிறக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ கிராமமட்ட சிங்கள வாக்குகளை அதிகமாக பெறக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததில் பிரதான பங்காளியாக செயற்பட்ட கோட்டபாய யுத்தத்தின் பின்னரான நகர அபிவிருத்திகளின் ஊடாக கொழும்புக்கு புது வடிவம் கொடுத்தவராக உள்ளார். இதற்கு அவரின் துணிவான வேகம், பௌத்த சிந்தனையாளர், மேற்குலக கருத்தியலுக்கு அப்பால் சிங்கள சமூகத்தின் வாக்குகளை கவரும் வேட்பாளராக திகழ்கின்றார். எனினும் கடந்த கால தமிழ் பேசும் சமூகங்களின் பிரச்சினைகளின் பிரதான எதிரியாகவும் வெள்ளைவான் கலாசாரம், ஊழல், போன்ற சம்பவங்களின் சம்பந்தப்பட்டவராக சிங்கள மேல்வர்க்கமும், தமிழ்,முஸ்லிம் மக்களும் நோக்குகின்றனர்.

இந்நிலையில் சஜித் பிரேமதாசா இன்று எவ்வாறு வாசிக்கப்படாத புதிய புத்திகம் இனி வாசிக்கப்படும் போதே அவரின் செயற்பாடுகள் வெளியாகும். இவர் தான் ஜனாதிபதி வேட்பாளர் என்ற தோறணை தனது அமைச்சின் நிகழ்வுகளில் வடக்கில் கலந்து கொண்டு வருகின்றார். இவர் சிங்கள மக்கள் மத்தியில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் மகன் என சிங்கள மக்கள் நோக்குகின்றார்கள். அதேநேரம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை ஓரளவு வளர்த்து வருகின்றார். கடந்த யுத்தகாலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தை துரிதப்படுத்தி வருகின்றார். வெறுமனே வீடுகளை கட்டிக் கொடுக்காது தமிழ் மக்களின் மனங்களை வென்று விடலாமா என்பதும் கேள்விக்குறியாகியுள்ளது. சஜித் பிரேமதாசா கலந்து கொண்ட அரசியல் மேடைகளில் அமைச்சர் சஜித் ஊடாக தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என தமிழ் தலைமைகள் பேசியபோதெல்லாம் அதற்கான பூரண விடைகிடைக்கவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர் யார் வந்தாலும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் குறிப்பாக இரண்டு வருடங்களுக்கு முன்னதாக வழிநடத்தும் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட யாப்பு சார்ந்த விடயங்களை தமிழ் மக்களின் காணிகளுக்குள் அத்துமீறிய சிங்கள குடியேற்றங்கள் தொடர்பாகவும் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாகவும் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் விதமாக பகிரங்கமாக இவற்ற எல்லாம் சரியான முறையில் நிறைவேற்றித் தருவதாக வாக்குறுதி தருகின்றவர்களுக்கே இம்முறை தமிழ் பேசும் மக்கள் ஆதரவு கொடுப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தல் களத்தில் தமிழ் பேசும் மக்கள் மாற்றுத் தெரிவுகள் இல்லாத நிலையில் தடுமாற்றத்துடனேயே வாக்களிப்பில் ஈடுபடும் நிலை காணப்படுகின்றது. கடந்தகால அரசியல் அனுபவங்களின் மூலம் தமிழ் பேசும் தலைமைகளும் வரும் தேர்தலில் மக்களை சரியாக வழிநடத்தும் என எதிர்பார்ப்பது கடினமாகும்.

புதிய அரசியல் யாப்புக்களை வரைவது தொடர்பில் நல்லாட்சி அரசாங்கம் தன்னுடைய நகர்வினை விரைவாக ஆரம்பித்திருக்கின்ற நிலையில் தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் மீது தமது சாணக்கியமான நகர்வுகளை முன்னெடுக்க வேண்டியதே காலத்தின் தேவையாகும்

இலங்கையில் தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுமில்லை, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வும் இல்லாத நிலையே காணப்பட்டுவந்தது. இச் சூழ்நிலையில் ஷயானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வரும் என்ற பழமொழிக்கேற்ப தமிழ்பேசும் மக்களுக்கு ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு அமைந்தது. இத்தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து ஆலோசித்து இன்றைய ஜனாதிபதி மைத்திரிபாலவிற்கு தமது ஆதரவை வழங்கியிருந்தனர். இன்றைய ஜனாதிபதியாக மைத்திரி தெரிவானதற்கு தமிழ்பேசும் மக்களே முழுக்கக் காரணம் என்பதை யாராலும் இன்று மறுக்கமுடியாத சூழல் இடம்பெற்றுள்ளது. இன்றைய நல்லாட்சி அரசாங்கமானது சிறுபான்மையினரின் முழுத்தேவைகளிலும் பூரணமான தீர்வினை வழங்குவதிலேயே தமது முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டிய கடமைப்பாட்டில் இருந்தது. ஆனால் தேசிய அரசாங்கம் அமைத்து மூன்றரை வருடங்களாகின்ற நிலையில் கடமைப்பாட்டை முழுமையாக நிறைவேற்றுவதில் நல்லாட்சி அரசாங்கம் தொடர்ந்தும் இழுபறியிலேயே நகர்ந்து கொண்டு செல்கின்றது.

அந்தவகையில் இலங்கை நாட்டின் அரசியலிலும் நாளுக்கு நாள் பல மாற்றங்கள் கணப்பொழுதில் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தாலும் 30 வருடகால ஆயுத்தம் ஏந்திப் போராடிய யுத்தம் அவற்றினால் நம் தமிழ்சமூகம் அனுபவிக்கும் துன்பங்கள் இன்றும் நம்மவர் மனங்களில் மாறாத வடுவாகவே நிலைத்திருக்கிறது. தமிழர்கள் வரலாற்று ரீதியாக அகிம்சை போராட்டம், ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டு யாவும் நிறைவுற்று இன்று அரசியல் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தன்னுடைய காலத்தில், தன்னுடைய தலைமையின் கீழ் 'தீர்வு' பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆர்வமாக இருக்கின்றார். ஆட்சிக்கு வந்துள்ள நல்லாட்சி அரசாங்கத்தின் பூரண ஆதரவுடனும் சர்வதேசத்தின் தலையீட்டுடனும் அதனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படைப் போக்கில் குறிப்

பிட்டளவான நம்பிக்கைகளோடு எதிர்கொள்கின்றார் என்ற வகையிலேயே அவரது பேச்சுக்கள் அமைந்துள்ளன. இந்நிலையில், கடந்த கால தேர்தல் மேடைகளிலும், அதனைத் தாண்டிய சில உரையாடல்களிலும் தமிழ் மக்களுக்கு 2016, 2017 ஆம் ஆண்டுகளில் தீர்வு கிடைத்து விடும் என்கிற விடயத்தை இரா.சம்பந்தன் திரும்பத் திரும்பக் கூறி வந்திருக்கின்றார். ஆனால், அந்தத் தீர்வின் உறுதிப்பாடு எவ்வகையானது, எதனை நோக்கியதாக இருக்கப் போகின்றது என்பது தொடர்பில் அவர் அவ்வளவாக பேசியதில்லை. அப்படியான கட்டங்களை அவர் மௌனமாகக் கடந்து வந்திருக்கின்றமையினாலேயே தற்போது அவரது பேச்சுக்கள் பொய்த்துவிட்டதாக நம்பிக்கை இழந்த மக்கள் கூறிவருகின்றனர்.

அதுபோலவே, தமிழ்த் தேசிய அரசியலில் மாற்றுத் தலைமையொன்றின் வருகையையோ, தன்னுடைய ஆளுகைகளை மீறிய உரையாடல்களையோ இரா.சம்பந்தன் என்றைக்கும் இரசித்ததில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவுகளை ஒரு சிலர் எடுக்கின்றார்கள் என்கிற விமர்சனமும், அதன் தொடர்ச்சியும் இரா.சம்பந்தனின் இந்த நிலைப்பாடுகளின் போக்கினால் வருவதுதான். இதனை, இரா.சம்பந்தன் தன்னுடைய அடையாள அரசியல் நிலைப்பாட்டின் போக்கில் அணுகுவதாகவும் கொள்ள முடியும் என்று அவர்கள் கூறிவருகின்றனர். ஆரம்ப கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசிய அரசியல் முடிவுகளை எடுக்கும் நிலையிலிருந்து மௌனிக்கப்பட்டதும், அது வரை அவர்கள் சார்பாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய அரசியலை தலைமையேற்கின்றது. அதன்பின்னராக தற்காலம் 9 ஆண்டுகள் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற அங்கிகாரம் என்பது எதிர்பார்க்கப்பட்ட அளவினையும் தாண்டியது. அது, மீண்டுமொரு ஏக தலைமை நிலையை தோற்றுவித்தது. இந்த நிலை, இரா.சம்பந்தனை அதிகாரங்கள் சார்ந்து அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியது என்று கூறலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில், இலங்கைத் தமிழரசுக் கட்சி அதிகார மையமாகவும், ஏனைய பங்களிக் கட்சிகள் அதிகாரங்களற்ற துணைத் தரப்புக்களாகவும் மாற்றப்பட்டதற்கும் அது காரணமாகியது. இன்றைக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளை ஒவ்வொரு தரப்பாக வெளியேற்றும் நிகழ்ச்சி நிரலொன்று தமிழரசுக் கட்சியினால் கச்சிதமாக முன்னெடுக்கப்படுகின்றது. அந்த நிகழ்ச்சி நிரல், 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்கிற பெயரினை தன்னோடு தக்கவைத்துக் கொள்வது தொடர்பிலான உறுதிப்பாட்டோடும் இருக்கின்றது.

இரா.சம்பந்தன் தன்னுடைய தலைமைக்கு மற்றும் அரசியல் இருப்புக்கு அச்சுறுத்தலான தரப்புக்களைப் பெரும் பதற்றத்தோடு எதிர் கொள்வது இல்லை. மாறாக, அவர் மிக நிதானமாக இருந்து கொண்டு, எதிர்த்தரப்புக்களை

இழுபறிக்குள்ளாகும் தமிழ் மக்களின் அபிலாசைகள்

நக்கீரர்

பதற்றப்பட வைக்கின்றார். அதாவது, எதிராளிகளை உணர்ச்சிவசப்பட்ட நிலையில் மக்கள் முன் செல்ல வைக்கின்றார். அதன்மூலம், தன்னுடைய எதிராளிகள் பலவீனமானவர்கள், பதற்றமானவர்கள் அவர்களினால் தீர்க்கமான முடிவுகளை எடுக்க முடியாது என்கிற தோற்றத்தினை ஏற்படுத்த முனைகின்றார் என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த நிலைக்குள் சிக்கிக் கொண்டவர்களின் பட்டியல் நீளமானது.

த, தே. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தன்னுடைய தலைமைக்கு அச்சுறுத்தலான அரசியல்வாதிகளை எப்படிக் கையாள்கின்றாரோ அதேபோலவே, புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர் உள்ளிட்ட தரப்புக்களையும் கையாள்கின்றார். அவர், சிவில் சமூக வெளிக்குள்ளும் விடாக் கொண்டன் மனநிலையில் இருந்து கொள்கின்றார். அத்தோடு, தன்னை நோக்கி 'அரசியல் சாணக்கியர்' என்கிற நிலையை மிக கச்சிதமான உருவாக்கி வைத்திருக்கின்றார். அத்துடன் நல்லாட்சியில் தமக்கான தனித்துவமான எதிர்க் கட்சித் தலைவர் பதவியை பெற்றபோது, அவரை நோக்கிய விமர்சனங்கள் பெரியளவில் முன்வைக்கப்பட்டாலும், அவருடனான நேரடியான உரையாடல்கள் மற்றும் கேள்விகளின் போது, அவரை மீறிச் செல்லாதவாறு பார்த்துக் கொள்கின்றார். தன்னை உணர்ச்சிவசப்பட வைக்கும் நிலைக்கும் எந்தத் தரப்பினாலும் செலுத்த முடியாதவாறு பார்த்துக் கொள்கின்றார். அதாவது, எப்போதுமே அவர் அடுத்த கட்டத்திலிருந்து கொண்டு மற்றவர்களை கீழ்நோக்கி பார்க்கின்றார். அது அவரது அரசியல் அனுபவ வழிவந்த சாமர்த்தியம் என அவர்கட்சி சாரார் சிலர் குறிப்பிடுகின்றனர்.

தமிழ் மக்கள் பேரவை தொடர்பிலான அணுகுமுறை தொடர்பிலும் இரா.சம்பந்தன் அதே நிலைப்பாட்டினையே வெளிப்படுத்தியிருந்தார். அது, வெற்றிகரமான பக்கத்தில் தன்னை தொடர்ந்தும் வைத்துக் கொள்ளும் என்றும் அவர் கருதுகின்றார். தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை உரையாடல்களை ஆரம்பித்திருக்கின்ற நிலையில், அவற்றை அவர் குறிப்பிட்டளவு அமைதியாக கடக்க நினைக்கின்றார் என பல தரப்பினர் கூறிவருகின்றனர். அதுமட்டுமின்றி, தன்னுடைய நிலைப்பாடுகளை, தமிழ் மக்கள் பேரவையின் முடிவுகள் மாற்றும் வல்லமை உருவாகாதவாறு பார்த்துக் கொள்வதில் தன் சார்ப்பு தரப்புக்களை வைத்து காய் நகர்த்துகின்றார். இப்போதும் தமிழ் மக்கள் பேரவை தொடர்பில் அப்படியானதொரு நிலைமை உருவாக்கப்பட்டிருக்கின்றதாக அவர் கட்சித் தரப்பினர் கூறுகின்றனர்.

தென்னிலங்கை அரசியல் களம் தன்னுடைய அடிப்படைகளை மாற்றிக் கொண்டு தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றினைக் காண்பதற்கான அர்ப்பணிப்புக்களை கடந்த காலங்களில் வெளிப்படுத்தியதில்லை. இனியும் வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்க முடியாது. தேர்தல்களின் போது தென்னிலங்கையின் அரங்காற்றுகை வெற்றியை தீர்மானிக்கப் போகும் சக்திகளைச் சார்ந்து இருந்தது. அதன்போக்கில், கடும்போக்கு அல்லது மென்போக்கு உரையாடல்கள் எழுச்சி பெற்றிருக்கின்றன. அது, தேர்தல் பருவநிலை

09 ஆம் பக்கம் பார்க்க....

கிழக்கில் சிந்திய இரத்தங்கள் 12

முஸ்லிம் மக்கள் மத்தியில் மாறாத ரணமாக இருக்கும் காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை

சிரேஷ்ட ஊடகவியலாளரும் முன்னாள் தமிழ்ப்பத்திரிகை ஒன்றியத் தலைவருமான இரா.துரைரத்தினம்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் 1990ஆம் ஆண்டு யூலை, ஓகஸ்ட் செம்டம்பர் மாதங்கள் தமிழ் முஸ்லீம் கிராமங்களில் மரண ஓலங்களே கேட்டன.

தமிழ் கிராமங்களில் கூட்டுப்படுகொலை நடந்த சமகாலத்தில் முஸ்லீம் கிராமங்களான காத்தான்குடி ஏறாவூர் முஸ்லீம் கிராமங்களிலும் படுகொலைகள் நடந்தன. இந்த படுகொலைகளை விடுதலைப்புலிகளே செய்தனர் என அக்கிராம மக்கள் கூறுகின்றனர்.

இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இப்படுகொலைகளை விடுதலைப்புலிகளே செய்தனர் என குற்றம் சாட்டியிருந்தனர்.

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முதல் 12.07.1990 அன்று குருக்கள்மடம் பிரதான வீதியில் வைத்து 22 முஸ்லீம்கள் கடத்தி செல்லப்பட்டதாக காணாமல் போனோர் பற்றி விசாரணை செய்வதற்காக நீதியரசர் கே.பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளே இவர்களை கடத்தி சென்று படுகொலை செய்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புனித ஹஜ் கடமையை முடித்து விட்டு தமது சொந்த ஊரான காத்தான்குடிக்கு திரும்பிக் கொண்டிருந்த ஹாஜிமார்களும் அவர்களோடு வந்த உறவினர்களும் இன்னும் சில பொதுமக்களும் குருக்கள்மடத்தில் வைத்து கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறு கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களில் பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் என பலரும் அடங்குகின்றனர்.

இது தொடர்பான விபரங்கள் காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கடத்தப்பட்ட 22பேரின் பெயர் விபரங்களையும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பக்கம் 119)

கடத்தப்பட்டவர்களின் சடலங்கள் மீட்கப்படவில்லை. இச்சம்பவத்தை அடுத்து காத்தான்குடியில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

1990 ஆகஸ்ட் 03ஆம் திகதி. அன்றைய நாள் ஒரு வெள்ளிக்கிழமை. இரவு புனித இஷாத் தொழுகையின் போதே இந்த கோரச்சம்பவம் இடம்பெற்றது. விடுதலைப்புலிகளே இதனை செய்தனர் என அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்மா பள்ளிவாசல், அதே பகுதியிலுள்ள மஸ்ஜிதுல் ஹஸைனிய்யா பள்ளிவாசல் ஆகிய இரண்டிலும் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது கிறினட் குண்டுகளை வீசியும் துப்பாக்கி பிரயோகத்தையும் செய்தனர்.

பள்ளிவாசலுக்குள்ளேயே 103 பேரும் பின்னர் 21 பேருமாக 124 பேர் இதில் படுகொலை செய்யப்பட்டனர். 140க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

அன்று வெள்ளிக்கிழமை இரவு புனித இஷாத் தொழுகைக்காக மக்கள் பள்ளிவாசலுக்குள் சென்று தொழுகைக்காக இமாமின் பின்னால் வரிசையாக நின்று கொண்டிருந்த போது ஆயுதங்களுடன் வந்தவர்கள் அம்மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து குண்டுத்தாக்குதலையும் நடத்தினர். இதன் போது பலரின் உயிர் அவ்விடத்திலேயே பிரிந்தது.

தொழுகை ஆரம்பமாவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் ஆயுதங்களுடன் வந்தவர்கள் தொழுகைக்காக வந்த சிலரை உள்ளே அவசரமாக செல்லுங்கள் என பள்ளிவாசல்களுக்குள் அனுப்பி விட்டு அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

பள்ளிவாசலுக்கு உள் சுவர்கள் எங்கும் துப்பாக்கி சன்னங்கள் பட்ட அடையாளங்கள் இன்னமும் அந்த பள்ளிவாசல்களில் காணப்படுகின்றன. அதை நினைவு கூருமுகமாக அந்த தாக்குதல் அடையாளங்கள் இன்றும் பேணப்பட்டு வருகிறது.

ஒரே குடும்பத்தை சேர்ந்த தந்தை மகன் சகோதரர்கள் உறவினர்கள் என பலரும் இதில் இறந்தனர்.

சில நிமிடங்கள் தொடர்ச்சியாக துப்பாக்கி சூட்டு சத்தங்களும் கிரனட் வெடிக்கும் சத்தங்களும் கேட்டன. காத்தான்குடி கிராமமே அதிர்ச்சியாலும் அச்சத்தாலும் உறைந்து போனது.

அனைத்து பள்ளிவாயல்களிலும் இருந்து அந்த அவலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலை மேற்கொண்டவர்கள் அங்கிருந்து சென்ற பின்னர் பெருந்தொகையான மக்கள் இந்த இரண்டு பள்ளிவாயல்களுக்கும் ஓடிச்சென்று உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் அனைவரையுமே காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்மா பள்ளிவாயலுக்கு கொண்டு சென்றனர்.

அங்கிருந்து காயமடைந்வர்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பினர். காயமடைந்த சிலர் மட்டக்களப்பிலிருந்து இலங்கை விமானப்படையினரின் விமானத்தின் மூலம் அம்பாறை மற்றும் கொழும்பு போன்ற இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரும் சிலர் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தில் ஆண்கள் அனைவரையும் இழந்த குடும்பங்களும் உண்டு. இளம் வயதில் பல பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர்.

காயமடைந்து ஊனமுற்ற நிலையில் இன்றும் சிலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இச்சம்பவம் பற்றி சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டன. பிபிசி, சிஎன்என் உட்பட உலக தொலைக்காட்சிகள் இரண்டு மூன்று தினங்கள் தொடர்ச்சியாக இச்செய்திக்கு முக்கியத்தும் கொடுத்திருந்தன.

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை என்பது இலங்கைவாழ் முஸ்லிம்களின் வரலாற்றில் என்றும் மறக்க முடியாத ஒன்றாகும். இந்த இரண்டு பள்ளிவாசல்களிலும் இன்றும் இதன் அடையாளங்கள் அழிக்கப்படாமல் இருக்கின்றன. ஆண்டு தோறும் ஓகஸ்ட் 3ம் திகதி ஹதாக்கள் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த கால யுத்தம் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள், முஸ்லீம், மக்கள் சிங்கள மக்கள் என மூவின மக்களையும் பாதிக்கச் செய்துள்ளது.

எல்லைக்கிராமங்களில் வாழ்ந்த சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டனர்.

அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்மா பள்ளிவாசல், அதே பகுதியிலுள்ள மஸ்ஜிதுல் ஹஸைனிய்யா பள்ளிவாசல் ஆகிய இரண்டிலும் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது கிறினட் குண்டுகளை வீசியும் துப்பாக்கி பிரயோகத்தையும் செய்தனர்.

பள்ளிவாசலுக்குள்ளேயே 103 பேரும் பின்னர் 21 பேருமாக 124 பேர் இதில் படுகொலை செய்யப்பட்டனர். 140க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

அன்று வெள்ளிக்கிழமை இரவு புனித இஷாத் தொழுகைக்காக மக்கள் பள்ளிவாசலுக்குள் சென்று தொழுகைக்காக இமாமின் பின்னால் வரிசையாக நின்று கொண்டிருந்த போது ஆயுதங்களுடன் வந்

ஹஜ் யாத்திரிகைக்கு சென்றவர்கள் 1990 யூலை 12ல் கடத்தப்பட்டதை தொடர்ந்து ஆகஸ்ட் முதலாம் திகதி அக்கரைப்பற்றிலும் முஸ்லீம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 14 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல்களை தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திலிருந்து பிரிந்து சென்ற கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளீதரன் தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இத்தாக்குதல் நடைபெற்ற வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை தளபதியாக கருணாவே இருந்தார்.

இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்களிடையே இன்னமும் ஒரு கறுப்பு தினமாகவே அன்றைய நாள் கருதப்படுகின்றது. இந் நாளை காத்தான்குடி பிரதேச முஸ்லிம்கள் வருடாந்தம் சுகதாக்கள் தினமாக நினைவு கூர்ந்து வருகின்றார்கள்.

காத்தான்குடி பள்ளிவாசல் மீதான தாக்குதலைத் தொடர்ந்து சத்துருக்கொண்டான் படுகொலை, கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாம் படுகொலை, சித்தாண்டி முருகன் கோவில் அகதி முகாம் படுகொலை என தமிழ் கிராமங்களிலும் படுகொலைகள் தொடர்ந்தன.

அதேபோன்று ஏறாவூர், முள்ளிப்பொத்தானை மற்றும் அழிந்தபொத்தானை உட்பட முஸ்லிம் கிராமங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல்கள் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கு இடையேயான உறவின் ஒரு நிரந்தர பாதிப்பை ஏற் படுத்தியது.

அன்று ஏற்பட்ட இந்த பாதிப்பால் தமிழ் முஸ்லீம் இன்னமும் பழைய நிலைக்கு திரும்பவில்லை என மட்டக்களப்பு பல்சமய சமாதான ஒன்றியத்தின் துணைச் செயலாளர் ஐ.எம்.இலியாஸ் மௌலவி கூறுகிறார்.

இச்சம்பவத்தில் காத்தான்குடியில் உள்ள ஊடகவியலாளரும் கவிஞருமான ரி.எல். ஜப்பார்கான் அவர்களின் தந்தை உட்பட அவரின் குடும்ப உறவினர்கள் பலர் கொல்லப்பட்டனர். அன்று தொழுகைக்கு செல்ல சற்று தாமதமானதால் தான் உயிர் தப்பியதாகவும் சத்தம் கேட்டு பள்ளிவாயலுக்கு ஓடிச்சென்ற போது தனது தந்தை மற்றும் மாமன் ஆகியோர் துப்பாக்கி சூடுபட்டு விழுந்து கிடந்தனர் என அவர் இச்சம்பவத்தை ஒரு முறை நினைவு கூர்ந்திருந்தார்.

இந்த சம்பவங்கள் நடந்து 29 வருடங்கள் கடந்து விட்டன.

இதனை தொடர்ந்து இலங்கையில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே இன ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த பல்தரப்பிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தாலும், எதிர்பார்க்கப்படுகின்ற வகையில் அப்படியான நெருக்கமான உறவுகளும் பரஸ்பர நம்பிக்கையும் இன்னும் ஏற்படவில்லை.

மேலும் மேலும் விரிசல்கள் ஏற்பட்டு வருகிறதே ஒழிய 1985ஆம் ஆண்டுக்கு முன்னர் மட்டக்களப்பில் முஸ்லீம் தமிழ் மக்களிடையே இருந்த ஒற்றுமையும் உறவும் புரிந்துணர்வும் இன்று இல்லை என்றே சொல்ல முடியும்.

தொடரும்

உணரப்படும் தமிழர்களுக்கான

புதிய தலைமைகளின் உருவாக்கத்தின் அவசியம்

வளர்ச்சி பெற்று வரும் நாடுகளுக்கு அல்லது சிறுபான்மை இனங்களை கொண்ட தேசங்களுக்கு வலுவான கருத்தயலாகவே இது இருக்கின்றது.

வளர்ச்சி அடையும் நாடொன்றில் தற்போதைய விஞ்ஞான தொழில் நுட்ப மற்றும் நாகரீக வளர்ச்சிக்கு ஏற்ற தனது பொருளாதார வளர்ச்சி சுட்டெண்ணை உயர்த்த முடியாத தலைவராக இனம் காணப்பட்டவர் தொடர்ந்தும் அப்பதவியில் இருந்து தானாகவோ அல்லது மக்களாலோ விலத்தப்பட வேண்டியவராக இருக்கின்றார்.

அதுபோலவே சிறுபான்மை இனங்கள் வாழும் தேசத்தில் அந்த இனக்குழுமத்தின் உரிமைகளையும் அதன் பொருளாதார மற்றும் மரபுரிமைகளையும் பேணிப்பாதுகாக்க முடியாத அந்த சிறுபான்மையினத்தின் தலைமைகள் தொடர்ந்தும் அந்த தலைமையை ஏற்று செயற்படுவதானது அந்த சமூகத்தினாலேயே ஏற்றுக் கொள்ள முடியாத நிலையை உருவாக்கும்.

வெறுமனே பசப்பு வார்த்தைகளால் நீண்ட கால அரசியல் செயற்பாட்டை கொண்டு செல்ல முடியும் என்ற தோற்றப்பாட்டுடனான முன்னகர்வுகள் அந்த அரசியல் செயற்பாட்டாளர்களை மக்கள் தமது வாக்கு எனும் பலமான ஆயுத்தின் ஊடாக விரட்டியடிப்பார்கள் என்பதும் ஐதார்த்தம்.

இந்த வகையிலேயே இலங்கை தேசத்தில் சிறுபான்மையினரான தமிழர்களுக்கான அரசியல் தலைமைகளும் தமது செயற்பாடுகள் தொடர்பான சுயபரிசோதனையை மேற்கொள்ளவேண்டிய கடப்பாட்டுக்கள் செல்ல எத்தனிக்கப்பட்டுள்ளனர்.

ஏனெனில் இலங்கையில் வாழும் இரு பிரதான சிறுபான்மையினரான முஸ்லீம் மற்றும் தமிழர்கள் என்ற இரு தரப்பு அரசியல் தலைமைகளையும் பார்க்கும் போது முஸ்லீம்களுக்கு தமது அரசியல் தலைமையை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும் என்ற அரசியல் தெளிவு ஏற்பட்டிருப்பதாகவே எண்ணத்தோன்றுகின்றது.

வன்னிப்பிரதேசத்தினை பார்க்கின்ற போது அவர்களது ஆரம்ப தெரிவாக ஒரு தமிழரான சுந்தரமூடத்தி என்ற ஆசிரியரை அபூபக்கராக்கி அவரை தமது பாராளுமன்ற உறுப்பினராக்கி அழகுபார்த்திருந்தார்கள். அது மாத்திரமின்றி அபூபக்காராகிய சுந்திரமூடத்தி அமைச்சராக முஸ்லீம் சமூகததிற்காக பல்வேறு வரப்பிரசாதங்களை அரசிடம் இருந்து பெற்றுக்கொடுத்திருந்தமையை மறந்து விட முடியாது.

அதன் பின்னரான காலத்தில் முஸ்லீம் காங்கிரசை சேர்ந்த நூர்டீன் மசூரை தமது பிரதிநிதியாக்கி அவரையும் மீள்குடியேற்ற அமைச்சராக அரியனையில் ஏற்றி தமது தேவைகளை பெற்றிருந்தார்கள்.

வவுனியா கபில்

அக்காலப்பகுதியிலேயே நூர்டீன் மசூரின் சேவைக்கு ஓய்வு கொடுத்து அவரால் முஸ்லீம் காங்கிரசுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ரிசாட் பதியுர்தீனை நூர்டீன் மசூருக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினராக்கி அவரை அமைச்சராக்கியும் தமது சமூகத்தின் மேன்மைக்கும் வாழ்வியலுக்கும் உரமூட்டிக் கொண்டனர்.

இக்காலப்பகுதியிலேயே தமது சமூகத்தின் வளர்ச்சிக்கு இருவரை வேறு வேறு கட்சிகளில் உருவாக்கினால் அரசியலாளர்களுக்கிடையிலான போட்டியில் மேலும் தமது சமூகத்தின் வளர்சிக்கு உருதுணையாகும் என்ற எண்ணப்பாட்டில் சுதந்திரக் கட்சயின் சார்பில் கே. கே. மஸ்தரினையும் பாராளுமன்ற உறுப்பினராக்கி வன்னித்தேர்தல் தொகுதியில் தமக்கான இரு பிரதிநிதிகளை முஸ்லீம் சமூகம் உருவாக்கி கொண்டது. இதுவே அவர்களின் அரசியல் ஞானம் என்பது.

எனினும் இவ்வறான அரசியல் ஞானம் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளதா என்றால் 50 வீதம் கூட உருவாக்கப்படவில்லை என்பதே உண்மை.

தொடர்ந்தும் ஒரு சின்னம் என்ற கோட்பாட்டுக்கள் சுழன்றடிப்பது மாத்திரமின்றி ஒரே முகத்தினை தொடர்ந்தும் தெரிவு செய்வதும் அதனூடாக எந்தவித வரப்பிரசாதத்தினையும் பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கியமும் தமிழ் சமூகத்திலேயே உள்ளது.

முஸ்லீம் சமூகம் எவ்வாறு வன்னி தேர்தல் களத்தில் மாற்றி மாற்றி தமது பிரதிநிதிகளை தெரிவு செய்திருந்தபோதிலும் கடந்த 20 வருடங்களாக தமிழர் தரப்பு தமிழ் தேசியக்கூட்டமைப்பில் ஒரே முகங்களையே தெரிவு செய்திருப்பதும் மாற்று அணியையோ வேறு தெரிவுகளையோ விரும்பாமையும் அரசியல் தெளிவு தன்மையில் சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

கோப்புப்படம்

இச் சூழலில் தமிழர்களுக்கான தீர்வையும்

13 ஆம் பக்கம் பார்க்க....

‘உங்கள் கனவை எமக்குத்தாருங்கள்’

எம் எல்லோருக்கும்
எதிர்பார்ப்புகள் நிறைந்துள்ளது....

அத்தகைய
எல்லாக்கனவுகளையும்
நிறைவேற்றிக்கொள்ள
உங்கள் வாழ்க்கையின்
சிறந்த ஆரம்பம்
...வனிதா வாசனா...

மக்கள் வங்கியின்
“வனிதா வாசனா” சேமிப்பு
கணக்கிற்கான அதிகூடிய
வட்டி இப்போது..!

கனவுகளை நனவாக்கி
உலகை வெற்றி
கொள்ளுங்கள்..!

Vanitha Vasana

அனைவருக்கும் கிரடிட் கார்ட் உடன் People's Wave Mobile Banking வசதி

PEOPLE'S Wave

கணக்கு மிகுதியில் 90% வரை கடன் வசதி

Wiz credit மூலம் இப்போது Digital முறையில் கடன் வசதி ஒரே நாளில்....

WiZCredit digital loans

தனிநபர் கடன்
வியாபாரக்கடன்
வீடமைப்புக்கடன்
வாகனக்கடன்
ஆகியவற்றுக்கு
முன்னுரிமை சேவை

அதிகமாக சேமிக்கும் உங்களுக்கு அதிகமான பரிசுகள்...!

இப்போது மக்கள் வங்கியின் Digital புரட்சியின் காரணமாக அனைத்தும் விரைவாகியுள்ளது...

PEOPLE'S digital

PEOPLE'S BANK

The Bank of the People

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
AA+ (lka) Fitch Rating, AA+ Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

அரசியற்கைதிகளின் மறுபக்கம்

அரசியலுக்கென்று கோட்பாட்டு ரீதியாக மட்டுமே விழுமியங்கள் உள்ளன நடைமுறையில் அரிதாகி விட்டன. அதிகாரத்துக்கானப் போராட்டத்தில் நீதி, நியாயம், கருணை மற்றும் மனச்சாட்சி என்று - எல்லாமே இழக்கப்பட்டு விடுகின்றன. இதற்கு இலங்கை அரசியல் போக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். அரசியலின் அகராதி வித்தியாசமானது. புதிய அரசியல் யாப்பு மற்றும் புதிய தேர்தல் முறைமை ஆகியவை தொடர்பிலும், அவற்றின் உள்ளடக்கம் மற்றும் உருவாக்கம் பற்றியும் அனைத்து மட்டங்களிலும் உரத்துப் பேசப்படுகிறது. மேற்படி விடயங்கள் தொடர்பில் ஏதோ நல்லது நடக்கப்போகிறது என்கிற நம்பிக்கை நல்லாட்சியின் ஆரம்பத்தில் இருந்தது. தற்மீ;பாது அவநம்பிக்கைகள் மாத்திரமே மேற்கிளம்பியுள்ளன.

அந்தவகையில், யுத்தம் முடிவுற்ற பின்னரான காலப்பகுதியிலும் விடுதலைப்புலிகளென்னும் சந்தேகத்தின் பேரில் பெருமளவானோர் கைது செய்யப்பட்டதோடு சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டார்கள். இவ்வாறாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுச் சிறையிடப்பட்டோரில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் அல்லாதவரும் பலர் உள்ளனர் என்பதும் தெரிந்ததே. மேலும் இப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் யுத்தத்தின் இறுதிக் காலத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பினர் சார்பில் வேலை செய்த சில உறுப்பினர்களும் சிறைக்கைதிகள் துரோகிகள் எனும் பெயரோடு கைதுசெய்யப்பட்டிருந்தமையும் நாம் அறிந்ததே. விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கம் வகிக்காத தமிழர்கள் இயக்கத்தோடு எவ்வித சம்பந்தமும் இல்லாத நிலையிலுங்கூட கைது செய்யப்பட்டு சொல்லலொண்ணாத் துயரங்களை அனுபவித்துவருவதில் எவ்வித நியாயமுண்டு; எனக் கேட்கத்தோன்றுகின்றது. அத்தோடு விடுதலைப்புலிகள் அமைப்பினருக்கு உதவி ஒத்தாசைகள் வழங்கிய பலருங் கூடக் கைதுசெய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்துவருகின்றார்கள். மேலும் இயக்கத்திற்கு உணவு, உடை, உறையுள் கொடுத்தமை போன்ற காரணிகளினால் ஒரு சாரார்; கைது செய்யப்பட்டவர்களுள் அடங்குகின்றனர்.

எது எப்படியிருந்த போதுங் கூடத் தமிழர் என்னும் ஒரே காரணத்தினால் மட்டும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்ட பலர் இன்னமும் (பல வருடங்கள் கடந்து சென்ற நிலையிலுங் கூட) நல்லாட்சி அரியணை ஏறியும் கூட எவ்வித நீதி விசாரணையுமின்றித் தொடர்ந்தும் சிறைச்சாலைகளில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது கடந்தகாலம் தொடக்கம் நாம் கேட்டும் பார்த்தும் அறிந்ததே. இக்கைதிகள் சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக வாடிக்கொண்டிருப்பதால் அவர்களுக்குள் சிலர் உடல், ரீதியாக நோய்வாய்ப்பட்டிருப்பதோடு இன்னுஞ் சிலர் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவும் மற்றும் ஒரு சாரார் உடலாலும், உள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களாக விளங்குகிறார்கள் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியாகவே உள்ளது. மேலும் வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பில் அச்சிறைச்சாலையின் முன்பாக கடந்த வருடா வருடமாக கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. தமிழ் அரசியல்கைதிகளை உடன் விடுவிக்குமாறு கோரியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வலியுறுத்தியுமே இப்போராட்டம் நடத்தப்படுகின்றது. இவ்வாறு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, கடந்த 2012ஆம் ஆண்டு சிறைச்சாலையில் மிக மோசமாகத் தாக்கப்பட்டதன் காரணமாகத் தமிழ் அரசியல் கைதி ிடில்ருக்சன்ி உயிரிழந்த தினத்தில் இக் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டதென அரசியல்கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் அவர்கள் தெரிவித்திருந்தார். ிமுன்னைய அரசைப்போன்றே இந்த அரசும் அரசியல்கைதிகள் விடயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நிலைப்பாட்டையே பின்பற்றுகின்றது. இலங்கையில் அரசியல்கைதிகள் என்று எவருமில்லை. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் மட்டுமே சிறைச்சாலைகளில் உள்ளனர் என நல்லாட்சி அரசிலுள்ள அனைவருந் தெரிவித்து வருகின்றனர்.

அதுமாத்திரமின்றி இவர்கள் தொடர்பான கருத்துக்களை ஆராய தமிழ் அரசியற் கட்சிகளும் இவ்விடயத்தைக் காத்திரமான விதத்தில் கையாளவில்லை. தமிழ் சிவில் அமைப்புக்களும் இதே நிலையிலேயே உள்ளன. வடக்கு கிழக்கிலுள்ள சிவில் சமூக அமைப்புக்கள் அன்றாட நெருக்கடிகள் குறித்துக் கவனம் செலுத்தவேண்டிய நிலையிலுள்ளன. கண்ணுக்கு முன்னாலுள்ள நெருக்கடிகளைக் கையாள வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்திருந்தமையில் போதியளவு நியாயங்கள் பொதிந்திருந்தமையை யாராலும் மறுக்கமுடியாது.

1983ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டுவரை இலங்கைச் சிறைச்சாலைகளில் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 100இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். 2012 ஜூலை மாதம் வவுனியாச் சிறைச்சாலையிலிருந்து அனுராதபுரத்துக்கு

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

மாற்றப்பட்ட தமிழ் அரசியல்கைதிகளைக் கொழும்பிலிருந்து சென்ற இராணுவத்தினர் தாக்கினர். அதிலேயே சிறைக்கைதியான தமிழரான நிமலரூபன் கொல்லப்பட்டார். அவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டதை அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் காண்பித்தன. அவருடன் சேர்ந்து தாக்குதலுக்குள்ளான டில்ருக்ன் ஒருமாத காலம் கோமா நிலையிலிருந்த பின்னர் ிராகமி மருத்துவமனையில் உயிரிழந்தார். இவ்வாறாகக் கருத்துக்களை வெளியிட்ட அரசியல்கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் அவர்கள் கடந்த வருடம் முதல் சிறைக்கைதிகளின் விடுதலை கோரி நாட்டில் உள்ள சிறைச்சாலைகளின் முன்னால் கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தார். அத்தோடு அரசியல்கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரியும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வேண்டியும் ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமைக்கு யானைப்பசிக்கு சோளம்பொரி கிடைத்த கதையாய் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டிருந்தமையும் நாம் அறிந்தவையே.

மேலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்க் கைதுசெய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் நிலவரம் கடந்த காலம் முதல் மிக மோசமான நிலையையடைந்து வருவதால், அக் கைதிகளின் உறவினர்கள் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை பற்றிக் கருத்தறியும் நல்லிணக்கச் செயலணி அமர்வுகளில் பங்குபற்றி விபரங்களைப் பதிவு செய்ய வேண்டுமெனத் தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலைக்கான சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது இக்கோரிக்கைக்கமைவாக நல்லாட்சி அரசாங்கம் செயற்பட்டதா என்றால் அதுவும் கேள்விக்குறியே.

எனவே தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை என்பது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கு அவசியமான ஒன்றாகவும் அதுவே நாட்டில் நல்லிணக்கச் ;சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் எனவும் புத்திஜீவிகளும் அரசியல் அவதானிகளும் குறிப்பிடுகின்றனர். நல்லிணக்கப் பொறிமுறை உருவாக்கம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மக்களிடம் கருத்தறியும் வலய மட்டச் செயலணியின் செயற்பாடுகள் கடந்தவருடம் ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளன. இக்குழுவின் செயற்பாடானது போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அதிலிருந்து எவ்வாறு மீள முடியும்? என்று அவர்களிடமே கருத்துக்களைக் கேட்டறிந்து அறிக்கையிடுவதாகும். எனவே நாடெங்கிலுமுள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் இச்செயலணி அமர்வுகளில் பங்குபற்றி விபரங்களைப் பதிவு செய்து தமது நேசத்துக்குரியவர்களின் விடுதலையின் அவசியத்தைத் தெரிவித்திருந்தனர். எனவே குறித்த இச்செயலணியின் பூரண பயனை அரசியல் கைதிகளின் உறவினர்கள் உட்பட தமிழினம் மொத்தமாக பெற்றுக்கொள்ளும் வகையில் நல்லாட்சி அரசாங்கம் மிக்க கரிசனையோடு செயற்படவேண்டும் என்பதே தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் பிரதான விடயமாகும்.

ஆனால் இவ்வருடத்திலும் இக்குழுவில் அரசியல்கைதிகளின் உறவுகள் அக்கைதிகள் தொடர்பில் பதிவு செய்ததன் மூலம் பெறக்கூடிய பயன்களைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். மேற்கூறப்பட்ட செயலணியானது அவ்வணிக்குக் கிடைக்கும் பதிவுகளுக்கு இயைபாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்னரே நாட்டின் பல சிறைச்சாலைகளிலும் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்ட நிலையில் நீண்டகாலமாக எந்தவிதமான நீதி விசாரணையுமின்றி வாடி வதங்கிக்கொண்டும் உளப்பாதிப்புக்களுக்கும் உள்ளாகியிருக்கும் கைதிகளின் எதிர்காலம் எவ்வாறாக அமையுமென்பதை மிகுந்த ஜீவகாருண்யத்தோடு அணுகுவதே முறையானது. எனவே நீண்டகாலமாகச் சிறைவைக்கப்பட்டுள்ள இக்கைதிகள் விடுதலை செய்யப்படுவதற்கான அறிகுறியெதுவுமே தென்படாத இன்றைய நிலையில் இக்கைதிகளின் எதிர்காலம் சிறைச்சாலைகளுடனேயே முடிந்துவிடக்கூடிய பூச்சிய நிலையுள்ளதெனவும் ஊகிக்கக் கூடியதாகவும் உள்ளது. இந்நிலையில் அண்மையில் வடக்கில் தன் மனைவியின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு மீண்டும் சிறைச்சாலைக்குச் செல்லத் தயாரானவேளை தன் மகளும் தந்தையுடன் செல்ல

கைதிகள் தாமும் இயல்பான சமூக நகர்வோடு இயைந்து சென்று புது மனிதர்களாக நவ ஜீவனத்தை மேற்கொள்ள வேண்டுமெனில், காலம் தாழ்த்தாது அவர்கள் மீதான நீதி விசாரணை, நடுநிலை நின்று முன்னெடுக்கப்பட்டு காலதாமதமின்றி அவர்கள் சட்டத்தின் முன் நிரபராதிகள் எனப் பறைசாற்றப்பட்டு விடுதலை செய்யப்படுவதன் மூலம் மட்டுமே அவர்கள் மீதான குடும்பத்தவர்களுக்கும் சமூகத்துக்கும் பயனுள்ள பிரஜைகளாகத் தமது வாழ்வை இட்டுச் செல்வதற்கும் வழிகோல முடியும்

எத்தணித்;த சம்பவம் நாட்டில் எல்லோரையும் கவலையில் ஆழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதே. ஆனால் வாழ்வைத் தொலைத்த அக்குழந்தைகள் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியும் குறித்த கைதியை விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகள் கூட இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது மனவேதனையளிக்கி;ன்ற விடயமாகவே உள்ளது.

இவ்வாறாகச் சிறைச்சாலைகளுக்குள்ளேயே தமது எதிர்காலத்தை முழுமையாகத் தொலைத்து விடக்கூடிய மிகுந்த பரிதாப நிலையில் கைதிகளின் நிலை அமைந்திருப்பதோடு அவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டாலுங் கூட, அவர்களது சுயாதீனமான வாழ்வுக்குப் பங்கம் விளைவிக்கும் விதமாக விடுதலையாகி அவர்கள் தமது பிரதேசங்களுக்குள் வந்து வதியும் போதுங் கூடப் பொலிஸாரினதும், இராணுவத்தினரினதும், புலனாய்வினரினதும் கெடுபிடிகளுக்கு ஆளாகி அவஸ்தைப்பட வேண்டிய நிலையையும் மாற்றியமைக்கும் விதத்தில் அவர்களது விடுதலை அமையவேண்டும். அவ்வாறின்றேல், இக்கைதிகள் சிறைச்சாலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டாலென்ன அல்லது விடுவிக்கப்படாவிட்டாலென்ன பொதுவாக அவர்கள் தமது வாழ்க்கையைத் தொலைத்தவர்களான நடைப்பிணங்களாகவே சமூகத்தில் வாழ வேண்டியேற்படும்.

ஆதலால் இக்கைதிகள் தாமும் இயல்பான சமூக நகர்வோடு இயைந்து சென்று புது மனிதர்களாக நவ ஜீவனத்தை மேற்கொள்ள வேண்டுமெனில், காலம் தாழ்த்தாது அவர்கள் மீதான நீதி விசாரணை, நடு நிலை நின்று முன்னெடுக்கப்பட்டுக் காலதாமதமின்றி அவர்கள் சட்டத்தின் முன் நிரபராதிகள் எனப் பறைசாற்றப்பட்டு விடுதலை செய்யப்படுவதன் மூலம் மட்டுமே அவர்கள் மீதான காவற்றுறையினர், படையினர், புலனாய்வினர் ஆகிய பிரிவினரின் கெடுபிடிகள் அமையாத

12 ஆம் பக்கம் பார்க்க....

சுமந்திரனின் வருகை இதற்குத்தானா?

இந்த வாரம் ஒரு பரபரப்பாகவே நகர்கிறது. ஒன்று பொது ஜன பெரமுன தனது சனாதிபதி வேட்பாளராக கோத்தபாயாவை அறிவித்ததும் அதன் தலைமைப் பொறுப்பை மகிந்த ஏற்றுக் கொண்டமையும், இரண்டாவதாக ஐ.தே.க சனாதிபதி வேட்பாளரை அறிவிக்க தடுமாறுவதையும் சஜீத் தனது ஆதரவு மாகாநாட்டை பதுளையில் கூட்டி தலைமைக்கு நெருக்கடியை கொடுத்தமையும் தொடர்ந்து கண்டி,மாத்தறை என நீள்வதாலும்தென்னிலங்கையில் பரபரப்பு சூழல் நிலவ,

மூன்றாவது கிழக்கில் த.தே.கூட்டமைப்பு மீது விமர்சனங்களும் அதிருப்திகளும் கட்சிக்குள்ளும் வெளியிலும் தொடர்ந்து நீடித்து கொதிநிலையில் இருக்க,தேர்தல்கள் நெருங்கும் காலங்களில் அவ்வளவு நல்லதல்ல எனும் வகையில் அதனை குறைக்கும் வகையில் விழிப்புணர்வுக் கூட்டங்கள் பட்டிருப்பு, கற்குடா தேர்தல் தொகுதிகளிலும் அம்பாறை மாவட்டத்திலும் மட்டு கட்சி அலுவலகத்திலும் நடந்தேறியது. இதற்காக ஊடக பேச்சாளர் சுமந்திரன்அவர்கள் வருகை தந்து கட்சி முக்கியஸ்தர்களும் உள்ளூராட்சி உறுப்பினர்களும் தீவிர ஆதரவாளர்களும் அழைக்கப்பட்டு விளக்கவுரை ஆற்றப்பட்டது. சந்தேகங்கள் ,கேள்விகள் எழுத்து மூலம் கோரப்பட்டு அவற்றிக்கான பதில்கள் சுமந்திரனின் பேச்சினூடே வழங்கப்பட்டது.

கூட்டத்தில் கட்சிப் பிரமுகர்கள்,உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், தீவிர ஆதரவாளர்கள்,இனிவரும் தேர்தல்களில் ஆசனங்களை எதிர்பார்க்கும் பிரமுகர்கள் என விசுவாசிகளையே காணக்கிடைத்தது.பொதுவான பொது மக்களின் வருகை நிகழவில்லை.

சுமந்திரனின் உரையானது பொய்யும் உண்மையும் சில யதார்த்தங்களை கொண்டதாகவும் இருந்த அதேவேளை, இது விசுவாசிகளை ஓரளவு திருப்திப்படுத்தும் வகையில் அமைந்திருந்து என்றே கருதக்கூடியதாகவும் இருந்தது. கூட்டத்தில் இருந்த அமைதியும் தலையாட்டுதல்களும் சாதகமாகக் கொள்ளலாம். கூட்டமைப்பை நோக்கி எறியப்படும் கணைகளுக்கு பதில்களை தயாரிக்கக் கூடிய புள்ளிகளை தேடும் மனநிலையே பல விசுவாசிகளிடம் காணப்பட்டது. களுவாஞ்சி குடியில் அரியநேத்திரனின் ஆரம்ப உரையே இதற்கு கட்டியம் கூறியது. கிழக்கு மாகாண சபையை முஸ்லிம் காங்கிரசிடம் விட்டுக் கொடுக்க வில்லை. பதினொன்றுக்கு ஏழு அல்ல, நான்கு கட்சிகளின் கூட்டு என்ற சப்பைக் கட்டு விளக்கம்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தான் பெரும்பாலானோரின் எதிர்பார்ப்பாக இருந்தது.சுமந்திரனின் பதில் விசுவாசிகளை திருப்திப் படுத்தியதோ இல்லையோ,மட்டக்களப்பு பொது மக்களுக்கு உவப்பாக இருக்கவில்லை, சுமந்திரனின் உரை ஊடகங்களில் வெளி வர,உடனே அதனைப் பார்த்த ஹாரிஸ் எம்பியின் பதில்கள் தற்போது ஊடகங்களில் வந்துகொண்டிருகிறது. ஹரிஸ் எம்பி கூட்டத்தில் பேசிய பேச்சே சான்று. என்னதான் இருந்தாலும் ரணில் அரசாங்கம் முஸ்லிம் தரப்பை மீறி எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் தமிழர் தரப்பிற்கு ஒன்றும் தராது. இது சுமந்திரனுக்கு புரிந்ததா? உண்மையில் புரியவில்லையா? யாமறியோம். இவ்வாறுதான் கணக்காளர் வருவார் என்றார்கள்,ஹரிஸ் வரமாட்டார் என்றார்,இறுதியில் ரணில் நமக்கு கணக்கு விட்டு விட்டார்.

இது கட்சிக் கூட்டம்தான், எனினும்கூட்டம் ஒரு கலந்துரையாடலாக, கருத்துப் பரிமாற்ற அரங்

வ.ச.முரளீசேகரன்

காக,தங்கள் கட்சியைதாங்களே சுய விமர்சனம் செய்து கொள்ளும் திறந்த வெளியாக அமைந்திருக்க வேண்டும். மாறாக எழுதப்பட்ட வினாக்களுக்கு அளிக்கப்பட்ட தனி மனித உரைதான் விடையாகக் கொள்ளப்பட்டது. கேள்விகள் வெளிப்படையாக வாசிக்கப்படவில்லை. உண்மையில் என்ன கேள்விகள் எழுதப்பட்டன, எத்தனை கேள்விகள் எழுதப்பட்டன,என்ற வெளிப்படைத் தன்மை பேணப்படவில்லை.

சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள சனாதிபதித் தேர்தலில் ,தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதை பூடகமாக தெரிவித்தார்.எக்காரணம் கொண்டும் எக் காலத்திலும் கோத்தாவிற்கு ஆதரவு இல்லை. எதிரணி வேட்பாளர்கள் யார் யார் என தெரிவதற்கு முன்பே,தமிழ் மக்களின் கோரிக்கைகளை முன்வைப்பதற்கு முன்பே தீர்மானங்கள் திணிப்பதும் நியாயங்கள் தேடுவதற்குமாகவே கிழக்கை நோக்கிய சுமந்திரனின் வருகை அமைந்ததோ?

மட்டக்களப்பு மண் பறிபோகின்றதா?

கோப்புப்படம்

முனையூரான்

இலங்கையின் நாட்டின் கிழக்கு மாகாணம் இயற்கை அழகு கொண்ட ஒரு பிரதேசம். இப்பிரதேசத்தில் இயற்கையாகவே பல வளங்கள் காணப்படுகின்றன. நிலவளம், நீர்வளமும், வனாந்தரங்களும் கொண்ட அடர்ந்த நீண்ட பிரதேசமாக அமைந்துள்ளது. இயற்கையான துறை முகமும் இம்மாகாணத்தில் அமைந்துள்ளமை சிறப்பிக் குரியது. இதனால் இம் மாகாணத்தின் மீது பலருக்கு அதீத ஆசையும் உள்ளதெனலாம். சுற்றுலாப்பயணிகளின் கவர்ச்சிகர இடமாகவும் இம்மாகாணம் அமைந்துள்ள மையுடன், மூன்றின மக்களும் வாழ்கின்ற இடமாகவும் உள்ளது. இங்கு தமிழர்கள் பெரும்பான்மையினராக கடந்த காலங்களில் வாழ்ந்தாலும் கூட, பல்வேறு திட்ட மிடப்பட்ட குடியேற்றங்கள் மூலமாகவும், தற்போதைய சகோதர இனத்தவரின் பிள்ளைப்பிறப்பு வீத அதிகரிப்பின் காரணமாகவும் பெரும்பான்மையென்ற அந்தஸ்தினை இழக்கும் நிலையினை தமிழர்கள் எதிர்கொண்டு வரு கின்றனர். கிழக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்கள் இருந்தாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரமே அதிகளவான தமிழர்கள் வாழ்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் அதிகம் வாழ்ந்தாலும் கூட அரசியலில், எதிர்கட்சியினரைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரமே தற்போதைய சூழலில் கொண்டிருக்கின்றனர். மட்டக் களப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மூன்று தமிழர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தற்காலத்தில் உள்ளனர். இவர்களுக்கு சமமாக சகோதர முஸ்லிம் இனத்தினைச் சேர்ந்த மூவர் நாடாளுமன்ற உறுப்பினர் களாக இருப்பதோடு, அமைச்சர் பதவியினையும் வகித்து வருகின்றனர். தமிழர்கள் வாழ்கின்ற பகுதியையும், சகோ தர முஸ்லிம் இனத்தவர்கள் வாழ்கின்ற பகுதியையும் ஒப்பிட்டு பார்க்கின்ற போது அபிவிருத்தியில் தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகள் பின்நிலையிலும், சகோதர முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற பகுதிகள் சிறந்தும் விளங்குகின்றன. தமது சமுகத்தினை அபிவிருத்தியின் ஊடாக உயர்த்த வேண்டும் என்ற சிந்தனையில் அவர்களது செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமையினால் அபிவிருத்தியில் முன் னிலை வகிக்கின்றனர். இது அவர்களின் சமுகம் மீதான அபிவிருத்தி அரசியலை வெளிப்படுத்துவதாக பார்க்க முடியும். தமிழ்பகுதிகளில் அவ்வாறு அபிவிருத்தி பணி கள் முன்னெடுக்கப்படாமைக்கு காரணம், கடந்த கால அரசியலாகும். குறிப்பாக இந்த நாட்டிலே நடைபெற்ற மூன்றுதசாப்த யுத்தினை குறிப்பிட முடியும். இதுவரை உரிமைக்கான போராட்டத்தில் ஈடுபட்டமையே காரண மெனவும் சொல்லப்படுகின்றது.

அபிவிருத்திகள் கடந்த காலங்களில் நடைபெறா மைக்கு இவ்வாறான காரணங்களை கூறிக்கழித்தாலும், தற்போதுபல்வேறு வளச்சுரண்டல்கள் பகல்வேளையில் கண்முன்னே நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையங்களின் காரண மாக பொருளாதாரம் அழிக்கப்பட்டு இன்னமும், வறு மைநிலைக்கு இட்டும் செல்லும் நிலை தொடர்கின்றன. நில ஆக்கிரமிப்புக்களும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. இங்குள்ள பல நிலங்கள் அரசகாணிகளாக் கப்பட்டு அவ்வாறான நிலங்கள் வேறுதேவைகளுக்காக வழங்கப்பட்டுள்ளதாகவும் அண்மைக்காலங்களில் செய் திகள் வெளியாகியிருந்தன. இவ்வாறான நிலாீதியிலான அபகரிப்புக்கள் இடம்பெறுகின்ற அதேவேளை, சட்ட விரோத மண் அகழ்வுகள் நடைபெறுகின்றன. இதனால் இருபத்தைந்து வருடங்களின் பின்னர் பாரிய விளைவு களை இங்குள்ள மக்கள் எதிர்கொள்ள நேரிடும். ஆற் றுமணல்கள், நிரப்பு மணல்கள், கிறவல்கள் போன்றன மட்டக்களப்பில் இருந்து ஏற்றிச் செல்லப்படுகின்றன. இதன்மூலமாக ஒருசிலர் பயனைப்பெற்றாலும், பெரும் பாதிப்பினை இங்குள்ள மக்கள் எதிர்கொள்ளவிருக்கின்ற னர் என இதுசார்ந்த புத்திஜீவிகள் கூறுகின்றனர்.

ஆறுகளில் ஏற்றப்படும் ஆற்றுமண் காரணமாக, ஆறுக ளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிறிய ஆறுகள், இன்று பெரிய ஆறுகளாக மாறி யிருக்கின்றன. இதனால் மேட்டுநிலப்பகுதிகள் குறைவடைந்து வருகின்றன. ஆழம் குறைவாக காணப்பட்ட ஆறுகள் ஆழமாக்கப்பட்டுள்ளன. ஆறுகள் ஆழமாக, ஆழமாக அருகில் உள்ள நிலங்களிலும் மண்ணரிப்புக்கள் ஏற்பட்டு, வய லில் உள்ள மண் ஆறுகளுக்குள் செல்கின்றன. இதன்காரணமாக ஒரு குறிப்பிட்ட காலச்சூழ லில் வயல்நிலங்கள் கீழிறங்கும். வயல்நிலங்கள் கீழ்இறங்கினால் வேளாண்மைச்செய்கைக்கு பாதிப்பேற்படும். குறிப்பாக மழையினை நம் பியே பெரும்பாலன வயல்நிலங்களில் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறான வயல்நிலங்களில் சிறு மழைக்கு கூட நீர் தேங் கும் நிலையேற்படும். நீர்தேங்குமாகவிருந்தால், நீரினை வெளியேற்றுவதில் சிக்கலாவதுடன், பயிர்களும் அழிவடையும் நிலையேற்படும். நிலத்தடி நீர்மட்டமும் குறைவடைந்து செல்லும், இதனால் வருடாந்தம் குடிநீரை பெறுவதில் சி க்கல்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

ஆற்றுமணல்களும் தொடர்ச்சியாக உற்பத் தியாகி கொண்டிருப்பதில்லை. எங்கையோ ஓரிடத்தில் உள்ள மண், நீரின் ஊடாக அடித்து செல்லப்பட்டு இன்னொருடத்தில் குவிக்கப்படுகின்றன. குவிக்கப்பட்ட மண்ணையே ஏற்றிச்செல்கின்றனர். சில ஆறுகளில் மண்ணை தோண்டி எடுக்கும் செயற்பாடு களும் நடைபெறுகின்றன. சட்டபூர்வமாக ஒரு நாளைக்கு மூன்று லோட் மண் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட் டிருந்தால் அதற்கும் மேலாக, அனுமதி வழங்கப்படாத இடங்களில் இருந்தும் சட்டவிரோதமாக மண் ஏற்றும் செயற்பாடுகள் நடந்தேறுகின்றன. இதனால் உச்சபச்சமாக பாதிக்கப்பட போகின்றவர்கள் வளச்சுரண்டல் நடை பெறும் பிரதேசத்தினைச் சேர்ந்த மக்களே.

மேட்டுநிலங்களில் இருந்து நிரப்பு மணல் எடுக்கும் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. பள்ளப்பகுதிகளை நிரப்புவதற்காக மேட்டு நிலங்களில் இருந்து மண்ணெடுக் கப்படுகின்றன. இதன்காரணமாக ஒருபகுதி உயர்வடைவ துடன் மற்றைய பகுதி தாழ்வடைகின்றது. இயற்கையின் சமனிலை இல்லாமல் செய்யப்படுவதுடன், நிலத்தடி நீ ர் குறைவடைவதும், இயற்கை வளங்களான மரங்களின் வேர்கள் வெளியில் கிளறப்பட்டு மரங்கள் சரிந்துவீழ் கின்ற செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. இதன்மூல மாகவும் மரங்கள் அழிக்கப்படுகின்றன. மண்ணரிப்பு ஏற் படுவதற்கு வாய்ப்பாவதுடன், மழைவீச்சி குறைவுக்கும் காரணமாகின்றது. இதே போன்று கிறவல்கள் தோண்டப் படுகின்றன. இதனால் கிறவல்தோண்டப்பட்ட பகுதிகள் பல மடுக்களர்களவே இன்றுவரை இருந்து வருகின்றன. இவ்வாறாறு பார்க்கின்ற போது, மட்டக்களப்பின் கனி யவளங்கள் பல ஒவ்வொரு நாட்களும் சுரண்டப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

எல்லா இடங்களிலும் ஒரேவகையான இயற்கை வளங்கள் கிடைப்பதுமில்லை. ஓரிடத்தில் உள்ள இயற்கை வளம் இன்னொரு இடத்தில் இருப்பது மில்லை. இருக்கின்ற இயற்கை வளத்தினை முறையாக பயன்படுத்துகின்ற போதே இயற்கை அனர்த்தங்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகமோசமான வறட்சி ஏற் படுவதற்கு, குறிப்பாக குடிநீருக்காக, குளிநீருக் காக இரவு பன்னிரெண்டு மணியினை கடந்து நீரினை தேடிச்செல்வதும், நீண்ட தூரங்கள் கால்நடையாக நடந்து செல்வதும், அதிகாலைப் பொழுதில் எழுந்து வரிசையாக நிற்பதற்கும் இவ்வாறான இயற்கை வளச்சுரண்டல்களும் காரணமாக அமைகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோத மான முறையில் மண்அகழ்வுகள் நடைபெற்று வருகின்றன என பலரும் பேசிக்கொண்டாலும் இதனை முற்றாக நிறுத்துவதற்கான செயற்பாடு கள் நடைபெற்றாகவில்லை. இவ்வாறு அகழப் படும் மண் மட்டக்களப்பு மாவட்டத்தினைக் கடந்து வேறு மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இம்மாவட்டத்தில் உள்ள மக்கள் பயன்படுத்துவதையும் விட ஏனைய பிரதேசத்தினர் இவ்வளத்தினை அதிகம் பயன்படுத்துகின்றனர். தமது குறுகிய நோக்கங் களுக்காக இவ்வாறான வளங்களை பிறருக்கு கொடுத்து தாம் சந்தோசமடைய நினைக்கின்ற வர்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்காமை கவலை யளிக்கின்றது. இருக்கின்ற வளங்களையெல் லாம் கொடுத்துவிட்டு அவ்வாறான வளங்களை தேடி எவ்வாறு பெற்றுக்கொள்ளப் போகின் றனர். இயற்கையின் சமனிலை இல்லாமல் செய்து இயற்கை அனர்த்தங்களை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர் என்பதும் மிகவும் கவலையானதொன்றே.

எதிர்காலம் பற்றியும், எதிர்கால சந்ததிகளைப் பற்றியும் சிந்திக்காமல், தாம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற சிந்தனைகளே, இவ்வாறான சட்டவிரோத செயல் களைச் செய்வதற்கும் காரணமாக அமைகின்றது. மழை அதிகம் பெய்கின்ற போது வெள்ளமாவதும், மழையில் லாமல் செல்கின்றபோது வறட்சி ஏற்படுவதும் இயற்கையான கனியவளங்கள் இல்லாமலாக்கப்படுகின்றமையினாலேயே நடைபெறுகின்றன

எதிர்காலம் பற்றியும், எதிர்கால சந்ததிக ளைப் பற்றியும் சிந்திக்காமல், தாம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற சிந்தனைகளே, இவ்வாறான சட்டவிரோத செயல்களை செய் வதற்கும் காரணமாக அமைகின்றது. மழை அதிகம் பெய்கின்ற போது வெள்ளமாவதும், மழையில்லாமல் செல்கின்ற போது வறட்சி ஏற்படுவதும் இயற்கையான கனிவளங்கள் இல்லாமலாக்கப்படுகின்றமையினாலையே நடைபெறுகின்றன.

நீண்டதொரு காலத்தின் பின்னர், மட்டக் களப்பு மாவட்டத்தின் வாழ்வாதாரமாக இருக்க கூடிய வேளாண்மை செய்கை பாதிப்படையும் நிலையை அடையும் என கூறிவருகின்ற நிலையில், அவ்வாறான நிலையொன்று உருவா காமல் இருக்க இவ்வாறான கனியவளங்கள் அதிகளவில் சட்டவிரோதமாக சுரண்டப்ப டுவதை தடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அவ்வாறு முயற்சிக்காத போது, இங்குள்ள மக்களின் வாழ்வாதார தொழில் மிகவும் மோச மாக பாதிப்படையும். பாதிப்பினால் இன்ன மும் அபிவிருத்தி காணாது வறுமைநிலையினை அடைவர். வறுமை கல்வி மற்றும் ஏனைய துறைகளிலும் பாதிப்பினை ஏற்படுத்தும். இதன் ஓட்டுமொத்த விளைவு இனத்தின் இருப்பிலும் தாக்கத்தினை கொண்டுவரும். இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டு, மட்டக் களப்பு மண்ணை பறிகொடுக்காதிருப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இல்லாதுவிடின் மண்பறிபோதை தடுக்க முடி யாமலே செல்லும். இந்த யாதார்த்த உண்மை யினை சகலமட்டத்தினரும் விளங்கிக் கொள்ள வேண்டும். இதற்கு அரசியல்வாதிகளின் பங்க ளிப்பும் மிகவும் அவசியமே.

இழுபறி...

05 ஆம் பக்கத் தொடர்ச்சி

சார்ந்தது மட்டுமே. மாறாக, பௌத்த சிங்கள அடிப் படைகளைத் தாண்டி, இனப் பிரச்சினைகளைத் தீர்ப் பதற்கான முனைப்புக்களை எந்தவொரு புள்ளியிலும் நகர்த்துவதற்கு தயாராக இருந்தது இல்லை என்பதை அண்மைக்கால போக்குகள் ஊடாக அறியலாம்.

புதிய அரசியல் யாப்புக்களை வரைவது தொடர்பில் அரசாங்கம் தன்னுடைய நகர்வினை விரைவாக ஆரம்பித் திருக்கின்றது. எனினும் புதிய அரசியல் யாப்பு சீர்தி ருத்தம் ஒற்றையாட்சி என்கிற அடிப்படைகளைத் தாண் டியதாக இருக்காது. அங்கு சம;டி என்கிற பேச்சுக்கே இடமில்லை என்கிற முன்னறிவுப்புக்களை அரசாங்கம் ஏற்கனவே வெளியிட்டுவிட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது.

கடந்த ஆட்சிக்கு பின்னரான மைத்திரி- ரணில் தலைமையிலான இலங்கையின் தேசிய அரசாங்கம், அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளினதும், இந்தி யாவினதும் செல்லப்பிள்ளை என்றே பலரால் கூறப் பட்டுவருகின்றது. அப்படிப்பட்ட நிலையில், தன்னு டைய செல்லப்பிள்ளையை அழுத்தமடையச் செய்யும் முனைப்புக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப் படுத்தும் போது, அதனை அந்த நாடுகள் அனுமதிக் குமா? அனுமதித்தாலும், அதன் தாக்கம் எவ்வளவாக இருக்கும் என்பதுவும் கூட, தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத் தீர்மானங்களின் போது அதிக தாக்கம் செலுத்தும் எனலாம்.

புதிய அரசியல் யாப்பினை முன்வைப்பதினூடு, தேசி யப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்று ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவும் தொடர்ந்தும் கூறி வந்திருக்கின்றார்கள். ஆனால், அவர்கள்தான், அடிப்படை கட்டமைப்புக்களை மாற்றாத அரசியல் யாப்பு ஒன்றினை வரைவது தொடர் பில் கவனம் செலுத்தியிருக்கின்றார்கள். அதாவது, நிறை வேற்று அதிகார ஜனாதிபதி முறையை பகுதியளவில் நீ க்கி, நாடாளுமன்றத்தினை அதிகாரமுள்ள சபையாக மாற்றுவதுதான் புதிய அரசியல் யாப்பின் அடிப்படை நோக்கமாகும்.

இப்படிப்பட்ட நிலையில், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வினை அடைவது தொடர்பி லான நம்பிக்கையை இரா.சம்பந்தன் எதன் போக்கில் வெளிப்படுத்துகின்றார். எனவே கடந்த காலத் தேர்தல்க ளில் தமிழ் மக்களிடம் கோரிப் பெற்றிருக்கின்ற பெரும் ஆணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதன் தலைமையும் அர்ப்பணிப்பாக இருந்தாக வேண்டும். அத்தோடு, தென்னிலங்கை, வெளிநாடுகள் உள்ளிட்ட அனைத்து தரப்புக்களோடும் விடாப்பிடியான களமா டுதலுக்கும் தயாராகவும் இருக்க வேண்டும். மாறாக, மௌனமான நகர்வின் ஊடாக வெற்றிகளைப் பெறலாம் என்பது எவ்வளவுக்கு பொருத்தமானதாக இருக்கும் என் பது ஆய்வுக்குரியது.

நாட்டில் தமிழ்த் தேசிய அரசியலில் அனுபவமும், நிதானமும் தமிழ்த் தலைமை இரா.சம்பந்தனிடம் அதிக மாக இருப்பது என்னவோ உண்மைதான். ஆனால், அவர் அதனை வைத்துக் கொண்டு எதிர்வரும் காலங்களிலா வது தம் சார்ந்த கட்சிப் பிரதிநிதிகளின் ஆலோசனைக ளோடு தமிழ் மக்களுக்கு எவ்வளவு வெற்றிக்கனிகளைப் பறித்துத் தரப்போகின்றார் என்பதில் தான், தமிழ் மக்க ளின் எதிர்கால அரசியல் தங்கியுள்ளது எனலாம்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலும் முஸ்லிம் வாக்காளர்களும்

கோப்புப்படம்

தந்திமகன்

நாட்டில் யார் ஜனாதிபதியாக வரப்போகிறார் என்கிற கோதவில் அரசியல் கட்சிகள் முஸ்தீபில் இறங்கிக் கொண்டு கூட்டுச்சேர்வதா? தனித்துவமாக கேட்பதா? முஸ்லிம்களையும் இணைப்பதா? தமிழ் கட்சிகளை இணைப்பதா? விடுவதா என்கிற பணிகளில் தான் இப்போது இலங்கையின் அரசியல் களநிலவரம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமை யாவரும் அறிந்த விடயமே. உண்மையில் பார்க்கப்போனால் இந்த அரசு ஆட்சிபீடமேறிய அன்றிலிருந்து இன்றுவரைக்கும் இந்நாட்டின் சிறுபான்மையினர் மீதான பல்வேறு நச்சரிப்புக்களையே தூக்கி நிமிர்த்தி இறுதியில் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக வெட்டிவிடும் அளவுக்கு துரத்தித்துரத்தி அடித்த அடி இன்னும் காயம் ஆறாத வடு தீருமுன்னர் மீண்டும் ஒரு தேர்தலுக்குள் வந்திருக்கிறது. குறிப்பாக இலங்கை வாழ் முஸ்லிம்கள் பட்ட அடி உதைதான் அதிகமாகும். முஸ்லிம்கள் தொடர்பான பல்வேறு சர்ச்சைகள் உருவாகிய ஒரு அரசாங்கமாகவும், அந்தஅரசில் இருந்த அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் ஒன்றாக இணைந்து விலகியமை போன்றனவும், முஸ்லிம் ஊர்கள் பல பற்றி எரிந்தமையும், முஸ்லிம்களின் மத விடயங்களில் பேரினவாதிகளுள் ஒரு முக்கிய மான பிரிவினர் இந்த நாட்டைவிட்டே ஓட வேண்டியவர்கள் முஸ்லிம்கள் என்று கூறும் அளவுக்கு நிலை கடுமையாக இருந்ததும் இந்த நல்லிணக்க அரசில்தான் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

இந்த நிலையில் இன்னும் இருக்கிற கொஞ்சநெஞ்ச அரசின் ஆட்டம் காணும் அரசினதும், எதிர்க்கட்சியினதும் இன்றைய பிரச்சினை யார் ஜனாதிபதியாக இந்நாட்டுக்கு வரவேண்டும், யாரைக் கொண்டுவந்தால் கடந்தகாலங்களில் நடைபெற்றதை போன்று நடைபெறாமல் இருக்கச் செய்கின்ற ஒருவரையே கொண்டுவரத் துடிக்கும் கட்சிகளின் நிலவரத்தை முஸ்லிம் கட்சிகள் பெரியளவில் கண்டு கொள்ளாமல் இன்றைய அரசின் பிரதமர் பக்கம் சாய;ந்து காய் நகர்த்திக் கொண்டு இருக்கிற கொஞ்ச நாட்களுக்குள் முஸ்லிம்களுக்கு ஏதாவது அபிவிருத்தி மாயை முன்நிலைப்படுத்தி மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் என்று இப்போது கூறப்படுகின்ற பிரதமர் ரணில் பக்கம் சாய்ந்து செல்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை காத்திருப்பதாக மக்கள் கூறுகின்றனர். காரணம் முக்கிய முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் யார் என்ன சொன்னாலும், யார் எதிர்த்தாலும், மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கூறினாலும் அவர்கள் தம்முடைய நிலைப்பாட்டிலிருந்து விலகாமல் யுஎன்பியின் இன்றைய பிரதமரையே தெரிவு செய்வதற்கு மக்களுக்கு ஆணையிடுவார்கள். இது மீண்டும் எதிர்வரும் அரசின் தலைவராக இன்றைய எதிர்க்கட்சியி அறிவித்திருக்கின்றவர் தலைவராக தெரிவானால் மீண்டும் முஸ்லிம்களின் நிலைமை என்னவாகும் என்பது யாருக்குமே தெரியாத புதிராகவே இருக்கப்போகிறதா என்று மக்கள் அங்ககலாய்க்கும் அளவுக்கு நிலைமை யாரும் கூறுவாரும் இல்லை, அதைப் பற்றி யாரும் பேசுவாரும் இல்லை. இது முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு நல்லதோர் சந்தர்ப்பமாகும்.

இப்போது முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷ அவர்களுடைய சகோதரரான முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், நாட்டில் முப்பது வருடங்களுக்கும் மேலாக நாட்டின் அரசுடன் மோதிக் கொண்டிருந்த புலிகள் இயக்கத்தை முற்றாக ஒளித்து, நாட்டின் சுமுக நிலைமையைத் தோற்றுவித்த மகிந்த அரசின் காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டபாய அவர்கள் தெரிவாகியிருக்கிறார். இவரின் இருக்கமான முற்போக்கான சிந்தனைகள் காரணமாக நாட்டின் யுத்தம் முடிவாக்கியமை, நாட்டின் போக்குவரத்து அபிவிருத்தி, கொழும்பை அழகிய நகராக்கியமை போன்றன சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டவைகள் என்பது யாருக்கும் தெரிந்த விடயம். ஆனால் இன்றைய அரசு பல்வேறு பெயர்களில் வீதி அபிவிருத்தியை மேற்கொண்டிருந்தாலும், அன்றைய அரசியல் மேற்கொள்ளப்பட்ட பாரிய வீதி அபிவிருத்திக்கு சரிசமமாக இருக்கவில்லை என்று மக்கள் கூறும் அளவுக்கு மகிந்த அரசினை கூறுவதுமுண்டு.

இந்த நிலைமையில்தான் 2015ம் ஆண்டிலிருந்து அடுத்த தேர்தலைப் பற்றிய பேச்சுக்களே அதிகமதிகம் கூறிய வரலாற்றுப் பின்னணியில் மக்களின் வாழ்வாதாரத்தையோ, மக்களின் பொருளாதாரத்தையோ பற்றிய சிந்தமை மிகக் குறைவாகவே இருக்குமளவுக்கு மக்கள் மீது அதீத பிடிப்புக் கொள்ளாமல் அரசியலில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகளுக்குள் ஏற்பட்ட சிக்கல்களே அதிகமாக இருந்த ஒரு வரலாறும் இன்றைய நல்லாட்சி என்கிற பொல்லாப்பு ஆட்சியின் இறுதிக் கட்டம் நெருங்கிக் கொண்டு வருகின்ற இன்றைய நாட்களில் இந்நாட்டில் மூவின மக்களுக்குள்; ஒரு பிரிவினராகிய முஸ்லிம்கள் பற்றியும், அவர்களுடைய அரசியல் பற்றியும் வேட்பாளர் கோட்டபாய அவர்களே முன்னிலைவாதியாக இருந்து முஸ்லிம் கட்சிகளை விட்டுவிட்டு மக்களை அதுவும் அந்த மக்கள் ஒன்று கூடுகின்ற முக்கியமான பள்ளிகளில் ஒன்றாகிய கண்டியின் மீரா மக்காம் பள்ளிவாசலுக்குச் சென்று முஸ்லிம்களைச் சந்தித்திருக்கிறார். அந்தளவுக்கு மக்கள் இந்த அரசியலை விட்டொதிங்கி ஐயா கோட்டாவே சரணமப்பா என்கிற நிலைமை தோன்றியிருக்கிறது. ஒருவகையில் அந்த கண்டி மக்கள் இவ்வரசில் பட்ட துன்பங்கள் நிலைமைகளை அறிந்து மீண்டெழுவதற்கு கோட்டபாய அவர்களே சரியானவராக கண்டிருக்கக் கூடும்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபாய ராஜபக்ஷ கடந்த வாரம் தலதா மாளிகைக்கு சென்ற சமயம் கண்டி மீரா மக்காம் பள்ளிவாசலுக்கும் சென்றிருந்தார். அங்கு நிறைந்த முஸ்லிம் உலமாக்கள், பொதுமக்கள் என்று அவரை வரவேற்று ஆசீர்வாதம் செய்திருந்தனர். அதேவேளை மற்றுமொரு வேட்பாளராக களமிறங்கத் துடிக்கும் முன்னாள் ஜனாதிபதியின் புத்திரரான அமைச்சர் சஜீத் பிரேமதாஸ அவர்கள் முஸ்லிம்களைப் பற்றியதான எவ்விதமான எதிர்காலத் திட்டங்கள் பற்றிய முக்கிய அறிவிப்புக்களை இதுவரை வெளியிடவில்லை. ஆனால் முஸ்லிம் தலைவர்கள் யுஎன்பியை விட்டு வேறுபக்கம் அவர்கள் செல்வார்களா என்பதும் கேள்விக்குறியே. ஆயினும் இந்த முஸ்லிம் தலைவர்கள் என்கிற இவர்கள் ஓரிரு வாரங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் விட்டொதிக்கிய அமைச்சுப் பதவிகளை சற்று பொறுமை காத்து இனிவரும் நாட்களில் நடைபெறவுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களின் முஸ்லிம்களுக்கு எவ்வகையான அபிவிருத்திகள், பாதுகாப்பு போன்றவற்றை நல்லமுறையில் பேசி தீர்மானித்திருக்கலாம். ஆனால் இன்று அவ்வாறு இல்லை. இன்றைய அமைச்சர்கள், இன்றைய அரசின் பங்காளிகளான இவர்கள் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒழுங்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாகவோ, அரசியல் விடயங்களில்கூட இறுக்கமான தீர்வுகளை பெறுவதற்குக் கூட பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளாத நிலையில் காணப்படுகின்றனர்.

இந்த நாட்டைப் பொறுத்தளவில் முஸ்லிம் மக்கள் தனித்துவமாக அரசியலி; இறங்கி வெல்ல முடியாது. யார் என்ன சொன்னாலும் ஒன்று பொதுஜன பெரமுன அதாவது எஸ்எல்பி, அடுத்ததாகவுள்ள கட்சி ஐக்கிய தேசியக் கட்சி. இந்த இரண்டையும் மாறிமாறி ஆதரவு தெரிவித்தே ஆகவேண்டிய கட்டாயமும் உண்டு. பேசியிருக்கிறோம், அந்தச் சட்டத்தை நீக்குவோ, இந்தச் சட்டத்தை எதிர்ப்போம், முஸ்லிம்களை ஒன்றிணைத்து போராடுவோம் என்றெல்லாம் கேட்கும் அளவுக்கு முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் அது கிடையாது. ஆனால் கொடுக்க வேண்டியதை கொடுத்தால் மாறவே மாட்டார்கள் என்பது இந்த முக்கிய தலைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள கட்சிகளுக்குத் தெரியும். அதனால்தான் இவர்களை அவர்கள் பிடித்துக் கொள்வதன் நோக்கமாகும் என்கிறார்கள் அக்கட்சியினர்.

ஏனெனில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது பாராளுமன்ற உறுப்பினரான கல்முனை ஹரீஸ் அவர்கள் கூறிய விடயத்தினை பார்க்கிறபோது நாம் நாமாகவே இருக்கிறோம். என்கிற கருத்தினை வலியுறுத்தியிருந்தார். அதாவது, எமது முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை விட அமைச்சு பதவி பெரிதான ஒரு விடயமல்ல. கடந்த 2015 ஆம் ஆண்டு மக்கள் மைத்திரி அலையில் அள்ளுண்டு போனதால் அரசியல் தலைமைகளுக்கு இந்த அரசை அமைக்க எந்தவித ஒப்பந்தங்களும் இல்லாமல் ஆதரவு வழங்கும் நிலை ஏற்பட்டது. அது போன்று இம்முறை செய்ய முடியாது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளை கொண்டு திட்டமிடப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை செய்து முடிக்க வேண்டும். கடந்த ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் பெரிய இரு இனங்களான சிங்கள, தமிழ் மக்களின் மனோநிலை வேறுவிதமாக இருக்கிறது. நெருக்கடியான இக்கால கட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அவசரப்பட்டு எந்த தீர்மானங்களும் எடுக்க முடியாது. கடந்த காலங்களை விட இந்த தேர்தல் கடினமாக இருக்கும் என்பதால் அலசி ஆராய்ந்து பார்த்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும்.

பிரதான அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர்களை அடையாளப்படுத்த இப்போதுதான் ஆரம்பித்துள்ளார்கள். நாங்கள் தொடர்ந்தும் அச்சத்துடன் வாழ முடியாது. திருமண சட்டம், காதி நீதிமன்ற விவகாரம், நிஹாப் பிரச்சினை அடங்களாக பிரதேச ரீதியாக பல பிரச்சினைகள் இருக்கிறது அவற்றை தீர்த்து வைக்க வேண்டும். அதை செய்யாமல் அமைச்சர் பதவியை பெற்று கொள்ள முடியாது. எங்களின் கூட்டு இராஜினாமா மூலம் சர்வதேச அழுத்தங்கள் இந்த நாட்டு பரவலாக வரத்தொடங்கியுள்ளன. எங்களின் ஒற்றுமையான பயணத்தின் மூலம் நாங்கள் எமது நாட்டில் வாழும் முஸ்லிங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடிந்திருக்கிறது.

முஸ்லிங்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் அதிகமான பிரச்சினைகள் தேங்கி இருக்கிறது. தோப்பூர் மக்களுக்கான பிரதேச செயலக உருவாக்கத்தை இலக்காக கொண்டு முன்வைக்கப்பட்ட அமைச்சரை பத்திரத்தை கூட தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தனும் ஏனைய சில தமிழ் எம்.பிக்களும் தலையிட்டு தடுத்து விட்டார்கள். ஓட்டமாவடி மற்றும் வாழைசேனையில் எமது மக்களின் காணிப்பிரச்சினையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு அநீதியாக நடந்து கொள்கிறது. களுவாஞ்சிகுடியில் நடந்த கூட்டம் ஒன்றில் பொய்யான பல தகவல்களை இனவாதமாக தமிழ் மக்களிடம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் பேசியுள்ளார். கல்முனை என்பது 100 வருடங்களுக்கு முன்னரே இருந்து முஸ்லிம் அமைச்சர்கள், தலைவர்களால் வடிவமைக்கப்பட்ட நகரம். தமிழ் புலிகளின் உதவியுடன் உருவாக்கப்பட்ட உப செயலகத்தை அவர்கள் நினைத்தால் போல தரமுயர்த்த அவர்கள் கொண்டு வரும் திட்டங்கள் ஒருபோதும் வெற்றிபெற நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. பொய்யான பல தகவல்களை ஊடகங்களிடமும், மக்களிடமும் தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பரப்பி வருகிறார்கள். அவர்களின் கருத்துக்களால் முஸ்லிம் புத்திஜீவிகளும் கூட சில நேரங்களில் குழம்பி போகிறார்கள். கல்முனையில் யாருக்கும் எந்தவித விட்டுக்கொடுப்புக்களோ அல்லது அநியாயங்களோ நாங்கள் செய்யப்போவதில்லை. இவர்களின் பொய்யான பரப்புக்களை நாங்கள் நம்ப தேவையும் இல்லை. கல்முனை விவகாரம் பற்றிய முன்னெடுப்புக்கள் சம்பந்தமாக என்னிடம் யார் எப்போது வினவினாலும் பதிலளிக்க தயாராகவே இருக்கிறேன்.

முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை மதியாமல் வடக்கையும் கிழக்கையும் இணைத்தவர்கள் மீண்டும் வடக்கையும் கிழக்கையும் இணைக்க தமது கோரிக்கைகளை புதிய வேட்பாளர்களிடம் முன்வைக்க தயாராகி வருகிறார்கள். முஸ்லிம் தரப்பில் நாங்கள் முன்வைக்கப்போகும் முதல் கோரிக்கை வடக்கையும் கிழக்கையும் ஒரு போதும் இணைக்க கூடாது என்பதாகும். இந்த நல்லாட்சி அரசாங்கத்தினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மீது இரக்கமும், பாசமும் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது. நான் என் மக்களின் உரிமைக்காக போராடும் சண்டைக்காரனாக இருந்து போராடி என்னால் முடிந்த சகல விடயங்களையும் சாதிக்க முயற்சி செய்து வருகிறேன் என்கிற உரிமைப்போராட்டமாக கூறியிருந்தார் ஹரீஸ் எம்பி அவர்கள். எனவேதான், வரப்போகிற ஜனாதிபதித்தேர்தலில் முஸ்லிம்களின் நிலைமை என்னவாகும் என்பதை கட்சித்தலைவர்கள் தீர்மானிப்பதைவிட அந்த மக்கள் சரியான தீர்மானம் எடுப்பார்கள் என்பதே பலரினதும் கருத்துக்களாகும். பொறுத்திருந்து பார்ப்போம்.

சிந்தித்து வாக்களிக்க வேண்டும்!

சத்தார் எம் ஜாவித்

தமது வெற்றிக்காக போட்டி போடும் வேட்பாளர்களால் வாக்காளர்கள் குழப்பத்தில் தேர்தல் என்றாலே அதிகம் குழப்பத்திற்குட்படுபவர்கள் வாக்காளர்கள்தான் காரணம் யாருக்கு வாக்களிப்பது, எந்தக் கட்சிக்கு வாக்களிப்து என்ற தடுமாற்றமும், குழப்பமும் ஏற்படுவது மட்டுமல்லாது பிரச்சினைகளுக்கும்கூட முகங்கொடுக்கின்றனர் எனலாம். ஆனால் எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பொருத்தவரை கட்சிகள் ரீதியாக போட்டியிடும் வேட்பாளர்கள் மத்தியில் இன்று பாரிய போட்டித் தன்மைகளும், இழுபறி நிலைமைகளும் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில்; சிறுபான்மை மக்கள் இன்று வரை பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். முக்கியமாக இனவாதப் பிரச்சினையால் எடுத்தற்கு எல்லாம் முஸ்லிம்களை தாக்குவதும், அவர்களின் பள்ளிவாசல்கள், மதர்ஸாக்களை உடைப்பதும், அவற்றிற்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் சமுகங்களின் ஒற்றுமைக்கு பாரிய பங்கங்களையே ஏற்படுத்தி வருகின்றன. நாட்டின் சட்டங்களுக்கும், பாதுகாப்புக்கும் கட்டுப்படாத ஒரு சில குழுக்கள் இந்த நாட்டின் ஜனநாயக இறைமையை குழிதோண்டிப் புதைத்து வருகின்றனர்.

நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் இடம் பெற்ற தீவிரவாதத்தாக்குதலைத் தொடர்ந்து அதன் தாக்கமும், பின் விளைவுகளும் இலங்கையின் அரசியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. குறிப்பாக குறித்த தாக்குதல் விடயங்களை காரணமாக வைத்து குறித்த தாக்குதலுக்கு ஆட்சியில் இருக்கும் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என்ற போராட்டத்தில் எதிரணியினர் ஈடுபட்டு வருவதுடன் இருக்கும் அரசாங்கத்தை பதவி விலகு மாறும் வற்புறுத்தி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் ஏப்ரல் தாக்குதலை ஒருசில முஸ்லிம் நபர்கள் செய்துள்ளதால் அந்த சம்பவத்தில் எந்தவித சம்பந்தமும் இல்லாத ஏனைய அனைத்து முஸ்லிம்களையும் தொடர்பு படுத்தி ஒருசில இனவவாத அரசியல்வாதிகளும், பௌத்த தேரர்களும் செயற்பட்டு வருவதும், அப்பாவி பௌத்த மக்களை முஸ்லிம் சமுகத்திற்கு எதிராக திசைதிருப்பி முஸ்லிம் சமுகத்தினை குற்றவாளிகளாக சித்தரித்து சூடுகாய்வதும் தொடராகவே நடந்தேறி வருகின்றது. இதனை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

குறிப்பாக ஒரு சமுகத்தினை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் சம்பவங்கள் இந்த நாட்டின் ஜனநாயக இறைமைக்கு பேராபத்தானதொரு விடயமாகும். இந்த நாட்டின் 99 சதவீதமான மக்கள் அமைதி சமாதானம், ஒற்றுமை என்பனவற்றையே விரும்புகின்றனர்.

ஆனால் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் தமது சுயஅரசியல் இலாபங்களுக்காகவும், அரசியல் இருப்புக்களை தக்க வைத்துக் கொள்வதற்காகவும் அப்பாவி சிறுபான்மை முஸ்லிம் மக்கள் மீது வன்முறைகளைத் தூண்டி பிரச்சினைகளை ஏற்படுத்துவதும் அவர்களின் செயற்பாடுகளாக இருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும். தேர்தல் காலம் நெருங்க நெருங்க இனவாத மற்றும் மதவாத சக்திகளின் தீய செயற்பாடுகள் முஸ்லிம் சமுகத்தினை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படலாம் என்ற சந்தேகங்கள் காணப்படுவதால் முஸ்லிம் சமுகம் அச்சத்திலேயே உள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர் ஆளுங் கட்சிக்குள்ளும், எதிர்க்கட்சிக்குள்ளும் பல கருத்து முறண்பாடுகளையும், பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. தத்தமது தேர்தல் வெற்றிக்காகவும், அரசியல் இருப்புக்களை தக்க வைத்துக் கொள்வதற்காகவும் முழங்காலுக்கும், மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவதுபோல் எந்தவித சம்பந்தமும் இல்லாது தாக்குதல் விடயத்தை எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தல் போட்டிக்காக அரசியல் வாதிகள் பேசுபொருளாக எடுத்துச் செயற்படுவது தற்போது பூதாகரமாகி வருகின்றது. இந்த விடயம் மிகவும் ஆபத்தானதொரு விடயமாகவே நோக்க வேண்டியுள்ளது.

கோப்புப்படம்

இலங்கையின் வரலாற்றில் கடந்த இரண்டொரு தஸாப்த காலமாக அரசியல் கட்சிகளைப் பொருத்த வரையில் தமது கட்சிகளை வளர்க்கும் விடயத்திலேயே அரசியல்வாதிகளின் கவனம் இருக்கின்றதே தவிர மக்கள் நலன்களிலோ அல்லது அவர்களின் சுகதுக்கங்களிலோ அவர்கள் கவனஞ் செலுத்துவதாக தெரிய வில்லை. ஆனால் தேர்தல் காலங்களில் தமது இலக்கு வாக்குகளை அபகரிக்கும் வகையில் இருப்பதையே நாம் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது.

தற்போதைய சூழ் நிலையில் இரண்டு பிரதான கட்சிகளும் தத்தமது ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு விடயத்தில் ஒரு வகையான திண்டாத்தில் இருந்து வருகின்ற நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதிய கட்சி மூலம் தனது இளைய சகோதரர் கோட்டாபாய ராஜபக்ஷவை அறிவித்துள்ளார். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டு அணியினர் இன்னும் தமது ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் இழுபறி நிலையில் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அமைச்சர் சஜித் பிரேமதாஸவை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளும், அழுத்தங்களும் பலமாக இருக்கின்றது. இதேவேளை ஜே.வி.பியும் தமது கட்சி சார்பாக ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளது.

சிறுபான்மை தமிழ் மக்களைப் பொருத்தவரை முன்னாள் ஜனாதிபதியின் காலத்தில் வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தின்போது பெருமளவான தமிழ் மக்கள் காணாமல் போனது, கொல்லப்பட்டமை போன்ற சம்பவங்கள் அந்த மக்களின் மனங்களில் இருந்து அகலாத நிலையில் எதிர் வரும் தேர்தலில் கோட்டாபாய ராஜபக்ஷ போட்டியிடுவதால் தமிழ் மக்களைப் பொருத்த

12 ஆம் பக்கம் பார்க்க....

சூடுபிடிக்கும்

ஜனாதிபதித் தேர்தல் களம்



தாக்குதலின் பின்னர் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களினால் அவர்கள் அச்சமடைந்துள்ளனர். ஏற்கனவே அளுத்கம சம்பவத்தில் மஹிந்த மற்றும் கோட்டாபய மீதான அனுபவங்கள் அவர்களை மீளவும் அச்சமடைய வைத்துள்ளது ஆக இந்த நிலையில் அவர்கள் கோட்டாபயவிற்கு ஆதரவு வழங்க போவதில்லை. தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் 2009 மே அனுபவங்களை அவர்

பண்டாரவன்னியன்

எதிர்பார்ப்பு, ஊகம், சந்தேகம் என்பனவற்றிற்கு கடந்த வாரம் விடை கிடைத்துள்ளது. ஆம் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்பு செயலர் கோட்டாபய ராஜபக்ச, அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்சவினால் அறிவிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைதரிபால சிரிசேன தலைமை தாங்கும் ஸ்ரீலங்க சுதந்திர கட்சி ஆகிய தேசிய கட்சிகள் தமது வேட்பாளர் குறித்து இன்னமும் அறிவிப்புக்களை வெளியிடவுல்லை.

ஏற்கனவே ஐக்கிய தேசிய கட்சிக்குள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவை வேட்பாளராக நியமிக்குமாறு கட்சியின் பல உறுப்பினர்கள் வலியுறுத்தும் அதேவேளை சஜித் தானே ஜனாதிபதி வேட்பாளர் என பெரும் எடுப்பில் பொதுக் கூட்டங்களை நடத்திவருகிறார். அண்மை பதுளை பொதுக்கூட்டம் இதற்கு சிறந்த உதாரணம்.

இருந்த போதிலும் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதுவரை எந்த முடிவுகளையும் எடுக்கவில்லை.

மறுபுறத்தில் மக்கள் விடுதலை முன்னனி தமது சொந்த வேட்பாளரை களமிறக்க போவதாக தெரிவித்துள்ளது. இந்த நிலையில் ஸ்ரீலங்க பொதுஜன பெரமுன தனது முதலாவது பொதுக்கூட்டத்தை செந்த மாவட்டமான ஹம்பாந்தோட்டையில் கடந்த வாரம் நடத்தியிருந்தது. இதில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டிருந்ததை ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிந்தது.

உண்மையில் கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்க பொதுஜன பெரமுன பாரிய வெற்றி பெற்றிருந்தது. அண்ணளவாக சுமார் 53 லட்சம் வாக்குகளை பெற்றிருந்தது.

இந்த நிலையில் தமக்கான வெற்றி உறுதி என்ற நிலைப்பாட்டில் பொதுஜன பெரமுன அரசியல் காரியங்களை மேற்கொண்டு வருகின்றது. இதில் இன்னொரு விடயம் ஸ்ரீலங்க சுதந்திர கட்சி தமது சொந்த வேட்பாளரை நிறுத்தாமல், கோட்டாபயவிற்கு ஆதரவு வழங்க முடிவெடுத்தால் அவரின் வெற்றி உறுதியாகும்.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால பொதுஜன பெரமுனவின் வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதற்கும், தம்மை பழிவாங்கும் அரசியலை மஹிந்த தரப்பு செய்யக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டதாகவும், அதற்கு அவர்கள் இணங்கியதாகவும் சில கதைகள் நிலவுகின்றன இருந்த போதுலும் அரசியலில் இறுதி நேரத்தில் எதுவும் மாறலாம்.

சுதந்திர கட்சி தமது சொந்த வேட்பாளரை களமிறங்கினால் முடிவுகள் மாறுபடலாம். சுதந்திர கட்சியின் வாக்குகள் இரண்டாக உடைந்து, பொதுஜன பெரமுனவிற்கு போகும். அவ்வாறு போனால் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர், வடக்கு கிழக்கு, மலையக தமிழ் மக்கள், மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் பெற்றபெறலாம். ஏப்ரல் 21 கள் மறந்துவிட இல்லை.

இதேவேளை மலையக தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கான தனி வீட்டுத்திட்டத்தை ஐக்கிய தேசிய கட்சியே வழங்கியுள்ளது ஆகவே அவர்கள் அந்த நன்றி உணர்வை மறக்கமாட்டார்கள்.

ஆக இத்தகைய கணிப்பின் பிரகாரம் சுதந்திர கட்சி தனது வேட்பாளரை அறிவித்த பின்னர் அல்லது நிலைப்பாட்டை அறிவித்த பின்னர், பிரதமர் தன்னை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கலாம். அவ்வாறு வாக்குகள் உடையும் பட்சத்தில் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படலாம். இருந்தாலும் இனிவரும் இலங்கை தேர்தல் களம் இன்னும் சூடுபிடிக்கவுள்ளது. பல மாற்றங்கள், எதிர்பாராத முடிவுகள் நடைபெறவுள்ளது. கோட்டாபயவின் அமெரிக்க குடியுரிமை விவகாரம் கிளம்பியுள்ள நிலையில் மேலும் பல அதிரடி சம்பவங்களை இலங்கையர்கள் அனுபவிக்க முடியும் என்பதில் ஐயமில்லை. காத்திருப்போம் சூடான தேர்தல் கள முடிவுகளை அறிய.

நாடு சுபீட்சமாக இருக்கவேண்டுமானால் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்

மட்டக்களப்பு மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான தம்பிப்போடி வசந்தராசா உடனான நேர்காணல்

கேள்வி: எமது நாட்டில் பல்லின சமூகம் வாழ்கின்றது. அனைவரும் இணைந்தே வாழ வேண்டிய சூழல் உருவாக்கப்படவேண்டும். இன்றுள்ள நிலையில் சமூக நல்லிணக்கததை ஏற்படுத்துவதிலுள்ள சவால்கள் எவை என கருதுகின்றீர்கள்?

பதில்: நமது நாட்டில் பல்லின சமூகங்களும் இணைந்து வாழவேண்டியது மிகவும் அவசியம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஒரு நாடு அபிவிருத்தியடைந்து நிம்மதியாக, அமைதியாக, பிரச்சினைகளின்றி இருக்க வேண்டுமானால் அந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். பிரிந்து நின்றால், ஒற்றுமையின்றி நின்றால் பலவீனப்பட்ட நாடாக, அச்சம் நிரம்பிய நாடாக, வளர்ச்சி குன்றிய நாடாகவே அது இருக்கும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் பிரதான இனங்களான சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் ஆகிய மூன்று இன மக்களும் இன்றைய நிலையில் ஒன்று பட்டு நிற்பதில் பல சவால்கள் உள்ளன.

சிங்கள மக்களைப் பொறுத்த வரையில் அல்லது அவர்களை வழி நடாத்துகின்ற அரசியல் மற்றும் மதத் தலைவர்களைப் பொறுத்த வரையில்; சிங்கள இனமே இந்த நாட்டின் சொந்தக்காரர், அவர்களுக்கே எல்லா உரிமைகளும் உண்டு, அவர்கள் சொல்வதைத்தான் மற்றவர்கள் கேட்க வேண்டும், அவர்கள் கொடுப்பதைத்தான் மற்றவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும், மீறி எவரும்; நடக்கக் கூடாது மீறி எதனையும் கேட்கக்கூடாது என்ற மன நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

ஆரம்ப காலத்திலிருந்தே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதன் மூலம் இஸ்லாமிய சமூகம் முன்னேறிக் கொண்டிருந்தது. இம்முன்னேற்றத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத பேரினவாதம் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதாவது 1915 ஆம் ஆண்டு நாடு முழுவதிலும் உள்ள இஸ்லாமிய மக்களை கடுமையாகத் தாக்கியது. இதனால் நாடுமுழுவதிலும் இனக் கலவரம் வெடித்தது. அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இக்கலவரத்தை மென் போக்கு கொண்டு தடுக்க முடியாமல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தே அடக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

பேரினவாதம் இஸ்லாமிய மக்கள் மீது மட்டும் இனக்கலவரத்தை கட்டவிழ்த்து விடவில்லை. சிறுபான்மை இனமான தமிழர்களையும் அது அடித்து உதைத்து நொறுக்கியது. பேரினவாதம் தான்; விரும் பியபடி நாட்டில் சட்டங்களை உருவாக்கியது, தான்; விரும்பியபடி அரசியல் அமைப்புக்களை உருவாக்கியது. உதாரணமாக 1956 இல் தனிச்சிங்களச்சட்டத்தை அன்றைய பேரினவாத அரசு உருவாக்கியது. அதனைத் தட்டிக் கேட்க வெளிக்கிட்ட தமிழர்களை அடித்து உதைத்து சிறையில் அடைத்தது.

அது அப்படியிருக்க, இளைஞர் விவசாயத் திட்டம் என்றும் மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்றும் பல்வேறு குடியேற்றத்திட்டங்கள் தமிழர் பகுதிகளில்; சிங்களவர்களைக் கொண்டு அன்றும் உருவாக்கப்பட்டன, இன்றும் அவை வேறு பெயர்களில் அல்லது வடிவங்களில் அத்தகைய குடியேற்றங்களும் பௌத்தமக்கள் வாழாத இடங்களில் பௌத்த ஆலயங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அது மட்டுமல்ல போர் மௌனிக்கப் பட்டதைத் தொடர்ந்து தமிழர்களுக்கு சொந்தமான குடியிருப்புக் காணிகளையும் விவசாயக்காணிகளையும் அரச தரப்பு எடுத்து வைத்துக் கௌ;ள காணிச் சொந்தக் காரர்கள் அகதி முகாம்களிலும் தெருக்களிலும்; வருடக் கணக்கில் நின்று போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் இளைஞர்களை விசாரணை இன்றி வருடக் கணக்கில் அடைத்து வைத்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட மற்றும் நேரில் ஒப்படைக்கப்பட்ட இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியாமல்; அவர்களது உறவினர்கள் செய்வதறியாது திண்டாடிக் கொண்டு நிற்கின்றார்கள்.

கேள்வி: இந்த நிலமையில் சமூக நல்லிணக்கம் எவ்வாறு ஏற்படும்?

பதில்: இன்றைய இஸ்லாமியரைப் பொறுத்தவரையில் 30 வருட தமிழ் மக்களின் போரட்ட காலத்திலும் அதற்கு முன்னரும் கூட மனதளவில் பேரினவாதத்தோடே அவர்கள் நின்றிருந்தார்கள்.

1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு தமிழர் நலன் கருதி ஆட்சிக்கு நெருக்கடி கொடுத்த வேளையில் அவருக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆட்சியாளர்கள் கொண்டு வந்திருந்தார்கள். அப்போது தமிழர் தரப்பு இஸ்லாமியர்க்கு எந்தத் தீங்கும் இழைக்காதிருந்த நிலையிலும்கூட பாராளுமன்றத்தில் இருந்த அனைத்து முஸ்லீம் பாடளுமன்ற உறுப்பினர்களும் தமிழரான எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராகவே வாக்களித்திருந்தார்கள்.

இன்றும்கூட கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தின் இழுபறி நிலமைக்கு என்ன காரணம் என்பது எல்லோருக்கும் விளங்கும். ஒரு சிறுபான்மை இனத்தின் வாய்ப்பு வசதிகளை அல்லது அவர்களுக்கான உரிமைகளை மற்றைய சிறுபான்மை இனம் தடுத்துக் கொண்டிருக்கிறது.

கேள்வி: இத்தகைய நிலமைகளில் சிறுபான்மை மக்களிடையேகூட எப்படி நல்லிணக்கம் ஏற்படும்?

பதில்: ஆனால் இஸ்லாமியர் பேரினவாதிகளால் பாதிக்கப்படும் போதெல்லாம் இஸ்லாமியருக்காக தமிழர் தரப்பு குரல் கொடுத்தே வந்திருந்தது. இப்போதும்கூட உயிர்த் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் அப்பாவி இஸ்லாமியர்கள்; மீதான தாக்குதல்கள் அனியாயமான கைதுகள் மீத தமிழ்த் தலைவர்கள் குரல் கொடுத்தே வருகின்றார்கள்.

ஏனைய தரப்பினர் மத்தியில் மட்டும் குறைகள் உண்டு தமிழர் தரப்பில் குறைகள் இல்லை என்று நான் கூறவரவில்லை.

இத்தகைய நிலமைகள் பல்லின மக்களும் ஒன்றுபடுவதற்கு இருக்கின்ற பெரிய சவால்கள் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று நான் நினைக்கின்றேன். இத்தகைய நிலமைகள் மாறாதவரைக்கும் இலங்கையில் வாழும் மக்களிடையே நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்பே இல்லை.

கேள்வி: இவ்வளவு சவால்களுக்கம் மத்தியில் எதிர் காலத்தில் மீண்டும் நல்லிணகத்தை ஏற்படுத்த எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனக்கருதுகின்றீர்கள்?

பதில்: நாட்டை ஆளுகின்ற அரசு முதலில் நாட்டின் அரசியல் அமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவரல் வேண்டும். நாட்டில் வாழும் பல்சமூகத்தினரையும் சமனாக பரிபாலிக்கின்ற அம்சங்கள் அரசியல் அமைப்பில் இடம் பெறல் வேண்டும். நாட்டில் உள்ள எல்லா சமயங்களுக்கும் சமவுரிமை அளிக்கப்படல் வேண்டும்

தற்போது சிறுபான்மை மக்களுக்குள்ள சகல பிரச்சினைகளும் கூடியவரையில் என்றாலும் அரசினால் தீர்க்கப்படல் வேண்டும். குறிப்பாக ஆயுதப்படையினரால் வடகிழக்கில் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற மக்களது காணிகள் உரியவர்களிடம் கையளிக்கப்படல்; வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் விடயத்தில் தீர்க்கமான பதில் அவர்களது உறவினர்களுக்கு அளிக்கப்படல் வேண்டும். ஜெனிவாத் தீடமானங்கள் முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். நீண்டகாலமாக சிறை வைக்கப்பட்டிருக்கும் அரசியில் கைதிகள் விடுதலை செய்யப்படல் வேண்டும். பயங்கரவாத தடுப்புச் சட்டம் நீக்கப்படல் வேண்டும். பௌத்தர்கள் அல்லாத இடங்களில் பௌத்த ஆலயங்கள்; அமைக்கப்படுதல் நிறுத்தப்படல் வேண்டும். நாட்டின் சட்ட திட்டங்கள் யாவருக்கும் சமனாக அமுல்ப்படுத்தப்படல் வேண்டும்.

நேர்கண்டவர் வயிரமுத்து துசாந்தன்

அதே வேளை நாட்டில் உள்ள சிவில் அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முதலானவை சமூகங்களிடையேயும் சமயங்களிடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த முயற்சிக்க வேண்டும். பாடசாலை மாணவர்கள், இளையோர், யுவதிகள் முதலானோர் மத்தியில் நல்லிணக்கம் மற்றும் சமாதானம் பற்றிய எண்ணக்கருக்களை விதைக்க வேண்டும்.

கேள்வி: மட்டக்களப்பு மாவட்டத்தில் இன நல்லிணக்கம் எவ்வாறு உள்ளதென கருதுகின்றீர்கள்?

பதில்: நீண்ட காலத்திற்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் இஸ்லாமியர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே மிகுந்த நல்லுறவு இருந்து வந்தது. ஆனால் இனவிடுதலைக்கான 30 வருடகால ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இஸ்லாமிய மக்கள் அரசுக்கு ஆதரவான நடவடிக்கைகளையே மேற்கொண்டிருந்தார்கள். இதற்கு அவர்கள் பக்கத்தில் பல்வேறு நியாயங்கள் சொல்லப்படலாம். இந்நிலமை மட்டக்களப்பு தமிழ் மக்களுக்கும் இஸ்லாமிய மக்களுக்கும் இடையே இனவிரிசலை மெல்ல மெல்ல ஆரம்பித்திருந்ததோடு மட்டுமல்லாமல் 1985 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் கிழக்கில் இரு இனங்களுக்குமிடையே பாரிய இனக்கலவரங்களையும் ஏற்படுத்தியிருந்தது. இதனால் உயிரிழப்புக்களும் சொத்திழப்புக்களும் மட்டும் ஏற்படவில்லை, இனங்களுக்கிடையே சிறிதளவேனும் நிலவி வந்திருந்த சமாதானம் சகவாழ்வு முதலானவையும் பெருமளவில் பாதிக்கப்பட்டது. இப்படியிருந்து வருகின்ற நிலையில் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் 2009 இல் கொல்லப்பட்டதாக அரசு அறிவித்தபோது தமிழ் மக்கள் மிகுந்த வேதனையில் ஆழ்ந்திருந்த சமயத்தல் நமது சகோதர இனமக்கள் பல்வேறுவகைகளில் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். இது, ஏற்கனவே இனங்களுக்கிடையேயிருந்த பிளவினை மேலும் அதிகரித்திருந்தது.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து நிலவிய 10 வருடகால அமைதிச் சூழலில் மீண்டும் ஒருவகையான சமாதானம் இரு இனமக்களுக்கும் இடையே நிலவி வந்திருந்தபோதிலும் இரு இன மக்களிடையேயும் அவநம்பிக்கையும் ஒருவரைப்பற்றி மற்றவரிடையே சந்தேகமும் நிலவி வந்தது. அதற்கும் காரணம் தமிழ் மக்களுக்கு கிடைக்காத அளவுக்கு இஸ்லாமிய மக்களுக்கு அரசியல் செல்வாக்கும் அரசியல் அதிகாரமும் இருந்தது. கிழக்கிலே தமிழ் மக்கள் தொகை அதிகளவில் இருந்த போதிலும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் தமிழ்த்தரப்பினால் கிழக்கு மாகாணத்தின் ஆட்சியதிகாரம் இஸ்லாமிய மக்களிடம் கொடுக்கப்பட்டிருந்தது. அப்படிக் கிடைத்த அரசியல் அதிகாத்தையும்கூட தமிழர் நலன்களுக்கு உபயோகித்ததனையும்விட மிகுந்த அளவு இஸ்லாமிய மக்களின் நலன்களுக்காகவே உபயோகிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட நிலமையில் இஸ்லாமிய அரசியல் தலைவர்களுக்கு புதிய அரசியல் அதிகாரம் கிடைக்கும்போதும் இஸ்லாமிய அரசாங்க அதிகாரிகளுக்கு அரச திணைக்களங்களின் தலைமைப் பொறுப்புக்கள் கிடைக்கும்போதும் தமிழ் மக்கள் அச்சமடைகின்றார்கள். அதே போன்று தமிழர் தரப்புக்கு இப்படியான அதிகாரங்கள் உரிமைகள் கிடைக்கும்போது இஸ்லாமிய மக்கள் அச்சமடைகின்றார்கள். இதனால் ஒரு தரப்புக்கு கிடைக்கும் செல்வாக்கு, அதிகாரம் உரிமை முதலானவற்றை தடுப்பதற்காக மற்றைய தரப்பு கடுமையாக முயல்கிறது

இப்படி இருக்கையில்த்தான் ஈஸ்டர் குண்டு வெடிப்பு மட்டக்களப்பிலேயும் நடந்தது. அப்பாவி தமிழ் மக்கள் இறந்தும் காயப்பட்டும் போயினர். இது இரு இனங்களுக்கிடையே மேலும் பிளவினையும் செல்ல முடியாத அளவுக்கு அச்சத்தினையும் சந்தேகத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் நல்லிணக்கம் வெகு தூரத்தில் உள்ளதாகவே தெரிகின்றது

கேள்வி: 21ம் திகதிய குண்டுவெடிப்புக்கு முன்னர் மட்டக்களப்பு மக்களின் நல்லிண்க நிலைக்கும் தற்போதைய நிலைக்கும் வித்தியாசம் உள்ளதா?

பதில்: நிரம்ப வித்தியாசம் உள்ளது. இனங்களுக்கிடையிலான பிளவு உச்சத்துக்கு சென்றுள்ளது. நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்புவது கடினமானது என்பதே எனது அவதானிப்பு. உதட்டளவில் சமாதானம் என்று பேசப்படலாம் அது மனதளவில்வருவது தற்போதைக்கு சாத்திக்குறைவாகவே தென்படுகின்றது.

கேள்வி: நல்லிணக்கத்தினை சீர்குலைப்பதில் அதிக செல்லாகு; செலுத்தும் நபர்கள் யாரென கருதுகின்றீர்கள்?

பதில்: அரசியல் ஆதாயத்தை நோக்காகக் கொண்ட முழு நாட்டிலும் உள்ள அரசியல் வாதிகள் நல்லிணக்கத்தை சீர்குலைப்பதில் முன்னணியில் நிற்கின்றார்கள் என்பது எனது அபிப்பிராயம். மேலும் புதிதாக தேர்தல் அரசியலுக்குள் நுழைவதற்காக தங்களை ஆயத்தம் செய்பவர்களுள் சிலரும் சமூகங்களிடையே நல்லிணக்கம் உருவாகுவதை சீர்குலைப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றார்கள்.

கேள்வி: மட்டக்களப்பு பகுதியில் பல்வேறு மனிதநேய பணிகளை முன்னெடுக்கும் நபர் தாங்கள் என்ற வகையில், இனங்களுக்கிடையிலான மனிதநேயத்தை எவ்வாறு பார்க்கிறீர்கள்,

பதில்: இப்போது மனித நேயம் குறைந்து கொண்டு செல்வதைத்தான் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்நிலமை ஓர் ஆபத்தான நிலமை. வருங்கால சமூகம் எவ்வாறு நிம்மதியாக வாழப்போகிறது என்ற கவலை எம்மத்தியில் உள்ளது. எனவே மனித நேயத்தை வளர்க்க முயற்சிக்கின்ற அமைப்புக்களும் தனிமனிதர்களும் அதற்காக கடுமையாக உழைக்கவேண்டும். இனங்களுக்கிடையே மட்டுமல்ல குடும்பம், கிராமம், நாடு என எல்லா மட்டத்திலும் மனித நேயம் விதைக்கப்படல் வேண்டும்.

சீர்தித்து...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

வரை அவர்களின் வாக்குகள் அவருக்கு கிடைப்பது என்பது அரிதான விடயமே. இதேபோல் இலங்கை வாழ் முஸ்லிம்களின் வாக்குகளும் அவருக்கு கிடைப்பதில் சந்தேகத்திற்கு உரியதே. காரணம் இவர்களின் கால்திலேயே பௌத்த இனவாத சக்திகள் தலைதூக்கி அளுத்கம, தர்ஹா நகர் வன்முறைகள் இடம் பெற்றன. முஸ்லிம்களைப் பாதுகாக்கவில்லை என்ற விடயம் முஸ்லிம்கள் மத்தியில் இருக்கின்றன.

வடமாகாண முஸ்லிம்கள் கடந்த முப்பது வருட யுத்தத்தில் சொந்த இடங்களை விட்டு நூற்றிற்கு நூறு வீதம் பாதிக்கப்பட்டசமுகமாகவும், பெருமளவான மக்கள் இன்றுவரை அகதிகளாக புத்தளம் உள்ளிட்ட நாட்டின் பல இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இன்று வரை இவர்களுக்கான முழுமையான

இழப்பீடுகளோ அல்லது மீளக் குடியமர்த்தி வீட்டு வசதிகள் செய்து கொடுத்தோ எதுவும் செய்யவில்லை.

இலங்கையின் சிறுபான்மை மக்கள் என்ற வகையில் எந்த பேரினவாதக் கட்சிகள் வந்தாலும் எதிர்பார்த்த ஒன்றும் நடந்துவிடப் போவதில்லை. முஸ்லிம் அரசியல் கட்சிகளும் ஒன்று பட்டுச் செயற்பட்டாலும் அவர்கள் நினைத்த மாதிரி கொடுப்பதற்கு முன்வர மாட்டார்கள் என்பதே கடந்த காலங்களில் கண்டு கொண்ட வரலாற்று உண்மையாகும்.

எது எவ்வாறாக இருந்தாலும் அரசியல்வாதிகளினதும், அரசியல் கட்சிகளினதும் குறிக்கோள் பொய் வாக்குறுதிகளை வழங்கி தமது காரியங்களை சாதிப்பதாகும். எந்த அரசு வந்தாலும் சிறுபான்மை மக்களுக்கு ஒன்றையும் கொடுக்க மாட்டார்கள் என்பதே கடந்த கால அனுபவங்களாகும்.

எனவே வாக்காளர்களை அரசியல் வாதிகள் ஏமாற்றும் காலம் வந்துள்ளதால் வாக்காளர்கள் நிதானமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் கண்மூடித்தனமாக வாக்களித்து பலர் இன்று வரை ஊழல் மோசடிகளிலும், மக்கள் பணத்திலும் வயிறு வளர்த்து நாட்டை சீரழித்து விட்டனர் என்பதனை கவனத்திற்கொண்டு இனியாவது வாக்களார்கள் குழப்பங்கள் இல்லாமல் சிந்திக்க வேண்டியுள்ளது.

முக்கியமாக சிறுபான்மை மக்கள் ஒன்றிற்கு பல மடங்கு சிந்தித்து எதிர்கால நலன்களை கவனத்திற் கொண்டு மக்கள் நலன் பேனுவர்களுக்கு அவர்களின் உண்மையான வாக்குறுதிகளை உறுதிப்படுத்திக் கொண்டு வாக்களிப்பதே சாலச் சிறந்தது.

அரசியற்...

08 ஆம் பக்கத் தொடர்ச்சி

நிலையொன்று தோற்றுவிக்கப்படும். அத்துடன் அவர்கள் தமக்கும் தமது குடும்பத்தவர்களுக்கும் சமூகத்துக்கும் பயனுள்ள பிரஜைகளாகத் தமது வாழ்வை இட்டுச் செல்வதற்கும் வழிகோரமுடியும்.

எனவே பயங்கரவாதிகள் என்னும் நாமத்துடன் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல்கைதிகள் தொடர்பில் செயலணிகளாக இருந்தாலும் சரி, அரசியல் கட்சிகளாக இருந்தாலும்; சரி வெறுமனே உத்தியோகபூர்வமான முறையின்பாற்பட்டோ கட்சி அரசியல் நலனிற் பாற்பட்டோ அல்லது தனி நபர் அரசியல் நலனின் பாற்பட்டோ சிறைக்கைதிகள் பிரச்சினையை அணுகாமல் மனிதாபிமானத்தோடு , சிறைக்கைதிகளும் மனிதர்களே என்றுணர்ந்து அவர்களுடைய பிரகாசமான எதிர்காலத்தைக் குறியாகக் கொண்ட கருத்துக்களை முன்வைத்து இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களை ஏற்படுத்துவதோடு அவ்வரசானது அக்கைதிகளின் ஆரோக்கியமான வாழ்வுக்கு வித்திடக்கூடியதான நிலையில் அவர்களை விடுதலை செய்வதற்கான அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கும் தமிழத் தரப்புக்கள் முன்வர வேண்டும்.

எனவே முடிந்த முடிவாக எதிர்வரும் நாட்களிலாவது தமிழ் அரசியற் கைதிகளதும் அவர்களது உறவுகளதும் எதிர்ப்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படும் நிலையில் தீர்வுகள் மனிதாபிமானத்தோடு அணுகப்பட்டு நிபந்தனையின்றி உடன் விடுதலை செய்யப்படுவதற்கு வழியேற்படுத்திக் கொடுக்குமா நல்லாட்சி அரசாங்கம்?

எப்போது தீரும் இந்த அவலம்?

மஸ்கெலியா நிருபர்

மஸ்கெலியா அரசினர் வைத்தியசாலை 1968 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். இந்திய வம்சாவளி மக்கள் செறிந்து வாழும் மஸ்கெலியா சாமிமலை பகுதியை சார்ந்த சுமார் 165 தோட்ட பிரிவு மக்களும் கிராம மக்களும் இந்த வைத்தியசாலைக்கே சிகிச்சைகளுக்காக செல்ல வேண்டியுள்ளது. மஸ்கெலியா பழைய நகரில் 60 ஆங்கிலேயரால் கட்டப்பட்டு இயங்கி வந்த காலப்பகுதியிலிருந்து இயங்கிவந்த நிலையில் நீர்மின் உற்பத்தியை மேற்கொள்ளும் பொருட்டு அன்றைய ஐ.தே.க. அரசு மவுசாகலையில் நீர்தேக்கம் ஒன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டது.

இத்திட்டம் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1964 ஆம் ஆண்டில் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்தன அதன் பின்னர் மஸ்கெலியா புதிய நகரில் அஞ்சலகம், காவல் நிலையம், பஸ் தரிப்பிடம், மின்சார சபை காரியாலயம், நீர் வடிகால் திணைக்களம், பாடசாலை, புனித ஸ்தலங்கள், சந்தைப்படுத்தும் திணைக்களத்திற்கான கட்டிடத் தொகுதிகளுக்கென 160 பேர்ச் காணி என எல்லாமே புதிதாக உருவாக்கப்பட்டன.

அப்போதைய ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி மஸ்கெலிய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த எட்மன் விஜயசூரியவின் வேண்டுகோளுக்கிணங்க மஸ்கெலியாவில் வாழும் இந்திய வம்சாவளிக்கென ஆதார வைத்தியசாலையும் 165 படுக்கைகளையும் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறவென தனியான 12 படுக்கை வசதிகளை கொண்ட 6 அறைகளும் இருந்தன.

அத்துடன் சத்திர சிகிச்சை கூடம், பல் வைத்தியர் கூடம், மருந்தகம், வெளிநோயாளர் பிரிவு, 24 மணித்தியால சேவைக்கென வைத்திய பிரிவு, மாவட்ட வைத்திய அதிகாரி காரியாலயம், வைத்தியசாலை காரியாலயம், தேநீர்சாலை, அம்பியூலன்ஸ் வண்டி, வாகன தரிப்பிடம், சவச்சாலை, ஆய்வுகூடம், வைத்தியர்கள் தங்கும் சொகுசு விடுதிகள் உட்பட தாதிமார், ஊழியர்கள் தங்குவதற்கென 40 விடுதிகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

1970 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசு பீடம் ஏறியது. மஸ்கெலியா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக காமினி ஆரியதிலக மற்றும் அப்போதைய சுகாதார அமைச்சர் ஆரியதாச (அப்புத்தளை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்) ஆகியோரினால் இவ்வைத்தியசாலை 1972 ஆம் ஆண்டு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இக்காலப் பகுதியில் மாவட்ட வைத்திய அதிகாரி உட்பட இரண்டு பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களும், பல் வைத்தியர் ஆய்வுகூட வைத்தியர் உட்பட 21 தாதிகள் மற்றும் 40 சிற்றூழியர்களும் சேவையில் ஈடுபட்டு வந்தனர். ஏவ்வித குறைபாடுகளும் இல்லாமல் பல வருடங்கள் தங்குதடையின்றி சேவை நடைபெற்ற போதிலும் கடந்த சில வருடங்களாக வைத்தியர், தாதிகள், சிற்றூழியர்கள், மருந்தகர், ஆய்வுகூட வைத்தியர், பல் வைத்தியர் பற்றாக்குறை காணப்படுகிறது

குறிப்பாக பல் வைத்தியர், ஆய்வுகூட வைத்தியர் கடந்த சில ஆண்டு காலமாக சேவையில் இல்லை ஆய்வுகூட வைத்தியரை சந்திக்க வேண்டுமானால் நுவரெலியா நாவலப்பிட்டிய ஆகிய ஆதார வைத்தியசாலைகளுக்கே செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நிரந்தரமாக ஓர் ஆய்வு கூட வைத்தியரை நியமிக்க வழி செய்ய வேண்டும்.

அதே போல் பல் வைத்தியர் வாரத்தில் 2 நாட்கள் மட்டுமே வருவதால் மக்கள் பெரும் இன்னலுக்குள்ளாகினர். நிரந்தரமாக ஒருவர் நியமிக்;பட வேண்டும் தற்போதுள்ள தாதிமார் பற்றாக்குறைக்காக 21 பேரை நியமிக்க வேண்டும். மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் ஆளணி பற்றாக்குறையானது பாரியளவில் நிலவி வருகின்றது இவ்வைத்தியசாலைக்கு பெருந்தோட்ட தொழிலாளர்களும் சாமிமலை மஸ்கெலியா நல்லத்தண்ணி குடாமஸ்கெலியா மற்றும் கென்யோன் ஆகிய நகரங்கள் கிராமங்களை கொண்ட மக்கள் பெருமளவில் சிகிச்சைக்காக வருகின்றனர்

மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவரும் வைத்திய அதிகாரி இருவரும் தாதிகள் 4 பேரும் சிற்றூழியர் 16 பேர் மட்டுமே உள்ள நிலையில் மாவட்ட வைத்திய அதிகாரி 4 வைத்திய அதிகாரிகள் பதிவு செய்யப்பட்ட வைத்தியர் 4 பேர் உட்பட மருந்தகர் தாதியர் 24 பேர் சிற்றூழியர் 46 பேர் அம்புலன்ஸ் வண்டி சாரதி இருவர் உட்பட 2 அம்புலன்ஸ் வண்டிகளும் தேவைப்படுகிறது.

கடந்த சில வருடங்களுக்கு முன் அம்பியூலன்ஸ் வண்டி சாரதி ஓய்வுபெற்று சென்றுள்ளதால் அதனை செலுத்த சாரதியொருவர் இல்லாத நிலையில் ஒரு அவசர தேவைக்கு வெளியில் உள்ள அம்பியூலன்ஸ் வண்டியை எடுக்க வேண்டியுள்ளது. எனவே சுகாதார அமைச்சி வைத்தியசாலையில் நிலவும் வெற்றிடங்களுக்கு பணியாளர்களை நியமிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

சுமார் 10 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்ட இவ்வைத்தியசாலையை சுற்றி புற்கள் காடுகளாகி காட்டு மிருகங்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். இக்காணியைச் சூழவுள்ள பற்றைக்காடுகளை அகற்றி அதில் வைத்தியர்களுக்கான விடுதிகளை அமைக்கலாம் இவ்வைத்தியசாலையை அப்போது சுகாதார அமைச்சராக இருந்த நிமால் சிறிபாலடி சில்வா ஒஸ்திரியா நாட்டின் உதவியுடன் ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்படுமென தெரிவித்திருந்தார்.

ஆனால் இவ்வைத்தியசாலையை மாகாண சுகாதார அமைச்சரோ மத்திய அரசின் அமைச்சரோ இன்றுவரை நேரில் வந்து பார்வையிட்டு நிலவும் குறைபாடுகளை தெரிந்துக்கொள்ளாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். மலையக பிரதேசத்தில் மஸ்கெலியா வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டால் சுமார் 80 ஆயிரம் மக்கள் நன்மை அடைவர்.

நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையானது மஸ்கெலியாவில் இருந்து 50 கி.மீ தொலைவிலும் அதற்கப்பால் 12 கி.மீ தூரத்தில் கம்பளை ஆதார வைத்தியசாலையும் சுமார் 12 மீற்றர் தூரம் சென்றால் பேராதனை போதனா வைத்தியசாலையும் 3 கி.மீ தூரத்தில் கண்டி போதனா வைத்தியசாலையும் அமைந்துள்ளது.

இன்றைய நிலையில் ஆய்வுக்கூடம் இல்லை. மேலும் கடந்த காலங்களில் ஒவ்வொரு தோட்ட தலும் வைத்தியசாலையும் மகபேற்று பிரிவும் இருந்தது அங்குதான் குழந்தைகளை பிரசவித்தனர் ஆனால் கடந்த சில வருடங்களாக வைத்திய அதிகாரிகள் கர்பிணி தாய்மாருக்கான பரிசேதனைகளை மேற்கொண்டு வந்தனர் தற்போது இவ்வைத்தியசாலையில் மகப்பேற்று பிரிவுகள் மூடப்பட்டுள்ளன அரச வைத்தியசாலையில் மட்டுமே குழந்தைகளை பிரசவிக்கலாம் என்ற நடைமுறையும் கொண்டு வரப்பட்டுள்ளது.

டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலை ஆரம்பித்த பின் கர்பிணித்தாய்மார் பரிசோதனை மேற்கொள்ளும் V.O.G. விசேட வைத்தியர் கர்ப்பிணி தாய்மார் அனைவரையும் கிளங்கன் வைத்திய சாலையில் அனுமதிக்குமாறு பணித்துள்ளார். காலை 7 மணி முதல் 12 மணி வரையில் வைத்தியர் வைத்தியசாலையல் இருக்கும் வேளையில் மட்டும் கர்பிணித் தாய்மார் பரிசோதிக்கப்படுகின்றனர். குறித்த வைத்தியர் பிரத்தியேகமாக வைத்திய பரிசோதனை செய்து வருவதால் ஏனைய நேரங்களில் வரும் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மக்களின் வசதிக்கேற்ப கடந்த காலங்களை போல் இப்பகுதி மக்கள் தங்களது மகப்பேற்றை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள மத்திய மாகாண சுகாதார அமைச்சு முன்வர வேண்டும் V.O.G. கிழமையில் ஒரு தடவை மஸ்கெலியா வைத்தியசாலையில் வைத்து கர்பிணி தாய்மாரை பரிசோதித்துவிட்டு பணம் அறவிடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வைத்தியசாலைக்கு மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை நியமிப்பதுடன் மாதாந்தம் குழந்தை வைத்திய நிபுணர், கண் வைத்திய நிபுணர்களை வாரத்தில் ஒரு நாள் இவ்வைத்திசாலைக்கு வரவழைத்து இப்பகுதியில் உள்ள நோயாளிகளை பரிசோதித்து அவர்களுக்கு எவ்வித அறவீடும் இல்லாமல் சகல நோய்களுக்கும் மருந்து பொருட்களை வழங்கி அவர்களை காபாற்ற வேண்டியது சுகாதார அமைச்சின் கடமையாகும்.

அண்மையில் கர்பிணித்தாயொருவர் மகபேற்றுக்காக மஸ்கெலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அதிகளவு இரத்தப்பெருக்கு ஏற்பட்டதால் அவர் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு மகப்பேற்று வைத்தியர் இல்லாத நிலையில் குழந்தை பிரசவிக்கும் போது அத்தாய் மரணித்து பிழைத்துள்ளார். இனியும் முதல் பிரசவம் என்றால் என்ன கடந்த காலங்களை போல சகல வசதிகளை கொண்ட மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையிலேயே இடம்பெற வேண்டும் எனவும் அதற்கான வைத்தியர்களை நியமிக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

நுவரெலியா மாவட்டத்தின் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர் என பலர் இருந்தும் இவ்வைத்தியசாலையின் குறைபாடுகளை நேரில் சென்று பார்வையிட்டு அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்வரவில்லை வைத்தியசாலை குறைபாடுகளை தீர்க்க வேண்டியது நுவரெலியாவில் உள்ள சுகாதார மற்றும் உயர் அதிகாரிகளினதும் மத்திய மாகாண சுகாதார அமைச்சினதும் கடமையுமாகும்.

கடந்த காலங்களில் இருந்து சத்திர சிகிச்சை கூடம் தற்போது உடைத்தெறியப்பட்டுள்ளது. அதன் நோக்கம் ஏன் என புரியவில்லை. அபிவிருத்தியை காண வேண்டிய காலக்கட்டத்தில் இவ்வாறு அகற்றுவது நியாயமற்ற செயல் என வும் மீண்டும் சத்திர சிகிச்சை நிலையத்தை கட்ட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

உரை..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

உரிமையையும் தம்மால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளிடம் பெற்றுத்தா என்றால் அது சாதகமான நிலையன்று.

சிறுபான்மை சமூகமொன்று தமது இருப்புக்காக முதலில் தான் கோரும் நிலத்தை காக்க வல்லமையுள்ளதாக இருத்தல் வேண்டும். அதன் பிற்பாடு தமது மரபுசார் உரிமைகளை பாதுகத்திருத்தல் வேண்டும். எனினும் அவை தொடர்ந்து வரும் தமிழர் தரப்பு அரசியலாளர்களால் பேணி பாதுகாக்கப்படாமையினால் இன்று அவை நிலைகுழைந்துபோயுள்ளது.

தமிழர் மரபுரிமை போரவையின் தலைவர் வீ. நவனீதனின் கருத்தின் பிரகாரம், 1891 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் 4 வீதமாக இருந்த சிங்கள மக்கள் 2012 ஆம் ஆண்ட 25 வீதமாக அதிகரித்துள்ளதாக தெரிவித்திருந்தார்.

இது எவ்வாறு சாத்தியமானது. தமிழ் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் தமிழர்களின் நிலங்களில் இலங்கை அரசாங்கத்தால் சிங்கள மக்கள் திட்டமிட்டு குடியேற்றப்பட்டபோது கண்டும் காணாதது போல் இரந்தமையும் தமிழர் குடியேற்றங்களை செயற்படுத்த முனைப்பு காட்டாமையும் பெரும் தாக்கமாக இருந்துள்ளது.

இவற்றுக்குமப்பால் நவனீதனின் கருத்தின் பிரகாரம் போர் முடிந்த கையோடு ஒன்பது கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய 9 கிராமங்கள் வெலியோயா என்கின்ற தனி ஒரு பிரதேச செயலகமாக உருவாக்கப்பட்டு அது முல்லைத்தீவு மாவட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. பதிவுகளின்படி 7017 சிங்களவர்கள் அப்பிரதேசத்தில் குடியேற்றபட்டிருக்கிறார்கள். முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு பிரதேச செயலக பிரிவே போருக்கு பின்னால் உருவாகியிருக்கின்றது.

வவுனியா சிங்கள பிரதேச செயலாளர் பிரிவிலே இருக்கக்கூடிய 14028 சிங்களவர்களுக்கு மேலதிகமாக வவுனியா தமிழ் பிரதேச செயலகத்தோடு அண்மையிலே கள்ளிகுளம் என்ற கிராம சேவையாளர் பிரிவுகளோடு மகாவலி திட்டத்தினூடாக 4 புதிதாக கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கிறது. நாமல்கம, நந்தமித்ரகம, சங்கமித்தகம என்று நான்கு புதிய கிராமம் இணைக்கப்பட்டு 1200 சிங்களக் குடும்பங்கள் வவுனியா தமிழ் பிரதேச செயலகப்பிரிவோடு இணைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறான மறைமுக நிகழ்ச்சி திட்டங்கள் தற்போதும் நடந்தேறி வருவது தொடபில் தமிழ் பிரதிநிதிகள் மௌனம் காப்பது அல்லது ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்காது இருப்பதானது தமிழ் மக்களைப்பொறுத்தவரையில் பெரும் ஆபத்தான சூழலை இன்னும் 10 வருடங்களுக்கள் உருவாக்கும் என்பது மறுப்பதற்கில்லை

வெறுமனே கம்பரலியவால் வரும் நிதியினூடாக மாத்திரம் தமிழர்களின் மனங்களை வென்று விடலாம் என்கின்ற எண்ணப்பாட்டை தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் நிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இந்த அபிவிருத்திகளையும் அனுபவிப்பதற்கான காலச்சூழல் இன்னும் சில ஆண்டுகளில் தமிழர்களுக்கு இல்லாமல் போய்விடுமோ என்கின்ற ஐயப்பாடு காணப்பட்டு வரும் நிலையில் சிறு ஒழுங்கைகளையும் கோவில்களையும் பொது நோக்கு மண்டபங்களையும் கட்டிவிடுவதனால் தமிழர்களின் உரிமைகளை வெல்லவோ தமிழர்களின் நிலங்களை பாதுகாக்கவோ முடியாது.

வடக்கு கிழக்கில் எல்லையோரங்களில் இருக்கும் நிலங்களை பாதுகாக்கும் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய தேவை தமிழ் தலைமைகளுக்க உருவாகியுள்ளது. யுத்த காலத்தில் வவுனியா மாவட்டத்தின் எல்லையோரத்தில் புளொட் அமைப்பினர் எவ்வாறு தமிழர் குடியேற்றங்களை நிறுவி வவுனியாவின் நிலத்தினை தம்மால் முடிந்தளவிற்கு காத்துக்கொண்டார்களோ அதனையும் விட பாரியளவிலான வேலைத்திட்டத்தினை முன்னகர்த்தவேண்டிய தேவை தமிழ் அரசியலாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது. வெறுமனே முஸ்லீம் பிரதிநிதிகள் வரக்கூடாது என்ற கோசங்களை எழுப்பி தமிழர்களை ஒன்றுபடவும் வாக்குப்போராட்டத்திற்கு தயாராகுங்கள் என அறைகூவல் விடுக்கும் சிறிடெலோ போன்ற தேசியக்கட்சிகளின் செல்லப்பிள்ளைகள் இதுவரை காலமும் தமது பிரதிநிதிகளுடாக முல்லீம் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தினை அலங்கரிக்கவே வழிவகை செய்திருந்தனர். எனினும் தற்போது தம்மை தேசிய வாதிகளாகாட்டிக்கொண்டு மக்களை உசுப்பேற்றும் அடுத்த அரசியல் கட்சியாக உருவெடுக்க முனைப்பக் காட்டுகின்றது.

எனவே தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்தும் உசுப்பெற்றும் அரசியலையும் மத்திய அரசினூடான நிதியில் அபிவிருத்தி மோகத்தினையும் காட்டி தமிழர்களின் பூர்வீக நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பை மறைக்க தமிழ் கட்சிகளே முன்னிற்பதானது காலக்கிரமத்தில் பாரிய தாக்கத்தினை தமிழ் அரசியலாளர்களுக்கு பாடத்தினையும் புகட்டி நிற்கும் என்பது மறுப்பதற்கில்லை. இந்நிலையிலேயே தமிழர்களது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ள ஆக்கபூர்வமான செயற்றிட்டமொன்றினை முன்னெடுக்கவேண்டும் எனவும் அதற்காக தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்பட முன்வரவேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்தி நிற்கும் தருணத்தில் வவுனியாவில் இடம்பெற்ற நலிவுற்றுப்போன நல்லாட்சியும் தமிழ் மக்களின் எதீடகாலமும் என்ற கருத்தாடல் நிகழ்வில் பங்கேற்றிருந்த முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் எம்;. கே. சிவாஜிலிங்கம் தமிழ் கட்சிகளை ஒன்றாக இணையுங்கள் என்றால் அது தமிழ் தேசியத்தின்பால் இருப்பவர்களேயாகும். ஆனால் தமிழ் கட்சிகள் என்றால் நாசமகிப்போன கட்சிகளும் இருக்கின்றது. ஆகவே தேசியத்தினுள் வர முடியாதா கட்சிகள் எது என்பதனை மக்கள்தான் பார்த்துக்கொள்ளவேண்டும்.

தேசியத்தின்பால் நிற்கும் கட்சிகள் ஒன்றாக சேரவேண்டுமாக சரியான நடைமுறை என்றால் 100 வீதம் ஒற்றுமை என்பது சாத்தியமில்லை. அதனை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும் என தெரிவித்திருந்ததுடன் தமிழீழ தேசியத்தலைவரின் வழிகாட்டலில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது கூட 100 வீத ஒற்றுமை இருக்கவில்லை. ஆனால் 90 வீதத்திற்கும் மேற்பட்ட ஒற்றுமை இருந்தது. தேர்தல் அரசியலுக்காக ஒன்றுமையை கட்டியெழுப்புவதில் பல இடர்பாடுகள் இருக்கின்றது என வும் தெரிவித்திருந்தார்.

சாதாரணமாக தமிழ் இனம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளான நில அபகரிப்பு, பறிக்கப்பட்ட காணிகளை மீட்க முடியாமல் உள்ள பிரச்சனை, காணாமல் செய்யப்பட்டோர் பிரச்சனை, அரசியல் கைதிகளின் பிரச்சனைகளுக்கே ஒன்றுபட்டு இருந்து பேச முடியவில்லை என்றால் அதில் கோளாறு இருப்பதாகவும் சிவாஜிலிங்கம் தெரிவித்திருந்தார்.

எனவே அவரின் கூற்றின் பிரகாரம் தமிழ் தேசியத்தினை நேசிக்கும் கட்சிகள் ஒற்றுமைப்படுவது என்பது சாத்தியமற்றுப்போயிருப்பது மாத்திரமல்ல அவ்டறான முயற்சிகளில் எவரும் இறங்கிப்பயன் இல்லை என்பதனையும் சுட்டிக்காட்டியிருக்கின்றார் எனலாம். இந் நிலையில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக தம்மை அடையாளப்படுத்தும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு இவ்வாறான விடயங்களுக்கு என்ன பதிலை கூறி அடுத்துவரப்போகும் மாகாணசபை தேர்தலிலும் சரி பாராளுமன்ற தேர்தலிலும் தமது மக்கள் முன் செல்லப்போகின்றனர் என்ற ஐயப்பாடு நிறைந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் இரண்டு வருடங்களுக்குள் தீர்வு என்றபோது மௌனம் காத்தீணீருந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் குறித்த விடயத்தினை ஊடகங்கள் தொடர்ந்து வந்த நாட்களில் பாரிய அளவில் சுட்டிக்காட்டியபோது அதற்கான வியாக்கியானங்களை முன்வைக்கவும் அக்கருத்தை மறுதலிக்கவும் கூட்டமைப்பு கங்கணங்கட்டிக்கொண்டது.

இது வெறும் பசப்புக்காகவேயன்றி தமிழ் மக்கள் மீதான நம்பிக்கையின்பால் உருவான கருத்துக்களா இவை என்பதனை ஆராயவேண்டும். ஆகவே தொடர்ச்சியான அரசிற்கான ஆதரவு தளத்தில் இருந்து எதனையும் சாதிக்க முயடிடத நிலையில் தமிழர்களின் நிலங்களையும் காப்பாற்றிகொள்ளமுடியாத கையாளாகாத்தனம் என்பது தமிழர்களை எந்த தளத்தில் கொண்டு சென்று விடும் என்பது தொடர்பில் சிவில் சமூக பிரதிநிதிகளின் வேகமான செயற்பாட்டின் மூலமே வெளிச்சத்திற்கு கொண்டு வரகூடியதாக இருக்கும் என்பது மறுப்பதற்கில்லை.

அப்போதேனும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தலைமைத்துவங்களில் மாற்றம் ஏற்பட்டு தமிழர்களுக்காக புதிய தலைமைகள் உருவாக்கப்படும் என்ற நம்பிக்கையிலேயே காலங்கள் நகரத்தொடங்கும்.

மஸ்கெலியா சென்.ஜோசப் கல்லூரியின் குறைகள் தீர்க்கப்படுமா?

மஸ்கெலியா நிருபர்

மஸ்கெலியா சென். ஜோசப் கல்லூரி கடந்த 2011ஆம் ஆண்டு 1000 பாடசாலைகள் என்ற வகையில் அரசாங்கத்தால் தரம் உயர்த்தப்பட்டது. இவ்வாறாக தரம் உயர்த்தப்பட்ட அக்காலத்தில் இருந்த பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் ஏ.ஆர்.சி.திருக்கோணப் பெருமாள் உட்பட பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பல நலன்விரும்பிகள் பாரிய முயற்சியை மேற்கொண்டதன் பயனாக கௌரவ மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் அனுசியா சிவராஜாவின் வேண்டுகோளுக்கு இணங்க கால்நடை மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அவர்களின் முயற்சியால் இந்த பாடசாலை 1000 பாடசாலை திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டது .அப்போதைய வலய பணிப்பாளர் ரெங்கராஜ் அதற்கான முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கினார்.

இது இவ்வாறாக இருக்கையில் அப்பாடசாலை தரமுயர்த்தப்பட்டதனால் தரம் 01 முதல் 05 வரையிலான மாணவர்களின் கல்வியை பிரிதொரு பாடசாலைக்கு மாற்ற வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது. அதுவும் நல்லதற்கே 1969ம் ஆண்டு முதல் பாடசாலை விளையாட்டு திடலின் ஒரு பகுதியை அந்நியர் ஆக்கிரமித்தனர். இது சம்பந்தமாக கல்வி பணிப்பாளர் அரச அதிபர் உதவி அரச அதிபர் பிரதேச சபை முதல்வர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்ததும் பலனற்று போய் விட்டது.

கடந்த 2009ம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய அம்பகமுவ பிரதேச சபை செயலாளரும் பிரதேச சபைத் தலைவரும் முன்வந்து ஆக்கிரமித்த காணிகளை பாடசாலைக்கு பெற்று தராமல் ஆக்கிரமித்தோரிற்கே வழங்க பிரதேச சபை செயலாளருக்கு பணித்தார். பிரதேச சபை செயலாளரும் அவ்வாறே அளந்து அவர்களுக்கு வழங்கியமை எதிர்கால சந்ததியின் பாடசாலைத் திட்டப்பணிக்கு பாரிய இழப்பீடாக காணப்பட்டது வேறுவழியின்றி 2011ம் ஆண்டல் தரம் 01 மாணவர்களுக்காக தனியான ஒரு பிரிவை ஆரம்பிக்க நேரிட்டபோது அப்போதைய கல்வி அமைச்சர் அனுசியா சிவராஜா 1வருட காலத்தில் 60மூ 20 கட்டிடம் ஒன்றை அமைத்து கொடுப்பதாக உறுதி வழங்கினார்.

சுமார் ஒரு வருட காலம் தரம் 01 மாணவர்களை தனியார் கத்தோலிக்க தேவஸ்தானத்தில் வாடகைக்கு அமர்த்தி வகுப்புகள் நடத்தப்பட்டன. இக்கால கட்டத்தில் தரம் 1க்கான கட்டிட பணி ஆரம்பிக்கப்பட்டது. அந்த காலத்தில் அதிகளவு மழை பெய்து வந்ததால் குறித்த நேரத்தில் கட்டிடம் வழங்கமுடியாது போய்விட்டது. எனவே 2012ம் ஆண்டு வைபவ ரீதியாக மத்திய மாகாண கல்வி அமைச்சர் அனுசியா சிவராஜா தலைமையில் அப்போதைய அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர். க. நகுலேஸ்வரன் மற்றும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்ரஸ்சின் உபதலைவருமான இராஜதுரை அவர்கள் தற்மீட்தைய மத்திய மாகாண சபை உறுப்பினர்களான கணபதி கனகராஜ். திரு ராம் பிரதேச சபை உறுப்பினர் செல்லையா சிவசுந்தரம் இராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு கட்டிட திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

அந்த கட்டிடத்தின் அடித்தளம் மிக மிக உறுதியாக கட்டப்பட்டு மேல்மாடி அமைக்க பலமுறை மாகாண சபை அமைச்சர் அனுசியா சிவராஜா மற்றும் வலய பணிப்பாளர் கட்டிட தேவையை பற்றி பலவகைகளிலும் அதிபர் மற்றம் பாடசாலை அபிவிருத்தி சங்கமும் நலன்விரும்பிகளும் முன்வந்தனர் இருந்த போதும் இவ்விடயம் பயனற்று போய் உள்ளது தற்போது 2014ம் ஆண்டிற்கான தரம் 01 மாணவர்களை உள்வாங்க வேண்டிய சந்தர்ப்பத்தில் பெரும் இடநெருக்கடியினை சந்தித்துள்ளது. அனுசியா சிவராஜா அம்மையார் கட்டிய கட்டிடத்தை நிர்மாணித்து தற்போது தரம் 1ம் தரம் 2 மாணவர்களுக்கு கல்வி பயின்றுவருவது குறிப்பிடத்தக்கது.

பலமுறை நாம் அரசியல்வாதிகளுடன் சந்தித்து பாடசாலை கட்டிடம் சம்பந்தமாக ஆசிரியர் அதிபர் மற்றும் பாடசாலை மேம்பாட்டு குழு நலன்விரும்பிகள் சென்று கதைத்த போதெல்லாம் குறிப்பிட்ட ஒரு காலத்தில் பணம் ஒதுக்கபபடவுள்ளது. ஆப்போது உங்களுக்கு கட்டிடம் அமைத்துக் கொடுக்க நாம் முன்வருவோம் என கூறுகின்றனர். கடந்த வாரம் தரம் 1 இல் இனைத்துக்கொள்ள வேண்டிய பெற்றோர்களான மஸ்கெலியா நகர் பெரிய நடுத்தோட்டம் காட்டு மஸ்கெலியா ஆகிய 320அ கிராம சேவை பிரிவு மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து தற்போதுள்ள இடவசதி சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

அப்போது பாலர் பிரிவு அதிபர் எக்காரணம் கொண்டும் பாடசாலை நிர்வாகம் பாடசாலை மேம்பாட்டு குழு எந்த விதத்திலும் பணம் வாங்க முடியாது என அமைச்சின் உத்தரவினை விபரமாக கூறினார். எது எப்படியானாலும் 120 மாணவர்கள் தரம் 1ல் 2014 ஆம் இணைத்துக்கொண்டு உள்வாங்க வேண்டும் அதை கருத்தில் கொண்டு தற்காலிக கொட்டகை ஒன்று அப்பெற்றோர்கள் மூலம் அமைத்து கொடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அந்நிகழ்வில் 60 சதவீதமானோர் ஏற்றுக்கொண்டனர். அந்த பொறுப்பை உள்வாங்கவிருக்கும் பெற்றோர்களிடமே ஒப்படைக்க ஏற்பாடு செய்த போதும் 40 சதவீதமானோர் மறுத்தனர். ஆகவே இம்முறை தரம் ஒன்று மாணவர்கள் இணைத்துக்கொள்ளும் பணி இலுப்பரிநிலையை தோற்றுவித்துள்ளது.

அரசாங்கம் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் சுமார் 60 இலட்சம் ரூபாய் நிதியைக் கொண்டு கட்டப்பட்ட கட்டிடத்தின் மேல்மாடியை தொடர்வதால் அது சுமார் 6 மாதகாலத்தில் முடியும் அதுவரை மாணவர்கள் இணைந்து கொள்வது சாத்தியமற்ற விடயமாகும் கடந்த 3 ஆண்டுகளாக போராடிக் கொண்டுள்ள பாடசாலை அதிபருக்கு இவ்வாண்டு பிள்ளைகளை உள்வாங்க வேண்டியுள்ள விடயம் யாரும் செல்லி தெரிய வேண்டிய அவசியம் கிடையாது அதற்கான ஆவணங்கள் அனைத்தும் அவர் பத்திரப்படுத்தி மேலும் கட்டிடம் அமைக்கும் பணியை கைவிடாமல் செயல்பட்டு கொண்டு தான் உள்ளார் என்பது உறுதியான விடயமாகும். எந்த ஒரு அரசியல்வாதியும் பெருந்தோட்ட பாடசாலைக்கு நிதி ஒதுக்கி கட்டிகொடுக்க முன்வருவாரேயானால் அவர் அந்த கட்டிடத்தை கட்டி கொடுக்க யாரும் எதிர்ப்பு தெரிவிப்பது கிடையாது.

அதனை தவிர்த்து வெளியில் சென்று தவறான குற்றச்சாட்டுக்களை முன் வைத்து முறையற்ற செயலாவதுடன் பாடசாலையின் பெயருக்கு அபகீர்த்தியையும் ஏற்படுத்தும். மேலும் இம்முறை கட்டிடம் இல்லை எனில் 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மோட்டிங்கம் தமிழ் வித்தியாலயத்திற்கு இன்னொரு ஒருபகுதி மாணவர்களையும் கங்கேவத்தை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு இன்னொறு பகுதி மாணவர்களையும் மஸ்கெலியா முஸ்லீம் பாடசாலைக்கு இன்னும் ஒரு தொகுதி மாணவர்களையும் அனுப்புவதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏதிரவரும் டிசம்பர் மாதம் அளவில் ஒரு கட்டிடம் மேல்மாடியாக அமையும் போது அம்மாணவர்களை உள்வாங்களாம் தற்போதைய நிலை இதுவே இதற்;கு மேல் தொண்டு நிறுவனமோ தனிப்பட்ட செல்வந்தர்களோ தனிப்பட்ட அரசியல்வாதிகளோ அரசியல்வாதிகளோ முன்வந்து ஒரு கட்டிடம் எமது பாடசாலைக்கு ஜனவரி 16 முதல் 18ம் திகதிக்குள் அமைத்து கொடுக்க முன்வந்தால் நாம் அவர்களின் உதவியுடன் கட்டிடத்தை நிறைவு செய்தவுடன் இவ்வருட மாணவர்களை உள்வாங்கலாம் என எண்ணியுள்ளோம் என பாடசாலை மேம்பாட்டு குழு தெரிவிக்கின்றது.

மேலும் சென். ஜோசப் கல்லூரிக்காக வழங்கப்பட்ட காணி எமது மலையக தந்தை எம்மவரால் போற்றப்படும் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களினால் பெருந்தோட்ட வாழ் இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பிற்காக தனியார் ஒருவருக்கு ஆடை தொழிற்சாலை ஒன்றை அமைக்க அப்போதைய ஜனாதிபதி காலம் சென்ற ஆர். பிரேமதாச அவர்களினால் ஆடைதொழிற்சாலை அமைக்கப்பட்டு 1500 இளைஞர் யுவதிகள் பணிப்புரிந்தனர். காலம் செல்ல அந்த தொழிற்சாலை மூடப்பட்டு விட்டது. இரு உயர் தலைவர்களும் காலமானதால் அந்த இடம் தனியார் ஒருவருக்கு 99 வருட குத்தகை வழங்கப்பட்டுள்ளமை தெரியவருகின்றது. இதனால் மஸ்கெலியா சென். ஜோசப். பாடசாலைக்கு இடவசதி இல்லாத குறை நிலவி வருகின்றது. அதே போல் கடந்த 2011ம் ஆண்டு சென். ஜோசப் தமிழ் வித்தியாலயத்தின் கீழ்பிரிவிற்கு கட்டிடம் இல்லாத போது வாடகைக்கு கட்டிடம் எடுக்க முன் மஸ்கெலியா பெரியநடுதோட்ட;தில் மூடப்பட்டு கிடக்கும் தேயிலை தொழிற்சாலையை பாடசாலை நிரவாக பணிப்பாளர் சென்று பார்வையிட்டு அந்த இடத்தில் வகுப்பு நடத்தலாம் என முடிவு செய்து மேதட்டை தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் தோட்ட நிர்வாகத்திடம் கேட்ட போது அத்தோட்ட முகாமையாளர் 6மாத காலம் சென்ற பின்னர் தோட்ட மேல் மட்ட நிர்வாகம் அவ்வாறு வழங்க மறுப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும் பெரும்பான்மை இனப்பாடசாலை அமைக்க 2 ஏக்கர் தேயிலை செடிகளிருந்த காணியை வழங்கியுள்ளது அதே தோட்ட மேல்மட்ட நிர்வாகம். எவ்வாறாயினும் பெருந்தோட்டத்தில் பணிப்புரியும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்காக ஏன் அந்த மூடிக்கிடக்கும் தொழிற்சாலையை வழங்கக்கூடாது? இதற்கு பெற்றோர்கள் முயற்சியின்மையே காரணம். தற்போது சரி அந்த தேயிலை தொழிற்சாலையை பெற்றுக்கொடுக்க பெற்றோர்கள் முன்வருவார்களா?

தொழிற்சங்கங்கள் தங்கள் போட்டிகளை நிறுத்திவிட்டு இப்பிரச்சினையில் தலையிட்டு சுமூகமான தீர்வினை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதை தவிர்த்து தங்களது சுயநலம் கருதி தொழிலாளர்களினை பிளவுபடுத்துவதை தவிர்த்து பாடசாலைக்கான கட்டிடத்தினை கட்டமுயல வேண்டும். 1000 பாடசாலை திட்டத்திலிருந்து அப்பாடசாலை ஒதுக்கப்பட்டுவிடும் என்பதை சகலரும் புரிந்துக் கொள்ள வேண்டும். இதனால் எதிர்கால சந்ததியினரின் கல்வி கேள்விக்குறியாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

இப்பாடசாலையை தரம் உயர்த்த முன்னாள் கல்வி பணிப்பாளர் திரு. ரங்கராஜ் முன்னால் கல்வி அமைச்சர் அனுசா சிவராஜா அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் அடங்கிய குழு மத்திய அரசின் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களை நேரடியாக சந்தித்து. இந்த கல்லூரியினை தரமுயர்த்த சிரமப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. மஸ்கெலிய சென். ஜோசப் பாடசாலையின் கீழ் பிரிவு தற்போது முழுமைப் பெற்றுள்ளது. இப்பாடசாலையில் 21 வகுப்பறைகள் ஆசிரியர்கள் இளைப்பாறும் அறைஇ கேட்போர் கூடம்இ காரியாலயம்இ காவல் அறைஇ அடங்கலாக 3மாடி கட்டிடம் 2ம் சமாந்தர கட்டிடம் 3ம் உள்ளது தரம் 5ல் முதல் முறையாக 2016ல் 19-மாணவர்கள் சித்திப் பெற்றனர். 2017ல் 21-மாணவர்கள் 2018ல் 22-மாணவர்களும் சித்தி பெற்றனர்.

மேலும் இப்பாடசாலை வளர்ச்சிக்காக அதன் ஆசிரியர்கள் 21 பேரும் அதன் அதிபர் திருமதி. இராதா வெளிங்டன் உட்பட பாடசாலை அபிவிருத்தி சபை மற்றும் நலன் விரும்பிகள் பலவிதத்தில் உதவி வருகின்றனர். மேலதிகமாக பாடசாலைக்கென பேண்டுவாத்தியமும் பாடசாலை கேட்போர் கூடத்திற்கு 350 கதிரைகள் உட்பட காற்றாடிகள் தந்து உதவி செய்யுமாறு கல்வி அமைச்சர் அல்லது மாகாண ஆளுனர் இந்த விடயத்தில் சற்று உதவ முன்வர வேண்டும் என கோரிக்கை விடுப்பதுடன்.

புடடசாலை காணியை 2.பேர் அத்துமீறி தம்வசம் பயன்படுத்தியுள்ளனர். அதை உதவி அரச அதிபர் நுவரெலிய அரச அதிபர் முன் வந்து பெற்றுக் கொடுத்தால் மேலும் ஒரு கட்டிடம் அமைத்துக் கொண்டால் இன்னும் 20 ஆண்டுகளுக்கு இடபற்றாக்குறை இருக்காது என தெரிவிக்கின்றனர் பாடசாலை அபிவிருத்தி சபையினர்.

ஹாங்ஹாங் மோதல்; பின்னணி என்ன?

ஹாங்காங் விமானநிலையம் மீண்டும் மக்கள் பயன்பாட்டுக்கு திறந்துவிடப்பட்டுள்ளது என்பது ஒற்றை வரி செய்தி. இந்த ஒற்றை வரி செய்தியை ஆராய்ந்தால் ஹாங்காங்கில் கடந்த சில மாதங்களாக நடப்பதை நாம் விரிவாக புரிந்து கொள்ள முடியும்.

ஹாங்காங்கின் பிரச்சனையை சர்வதேச சமூகத்திற்கு எடுத்து செல்ல அவர்கள் இந்த போராட்டத்தை மேற்கொண்டார்கள்.

போராட்டக்காரர்களுக்கும், கலவரப் போலீசுக்கும் இடையே நடந்த மோதலால் ஹாங்காங் விமான நிலையத்தில் இரவு முழுவதும் குழப்பம் நிலவியது.

போலீஸ் நடவடிக்கைக்கு பின் விமானநிலையத்திலிருந்து போராட்டக்காரர்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள்.

என்ன நடக்கிறது ஹாங்காங்கில்?

சரி என்ன தான் நடக்கிறது ஹாங்காங்கில்?

ஏன் அங்கு கடந்த சில மாதங்களாக தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது?

இந்த கேள்விக்கான விடையை புரிந்து கொள்ள வேண்டுமானால், அந்நாட்டின் 150 ஆண்டுகால அரசியல் புரிந்து கொள்ள வேண்டும்.

ஹாங்காங் தீவானது 150 ஆண்டுகாலம் பிரிட்டனின் காலனியாக இருந்தது.

1842 ஆம் அண்டு நடந்த போரில் ஹாங்காங்கின் சில பகுதிகளை பிரிட்டன் கைபற்றியது.

பின், மேலும் சில பகுதிகளை 99 ஆண்டுகால குத்தகைக்கு சீனா பிரிட்டனிடம் ஒப்படைத்தது.

1950களில் ஹாங்காங்கின் துறைமுகம் அந்த பகுதியின் முக்கிய வணிக தளமாக மாறியது. அந்த சமயத்தில் ஹாங்காங்கின் பொருளாதாரம் புத்தெழுச்சி பெற்றது.

அதேசமயம் ஏராளமான அகதிகள், வறுமையில் உழன்றவர்கள், சீனாவில் தண்டனைக்கு உள்ளானவர்கள் ஹாங்காங்கிற்கு பயணித்தார்கள்.

இப்படியான சூழலில், 99 ஆண்டுகால குத்தகை முடியும் தருணம் நெருங்கிக் கொண்டிருந்தது.

1980களில் ஹாங்காங்கின் எதிர்காலம் குறித்து முடிவு செய்ய பிரிட்டனும் சீனாவும் பேச்சுவார்த்தையில் இறங்கின.

முழுமையாக ஹாங்காங் சீனாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென சீனா கோரியது.

1984ம் ஆண்டு ஒரு முடிவு எட்டப்பட்டது. 1997ம் ஆண்டு ஹாங்காங் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டப்படும் ஒரு தேசம், இரண்டு அமைப்பு என்ற முறையில் ஹான்ஹ்காங் இயங்கும் என

முடிவு செய்யப்பட்டது.

அதாவது, சீனாவின் ஒரு பகுதியாக ஹாங்காங் இருக்கும். அதே சமயம் வெளியுறவு மற்றும் பாதுகாப்புத் துறை தவிர்த்து சுயாட்சியாக ஹாங்காங் இயங்கும்.

இதன் காரணமாக சீனாவில் இல்லாத சுதந்திரத்தை, ஹாங்காங் மக்கள் அனுபவிக்கிறார்கள்.

ஆனால், அதே நேரம் ஹாங்காங் நிர்வாக தலைவரை நேரடியாக ஹாங்காங் மக்கள் தேர்ந்தெடுக்க முடியாது.

1,200 பேர் கொண்ட தேர்தல் குழுவால்தான் ஹாங்காங் நிர்வாகத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

ஹாங்காங் தலைவரை மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் 2014ம் ஆண்டு ஜனநாயகத்திற்கு ஆதரவான போராட்டம் ஹாங்காங்கில் முன்னெடுக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், அரசு தலைமையகங்களின் முன்னால் இருந்த வளாகங்களை சட்டபூர்வ மற்ற முறையில் ஆக்கிரமித்த ஜோசுவா வொங், அலெக்ஸ் சொவ் மற்றும் நாதன் லா உள்ளிட்ட இளைஞர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டம், குடை (அம்பிரல்லா) இயக்கம் என்று கூறப்படும் ஜனநாயக போராட்டத்திற்கு இட்டுச் சென்றது. இதில் சீனாவால் ஆளப்பட்டுவரும் தங்களது நிலப்பரப்பில் ஜனநாயக மாற்றம் நிகழ வேண்டும் என்று பல்லாயிரக்கணக்கான ஹாங்காங் மக்கள் இணைத்து கொண்டனர்.

ஆனால், இந்தப் போராட்டமும் சீனாவால் ஒடுக்கப்பட்டது.

இந்த சூழலில், ஹாங்காங்கில் குற்றவாளிகள் என சந்தேகிக்கும் நபர்களை சீனாவிடம் ஒப்படைக்க வழிவகுக்கும் மசோதா ஒன்றை 2019 ஏப்ரல் மாதம் அந்நாடு அறிமுகப்படுத்தியது.

இதற்கு ஹாங்காங் மக்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் இதன் மூலமாக பழவாங்கப்படுவார்கள். சீன நீதிமன்ற முறைகளினால் அவர்கள் மோசமான சித்திரவதைகளை அனுபவிப்பார்கள் என அந்நாட்டு மக்கள் குற்றஞ்சாட்டி வீதிக்கு வந்து போராட தொடங்கினார்கள்.

சீனா முழுமையாக ஹாங்காங்கை கட்டுப்படுத்த நினைக்கிறது என்ற வாதத்தையும் விமர்சகர்கள் முன் வைத்தார்கள்.

முதலில் சாதாரணமாக தொடங்கிய போராட்டத்தில் நாட்கள் செல்ல செல்ல லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றார்கள்.

வணிகர்கள், வழக்கறிஞர்கள், மாணவர்கள், ஜனநாயகத்திற்கான செயற்பாட்டாளர்கள் மற்றும் மத குழுக்கள் என சமூகத்தின் அனைத்து பிரிவினரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

அரசு நிர்வாகம் நடக்கும் பகுதியில் அவர்கள் போராட்டத்தை மேற்கொண்டதால் மொத்த நாடும் ஒரு கட்டத்தில் ஸ்தம்பித்தது.

ஜனநாயகத்திற்கு ஆதரவான ஹாங்காங் மக்களின் போராட்டத்தின் குறியீடான குடையும் இந்தப் போராட்டத்தில் ஓர் அங்கமானது.

போராட்டத்தில் பங்கேற்ற போராட்டக்காரர்கள், இது தீய சட்டம். இது ஹாங்காங்கிற்கு வாழ்வா சாவா போராட்டம். அதனால்தான் வீதிக்கு வந்து போராடுகிறோம். சர்வதேச நிதி மையமாக இருக்கும் ஹாங்காங்கின் மரியாதையை மட்டும் இந்த சட்டம் கெடுக்கவில்லை. நீதி அமைப்பின் மீதும் இது தாக்கம் செலுத்துகிறது என்று தெரிவித்தனர்.

ஒரு நீண்ட போராட்டத்திற்கு பின் ஜூலை மாதம், இந்த சட்ட மசோதாவை தற்காலிகமாக கைவிடுவதாக ஹாங்காங்கின் நிர்வாகத் தலைவர் கேரி லேம் அறிவித்தார்.

எப்படியாக இருந்தாலும் ஹாங்காங், சீனாவின் கட்டுப்பாட்டில்தானே உள்ளது. பின் ஏன் இந்த சட்ட திருத்தமென சந்தேகம் ஏற்படலாம்.

இந்த சந்தேகத்தை தீர்க்க ஹாங்காங் குறித்து அடிப்படையான சில தகவல்களை தெரிந்துகொள்ள வேண்டும்.

பிரிட்டனின் காலனி நாடாக இருந்த ஹாங்காங், 1997ம் ஆண்டு சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டப் பின் ஒரு தேசம், இரண்டு அமைப்பு முறைகளை கொண்டு இயங்கி வருகிறது.

ஹாங்காங்கிற்கு என்று தனிச்சட்டம் உள்ளது. சீன மக்களுக்கு கிடைக்காத ஜனநாயக சுதந்திரம் ஹாங்காங் மக்களுக்கு உள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட 20 நாடுகளுடன் ஹாங்காங் குற்றவாளிகளை ஒப்படைக்கும் சட்டத்தை போட்டுள்ளது. ஆனால், அது போன்ற சட்ட ஒப்பந்தமும் சீனாவுடன் இல்லை. இருபது ஆண்டுகளாக இதற்கான

15 ஆம் பக்கம் பார்க்க....

காஷ்மீர் விவகாரம்: முற்றும் இந்திய-பாகிஸ்தான் மோதல்

சர்ச்சைக்குரிய காஷ்மீர் மீது இந்தியா அதன் கட்டுப்பாட்டை இறுக்குவதற்கான அதன் ஆக்ரோஷமான மற்றும் அப்பட்டமான சட்டவிரோத நகர்வுகளுக்கு விடையிறுப்பதில், பாகிஸ்தான் பல்வேறு பதிலடி நடவடிக்கைகளை எடுத்துள்ளது டன், போர் அச்சுறுத்தல்களையும் விடுத்துள்ளது.

இஸ்லாமாபாத் ஒரு இணைப்பாக ஆக முத்திரை இடும் இந்நகர்வுகளுடன் சேர்ந்து இந்திய வசமுள்ள ஜம்மு மற்றும் காஷ்மீர் முன்கண்டிராத முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டது. ஜம்மு-காஷ்மீரில் இணையம், கேபிள் தொலைக்காட்சி, தரைவழி மற்றும் செல்பேசி சேவை அனைத்தும் இடைநிறுத்தம் செய்யப்பட்டதுடன், பள்ளிகள் மூடப்பட்டு, நான்கு நபர்களுக்கு அதிகமானவர்கள் ஒன்றுகூடுவது சட்டவிரோதமாக்கப்பட்டது, பத்தாயிரக் கணக்கான இந்திய சிப்பாய்கள் மற்றும் ஏனைய பாதுகாப்பு படைகளால் அமல்படுத்தப்பட்ட ஓர் ஊரடங்கு உத்தரவின் கீழ் மொத்த மக்கள் நடமாட்டமும் கடுமையாக முடக்கப்பட்டுள்ள நிலையில், நான்காவது நாளாக நேற்றும் அப்பிராந்தியம் வெளி உலகிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் இந்து மேலாதிக்கவாத பாரதிய ஜனதா கட்சி (பிஜேபி) அரசாங்கம் உத்தரவிட்ட ''அடைப்பின்'' பாகமாக 500 இக்கும் அதிகமானவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக நேற்று அகில-இந்திய அரசு வானொலி அறிவித்தது. ஜம்மு-காஷ்மீரின் இரண்டு முன்னாள் முதலமைச்சர்களும் மற்றும் அப்பிரதேசத்தின் முஸ்லீம் உயரடுக்கினது இந்திய ஆதரவு பிரிவின் ஏனைய தலைவர்களும் கைது செய்யப்பட்டிருந்தவர்களில் உள்ளடங்குவர்.

இந்திய தூதரக உயர் ஆணையர் அஜய் பிசாரியாவை வெளியேற்றுவதாகவும், இருதரப்பு வர்த்தகம் அனைத்தும் இடைநிறுத்தம் செய்யப்படுவதாகவும் இஸ்லாமாபாத் அறிவித்ததுடன், அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் (மீகுஇ) புதன்கிழமை கூட்டத்தைத் தொடர்ந்து புது டெல்லி உடனான இருதரப்பு உடன்படிக்கைகள் அனைத்தும் மீளாய்வு செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் இராணுவம் மேலாளுமை கொண்ட தேசிய பாதுகாப்பு கவுன்சிலுக்குப் பாகிஸ்தான் பிரதம மந்திரி இம்ரான் கான் தலைமை வகிக்கிறார்.

அதற்கு ஒரு நாள் முன்னதாக, சர்வதேச நாணய நிதியம் (ஐஞஊ) கட்டளையிடும் கடுமையான சிக்கன நடவடிக்கைகளைத் தற்போது நடைமுறைப்படுத்தி வரும் ஒரு வலதுசாரி இஸ்லாமிய ஜனரஞ்சகவாத அரசாங்கத்திற்குத் தலைமை கொடுக்கும் கான், பாகிஸ்தானிய நாடாளுமன்றத்தின் ஒரு அவசர கூட்டுக் கூட்டத்தில் நிகழ்த்திய உரையில் ஒரு பகுதி எச்சரிக்கையாகவும் இன்னொரு பகுதி மிரட்டலாகவும் இருந்தது. இந்தியா அதன் தற்போதைய போக்கைத் தொடர்ந்தால், தெற்காசியாவின் பகையான அணுஆயுத சக்திகள் விரைவில் முற்று முதலான போருக்குள் செல்லும் ஒரு சூழலை கான் சித்தரித்தார்.

பிஜேபி அரசாங்கம், எந்தவொரு பொது விவாதமோ அல்லது கலந்தாலோசனையோ செய்யவில்லை என்பது ஒருபுறம் இருக்க, முன்னெச்சரிக்கை அறிவிப்பு கூட இல்லாமல், திங்களன்று, இந்திய ஒன்றியத்தின் கீழ் ஒரு பாதி தன்னாட்சி பகுதியாக விளங்கிய ஜம்மு மற்றும் காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை நீக்கியது. பின்னர் அது இந்தியாவின் ஒரே முஸ்லீம் பெரும்பான்மை மாநிலமாக இருந்ததை இரு கூறாக்கி உருவாக்கப்பட்ட பகுதிகளை யூனியன் பிரதேசங்களாக அறிவித்தது, அதாவது நடைமுறையளவில் காலவரையையின்றி அது மத்திய அரசாங்கத்தின் கீழ் இருக்கும் என்பதே இதன் அர்த்தமாகும்.

இந்தியாவின் இராணுவம் மற்றும் உளவுத்துறை முகமைகளின் உயரதிகாரிகளுடன் இரகசியமாக தயாரிப்பு செய்து நடத்தப்பட்ட இந்த அரசியலமைப்பு சதி, ஒன்றுக்கு மேற்பட்ட நோக்கங்களைக் கொண்டுள்ளது. ஜம்மு மற்றும் காஷ்மீரில் தசாப்த காலமாக நடந்து வரும் பாகிஸ்தான் ஆதரவிலான இந்திய-விரோத கிளர்ச்சியை விரைவாக இரத்தக்களரியுடன் பலவந்தமாக முடிவுக்குக் கொண்டு வருவது; பாகிஸ்தானுக்கு எதிராகவும் மற்றும் இப்போது இரண்டாக பிரிக்கப்பட்டுள்ள ஜம்மு-காஷ்மீரின் கிழக்கில் எல்லைகளைக் கொண்டுள்ள சீனாவுக்கு எதிராகவும் புது டெல்லியின் கரங்களைப் பலப்படுத்துவது மற்றும் இந்திய அரசியலை இன்னும் கூடுதலாக வலதுக்கு நகர்த்துவதற்காக போர்வெறி கொண்ட இந்திய தேசியவாதம் மற்றும் இந்து வகுப்புவாதத்தைத் தூண்டுவது ஆகியவை அதன் நோக்கங்களில் உள்ளடங்கி உள்ளன.

ஜம்மு-காஷ்மீரை இந்திய ஒன்றியத்துடன் முழுமையாக ஒருங்கிணைப்பது நீண்டகாலமாகவே பிஜேபி மற்றும் இந்து மேலாதிக்க வலதின் பிரதான கோரிக்கைகளில் ஒன்றாக இருந்துள்ளது, இது கீகுகு உடனும் மற்றும் அப்பிரதேசத்தில் வழிவழியாக மேலாதிக்கம் கொண்டிருந்த இந்து நிலச்சுவான்தார்களுடனும் இணைந்து 1950 களின் தொடக்கத்தில் இந்து மகாசபை மற்றும் ஜன் சங்கின் முன்னாள் தலைவர் ஷ்யாம பிரசாத் முகர்ஜியால் தொடங்கப்பட்ட ஒரு கிளர்ச்சி வரையில் நீள்கிறது.

பாகிஸ்தான் ஜனாதிபதி, தெற்காசியா எவ்வாறு அணுஆயுத போருக்குள் சிக்கும் என்பதை மேலோட்டமாக விவரிக்கிறார்

செவ்வாயன்று நாடாளுமன்ற உரையில் கான் கூறுகையில், பெப்ரவரி 14 இல் ஜம்மு-காஷ்மீரின் புல்வாமாவில் இந்திய துணைஇராணுவப் படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு போன்ற சம்பவங்கள் மீண்டும்



நிகழக்கூடும் அவர்கள் அதை செய்கையில் இந்தியா மீண்டும் நம்மை தாக்கக்கூடும், என்பதையே காஷ்மீர் மீதான இந்தியாவின் தாக்குதல் அர்த்தப்படுத்துகின்றது என்றார். இது அச்சம்பவத்தை அடுத்து நரேந்திர மோடி தலைமையிலான பிஜேபி அரசாங்கம் பாகிஸ்தானுக்குள் ஆழமாக ஊடுருவி விமானத் தாக்குதல்கள் நடத்துவதற்கு உத்தரவிட்டதைக் குறித்த ஒரு குறிப்பாகும், இதற்கு கானும் பாகிஸ்தானிய இராணுவமும் ஜம்மு-காஷ்மீர் மீது அவர்களின் சொந்த வான்வழி வேட்டையாடலைக் கொண்டு விடையிறுத்தனர், அது தெற்காசியாவை ஒரு பேரழிவுகரமான போரின் விளிம்புக்குக் கொண்டு வந்திருந்தது.

இது நடக்கும் என்பதை என்னால் ஏற்கனவே அனுமானிக்க முடிந்தது, என்று தெரிவித்த கான், அவர்கள் மீண்டும் நம்மீது பழி போட முயல்வார்கள். அவர்கள் மீண்டும் நம்மை தாக்குவார்கள், நாம் திருப்பி தாக்குவோம், என்றார்.

பின்னர் என்ன நடக்கும்? அவர்கள் நம்மை தாக்குவார்கள், நாம் விடையிறுப்போம், இரண்டு வழியிலும் போர் நடக்கலாம், நமது கடைசி சொட்டு இரத்தம் சிந்தும் வரையில் சாத்தியமானவுக்கு அது தொடரும் என்றார். எதேனும் மிகப்பெரிய இந்திய உந்துதலை பாகிஸ்தான் முகங்கொடுக்கையில் விரைவாக அணுஆயுதங்களை நாடுவதற்கான பாகிஸ்தானிய இராணுவ மூலோபாய அழைப்புகளை மறைமுகமாக ஒப்புக் கொள்ளும் வகையில், கான், அவர் கருத்துக்கள் இப்போதைய களத்தின் இராணுவ மூலோபாய நகர்வுகள் மீதான ஒரு மென்மையான மதிப்பீடு மட்டுந்தான் என்று கூறுமளவுக்குச் சென்றார். இது அணுஆயுத மிரட்டல் இல்லை, என்று பாகிஸ்தான் பிரதம மந்திரி வலியுறுத்தினார்.

இந்தியாவின் சமீபத்திய நடவடிக்கைகளால் விரைவுபடுத்தப்பட்டுள்ள இந்த நெருக்கடியானது அங்கே மட்டுப்படுத்தப்பட்ட வழக்கமான போராகவோ அல்லது காஷ்மீர் பிரச்சினையை ஒரேயடியாக முற்றுமுழுதாக தீர்ப்பதற்கான ஒரு பொன்னான வாய்ப்பாகவோ ஆவதற்கு 50/50 வாய்ப்பு இருப்பதாக பாகிஸ்தான் ஊடக பிரதிநிதிகளுடனான ஒரு கூட்டத்தில் கான் தெரிவித்ததாக செய்திகள் குறிப்பிட்டன.

பாகிஸ்தான், காஷ்மீர் மீறல்கள் மீது மேற்கத்திய அரசாங்கங்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களைச் செயலூக்கத்துடன் திடமாக்கும் என்றும், இந்தியாவின் நடவடிக்கைகள் சர்வதேச விதிமீறல்கள் என்ற அதன் வழக்கை ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்னால் கொண்டு வரும் என்றும் கூடுதலாக கான் தெரிவித்தார். எவ்வாறிருப்பினும் வாஷிங்டனும் ஏனைய மேற்கத்திய சக்திகளும் ''பிஜேபி இன் அங்கியில் மறைந்துள்ள பாசிசத்தை'' சமாதானப்படுத்த தேர்ந்தெடுக்கலாம் என்று கான் கவலை வெளியிட்டார்.

பிஜேபி அரசியலமைப்பு சதிக்குச் சர்வதேச எதிர்வினை இல்லாதிருப்பதன் மீது பாகிஸ்தானுக்குள் அதிருப்தி நிலவுகின்ற நிலையில், காஷ்மீர் மக்களின் அடிப்படை உரிமைகளைத் தாறுமாறாக மிதித்து நசுக்கி செல்லும் அந்நடவடிக்கை, வேண்டுமென்றே பாகிஸ்தானுடனான உறவுகளைக் கொதிப்பேற்றி, எதேச்சதிகார ஆட்சி வடிவங்களை நோக்கிய ஒரு முக்கிய படியைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.

கானின் முதலாளித்துவ அரசியல் எதிர்ப்பாளர்கள், காஷ்மீரி மக்களின் உரிமைகளை தாங்கிப்பிடிக்க சூளுரைப்பதில் அரசாங்கத்துடன் இணைந்துள்ள அதேவேளையில், அவர்கள் மோடி மற்றும் அவரின் அரசாங்கத்துடன் முன்னதாக அவர் மேற்கொண்ட சமாதான முயற்சிகளுக்காக அவரைக் கண்டிக்கின்றனர்.

இந்தியாவில் போலவே, அங்கேயும் இந்திய-பாகிஸ்தான் மோதலானது முதலாளித்துவ ஆட்சியின் ஒரு முக்கிய இயங்கமைப்பாக நீண்டகாலமாக இருந்து வந்துள்ளதுடன், அது சமூக பதட்டங்களைத் திசைதிருப்பவும் அவற்றை போர் வெறி கொண்ட தேசியவாதம் மற்றும் வகுப்புவாதத்திற்குப் பின்னால் வழிநடத்தவும், அத்துடன் அதிகாரத்திற்கான அவர்களின் உள்கட்சி மோதல்களைத் தொடுக்க ஆளும் வர்க்கத்தின் போட்டிகன்னைகளுக்கான வழிவகையாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது மிகவும் மோசமடைந்துள்ள அமெரிக்க-பாகிஸ்தானிய இராணுவ-மூலோபாய பங்காண்மையின் பிரதான தூணாக பாரம்பரியமாக சேவையாற்றி உள்ள பாகிஸ்தானிய இராணுவம், இந்திய ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாப்பதில் அது அந்நாட்டின் வாளின் கைப்பிடியாக இருந்துள்ளது என்ற அடித்தளத்தில், அது அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரத்தின் பெரும் பங்கில் உரிமைகோரல்களை வைக்கிறது.

இந்திய-பாகிஸ்தானிய மூலோபாய போட்டியும், காஷ்மீர் மக்களின் தலைவிதியும்

காஷ்மீர் மோதலும் பரந்த இந்திய-பாகிஸ்தானிய மூலோபாய போட்டியும், வெளிப்படையாக முஸ்லீம் பாகிஸ்தான் மற்றும் பெருவாரியாக இந்து இந்தியா என்று பிரிக்கப்பட்ட தெற்காசியாவின் 1947-48 இல் வகுப்புவாத பிரிவினையில் வேரூன்றி உள்ளது.

இந்திய வசமிருக்கும் ஜம்மு-காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் வசமிருக்கும் ஆசாத் காஷ்மீர் என்று பிரிவினையின் விளைவாக பிளவுபடுத்தப்பட்ட காஷ்மீரி மக்களின் ஜனநாயக அபிலாஷைகள் மற்றும் உரிமைகள் மீது இந்திய முதலாளித்துவமும் பாகிஸ்தான் முதலாளித்துவமும் இரண்டுமே ஏறிமிதித்து, திட்டமிட்டு சூழ்ச்சிகளைக் கையாண்டுள்ளன.

காங்கிரஸ் கட்சி, பிஜேபி அல்லது பிராந்திய மற்றும் ஜாதிய அடிப்படையிலான கட்சிகள் மற்றும் மூன்றாவது அணி தலைமைகளின் கீழ் அடுத்தடுத்து வந்த இந்திய அரசாங்கங்கள், பல தசாப்தங்களாக கிளர்ச்சியை நசுக்குவதற்காக, ஓர் கொடூரமான போரை நடத்தி வந்துள்ளது, அந்த கிளர்ச்சி, 1987 இல் ஜம்மு-காஷ்மீர் மாநில தேர்தல்கள் சீர்குலைக்கப்பட்டதை எதிர்த்து மிகப்பெருமளவில் வெடித்த போராட்டங்களை புது டெல்லி அலட்சியப்படுத்தி ஒடுக்கியதற்குப் பின்னர் எழுச்சி கண்டது.

இதற்கிடையே பாகிஸ்தான் ஜம்மு-காஷ்மீரில் இந்திய அரசுக்கு எதிரான எதிர்ப்பை சாதகமாக திசைதிருப்ப முனைந்ததுடன், ஜம்மு-காஷ்மீரில் இந்து மற்றும் சீக்கிய சிறுபான்மையினர் மீது மீண்டும் மீண்டும் வகுப்புவாத தாக்குதல்களை நடத்தி வந்த இஸ்லாமிய காஷ்மீரி பிரிவினைவாத குழுக்களை ஊக்குவித்ததன் மூலமாக, அதன் சொந்த சூறையாடும் நோக்கங்களை அது பலப்படுத்த முயன்றது.

இந்திய ஆளும் உயரடுக்கு, காஷ்மீர் மீதான பிஜேபி அரசாங்கத்தின் தாக்குதல் ஓர் உயர்-அபாய சூதாட்டம் என்பதை உணர்ந்திருந்த போதிலும், அதையொரு அவசியமான படியாக அரவணைத்துக் கொண்டது. அந்த அசாதாரண நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவதை அதிகப்படுத்துவதற்கான காரணம் என்னவென்றால், உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நெருக்கடி அதிகரித்து வருகின்ற மற்றும் தீவிரமடைந்து வருகின்ற பூகோளரீதியான புவிசார்அரசியல் மோதல் நிலைமைகளின் கீழ், இந்தியா தன்னை ஒரு வளர்ந்து வரும் உலக சக்தியாக நிலைநாட்டுவதற்கான வாய்ப்பின் ஜன்னல்கள் வேகமாக மூடி வருகிறது என்ற இந்தியாவின் ஆளும் உயரடுக்கின் அச்சம் தான்.

பிஜேபி இன் காஷ்மீர் அதிகார ஆட்டத்தை பாதுகாப்பதில், பல இந்திய பத்திரிகை விமர்சகர்கள், அதை இஸ்லாமாபாத் மற்றும் வாஷிங்டனுக்கு இடையிலான சமீபத்திய சமரசத்திற்கு ஒரு விடையிறுப்பாக வாதிட்டு வருகின்றனர், கடந்த மாதம் கானின் வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் உடனான சந்திப்பும், 18 ஆண்டுகால ஆப்கான் போருக்கான ஓர் அரசியல்உடன்பாடு குறித்து பாகிஸ்தான் உதவியுடன் நடந்து வரும் அமெரிக்க-தாலிபான் பேச்சுவார்த்தைகளில் இருந்து இந்தியா கழற்றிவிடப்பட்டதும் அதில் உள்ளடங்கும்.

இது முட்டாள்தனமானது. திங்கட்கிழமை சதி வெறுமனே நீண்டகால பிஜேபி கொள்கையை மட்டும் பூர்த்தி செய்யவில்லை. அது மோடி அரசாங்கம் 2014 இல் பதவிக்கு வந்ததற்குப் பின்னர் இருந்து காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் தொடர்பாக பின்பற்றி வந்த கடுமையான மூலோபாயத்தின் தோல்வியிலிருந்து எழுகிறது.

மிக அதிகபட்சமாக, அமெரிக்க-பாகிஸ்தானிய உறவுகள் தற்காலிகமாக மிக சூமூகமாக வளர்ச்சி அடைவது குறித்த தாக்கம் மற்றும் காஷ்மீர் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்யவோ அல்லது ஒரு தீர்வை வழங்குவதற்கோ கூட என்னால் உதவ முடியும் என்ற ட்ரம்பின் ஆலோசனை குறித்த கவலைகள், ஜம்மு-காஷ்மீர் மீதான புது டெல்லி தாக்குதலின் நேரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கலாம்.

எவ்வாறாயினும், சீனாவுக்கு எதிரான அமெரிக்க இராணுவ-மூலோபாய தாக்குதலுக்குள் புது டெல்லி முன்பினும் ஆழமாக ஒருங்கிணைப்பதற்கான சமரச உடன்பாடாக காஷ்மீரில் இந்தியாவின் கரத்தைச் சுதந்திரமாக வாஷிங்டன் விட்டு வைக்கும் என்ற கணிப்பை மோடி அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அடித்தளமாக கொண்டிருந்தன.

புதன்கிழமை, அமெரிக்க வெளியுறவுத்துறையின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமைப்பு, ஜம்மு-காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை நீக்கி, அதை இந்திய மத்திய அரசின் நிரந்தர பொறுப்பாண்மையின் கீழ் நிறுத்துவதற்கான புது டெல்லியின் திட்டங்கள் குறித்து வாஷிங்டன் முன்கூட்டியே அறிந்திருந்தது என்பதை மறுத்து ஓர் அறிக்கை வெளியிட்டது.

பத்திரிகை செய்திகளுக்கு முரண்பட்ட விதத்தில், இந்திய ஆக்கிரமிப்பு காஷ்மீரின் (ஐஜீஒ) சிறப்பு அரசியலமைப்பு அந்தஸ்தை நீக்க நகர்வதற்கு முன்னதாக இந்திய அரசாங்கம் அமெரிக்க அரசுடன் கலந்தாலோசிக்கவும் இல்லை அல்லது தகவல் அளிக்கவும் இல்லை, என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

நடத்தப்படவிருந்த நடவடிக்கை குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகஸ்ட் 1இல் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் மைக் பொம்பியோவைச் சந்தித்த போது தெரிவித்திருந்ததாக இந்திய ஊடகங்கள் வாதிடுகின்றன. புது டெல்லி அதுபோன்றவொரு நகர்வுக்கு திட்டமிட்டு வருவதாக அது பல சந்தர்ப்பங்களில் வாஷிங்டனுக்குத் தெரிவித்திருப்பதாகவும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் புல்வாமா தாக்குதலுக்குப் பின்னர் அவரின் அமெரிக்க சம அந்தஸ்திலுள்ள ஜோன் போல்டனுடன் பேசிய சந்தர்ப்பமும் அதில் உள்ளடங்கும் என்று இந்திய பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன.

அந்த உரையாடலுக்குப் பின்னர், போல்டன், வாஷிங்டன் எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் தற்காப்பு உரிமையை வாஷிங்டன் ஆதரிப்பதாக அறிவித்து, அதற்கடுத்து நடத்தப்பட்ட பாகிஸ்தான் மீதான இந்திய வான்வழி தாக்குதலுக்குப் பகிரங்கமாகவே பச்சைக் கொடி காட்டியிருந்தார்.

நன்றி: உலக சோசலிச இணையத்தளம்

ஹாங்ஹாங்..

14 ஆம் பக்கத் தொடர்ச்சி

பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

னாவுடன் இந்த சட்ட ஒப்பந்தம் எட்டப்படாததற்கு, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு சீனாவில் உள்ள மோசமான சட்டப்பாதுகாப்புதான் காரணம் என்று வல்லுநர்கள் தெரிவித்தனர்.

சரி. சட்ட மசோதாவைதான் தற்காலிகமாக கைவிடுவதாக ஹாங்காங்கின் நிர்வாகத் தலைவர் கூறிவிட்டாரே பின் ஏன் இன்னும் போராட்டம் அங்கு தொடர்கிறது?

போராட்டக்காரர்கள், இந்த சட்ட மசோதாவை தற்காலிகமாக கைவிடக் கூடாது. முழுமையாக் கைவிடவேண்டும் என்கிறார்கள்.

ஒரு நீண்ட போராட்டத்திற்கு பின் ஜூலை மாதம், இந்த சட்ட மசோதாவை தற்காலிகமாக கைவிடுவதாக ஹாங்காங்கின் நிர்வாகத் தலைவர் கேரி லேம் அறிவித்தார்.

மேலும் அவர்கள், சில கோரிக்கைகளை முன் வைக்கிறார்கள்.

போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட அனைத்து போராட்டக்காரர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும்.

போராட்டத்தின் போது மக்கள் மீது போலீஸ் வன்முறையை ஏவியதாக கூறும் போராட்டக்காரர்கள், போலீஸை விசாரிக்க வேண்டும் என்கிறார்கள்.

ஹாங்காங்கின் தலைமை நிர்வாகி மற்றும் சட்டமன்றத்திற்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க அனைவருக்கும் வாக்குரிமை வேண்டும் என்பதும் அவர்கள் கோரிக்கை.

சீனாவின் பொம்மையாக இருக்கும் கேரி லேம் பதவி விலக வேண்டும் என்றும் சிலர் கோருகிறார்கள்.

நன்றி: பிபிசி

கல்முனை ஸ்ரீ அம்பலத்தடி விநாயகர் ஆலய மகோற்சவ பெருவிழா

அன்புவெளி நிருபர்

கல்முனை நகரின் பிரதான வீதியிலி ருந்து சிறிது தூரத்தில் இராமகிருஷ்ண வீதி யில் அமைந்துள்ள மூர்த்தி தலம் தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற பழமை வாய்ந்த கல்முனை ஸ்ரீ அம்பலத்தடி விநாய கர் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 23ம் திகதி வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப்டம்பர் 3ம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்தோற்சவத்துடன் நிறைவுறும்.

இம்மகோற்சவத்தில் 31ம் திகதி இலட்ச ார்ச்சனையும் 1ம் திகதி சங்காபிஷேகமும் 2ம் திகதி பஞ்சமுக அர்ச்சனைத் திருவி ழாவும் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

கல்லாறு கிங் வோய்சின் தலைக்கனம் குறுந்திரைப்படம் வெளியீட்டு விழா

பெரியகல்லாறு நிருபர்

கல்லாறு கிங் வோய்சின் 4வது தயாரிப்பான தலைக்கனம் குறும் படம் வெளியீட்டுவிழா, உள்ளூர் அதி முக்கிய பிரமுகர்களுக்கு லக்ஸ் மன் தலைமையில் இந்துகலாச ார மண்டபத்தில் கடந்த சனியன்று மாலை வைபவ ரீதியாகாண்பிக் கப்பட்டது.

சர்வார்த்த ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வண்ணக்கர் மூ.மன்மதரா ஜா,கணக்குப்பிள்ளை கமல்ராஜ், பிதேச சபை உறுப்பினர் சண்முகம் கணேசநாதன்,பொறியியலாளர் ம.டினேஸ். கோபி. உட்பட பல முக்கியஸ்தர்களும் இணைந்துவெ ளியீட்டை அரம்பித்து வைத்தனர். தலைக்கனம் பற்றி பின்வரும் குறிப் புக்களைமுன்வைக்கலாம்.

இன்று இளைஞர்களின் கவனம் குறும் படங்கள் பக்கம் வெகுவாக திசை திரும்பிஇருக்கின்றது. ஏராள மான குறும் திரைப்படங் கள் இணையத்தளங்கள் மூலம்நாளும் வெளியாகிய வண்ணம் இருக்கின்றன.

சமூகத்திற்கு நல்ல செய்தி ஒன்றை தெரி விக்கும் கலை வடிவமாக அது வலம் வந்துகொண் டிருக்கின்றது. அந்தவகை யில் கல்லாறு கிங் வோய்சி ன் 4வது தயாரிப்பாகத லைக்கனம் தலைகாட்டியி ருக்கின்றது.

சமூகப் பிரக்ஞையு டன், கூரிய சமூகப் பார்வையுடன் ஒரு படைப்பு வெளிவரும்போதுதான் அது சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தும்.; அதுவும் புதுமையான புதியகருத்துக் களை சொல்லும்போது அது சமூகத்தில் நல்ல தாக்கத்தைச் செலுத்தும்.

தலைக்கனத்தின் கதைக்களம் பட் டம், நட்பு, தொழில். என்ற மூன்று விடயங்களையதார்த்தமாகத் தாங்கி நிற் கின்றது. இவற்றை மையமாக வைத்து கதைநகர்த்தப்படுகின்றது. இறுதியில் உண்மை நட்பே உயர்ந்தது என்பதை லக்ஸ்மன்கதாபாத்திரம் மூலம் வெகு யதார்த்தமாக வெளிப்படுத்தப்படுகின் றது.

மற்றுமொரு கோணத்தில் செய்யும் தொழிலே தெய்வம் என நினைப்ப வர்களுக்குஅதனால் உயர்வு நிச்சயம் என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றது. பட்டம்கிடைத்ததும் நண்பர்களை உதா சீனம் செய்யும் யனு பாத்திரமே தலைக் கனமாகச்சித்தரிக்கப்படுகின்றது. பட்டம் பெறாத நண்பர் உயர் பதவி வகிக்கும் நிறுவனத்தில்வேலை தேடிச் செல்வதும் அதன் பெறுபேறும் யனுவின் தலைக்க னத்தை தகர்த்துஉண்மையான நட்பின் தார்பரியத்தை மிக அழுத்தமாக உணர்த் துகின்றது. அத்துடன் வாழ்வின் உயர் விற்கு பட்டம் என்பது இரண்டாம் பட் சமே என்பதைநல்லதொரு செய்தியாக இளைஞர்களிடம் முன்வைக்கின்றது.

கதையைப் பொறுத்தவரையில் புதுமையில்லாவிட்டாலும் தற்போதை யஇளைஞர்களின் மனநிலையை நன்கு பிரதிபலிக்கின்றது.

பிரதான பாத்திரங்களாக யனு, லக்ஸ் மன் பாத்திரங்கள்வடிவமைக்கப்பட் டிருக்கின்றன. பாத்திரங்களை ஏற்ற இரு வரும் தங்களின்இயல்பான நடிப்பின் மூலம் எம்மை கவரவே செய்கின்றனர். அதிலும் லக்ஸ்மனின்பாத்திரம் மனநி றைவை தருகின்றது. இளைஞர்களுக்கு ஒரு மொடல் றோலாகஅமைகின்றது.

ஒரு இடத்தில் மட்டும் அறிவுரை கூறுவது போன்ற காட்சி வலிந்துஉள் வாங்கபபட்டிருப்பதுபோல் தெரிகின் றது. நட்பைப் பற்றிய பின்நோக்கிய பார்வையில் பள்ளிப் பருவ நட்புக்கான அழுத்தம் இன்னும் சில காட்சிகளைச்சே ர்த்து வலுச் சேர்த்திருக்கலாம்.

ஒளிப்பதிவில் கிராமத்தின் இயற்கை அழகு முழுமை பெறவில்லை. எனினும் ஒளியமைப்பும் ஒலியமைப்பும் துல்லிய மாக இருப்பது தலைக்கனத்தை தலை நிமிரவைத்திருக்கின்றது. மொத்தத்தில் நல்லதொரு முயற்சி.

மடத்தடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த விநாயகர் சதுர்த்தி அலங்காரத்திருவிழா

பெரியகல்லாறு நிருபர்

மட்டுவாவியை பின்புற எல்லையாகக் கொண்டு கல்முனை மட்டக்களப்பு பிரதா னவீதியின் அருகே பெரியகல்லாற்றின் எழில்மிகு இயற்கைச் சூழலில் மிகவும்அ டக்கமாக அமையப்பெற்றதுதான் மடத் தடி சித்திவிநாயகர் ஆலயம்.

இவ்வாலயத்திற்கு மடத்தடி என்ற இடப்பெயரையும் இணைத்துக் கொண் டதற்குவரலாற்று ரீதியான காரணம் உண்டு. கதிர்காமத்திற்கு பாதயாத்திரை யாகச்செல்வோருக்கு கடந்த 95 வருடங் களுக்கு முன்னர் வைத்திலிங்கம் ஆண்டி என்றதனிநபர் வசதிகள் செய்து கொடுத் திருந்தார். அதனால் வெளி இடங்களில் இருந்துகதிர்காமம் பாதயாத்தியையாகச் செல்வோர் தங்கும் இடங்களில் ஒரு முக்கியஇடமாக இதை கருதி இங்கு தங்கிச் செல்வது வழக்கம். அதனால் ஆல யம்அமைந்துள்ள பகுதி மடத்தடி என்ற பெயர் கொள்ளலாயிற்று.

இங்கு ஆரம்பத்தில் யாத்திரிகர்களுக் காக பிள்ளையார் படம் ஒன்றேவழிபாட் டிற்காக வைக்கப்பட்டிருந்தது. பின்னர் ஒரு சிறு ஆலயம் வைத்தியலிங்கம்ஆண் டியால் அமைக்கப்பட்டு, வழிபாடுகள் தொடர்ந்தன. அவரின் பரம்பரையில்வந்த ஆண்களே இவ்வாலயத்தின் அர்ச்சகராக கருமமாற்றும் மரபுநீ ண்டகாலமாகப் பின்பற் றப்பட்டு வந்தது.

குறுகிய காலத் தில் மண்டபத்துடன் கூடிய மூலஸதானம் கொண்ட், வீதியோரபிள் ளையாரும் வீற்றிருக்க கூடிய விதமாக, ஆலயம் அமைக்கப்பட்டு, குருக் கள்நியமிக்கப்பட்டு ஆல யத்தின் நித்திய பூசைகள் அனைத்தும் வேளை தவறாதுசிறப்பாக நடை பெற்று வருகின்றது. அவ்வாறே விசேட கால பூஜைகளும்வி ரதங்களும் ஆலயத்தில் இடம்பெற்றெ வருகின்றது.

ஆலய வளாகத்தில் வம்மி, வேம்பு, வில்வம், அரசு, நாவல் மற்றும் விருட்ச ங்கள்ஆலயத்தின் பசுமைக்குப் பங்களிப் புச் செய்கின்றன. ஆலய வளாகத்துள்அ மைந்துள்ள வயற்காணியும் ஆலயத்தின் அழகிற்கு மெருகூட்டுகின்றது.

சிறிய அடக்கமான ஆலயமாக இருந் தபோதும் கூட அதிலிருந்து அருள்பா லிக்கும்மடத்தடி பிள்ளையாரின் சக்தி பக்தர்களை வெகுவாகக் கவர்ந்து வருகின் றது.அவர்களின் வேண்டுதல்கள் கைகூ டுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால்ஆலயத்திற்கு தாமாக முன்வந்து பக்தர்கள் பாரிய பங்களிப்புக்களைச்செய் கின்றனர். இவ்வாலயத்தில் வருடாந்த விநாகர் சதுர்த்தி அலங்காரதிரு விழா இம்மாதம் 24ந் திகதி சனிக்கிழமை தொடக்கம் அடுத்தமாதம் 3ந்திகதிவரை 11 நாட்கள் நடைபெறும்.

பால,பக்தி,தருண,உச்சிட்ட, வீர, விஜய. சக்தி, சித்தி,சங்கடகர, சதுர்த்தி, பெயரில்முறையே திருவிழாக்கள் 10நாட் களும் நடைபெறும். 11ம்நாள் (03.09) சனியன்றுதீர்த்தோற்சவம், திருவூஞ்சல் நடைபெற்று இரவு பூங்காவன தெப்பத் திருவிழாவும்இடம்பெறும்.; மறுநாள் வைரவ பூசையுடன் நிகழ்வுகள் நிறைவு பெறும்.

02.09.2019 திங்களன்று காலை 8.00 மணிக்கு பெரியகல்லாறு சர்வார்த்த ஸ்ரீசி த்திவிநாயகர் ஆலயத்திலிருந்து பாற்கு டப்பவனியும், அஸ்டோத்திர சதாசங்காபி ஷேகமும் நடைபெறும்.

உற்சவகால குருமார்களாக காரைதீவு சிவன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீசி தம்பர சாந்தரூபன் குருக்களும். ஆலயத் தின் பிரதம குரு சிவஸ்ரீ பி.சுசேந்திரன்கு ருக்களும் கிரியைகளை மெற்கொள்வர்.

விவசாய தினைக்களத்தின் ஏற்பாட்டில் மண்டூர் மாலையர்கட்டில் தரமான விதை உற்பத்தி விழிப்பூட்டல் நிகழ்வு

போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மண்டூர் மாலை யர்கட்டு கிராமத்தில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் மண்டூர் விவசாய விரிவாக்கல் நிலை யத்தின் ஏற்பாட்டில் தரமான விதை உற்பத்தி விழிப்பூட்டல் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை (13) இடம்பெற் றது.

மண்டூர் விவசாய போதனாசிரியர் பீ.பிறமேந்ரா தலைமையில் தொழி நுட்ப உதவியாளர் கே.கிலசனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ் வில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் ரீ.மேகராசா போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் எஸ்.புவ னேந்திரன் மாலையர்கட்டு கிராம சேவகர் திரு.சத்தியநாராயணன் சுற்றா டல் பாதுகாப்பு சபை உத்தியோகத்தர் திருமதி.புஸ்பராஜினி செவ்வேள்குமரன் கமு பாத்திமா கல்லூரி சுற்றாடல் கழக மாணவர்கள் மற்றும் பெருமளவான விவசாயிகளும் கலந்து கொண்டிருந்த னர்.

இதன்போது விவசாய போதனாசிரி யரால் தரமான நிலக்கடலை உற்பத்தி யில் விவசாயிகள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஜிப்ஷம் பாவனையால் விளைச்சலில் ஏற்படக்கூடிய அதிகரிப்பு பற்றியும் தெளிவூட்டப்பட்டது. மேலும் உதவி விவசாய பணிப்பாளரால் நீர் குறைவான காலப்பகுதியில் வயல் நிலங்களில் நிலக்கடலை உற்பத்தியை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியுமெ னவும் விவசாய திணைக்களத்தின் திட் டங்கள் தொடர்பாகவும் கருத்துரைக்கப் பட்டதுடன் சுற்றாடல் பாதுகாப்பு சபை உத்தி யோகத்தராலும் சுற்றா டல் கழக மாணவன் டிலக்ஷனாலும் சேதனப் பசளை பாவனையின் முக்கியத்துவம் மற்றும் அசேதன இரசாயனங் களை பயன்படுத்துவ தால் ஏற்படக்கூடிய தீமைகள் பற்றியும் விளக்கப்பட்டதுடன். வயல் நிலங்களில் நெல் அறுவடையின் பின்னர் அடிக்கட்டை மற்றும் வைக் கோலை எரிப்பது சிறந்ததல்ல எனவும் அவ்வாறு எரிப்பவர்கள் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படு மெனவும் எச்சரிக்கப்பட்டமை குறிப்பி டத்தக்கது.

இந்நிகழ்வில் மாலையர்கட்டு கிராமத்தில் செய்கை பண்ணப்பட்ட 10 ஏக்கர் நிலக்கடலை செய்கையில் அறுவடை நிகழ்வு உத்தியோகபூர்வமாக அதிதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட் டமையும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத் திருவிழா

கிழக்கி லங்கையின் மீன்பாடும் தேனாடு என வர்ணிக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடியில் வங் கக் கடலோரம் வீற்றிருந்து அருள்பாலிக்க மகாதுறவி சுவாமி ஓங்கா ராநந்த சரஸ்வதி அவர்களால் ஸ்தாபிக் கப்பட்ட ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத் திருவிழா ஓகஸ்ட் 21ம் திகதி புதன்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி 30ம் திகதி வெள்ளிக்கி ழமை தீத்தோற்ச வத்துடன் நிறை வுறும்.

இத் திருவிழா வில் 28ம் திகதி சப்பரத் திருவி ழாவும் 29ம் திகதி தேர்த் திருவிழாவும் சிறப்பாக இடம்பெ றவுள்ளது. கிழக்கிலங்கையின் முருகன் ஆலயங்களில் பிரசித்தி பெற்ற ஆலயம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

சுவாமி ஓங்காரநந்த அன்னஷேத்திர அன்னதான மண்டப திறப்பு விழா

அன்புவெளி நிருபர்

மட்டக்களப்பு ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் புதிதாக அமைக் கப்பட்டுள்ள அன்னதான மண்டபம் இவ்வாலயத்தை உருவாக்கிய மகாது றவி சுவாமி ஓங்காரநந்த சரஸ்வதி அவர் களின் நினைவாக சுவாமி ஓங்காரநந்த அன்னஷேத்திரம் எனும் பெயரில் (18) காலை 9.05 தொடக்கம் 10.35 வரை யுள்ள சுபவேளையில் திறந்து வைக்கப் பட்டது.

ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா எதிர்வரும் 21ம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இவ் அன்னதான மண்டபம் திறந்து வைக்கப் படுவதால் விழாக்காலத்தில் ஆலயத்திற்கு வருகைதரும் அனைத்து பக்தர்களுக்கும் நிறைவாக அன்னதானம் வழங்கக்கூடியதாக இருக்கு மென்பதுவும் குறிப்பிடத்தக் கது.

பெரியகல்லாறு ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் 32வது ஆண்டு நிறைவைமுன்னிட்டு நடைபெற்ற ரி20 மென்பந்து கிரிக்கற் சுற்றப்போட்டியில் 17வயதிற்குகீழ்பட்டோருக்கான அணிகளுக்கான போட்டியில் வெற்றிக் கிண்ணத்தைஒலிம்பியா விளையாட்டுக்கழகமும், 17வயதிற்கு மேற்பட்ட அணிகளுக்கானபோட்டியில் கோல்டன் விளையாட்டுக்கழகமும் கிண்ணங்களை சுவீகரித்துக்கொண் டன. கிண்ணங்களை திருகோணமலை நீர்ப்பாசன திணைக்கள பிரதிபணிப்பாளா எந்திரி கோ.சுஜிதரன், மற்றும் களுவாங்சிக்குடி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி எம்.ஸி.யு.குணவர்தன ஆகியோர் வழங்கிவைப்பதையும் கிண்ணங்களுடன் வெற்றி பெற்ற அணியினரையும்அதிதிகளையம் படங்களில் காணலாம்.

படம்: பெரியகல்லாறு நிருபர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 18.08.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

அன்னமலை அருள்மிகு ஸ்ரீ வடபத்திர காளி அம்பாள் ஆலய வருடாந்த சக்தி விழா

அன்புவெளி நிருபர்

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை நகரிலிருந்து 6 கி.மீ தொலைவில் நெல்வளம் நீர்வளம் நிறையப்பெற்ற இயற்கை எழில் கொஞ்சும் அன்னமலைப் பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னமலை அருள்மிகு ஸ்ரீ வடபத்திர காளி அம்பாள் ஆலய வருடாந்த சக்தி விழா

எதிர்வரும் ஓகஸ்ட் 27 செவ்வாய்க் கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி செப்டம்பர் 4ம் திகதி புதன்கிழமை காலை பக்திப்பரவசமிக்க தீமிதிப்புடன் நிறைவடையும்.

27ம் திகதி அன்னமலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து அம்மன் எழுந்தருளப்பண்ணலும் நள்ளிரவில் அம்பாளின் திருக் கதவு திறக்கும் நிகழ்வும் 28ம் திகதி நண்பகல் அலங்கார பூஜை , மாலை அபிஷேகமும், அதைத்தொடர்ந்து நள்ளிரவில் அலங்கார பூஜையும் 29ம் திகதி நண்பகல் அலங்கார பூசை மற்றும் மாலை அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அம்பாளுக்கான அடுக்குச் சாத்தும் நிகழ்வும் இரவு அலங்கார பூஜையும் அருள்வாக்குச் சொல்லும் நிகழ்வும் 30ம் திகதி காலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்

திலிருந்து பாற்குடபவனியும் ,பாலபிஷேகமும் இடம்பெற்று நண்பகல் அலங்கார பூஜை , அதைத்தொடர்ந்து அம்மனின் கும்ப ஊர்வலமும் மாலை அபிஷேகமும் நள்ளிரவில் அலங்கார பூஜையும் அருள்வாக்குச் சொல்லும் நிகழ்வும் 31ம் திகதி நண்பகல் அலங்கார பூஜையும் அதனைத் தொடர்ந்து அம்மனின் கும்ப ஊர்வலம் இடம்பெறுவதுடன் நள்ளிரவில் அலங்கார பூஜையும் அருள்வாக்குச் சொல்லும் நிகழ்வும் 1ம் திகதி நண்பகல் அலங்கார பூஜையும் , மாலை அன்னமலை அருள் மிகு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து வாழைக்குலை எழுந்தருளப் பண்ணல் நிகழ்வு இடம்பெறுவதுடன் அதைத்தொடர்ந்து பக்திப் பரவசமிக்க வீரகும்பம் வெட்டும் நிகழ்வு இடம் பெறும்.

மாலை அபிஷேகமும் நள்ளிரவில் அலங்கார பூஜையும் அருள் வாக்குச் சொல்லும் நிகழ்வும் 2ம் திகதி நண்பகல் அலங்கார பூஜையும், மாலை அபிசேகமும் அலங்கார பூஜையும் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து அம்மனி'ன் முத்துச்சப்பற பவனியும் 3ம் திகதி காலை நோற்புக்கலம் எடுத்தலும் நோற்பு நெல் குற்றுதலும் பிற்பகல் நோற்புக் கட்டும் நிகழ்வும் இடம்பெறுவதுடன் அதைத்தொடர்ந்து கங்கை நீராடல் நிகழ்வும் தீக்குழி எடுத்தலும் நள்ளிரவில் தீக்குழி மூட்டுதலும் 4ம் திகதி காலை தீ மிதிப்பும் அதைத்தொடர்ந்து அம்பாளுக்கான பாளை சாத்தும் நிகழ்வும் மங்கள வாழ்த்துப் பாடலுடன் இனிதே சக்தி விழா நிறைவடையும்.

திருகோணமலை நகரிலே இராமபிரான் தனது வில்லையூன்றியமையால் வில்லூன்றி எனப் போற்றப்படும் வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை வில்லூன்றி கந்தனின் வருடாந்த மஹோற்சவம் வியாழக்கிழமை (15) காலை 8.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பம் ஆனாது. கஜவல்லி, மஹாவல்லி சமேத ஸ்ரீ சண்முகப் பெருமான் ஆரோகணித்து இருப்பதையும், கொடியேற்ற கிரியைகள், பூஜைகள் நடைபெறுவதையும், அடியார்கள் வழி பாட்டில் ஈடுபடுவதையும், கோவிலின் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

படம்: சேனையூர் நிருபர்

கிழக்கு தந்தி

தாந்தாமலையில் விழிப்பூட்டல் நிகழ்வு

அன்புவெளி நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் தெற்கு வலயத்திலுள்ள தாந்தாமலை விவசாய போதனாசிரியர் பிரிவில் மாமரங்களை கத்தரித்தலும் பயிற்றுவித்தலும் தொடர்பான விவசாயிகளுக்கான விழிப்பூட்டல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தாந்தாமலை விவசாய போதனாசிரியர் வி.சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வி.பேரின்பராஜா மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி. தட்சணகௌரி டினேஷ் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்தினுடைய கணக்காளர் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களுடன் தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் ரீ.மேகராசா தெற்கு வலய விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் விவசாய அமைப்புக்கள் மற்றும் பெருமளவான விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

தரமான மாங்கன்றுகளை தெரிவு செய்தல் நடுதல் பசளையிடல் நீர்பாசன முறைகள் நோய் பீடைத் தாக்கங்களை கட்டுப்படுத்துதல் கத்தரித்தல் மற்றும் பழக் கப்படுத்துதல் என்பன செய்முறை ரீதியாக விவசாய போதனாசிரியர்களால் செய்து காட்டப்பட்டதுடன் இவை தொடர்பான பூரண விளக்கங்களும் வழங்கப்பட்டன. இவற்றுடன் அதிக விளைச்சலைப் பெறுவ தற்கான உத்திகள் மற்றும் தரமான உற்பத்திகள் மூலமாக அதிக இலாபமீட்டல் தொடர் பாகவும் தெளிவூட்டப்பட்டன.

கல்முனை தமிழர் தரப்பு ஏமாறாமல் காலத்தின் தேவை கருதி விழிப்பாகவும் அறிவுபூர்வமாகவும் செயற்படவேண்டும்

துறைநீலாவணை நிருபர்

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தையே தரமுயர்த்த முடியாத நிலையிலேயே தமிழ் அரசியல் தலைமைகள் இருக்கின்றனர் என்றால், வெட்கப்பட வேண்டிய விடயமாக இருக்கின்றது என,

முன்னாள் பிரதி அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சி பட்டிருப்புத் தொகுதி பிரதம அமைப்பாளரும், தேசிய காகித ஆலை தலைவருமான சோ. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

கம்பெரலிய துரித வேலைத்திட்டத்தின் கீழ் முப்பது லெட்சம் நிதியில் வெல்லாவெளி வட்டிக்குளம் புனரமைப்பு பணிகள், பிரதேச செயலாளர் இ.ராகுலநாயகி தலைமையில் இடம்பெற்றபோது(10) பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து குறிப்பிடுகையில், தமிழ் மக்களுடைய அடி மட்டப் பிரச்சினைகளுக்கோ அடிப்படை சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கோ அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சினைகளுக்கோ தீர்வு காண்பதில் தமிழர் அரசியல் தலைமையினர் தமிழரசுக் கட்சிக் காலத்திலிருந்து இன்றைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் காலம் வரை கடந்த எழுபது வருட காலமாக ஒரு வல்லமையற்று வினைத்திறனற்றதாகவே செயற்படுகிறது.

கட்சி அரசியலுக்காகவும் கட்சியிலுள்ளவர்களின் தனிநபர் நலன்களுக்காகவும், அனுபவித்துக்கொண்டிருக்கும் பாராளுமன்ற அரசியல் நலன்களுக்காகவும் நடக்க முற்படுகிறார்களே தவிர வடகிழக்கு மாகாணத் தமிழர்களின் அடிப்படை நலன்களின் மீது ஆத்மார்த்தமான அக்கறையோ அர்ப்பணிப்புடனான செயற்பாடுகளோ இவர்களிடம் கிடையாது. இதுதான் இன்றுவரை கடந்த வடகிழக்கு மாகாணத் தமிழர்களின் தலைவிதியாக இருக்கின்றது.

கல்முனை பிரதேச தமிழர் தரப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிடமும் கூட்டமைப்பிடமும் ஏமாறாமல் காலத்தின் தேவை கருதி விழிப்பாகவும் அறிவுபூர்வமாகவும் நுட்பமாகவும் செயலாற்ற வேண்டிய தேவையுள்ளது. கல்முனைத் தமிழர்களின் இந்நீண்ட காலக் கோரிக்கையானது, சமூக பொருளாதார அரசியல் அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்டது என்பதை முஸ்லிம் அரசியல் தலைமைகள் உணராவிட்டாலும் சமுதாயம் எடுத்துச் சொல்பவர்களாக இருக்க வேண்டும். சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் மாத்திரமே இந்நாடு வளம்பொருந்திய அமைதிப் பூங்காவாக இருக்கும் என்றார்.

கிராமோதய சிகிச்சை நிலையத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுக

துறைநீலாவணை நிருபர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவின் நாவிதன்வெளி சுகாதார வைத்திய அலுவலக பிரிவுக்குட்பட்ட நாவிதன்வெளி கிராமோதய சிகிச்சை நிலையம், பல்வேறு பௌதீக ஆளணி வளக்

குறைபாடுகளுடன் இயங்கி வருவ தனால் சிகிச்சை பெற வருவோர் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளவ தாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவ தாவது,

செயலகப்பிரிவின் பின்தங்கிய எல்லைப்புற பிரதேசங்களிலிருந்து வருவோர் இச் சிகிச்சை நிலையத்தையே பயன்படுத்துவதுடன் நீண்ட காலமாக ஒரு வைத்தியருடனும் ஒரு சில மருத்துவ மாதுக்களுடனுமே இந்நிலையம் இயங்கி வருவதாக தெரியவருகிறது.

நிறைமாத கற்பிணிகள், சிறுகுழந்தையுடனான தாய்மார்கள் ஆகியோர் சுகாதார சிகிச்சை பெற வரும் நிலையில் ஆற அமர்வதற்குக்கூட கட்டிட கூடார கதிரை ,வாங்கு வசதிகளின்றி வெயிலுக்கு மத்தியில் நின்ற நிலையில் நின்றே சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும் மகப்பேறு நிலையிலுள்ள கற்பிணிகள் மலசலகூட குடிநீர் வசதியின்மையினால் மிகுந்த அவஷ்தைக் குள்ளாகுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறித்த நிலையத்தின் சுகாதார சிகிச்சை தேவை கருதி மருத்துவர், மருத்துவ மாதுக்கள், பொது சுகாதார உத்தியோகத்தர்கள், மலசலகூடம், குடிநீர் உட்பட பல்வேறு பௌதீக கட்டிட வள ஆளணித் தேவைகளை நிறைவேற்றுமாறு பொதுமக்களும் சமூகமட்டக் குழுக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஆழ் கடல் மீனவர் எரிபொருள் நிலையம் மீளியங்குமா? எதிர்பார்ப்பில் மீனவர்கள்

துரைவத்தியமேடு நிருபர்

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலக நிருவாக எல்லைக்குட்பட்ட ஓந்தாச்சிமடம் கடற்கரையில் அமைக்கப்பட்ட மீனவர் எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் மீனவர் தங்குமிடம் செயற்பாடுகள் இன்றி விலங்குள் உறங்கும் இடமாக மாறியுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த பிற்பாடு நீரியல்வள அரசின் பெருந் தொகையான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மீனவர்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையமானது குறுகிய காலம் இயங்கிய நிலை

யில் எதுவிதமான காரணங்களுமின்றி இடை நடுவே கைவிடப்பட்டுள்ளதாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆழ்கடல் மீனவர்களின் நலன் கருதி அரசினால் மேற்கொள்ளப்பட்ட குறித்த திட்டம் உண்மையில் வரவேற்கத்தக்க விடயமாகக் காணப்படுகின்ற நிலையில் இடை நடுவே கைவிடப்பட்டிருக்கின்றமை மீனவர்களை ஏமாற்றமளிப்பதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.கட்டிடமானது இது வரைக்கும் எதுவிதமான சேதங்களுக்கும் உட்பட வில்லை.தற்போதும் கூட புதுப் பொழிவுடன் காட்சியளிக்கின்றன.

குறித்த திட்டம் வெற்றியளிக்காத போதிலும் மீனவர்களின் நலன் கருதி மாற்று நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டும் என்பது மீனவர்களின் எதிர்பார்பாகவுள்ளது.

தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முப்பது ஆண்டுகள் அரச பணியில் தன்னை முழுமையாக அர்பணித்த கிராம உத்தியோகத்தர் திரு.தம்பிராஜா இராஜசிங்கம் அவா'களின் பிரியாவிடை நிகழ்வு (15)தம்பலகாமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் ஜே ஸ்ரீபதி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஓய்வு பெற்று செல்லும் கிராம உத்தியோகத்தர் அவர்களுக்கு பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளினால் நினைவு சின்னம் வழங்குவதை படத்தில் காணலாம்

படம்: முள்ளிப்பொத்தானை நிருபர்

கிழக்கிலங்கை வாய்மொழிப் பாடல் மரபு நூல் வெளியீடு

துறைநீலாவணை நிருபர்

சுதந்திர ஆய்வு வட்டத்தின் ஏற்பாட்டில் கலாநிதி சி.சந்திரசேகரத்தின் கிழக்கிலங்கை வாய்மொழிப் பாடல் மரபு நூல் வெளியீடு, மட்டு பொது நூலக கேட்போர்கூடத்தில் அண்மையில்(11) இடம்பெற்றது.

கலாநிதி வ.இன்பமோகன் தலைமையிலான இந்நிகழ்வில், ஓய்வு நிலை பேராசிரியர் செ.யோகராசா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

நா.வாமன் வரவேற்பினையும் நூல் ஆய்வுரையினை எம்.ஐ.எம்.ஹனிபாவும் ஏற்பு மற்றும் நன்றியுரையினை நூலாசிரியரும் ஆற்றியிருந்தார்.

பெரிய நீலாவணை விஸ்ணு நூலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும்

துரைந்தியமேடு நிருபர்

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை மாநகர நிருவாக எல்லைக்குட்பட்ட பெரிய நீலாவணைக் கிராமத்தில் கட்டிட வசதி வாய்ப்புக்கள் தளபாடம் மற்றும் நூலகர் இன்றி சிறிய கட்டித்தினுள் இயங்கும் பெரிய நீலாவணை விஸ்ணு நூலகத்திற்கு புதிய கட்டிடம் மற்றும் நிரந்தர நூலகர்இ தளபாட வசதிகளை ஏற் படுத்தித்தருமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கையினை முன்வைக் கினர்.

குறித்த நூலகத்திற்கு பிரதான பத்திரிகைகள் தினமும் மருதமுனை பொது நூலகத்தின் ஊடாக கிடைக்கப் பெறுகின்ற போதிலும் மாத முடிவில் குறித்த பத்திகைகளை மீண்டும் மருதமுனை பொது நூலகத்தில் ஒப்படைக்க வேண்டிய துர்பாக்கியமான நிலைமையில் குறித்த நூலகத்தின் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.தினமும் 50 இற்கு மேற்பட் வாசகர்கள் குறித்த நூலகத்தில் பயன் பெற்று வருகின்றனர்.

சுமார் 23 வருட காலமாக இரவு பகலாக கே .வரதராசா எனும் சமூக நோக்குடைய ஒருவர் எதுவிதமான வேதனங்களும் இல்லாத நிலையில் குறித்த நூலகத்தின் அன்றாட தேவையினை நிறைவேற்றி வருகின்றார்.நான்காயிரத்துக்கு மேற்பட்ட வாக்காளர்களை உள்ளடக்கிய பெரிய நீலாவணைக் கிராமத்துக்கு இதுவரைக்கும் நவீன வசதிகளுடன் கூடிய நூலகம் உருவாக்கப்படாமல் இருப்பது மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும். குறித்த கிராமத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கல்முனை மாநகர சபை உறுப்பினர் எஸ்.குபேரன் அவர்கள் குறித்த நூலகம் தொடர்பான கோரிக்கையினை பல தடவைகள் அரசியல் வாதிகள் மாத்திரமல்லாது அரச அதிகாரிகளுக்கும் விடுத்துள்ள போதிலும் இது வரைக்கும் தீர்வு கிடைக்கப்ி பெற வில்லை என்பது மக்களின் வேதனையாகும்.

மட்டு. மாவட்ட வரட்சியினால் 1390 மாடுகள் இறப்பு

துறைநீலாவணை நிருபர்

மட்டு மாவட்டத்தில் வரட்சியினால் நீரின்றி 1390 மாடுகள் இறந்துள்ளதாக, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மட்டு மாவட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி கு. உதயராணி தெரிவித்தார்.

மட்டு மாவட்டத்தில் பரவலாக இறப்புக்குள்ளாகும் மாடுகளின் நிலை தொடர்பாக வினவியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில்;

ஏறாவூர்பற்று செயலகப் பிரிவுக் குட்பட்ட பிரதேசங்களிலிருந்து 1029 மாடுகளும் மண்முனை மேற்கிலிருந்து 178 மாடுகளும் கோரளைப்பற்று வடக்கு செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களிலிருந்து 22 மாடுகளும், போரதீவுபற்று மற்றும் மண்முனை தென்மேற்கு ஆகிய செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலிருந்து 161 மாடுகளுமாக 1390 மாடுகள் இறந்துள்ளதாக கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ் வருடத்தின் யூலை வரையான காலப்பகுதிக்குள் மே, யூன் யூலை ஆகிய மாதங்களிலேயே அதிகளவான மாடுகள் இறந்துள்ளதாக பதிவாகியுள்ளது. இம்முறைப்பாடுகள் செயலகப் பிரிவுக்குட்பட்ட கால் நடை வைத்திய அதிகாரிகள் மூலமே கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அவற்றில் அதிகளவானவை ஏறாவூர்பற்று செயலகப் பிரிவுக்குட்பட்ட செங்கலடி, கரடியனாறு ஆகியவற்றிலிருந்தே கிடைத்துள்ளன.

வெப்பத்தினால் சிறு சிறு குளங்கள், ஆறுகள் ஆகியவற்றிலுள்ள நீர் நிலைகள் வற்றியதனாலும் மேய்ச்சல் தரை புற்கள் கருகியமையினாலும் உண்பதற்கு உணவு, குடிநீர் இன்றி அதிகளவான மாடுகள் இறந்துள்ளதாக தெரியவருவதுடன் சராசரியாக பாலூற்பத்தி நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லீற்றர் கிடைப்பதென்றும் தற்போது 41,000 லீற்றரே கிடைக்கின்றது என வும் தெரிவித்தார்.

பொறியியலாளர் ஷிப்லி பாறூக்கின் முயற்சியால் காத்தான்குடி வைத்தியசாலைக்கு பென்ஸ்ரக அம்பியூலன்ஸ் வண்டி

காத்தான்குடி தள வைத்தியசாலை அ தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்டும் அதனுடைய ஆளணி மற்றும் பௌதீக வளங்கள் போதியளவு நிவர்த்தி செய்யப்படவில்லை என்பது தொடர்ச்சியான ஒரு பிரச்சினையாக இருந்துவருகின்றது.

மிக அதிகமான நோயாளிகளை பராமரிப்பு செய்யும் காத்தான்குடி தள வைத்தசாலையில் போதிய வசதியின்மை காரணத்தினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்கு நோயாளிகளை கொண்டு செல்வதற்காக சேவைக்கு உகந்த நிலையில் ஒரேயொரு அம்பியூலன்ஸ் வண்டி மாத்திரமே உள்ள நிலையில் நோயாளிகளை உரிய நேரத்திற்கு ஏனைய வைத்திய சாலைக்கு இடமாற்றம் செய்வதில் பாரிய பிரச்சினையை வைத்தியசாலை நிர்வாகம் முகம்கொடுத்து வருகின்றது.

அவ்வாறே சத்திர சிகிச்சை செய்யப்படும் மற்றும் நடக்க முடியாதளவிலான நோயாளிகளை முதலாம் இரண்டாம் மாடிகளுக்கு கொண்டு செல்வதிலும் பாரிய அசௌகரியங்கள நோயாளிகள் எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் வைத்திய சாலையின் மிகப்பிரதான தேவையாக காணப்படும் நோயாளிகளை முதலாம் இரண்டாம் மாடிகளுக்கு கொண்டு செல்வதற்கான மின் உயர்த்தி (உடூஞுதிச்ணுணிணு) மற்றும் அம்பியூலன்ஸ் வண்டி என்பன முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறூக்கினால் முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிமிடம் தொடரேற்சியாக விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் மின் உயர்த்திக்கு தேவையான ஒரு கோடி முப்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான கேள் விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன் தொடரில் நேற்று 09.08.2019 சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பிரதம அதிதியாகவும், கௌரவ அதிதியாக முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிமும் கலந்துகொண்டு சுகாதார அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் பென்ஸ்ரக அம்பியூலன்ஸ் வண்டிக்கான ஆவணங்கள் மற்றும் திறப்பு என்பனவற்றை முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறூக் மற்றும் காத்தான்குடி தள வைத்தியசால வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஜாபிரிடமும் கையளித்தனர்.

இதன்போது ஷிப்லி பாறூக் அமைச்சரை அமைச்சரின் காரியாலயத்தில் சந்தித்து காத்தான்குடி தள வைத்தியசாலை அ தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளபோதிலும் அதனுடைய ஆளணிப் பற்றாக்குறை மற்றும் ஏனைய பௌதிக வளங்கள் தேவைப்பாடுகள் இன்னும் அ தர வைத்தியசாலைக்கு ஏற்றாற்போல் வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டியதுடன் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

இது சம்பந்தமாக மிக விரைவில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் ஷிப்லி பாறூக்கிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, கௌரவ அதிதியாக முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் ஏனைய வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

பட்டிருப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

துரைவந்தியமேடு நிருபர் இ.சுதாகரன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விசேட விழிப்புணர்வு நிகழ்வு களுவாஞ்சிகுடி அமரர் சி.மூ.இராசமாணிக்கம் மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதி தலைவரும் இமுன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேந்திரன் தலைமையில் திங்கட்கிழமை (12) முற்பகல் 9 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியும் கூட்டமைப்பின் பேச்சாளருமான கௌரவ எம்.ஏ.சுமந்திரன் பிரதம அதிதியாகவும்.இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் கி.துரைராசசிங்கம் மற்றும் மட்டு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ ஞா.சிறிநேசன் இகௌரவ சீ.யோகேஸ்வரன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராசா மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் கௌரவ தி.சரவணபவான் இபிரதி முதல்வர் எஸ்.சத்தியசீலன் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் தவிசாளர்களான சி.புஸ்பலிங்கம்இ யு.ரஜனி இகே.சண்முகலிங்கம் ஜனநாயக போராளிகள் கட்சியின் உப தலைவர் நகுலேஸ்வரன் தமிழரசுக் கட்சியின் கிளைத் தலைவர்கள்இ பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் இபொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

வெளிவாரிப் பட்டதாரிகளை அரச சேவைப் பயிற்சியில் இணைக்க அரசு தீர்மானம்

மண்டூர் நிருபர்

வேலை வாய்ப்பற்ற அனைத்து வெளிவாரிப் பட்டதாரிகளையும் அரச சேவைக்கான பயிற்சிகளில் இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு பட்டம் பெற்ற 2 500 வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக பொருளாதார விவகார மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் அசங்க தயாரத்ன தெரிவித்துள்ளார்.

இம் மாத இறுதிக்கு முன்னர் அவர்களுக்கான நியமனங்களும் வழங்கப்படும் என மேலதிக செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

2017 ஆம் ஆண்டு வரை, 20 000 பேர் வெளிவாரிப் பட்டம் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இதேவேளை, உள்வாரிப் பட்டதாரிகள் 20 000 பேரை அரச சேவைக்கான பயிற்சிகளை வழங்குவதற்கும் தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அசங்க தயாரத்ன இதன்போது தெரிவித்துள்ளார்.

வெளிவாரிப் பட்டதாரிகளை அரச சேவைக்கான பயிற்சிகளுக்காக இணைத்துக் கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வேலையற்ற பட்டதாரிகள் கொழும்பில் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

நேற்றைய தினமும் வேலையற்ற பட்டதாரிகளால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

கடமைகளை பொறுப்பேற்பு

சியாத்.எம்.இஸ்மாயில்
அட்டாளைச்சேனை

தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் கணித விஞ்ஞானப் பிரிவு துறைத் தலைவராக சிரேஷ்ட விரிவு ரையாளர் ஏ.எல். ஹனிஸ் நியமிக்கப்பட்டு அண்மையில் கடமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவருக்கான நியமனத்தை தென்கிழக்குப் பல்கலைக்கழக உப-வேந்தர் பேராசிரியர்எம்.எம்.நாஜிம் வழங்கியுள்ளார்.

கணித விஞ்ஞானப் பிரிவு துறைத்தலைவராக பணியாற்றிய கலாநிதி கே.கோமளராஜின் பணி நிறைவடைந்ததைத் தொடர்ந்து இப்பதவிக்கு ஏ.எல்.ஹனிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தில் விரிவுரையாளராகவும், சிரேஷ்ட விரிவுரையாளராகவும் நீண்டகாலம் பணியாற்றிய ஹனிஸ் பிரபல இளம் சமூக சேவையாளருமாவார்.

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஏ.எல்.ஹனிஸ்இ இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கணினி விஞ்ஞானத் துறை சிறப்புப் பட்டதாரியாவார். இந்தியா பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் **MTech in Advanced IT** பட்டத்தை பூர்த்திசெய்துள்ள அவர் அதே பல்கலைக் கழகத்தில் தனது கலாநிதி பட்டத்தையும் நிறைவு செய்யவுள்ளார்.

அட்டாளைச்சேனை ஜூம்மாப் பெரிய பள்ளிவாயல், அட்டாளைச்சேனை அனைத்துப் பள்ளிவாயல்கள் சம்மேளனம் என்பன வற்றின் தலைவராக பணியாற்றிய ஹனிஸ் அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாயல்கள் சம்மேளன சிரேஷ்ட ஆலோசகராகவும் தற்போது பதவி வகித்து வருகின்றார்.

வீதியை புனரமைக்க கோரிக்கை

ஹஸ்பர் ஏ ஹலீம்

திருகோணமலை மாவட்டம் தம்பலகாம பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட தம்பலகாம கோயிலிக்கு முன்னால் செல்லும் வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்கள்.

தாயிப் நகரையையும் தம்பலகாம கோயில் பிரதான கொழும்பு வீதியை இணைக்கும் இவ் வீதி பல வருட காலமாக சேதமடைந்துள்ளதுடன் போக்குவரத்து செய்வதில் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

மழை காலங்களில் நீர் தேங்கி நிற்பதுடன் போக்குவரத்தின் போது பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், அரச ஊழியர்கள் என பலர் இவ் வீதியூடாக நாளந்தம் பயணம் செய்து வருகிறார்கள்

வைத்தியசாலை தேவை நிமித்தம் கூட இவ்வீதியூடாகவே பயணம் செய்ய வேண்டியுள்ளதுடன் குறித்த வீதியில் மின்சார வசதியுடனான வீதி மின் விளக்குகள் எதுவும் இன்மை இருள் சூழ்ந்த பிரதேசமாக காட்சி தருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் இரு கிலோ மீற்றருக்கும் அதிக தூரத்தை கொண்ட இவ்வீதியை செப்பணிட்டுத் தருமாறு மக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்கள்.

கப்பற் துறை கிராமத்தில் புதிய வீடமைப்பு திட்டங்கள்

ஹஸ்பர் ஏ ஹலீம்

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட கப்பற் துறை கிராமத்தில் புதிய வீட்டுத் திட்டத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெற்றது.

குறித்த நிகழ்வானது (15) வியாழக் கிழமை மாலை துறை முகங்கள் மற்றும் கப்பற் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் செமட்ட செவன திட்டம் ஊடாகவே இத் திட்டமானது தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கண்காணிப்பில் நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதில் 50 குடும்பங்களுக்கு புதிய வீடமைப்புத் திட்டம் வழங்கப்பட வுள்ளது

இதில் திருகோணமலை மாவட்ட வீடமைப்பு அதிகார சபையின் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் வித்தியாலய புதிய கட்டடத்திற்கான அடிக்கல்

என்.ஹரன்

திருக்கோவில் கல்வி வலயத்தின் கீழ் வரும் திகோ/ கஞ்சிகுடிச்சாறு கணேஷா வித்தியாலத்தின் 8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்படவுள்ள புதிய இருமாடி கட்டடத்திற்கான அடிக்கல் நடுகை விழா நிகழ்வு (12) திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் பொ.துரைராஜா தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் திருக்கோவில் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.க.கேதீஸ்வரசர்மா ஐயா அவர்களின் ஆசியுடன் ஆரம்பமானது

இக் கட்டிடத்தொகுதி கிழக்கு மாகாணத்தின் பி எஸ் டி ஜி (PSDG) திட்டத்தின் கீழ் 8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இவ் புதிய வகுப் பறைகளை கொண்ட புதிய இருமாடி கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது

இந்நிகழ்வில் திருக்கோவில் வலய கல்விப்பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல்லினை சம்பிரதாயபூர்வமாக நட்டு வைத்ததுடன், திருக்கோவில் வலய கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.குணாளன் மற்றும் திருக்கோவில் கோட்டக் கல்வி பணிப்பாளர் எஸ்.இரவீந்திரன் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்,பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டு அடிக்கல்லினை நட்டு வைத்தமை குறிப்பிடத்தக்கது.

மொழிக் கொள்கையை அப்பட்டமாக மீறுகிறது கல்வி அமைச்சு; கிழக்கு கல்வி நிர்வாக அதிகாரிகளின் சங்கம் குற்றச்சாட்டு

சாய்ந்தமருது நிருபர்

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தரத்திற்கு பதவியுயர்வு வழங்குவதற்காக கல்வி அமைச்சினால் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் மற்றும் விபரம் கோரும் படிவம் என்பன தனிச்சிங்களத்தில் அமைந்திருப்பதாக இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

இம்மொழிப்புறக்கணிப்பானது அரசாங்கத்தின் தேசிய மொழிக்கொள்கையை அப்பட்டமாக மீறும் செயற்பாடு எனவும் அந்த சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது விடயமாக சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்;

இலங்கை கல்வி நிர்வாக சேவை தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்கு தனிச்சிங்களத்தில் மேற்படி கடிதம் மற்றும் விபரம் கோரும் படிவம் என்பன அனுப்பி வைக்கப்பட்டிருப்பதனால், அதனை வாசித்து புரிந்த கொள்ள முடியாமலும் அப்படிவத்தை சிங்கள மொழியில் பூர்த்தி செய்ய முடியாமலும் அவர்கள் திண்டாட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் நிர்வாக விடயங்களை கையாளும் கல்வி நிர்வாக, தாபனப் பிரிவின் மேலதிக செயலாளராக தமிழ் பேசும் உத்தியோகத்தர் ஒருவர் கடமையாற்றி வருகின்ற நிலையிலேயே தமிழ் மொழிப் புறக்கணிப்பு இடம்பெற்றிருக்கிறது. அது மட்டுமல்லாமல் கல்வி இராஜாங்க அமைச்சர், கல்வி அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் போன்றோரும் தமிழ் பேசுவோராக இருக்கின்றபோதே இந்த அநியாயம் இழைக்கப்பட்டிருக்கிறது.

கடந்தமுறை மேற்படி விடயம் தொடர்பிலான கடிதம் மற்றும் படிவம் என்பன தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்கு அவர்களது தாய் மொழியிலேயே அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் இம்முறை ஆகக்குறைந்தது ஆங்கில மொழி மூலமாவது சம்மந்தப்பட்டோரின் விபரங்களை கோராமல், சிங்கள மொழியில் மாத்திரம் கோரியிருப்பதானது இவர்களை பெரும் அசௌகரியப்படுத்தியிருக்கிறது. இதனால் இப்படிவத்திலுள்ள பகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டிய வலய மற்றும் மாகாணக் கல்வித் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர்களும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அது மாத்திரமின்றி இப்படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புவதற்கு குறுகிய கால அவகாசமே கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டிருக்கிறது. பெருநாள் மற்றும் விடுமுறை தினங்கள் அதிகம் காணப்படுகின்ற இந்த வாரத்தில் இதனை பூர்த்தி செய்து அனுப்புமாறு பணிக்கப்பட்டிருப்பதனால் முஸ்லிம் உத்தியோகத்தர்களின் நிலை மிகவும் திண்டாட்டமாக காணப்படுகின்றது. இப்பிரச்சினை தொடர்பில் கல்வி அமைச்சு உடனடியாக பரிசீலனை செய்வதுடன் எதிர்காலங்களில் இவ்வாறான மொழிப்புறக்கணிப்பு இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்'' என்று சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார் வலியுறுத்தியுள்ளார்.

டோக்கியோ சீமெந்து நிறுவனம் ஏற்பாடு செய்த அம்பாறை மாவட்ட விற்பனை முகவர்களுக்கான சந்திப்பும் ஒருநாள் சுற்றுலா மற்றும் பரிசு வழங்கும் நிகழ்வு பாசிக்குடா அமாயா விடுதியில் நடைபெற்றது. நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் எஸ்.செல்வக்குமார் முகவர்களுக்கு பரிசுத் திட்டங்களை வழங்கிவைப்பதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படம்: மருதமுனை நிருபர் றாசிக் நபாயிஸ், ஏ.எல்.எம்.சினாஸ்

வேலையில்லா வெளிவாரி பட்டாரிகளுக்கு முன்று வாரங்களுக்குள் தீர்வு

ஹஸ்பர் ஏ ஹலீம்

வேலையில்லா வெளிவாரி பட்டதாரிகளுக்கும் துறை முகங்கள் மற்றும் கப்பற் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் ஆகியோர்களுக்குமிடையில் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பானது (11) ஞாயிற்றுக்கிழமை கிண்ணியா அல் அதான் பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றுள்ளது.அம்பாறை,திருகோணமலை மாவட்டங்களை சேர்ந்த பட்டதாரிகள் கலந்து கொண்ட இச் சந்திப்பில் தங்களது வெளிவாரி பட்டங்களுக்கான நியமனங்களை வழங்க வேண்டும் தொடர்பாக பிரதியமைச்சரிடத்தில் கோரிக்கை விடுத்தனர் இது தொடர்பில் பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் கருத்து தெரிவிக்கையில்

அண்மையில் உள்வாரி பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது வழங்கப்பட்ட 16800 உள்வாரி பட்டதாரிகளுக்குள் 800 பட்டதாரிகள் வெளிவாரி பட்டதாரிகள் மிகுதியான பட்டதாரிகள் விரைவில் உள்வாங்கப்படவுள்ளார்கள் இதற்கான ஆரம்ப கட்டமாக 8000 நியமனங்கள் வழங்கப்படவுள்ளது இது தொடர்பாக தேசிய கொள்கை கள் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் அமைச்சர் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, செயலாளர் வீ.சிவஞானசோதி ஆகியோர்களை சந்தித்து இது விடயமாக கூறியுள்ளேன் அமைச்சரவையின் அங்கீகாரம்

கிடைக்கப்பெற்றதும் வெளிவாரி என்ற பாரபட்சமின்றி அரச துறையில் நியமனங்கள் வழங்கப்படும் என தெரிவித்தார்.

இதில் அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ஏ.எச்.ஜெஸீர்,கிண்ணியா வேலையற்ற பட்டதாரிகள் சங்க தலைவர் நிஹ்மத்துள்ளா உட்பட பல நூற்றுக்கும் மேற்பட்ட வெளிவாரி வேலையற்ற பட்டதாரிகளும் கலந்து கொண்டார்கள்.

ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை

ஊடக அமைச்சும் - இலங்கை பத்திரிகை பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை (10) திருகோணமலையில் நடைபெற்றது.

பிரச்சினைகளை அறிக்கையிடலும் ஊடகவியலாளர்களில் பொறுப்புக்களும் எனும் தலைப்பிலான இச் செயலமர்வில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களும், பாடசாலைகளில் ஊடகம் கட்பிக் கின்ற ஆசிரியர் கள், கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக ஊடகவியல் தொடர்பான கற்கை நெறிகளைச்சேர்ந்த மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வில் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகமும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளருமான நாலக கலுவெவ கலந்து சிறப்பித்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கல்முனை வடக்கு பிரதேச செயலகமும் இணைந்து போதை ஒழிப்பு விழிப்புணர்வு வீதி நாடகங்களை நடத்தவருகின்றது. இதற்கமைய பிரதேச செயலகமுன்றலில் பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு வீதி நாடகம் நடைபெற்றதை இங்க காணலாம்.

படம்: பாண்டிருப்பு நிருபர்

வரலாற்றுத் தொன்மை மிகு கல்லடிப் பேச்சியம்மாள்

சசி

இலங்கையில் காணப்படும் புகழ்மிகு அம்மன் ஆலயங்களுள் மட்டக்களப்பு, கல்லடி உப்போடை, நொச்சிமுனையில் அமைந்துள்ள ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயமானது இற்றை 350 ஆண்டுகளுக்கு மேல் உருவான வரலாற்றைக் கொண்டமைந்த பழைமைவாய்ந்த ஆலயமாகும். ஆலயத்தின் அமைவிடத்தின் சிறப்பினை பார்க்கும் போது தேத்தாமர நிழலின் கீழ் ஓலைக்குடிசையாக அமைந்து காணப்படுவது தனிச்சிறப்பாகும். கேட்பவர்க்கு கேட்ட வரத்தை வாரி வழங்கும் தாயாக பக்த அடியார்க்கு இப் பேச்சித் தாயார் காணப்படுகின்றார்.

குறிப்பாக குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இன்னல் உறும் அடியார்கள்; பிள்ளை வரம் வேண்டி நேர்த்தி வைப்பார்கள். குறித்த நேர்தியின் பலனாக அம்பாளின் அருள் கடாட்சத்தினால் பிள்ளைப் பாக்கியம் பெற்றுள்ள அடியார்கள் ஏராளம். இவ்வாறு ஆயிரக்கணக்கான அடியவர்களின் குறைகளைக் களைந்து அருள்பாலிக்கும் அருட்சக்தியாக அம்பாள் இங்கு வீற்றிருக்கின்றாள்.

பேச்சியம்மன் ஆலயத்தில் வருடாந்தச் திருச்சடங்கானது 04.08.2019 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி 12.08.2019 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 5.00 மணிக்கு பள்ளயத்துடன் நிறைவடைந்தன. அம்பாளின் ஆலயமானது இப் பிரதேசத்திற்கு மாத்தி;ரம் உரிய ஆலயமாக இல்லாமல் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பக்த அடியார்கள் ஆயிரக்கணக்காக வெள்ளம் போல் திரண்டு வந்து வணங்கும் தேசத்து ஆலயமாக இன்று காணப்படுகின்றது.

இலண்டன், கனடா, சுவீஸ், அவுஸ்திரேலியா, போன்ற நாடுகளில் வசிக்கும் இப்பிரதேச மக்கள்

பலர் இச் சடங்கு உற்சவகாலத்தில் ஓடோடி வந்து சடங்கில் கலந்து சிறப்பித்து அம்பாளை வணங்குகின்றார்கள். இவாலயத்தில் கோயில் கொண்டிருக்கும் பேச்சித்தாயார் தனது வேண்டுகோள் பலவற்றை அவரின் மெய்யடியார்களின் கனவில் தோன்றி கூறியிருக்கின்றார். இதன் பிரகாரம் தான் பல இலட்சம் ரூபாய் நேர்கடனாக இவ் ஆலயத்திற்கு கிடைக்கப்பெற்றாலும் இன்றும் கல்லாலான கட்டிடமாக கட்டப்படாது ஆலயத்தின் உள்ளே மணலும் ஓலைக் கூரையும், ஓலைக் குடிசையும் அமைத்து காணப்படுவது இவ்வாறான ஒரு அற்புதத்தின் விளைவேயாகும்.

7 ஆம் நாள் நெல் குற்றும் சடங்கு நடைபெறும். இது கண்கொள்ளாக் காட்சியாக காணப்படும். பெண்கள் அதிகாலையில் எழுந்து நீராடி விட்டு வீடு வீடாகச் சென்று பேச்சித் தாயாருக்கு மடிப்பிச்சை தாருங்கள் என்று கேட்டு வாங்கி மடி நிறைய நெல்லைச் சுமந்து வந்து கொட்டுவார்கள். இதில் சில ஆண்களும் நேர்தியாக மடிப்பிச்சை எடுப்பார்கள். இவ்வாறு எடுக்கும் மடிப்பிச்சை நெல் நூற்றுக்கும் மேற்பட்ட மூடைகளாகக் காணப்படும். அதனை ஆண்களும் பெண்களும் உரல் உலக்கை கொண்டு தேவாதிகள் நெல்லை குற்றி முடித்த பின் குற்றுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

அதே போல் அடுத்தநாள் திங்கட்கிழமை பள்ளயம் நடைபெறும். மலை போல் உயரத்திற்கு மக்கள் பொங்கல் படைப்பார்கள். 7 கன்னிமார்களுக்கும் சர்க்கரை அமுது வழங்கப்படும், அதனோடே பள்ளயமும் வழங்கப்படும். இவையாவற்றிற்கும் மேலாக தலைத்தெய்வாதி ஏனைய தெய்வாதிகளைச் சிறப்பான முறையில் வழிப்படுத்தி சடங்கு மிகச் சிறப்பாக எவ்வித தடங்கலுமின்றி நேர்தியாக நடப்பது தனிச்சிறப்பாகும்.

வைரவர் சடங்கு வைபவம் 14.08.2019 புதன்கிழமை நடைபெற்றது. இப் பூஜை நிகழ்வில் நோய் நொடிகள் நீங்கி ஆரேக்கியம் பெறும் பொருட்டு நூல்கள் கட்டப்படுகின்றது. இவ்வாறு கிராமிய தெய்வ வழிபாடுகளில் மக்களின் நம்பிக்கையினையும், பக்தியினையும் பறைசாற்றுகின்ற விதமாக கல்லடிப் பேச்சியம்பாளின் திருச்சடங்கு நிகழ்வுகள் எடுத்தியம்புவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

வவுனியா நகரசபைக்குள் மோதல்; விசாரிக்குமாறு தெரிவிப்பு

வவுனியா நிருபர்

வவுனியா நகரசபைத் தவிசாளர் தாக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை ஒன்றை முன்னெடுக்குமாறு நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபையின் மாதாந்த அமர்வில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

வவுனியா நகரசபையின் தவிசாளரும் இங்கு பணிபுரியும் ஊழியர் ஒருவரும் அண்மையில் சண்டையிட்டுள்ளனர். இங்கு யார் முதலில் தாக்கியது என எமக்குத் தெரியாது.

இது கௌரவப் பிரச்சினையாக இருப்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் நடக்காத வண்ணம் இருப்பதற்காக விடயம் தொடர்பாக எமது சபைக்குள்ளாகவே ஒரு விசாரணைக் குழுவை அமைத்து உண்மையைக் கண்டறிய வேண்டும்.

அலுவலக நேரத்திற்குப் பின்னர் நகரசபை வளாகத்திற்குள் வருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களது விவரங்கள் காவலாளியால் பதியப்பட வேண்டிய நடைமுறையை கட்டாயம் ஏற்படுத்த வேண்டும்- என்றார்.

நகரசபை உறுப்பினர்கள் இலட்ச ரூபாய் இலஞ்சம் வாங்கினார்களா? - அமர்வில் அமளி துமளி!

வவுனியா நிருபர்

வவுனியா ஹொறவபொத்தான வீதியில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட வர்த்தக நிலையத்தால் வவுனியா நகரசபை அமர்வில் குழப்பம் ஏற்பட்டிருந்தது.

வவுனியா நகரசபை அமர்வு தவிசாளர் கௌதமன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது வவுனியா ஹொறவபொத்தான வீதியில் அமைக்கபட்டுள்ள வர்த்தக நிலையம் அனுமதியின்றி அமைக்கப்பட்டிருப்பதாக கடந்த அமர்வுகளில் விவாதிக்கபட்டு மூடப்பட்டிருந்தது. எனினும் தற்போது திறக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருவதாகவும் அது தொடர்பாக தெளிவு படுத்துமாறும் குடியிருப்பு வட்டார உறுப்பினரான த.பரதலிங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

நாம் ஒரு வேலை நிமித்தமாக கண்டிக்கு சென்ற சமயம் அந்த வர்த்தக நிலையம் திறக்கப்பட்டுள்ளது. எனவே அதற்கான சட்ட நடவடிக்கையை எடுக்கவிருப்பதாக சபையின் தவிசாளர் கௌதமன் பதில் தெரிவித்தார். இதன்போது கருத்து தெரிவித்த உறுப்பினர் லறீப் குறித்த பகுதியில் 32 கடைகள் அனுமதியற்று இருப்பதாகவும் அப்படியானால் அனைத்து கடைகளின் மீதும் சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த கடை தொடர்பாக 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற சபை கூட்டத்தில் எடுக்கபட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறும் தெரிவித்தார்.

பல வருடங்களிற்கு முன்னர் இடம் பெற்ற விடயங்களை நாம் இதற்குள் புகுத்த முடியாது. நமது சபை எங்களிடம் உள்ள காலகட்டத்தில் நாம் சரியாக சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அடுத்தவனின் பிழையை சாட்டி நாம் பிழைவிடுவது முறையல்ல. இந்த வர்த்தக நிலையத்துடன் தொடர்புடைய பிரச்சனை எமது காலப்ப குதியில் இடம்பெற்றுவரும் ஒருவிடயம். இதனால் அனைவருக்கும் கெட்டபெயர் உருவாகியுள்ளது. குறித்த கடை விடயத்தில் அனைத்து உறுப்பினர்களும் இருபது இலட்சம் வரையில் இலஞ்சம் வாங்கியுள்ளதாக இணையதளங்களில் எழுதப்பட்டுவருகின்றது. இதனை இலகுவாக விட்டுவிடமுடியாது. இதற்கு அனுமதி வழங்கபட்டால் இதனை முன்னுதுராணமாக வைத்து பலர் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடுவார்கள்.

எனவே தமிழ் சிங்கள, முஸ்லீம் என யாராக இருந்தாலும் இனிமேல் சட்டத்தை நடைமுறைபடுத்த வேண்டும் என்று உறுப்பினர் சந்திரகுலசிங்கம் தெரிவித்தார்.

ஏனைய உறுப்பினர்களான ராஜலிங்கம், காண்டீபன், செந்தில் ரூபன் ஆகியோரும் பல ஆண்டுகளிற்கு முன்னர் இடம்பெற்ற விடயங்களை கதைக்காமல் எமது காலப்பகுதிக்குரிய விடயங்களில் சட்டத்தை நடைமுறைபடுத்தி நிர்வாகத்தினை கொண்டு நடாத்த வேண்டும் என்று காட்டமாக தெரிவித்திருந்தனர்.

உறுப்பினர்களான லறீப், பாயிஸ், பாரி ஆகியோர் வர்த்தக நிலையத்திற்கு ஆதரவாக கருத்து தெரிவித்த நிலையில் கூட்டமைப்மை சேர்ந்த உறுப்பினர்கள் பலர் இந்த விடயத்தில் சட்டத்தை நடைமுறைப் படுத்துமாறு எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இதனால் வாக்குவாதம் முற்றியமையால் 5 நிமிடங்கள் சபையை ஒத்திவைப்பதாக தவிசாளர் உத்தரவிட்டார். சபை ஒத்திவைக்கப்பட்டது. அதன் பின்னர் குறித்த விடயம் கலந்துரையாடபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற சைவ வினாவிடை எழுத்துப்பரீட்சை

வவுனியா நிருபர்

கிளிநொச்சி வலய கல்வி அலுவலகம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலக ஒழுங்கமைப்பில் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் இந்து மாநாட்டை முன்னிட்டு அறநெறி பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற சைவ வினாவிடை எழுத்துப்பரீட்சையில் ஏராளமான மாணவர்கள் பரீட்சையில் தோன்றியிருந்தனர்.

பரீட்சையில் கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவில்

4பரீட்சை நிலையங்களில் 1165 பிள்ளைகள் பரீட்சைக்குத் தோற்றினர்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு பரீட்சை நிலையங்களில் 356 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றினர்.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் மூன்று பரீட்சை நிலையங்களில் 384 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றினர்.

பளைப் பிரதேச செயலர்பிரிவில் இரண்டு பரீட்சை நிலையங்களில் 103 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றினர்.

கிளிநொச்சி மாவட்ட செயலக மட்டத்தில் 11பரீட்சை நிலையங்களின் ஊடாக 2008 அறநெறி மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்போட்டியில் பங்குபற்றி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்து மாநாட்டில் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கபடவுள்ளனர்.

மாணவர்கள் சாதனை வெற்றி

வவுனியா நிருபர்

அண்மையில் இடம்பெற்ற தேசிய கணித விஞ்ஞான ஒலிம்பியாட் பரீட்சையின் முடிவுகள் தற்போது வெளியாகி உள்ள நிலையில் வவுனியா தமிழ் மத்தியமகா வித்தியாலய மாணவன் செல்வன் மயூரன் .யதுர்சன் 135 புள்ளிகளுடன் தேசிய ரீதியில் மூன்றாமிடத்தையும் வவுனியா இறம்பைக்குளம் மகிளீர் வித்தியாலய மாணவி செல்வி .எஸ்.சப்தகி 130 புள்ளிகளுடன் தேசிய ரீதியில் ஐந்தாமிடத்தையும் பெற்று சர்வதேச ஒலிம்பியாட் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் வவுனியாவில் இருந்து கலந்து கொண்ட சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி செல்வி ரி.கபிசா 117.5 புள்ளிகளுடன் 18 ஆம் இடத்தையும் வவுனியா தமிழ் ம.ம.வி மாணவன் செல்வன் எஸ்.கரிஸ் 116 புள்ளிகளுடன் 21 ஆம் இடத்தையும் இறம்பைகுளம் மகளிர் கல்லூரி மாணவி செல்வி ஜெ.சாகித்தியா 115.5 புள்ளிகளுடன் 22ஆம் இடத்தையும் வவுனியா தமிழ் ம.ம.வி மாணவன் செல்வன் எஸ். சன்சய், 113 புள்ளிகளுடன் 26 ஆம் இடத்தையும் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி செல்வி எஸ்.ஆரபி 80.5 புள்ளிகளுடன் 100 வது இடத்தையும் பெற்று கொண்டனர்.

இவர்களை வவுனியா மாவட்ட விஞ்ஞான கள கற்கை நிலைய முகாமையாளர் அ.ஜெய்கீசன், வவுனியா தெற்கு கல்வி வலய விஞ்ஞான ஆசிரியஆலோசகர் இ.மாதவன், ஓய்வுநிலை விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இந்திரலிங்கம், மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் பயிற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிளாஸ்ரிக் மீள் சுழற்சி தொடர்பான வழிப்புணர்வு!!

வவுனியா நிருபர்

பிளாஸ்ரிக் போத்தல்களின் பாவனை மற்றும் அதன் மீள் சுழற்சி தொடர்பான வழிப்புணர்வு செயற்பாடு வவுனியா நகரசபையிலும், நகர்ப்பகுதியிலும் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் தலைவர் இ. கௌதமன் தலைமையிலான குழுவினரால், வவுனியா நகர்ப்பகுதியில் வீதியோரங்களிலும், வேறு இடங்களிலும் சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் விதமாக வீசப்படும் பிளாஸ்ரிக் போத்தல்களை மீள்சுழற்சிக்காக சேமிக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் நகரசபையின் உறுப்பினர்கள், வவுனியா வளாக மாணவர்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், தொழிற்பயிற்சி மாணவர்கள் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்து மாநாடும் முத்தமிழ் சங்கமும்

வவுனியா நிருபர்

சர்வதேச இத்து இளைஞர் பேரவையின் இந்து மாநாடும் முத்தமிழ் சங்கம் நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெற வுள்ள இந்நிகழ்வில் காலை அமர்வானது கிளிநொச்சி கந்தசாமி ஆலய முன்றலில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் ஆன்மீக ஊர்வலம் விழா மண்டபம் வரை இடம்பெற்று விழா குழுத் தலைவர் சிவ.திருக்கேதீஸ்வரன் தலைமையில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற வுள்ளன.

மாலை அமர்வுகள் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் இலங்கை தலைவர் ஜெ.மயூரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இதன்போது பட்டிமன்றம், ஆன்மீக சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள், சொற்போர், கவியரங்கு, இசை மழை, கௌரவிப்புக்கள் எனப் பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. இதில் சிரவை ஆதின குருமஹா சந்நிதானங்கள் கௌமார மடாலயத்தைச் சேர்ந்த முனைவர் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் தலைவர் வண.சிதாகாஷானந்த சுவாமிகள், கன்னியா தென்கைலை ஆதினம் வண.அகத்தியர் அடிகளார், வேதாந்த மடத்தலைவர் வண. வேத வித்தியா சாகர சுவாமிகள், சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஸ்தாபகர் லண்டனைச் சேர்ந்த சிவ.கணேஸ்குமார், பேராசிரியர்கள், சமய சொற்பொழிவாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கிளிநொச்சியில் நடன பயிற்சிப் பட்டறை

யாழ் இந்திய துணை தூதரகமும், இந்தியக் கலாச்சார உறவுகளிற்கான பேராயமும் இணைந்து வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்கத்துடன் இணைந்து கலை கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் நடன பயிச்றி பட்டறை ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர். குறித்த நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது. கலாநிதி சிறி பரிமள் அசோக் பாட்கே அவர்களும் அவர்களின் குழுவினரும் இணைந்து பரதநாட்டிய அளிக்கையினை இன்று முன்னெடுத்திருந்தனர். பரதநாட்டிய கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் குறித்த பயிற்சி பட்டறையானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, இலங்கையிலும் பரத நாட்டிய கலையை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்திய துணை தூதரகம் இவ்வாறான பயிற்சி பட்டறைகளை ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக யாழ் இந்திய துணை தூவர் ச.பாலச்ச்திரன் கலந்துகொண்டதுடன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன்போது பரநாட்டிய பயிற்சிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் உரையாற்றிய கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், இங்குள்ள மக்களிற் கலை கலாச்சார விடயங்களை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையிலான வசதிகள் இல்லை எனவும், அதனை முன்னெடுப்பதற்கான ஏற்ற வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கு இந்திய துணை தூவரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

நிகழ்வில் யாழ் இந்திய துணை தூதுவர் உரையாற்றியிருந்தார். இவ்வாறான கலை, சமயம் சார்ந்த பல விடயங்களை தாம் தொடர்ந்தும் இங்கு முன்னெடுக்க இருப்பதாக இதன்போது அவர் தெரிவித்திருந்தார். இன்றய தினம் குறிப்பிட்ட குழுவினர் இங்கு வருகை தந்து மாணவர்களிற்கு பயிற்சிகளை வழங்குவதாகவும், கடந்த வருடம் இவ்வாறான பயிற்சி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதாகவும், அதனை கிளிநொச்சியிலும் நடத்த தாம் விரும்பியதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை அரசாங்க அதிபர் கோரிய விடயம் தொடர்பில் தாம் கலந்தாலோசிப்பதாகவும் இதன்போது தெரிவித்தார்.

கடும் வரட்சிக்கு பின்னர் வவுனியாவில் மழை! மகிழ்ச்சியின் உச்சத்தில் மக்கள்

வவுனியா நிருபர்

வவுனியாவின் பல பகுதிகளில் திடீரென பெய்த மழையினால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் நிலவிய நீண்ட வரட்சியின் பின்னர் மழை தொடர்ச்சியாக பெய்தது.

வவுனியாவை ஆட்டிப்படைத்த வரட்சியினால் குடிநீர் இல்லாமல்குடிநீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவியது. தொடந்த வரட்சியினால் விவசாய அழிவு ஏற்பட்டு வாழ்வாதார இழப்பு மற்றும் உணவு பற்றாக்குறையாலும் பெருமளவானவர்கள் மற்றும் கால்நடைகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன

சில பகுதிகளில் மழை ஓரளவு பெய்திருந்தாலும், அது எதிர்பார்த்தளவு நீரை சேமிக்க போதுமானதாக இருக்கவில்லை. குளங்கள், நீராதாரங்கள் நிரம்ப போதுமானதாக இருக்கவில்லை. இதனால் வவுனியாவில் பெருமளவான பகுதிகளில் பெரும் வரட்சி ஏற்பட்டிருந்தது.

பல இடங்களில் குடிநீர் இல்லாமல் போய் விட்டது. அன்றாட தேவைகள், விவசாயம், கால்நடைகளிற்கான நீர் இல்லாமல் பெரும் இயற்கை பேரிடரை வவுனியா எதிர்கொன்டுள்ளநிலையில்

வவுனியா மாவட்டத்தில் இன்று மழை பொழிந்தமையினால் விவசாயிகளும் பொதுமக்களும் பண்ணையாளர்கள் மக்கள் மற்றும் பயிற்செய்கையாளர்கள் என பலரும் மனமகிழ்வடைந்துள்ளனர்.

மலேசிய தமிழ் ஆர்வலர்களுடனான சந்திப்பு

மலேசியாவில் இருந்து இலங்கை வந்திருந்த தமிழ்ச் சமூக செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பு ஒன்று கடந்த 11.08.2019 அன்று மாலை யாழ்.வலம்புரி விருந்தினர் விடுதியில் வளரி கவிதை இதழ் ஆசிரியர் திரு அருணா சுந்தரராசன் அவர்களின் ஏற்பாட்டில் இடம் பெற்றது. இச் சந்திப்பில் பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தைச் சேர்ந்த செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்பாணம் நல்லூர் றோட்டறி கழகத்தின் வருடாந்த பதவியேற்பும் சமூக சேவையாளர்கள் கௌரவிப்பும்

சர்வதேச அங்கிகாரம் உடையதும் ஐக்கிய தாடுகள் சபையில் இடம் கிடைத்த சர்வதேச றோட்டறி அமைப்பில் பதிவு செய்யப்பட்ட சர்வதேச சமூக சேவைக் கழகமாகிய நல்லூர் றோட்டறிக் கழகத்தின் ஏழாவது பதவியேற்பு நிகழ்வானது கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் ரில்கோ சிற்றி ஹொட்டலில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இக் கழகத்தின் ஏழாவது தலைவராக றோட்டேறியன் வைத்திய கலாநிதி மகேசு பிரதீபன் உடன் 2019/20 றொட்டறி ஆண்டிற்கான நிர்வாக சபை உறுப்பினர்களும் பதவியேற்றுக் கொண்டார்கள்

அத்துடன் புதிதாக 08 பேர் இக் கழகத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டார்கள். கடந்த றொட்டறி ஆண்டில் தலைவராக பணியாற்றிய றொட்டேறியன் ஆர் சத்திய சுதாகரும் மற்றும் அவருடைய நிர்வாக சபை உறுப்பினர்களும் இணைந்து கடந்த ஒரு வருடத்தில் 50 செயற்றிட்டங்கள் வட மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை ஒரு விடீயோ காட்சி மூலம் காண்பிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

மேலும் வருடாந்தம் நடைபெறுகின்ற இக் கழகத்தின் பதவியேற்பு நிகழ்வில் சிறப்பான முறையில் சமூக சேவையாற்றும் சமூக சேவையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குமனித நேயர் என்ற விருது நல்லூர் றோட்டறிக் கழகத்தினால் வழங்கி கௌரவிக்கப்படுவது வழமையாகும்

அந்த வகையில் வடக்கு மாகாணத்தில் சிறந்த முறையில் சமூக சேவையாற்றிவரும் சிவன் பவுண்டேசன் நிறுவனத்தின் நிறுவனர் கணேஸ்வரன் வேலாயுதம், கோண்டாவில் ராஜா பிளாசாவின் உரிமையாளரும் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் பல விருதுகளைப் பெற்ற கௌரவக் கலாநிதி இராசையா குவேந்திரநாதன், போர் முடிவடைந்த பின்பு அநாதரவான சிறுவர்களுக்கான காப்பகம் நிறுவி அதில் சிறுவர்களை பராமரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட நல்லாயன் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி கௌசல்யா மனுவேற்பிள்ளை ஆகிய மூன்று சமூக சேவையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு மனித நேயர் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இப் பதவியேற்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக இலங்கை, மாலைதீவு நாடுகளை உள்ளடக்கிய சர்வதேச றோட்டறி மாவட்டம் - 3220 இன் றோட்டறி மாவட்ட தெரிவு ஆளுனர் றோட்டேறியன் அஜித் வீரசிங்க அவர்களும் சிறப்பு விருந்தினராக சிவன் பவுண்டேசன் நிறுவனத்தின் நிறுவனர் கணேஸ்வரன் வேலாயுதம், றோட்டறியின் உதவி மாவட்ட ஆளுனர் றோட்டேறியன் மகாலிங்கம் பத்மநாதன் நல்லூர் றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் றோட்டேறியன் ஆர் றோய் சத்தியசுதாகர், முன்னாள் றோட்டறி மாவட்ட ஆளுனர்கள், கண்டி,கொழும்பு,நீர்கொழும்பு,யாழ்ப்பாணம், கிளிநொச்சி நகர்,சுன்னாகம் றோட்டறிக் கழகங்களின் தலைவர்கள், அங்கத்தவர்கள், றொட்டரக் கழகங்களின் தலைவர்கள்,அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டுடிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு தந்தி

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் மக்கள் சந்திப்பு கிளிநொச்சி கோணாவில் பகுதியில் இடம்பெற்றது

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் மக்கள் சந்திப்பு கிளிநொச்சி கோணாவில் பகுதியில் இடம்பெற்றது. குறித்த சந்திப்பு கோணாவில் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது, இதன்போது மக்கள் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றியிருந்தார்.

தமிழ் மக்களின் வாக்குகளால் வந்த அரசு எதையும் செய்யவிவ்லை என அவர் தெரிவித்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ, ரணில் விக்ரமசிங்கவோ மக்களிற்கு எதையும் செய்திருக்கவில்லை. அவர்கள் அரசியலமைப்பைகூட செய்து தர விரும்பாவர்களாக உள்ளனர். வேலை வாய்ப்புக்களைகூட வழங்க முடியாத அரசாக இது உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஐந்து வேலை வாய்ப்பு வழங்குவதாக தெரிவிக்கப்பட்டது, அதற்காக நாம் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பியிருந்தோம். ஆனால் அதற்கு பதிலாக பெரும்பாண்மை இனத்தை சேர்ந்தவர்களிற்கு வேலைகள் வழங்கப்பட்டது. அது தொடர்பில் நாம் அமைச்சரிடம் வினவினோம்.நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட சந்தர்ப்பத்தில் ஒருவாரம் பொறுங்கள் எல்லாவற்றையும் சீர் செய்து விடுவோம் என கூறினர். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அவ்வாறான பொய் கூறும் அமைச்சர்களே அவர்கள். எனவும் அவர் இன்று குற்றம் சாட்டியிருந்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு யாருடனும் பேச்சுக்களில் ஈடுபட்டதா என அவரிடம் வினவியபோது,

இதுவலை அவ்வாறு பேச்சுக்கள் இடம்பெறவில்லை என நம்புவதாகவும், இணையத்தளங்களில் ஒருவருடன் ஒருவர் பேச்சு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டு செய்திகள் வெளியாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இருப்பினும் இதுவரை உத்தியோகபூர்வமாக எவ்வித பேச்சுக்களும் இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு உணவு சுகாதாரம் தொடர்பான செயலமர்வு

வவுனியா நிருபர்

வவுனியா பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் வவுனியா நகரிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் காணப்பட்ட சுகாதாரமற்ற நிலைமைகளை பரிசோதனை மேற் கொண்டு உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் வவுனியா வர்த்தகர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கான உணவுப் பாதுகாப்பு உணவு சுகாதாராம் தொடர்பான தெழிவூட்டல் செயலமர்வு இன்று பிற்பகல் 2மணியளவில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி பசுபதிராஜா தலைமையில் இடம்பெற்றது.

நகரிலுள்ள உணவகங்களின் பாதுகாப்பு சுகாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பாக உணவக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம். மகேந்திரன், பிராந்திய பொது சகாதாரப்பரிசோதகர் எஸ். ரவீந்திரன், மாவட்ட உணவு மருத்துவப்பரிசோதகர் பார்த்தீபன், தாய் சேய் நல வைத்திய அதிகாரி வைத்தியர் ஜெயரதன், சிரேஷ;ட பொது சுகாதார பரிசோதகர் எஸ். சிவபாலன், வவுனியா வர்த்தகர் சங்கப்பிரதிநிதிகள், உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

சமூக ஊடகங்களின் தாக்கம் தொடர்பான கருத்தமர்வு

வவுனியா நிருபர்

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஊடகங்களை பயன்படுத்துவோருக்கான கருத்தமர்வு ஒன்று வவுனியா மில்வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

வவுனியா மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஊடகங்களை பயன்படுத்துவோருக்கான சமூக ஊடகங்கள் பற்றிய தெழிவூட்டல், அதன் பாதுகாப்பு, ஊடக மற்றும் தகவல் அறிவினை மேம்படுத்தல் போன்ற பல்வேறு பட்ட விடயங்கள் தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கொழும்பில் இருந்து வருகைதந்த வளவாளர்கள் செயலமர்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

வவுனியா வர்த்தக நிலையங்களில் மிகுதி சில்லறைப் பணத்திற்கு பதிலாக ரொபி

வவுனியா நிருபர்

வவுனியாவில் உள்ள பல வர்த்தக நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது மிகுதி சில்லறைப் பணத்திற்கு பதிலாக ரொபி வழங்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நகரம், வைரவபுளியங்குளம், குருமன்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்த பின் வருகின்ற மிகுதிச் சில்லறைப் பணங்களை குறித்த வர்த்தக நிலையத்தினர் வழங்குவதில்லை.

பதிலாக ரொபி வழங்குவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். மேலும் சில வர்த்தக நிலையங்கள் மிகுதிப் பணம் தொடர்பில் கவனம் செலுத்தாது மிகுதிச் சில்லறை இல்லை எனக் கூறி பணம் செலுத்துவதில்லை. இது தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் மற்றும் வவுனியா வர்த்தக சங்கத்தினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் 73வது சுதந்திரநாள் விழா (15) யாழ்ப்பாணத்தில் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் நோர்த் கேட்டில் இடம் பெற்றபோது துணை தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் வரவேற்பு உரையாற்றுவதையும் கலைநிகழ்வு இடம்பெறுவதையும் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம்.

படம்: என்.ஹரன்

நாட்டின் அபிவிருத்திக்கு கம்பெரலிய அடித்தளம்

சி.திவியா

நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. ஏனெனில் எந்தவொரு நாட்டினதும் நிலைபேறான அபிவிருத்திக்கு அந்நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்றம் மிகவும் இன்றியமையாததாகும். அந்த அடிப்படையில்தான் அரசாங்கம் உட்கட்டமைப்பு வசதிகளை துரிதமாக மேம்படுத்தும் நோக்கில் கம்பெரலிய திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

நாட்டில் நான்கு தசாப்தங்களுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற அரசியல் அனுபவத்தைக் கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவிலான இந்த கம்பெரலிய திட்டம் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நாடெங்கிலுமான கிராம மட்ட அபிவிருத்திக்கென சுமார் 5,000 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது. குறிப்பாக கிராம மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கு முன்னுரிமையளித்து நிறைவேற்றுவதான் இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

அந்த வகையில் கம்பெரலிய திட்டத்தின் கீழ் 6,936 கிராமிய வீதிகள், 1,300 கிராமிய குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள், 500 மதஸ்தலங்கள் என்பன அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அத்தோடு கிராமிய மற்றும் நகர்ப்புற வீடமைப்பு அபிவிருத்தி (நிரந்தர கூரையை வழங்குதல்), கிராமிய பாடசாலை கட்டமைப்பு நிர்மாணங்கள் மற்றும் பழுது பார்த்தல், மின்வசதி இல்லாத வீடுகளுக்கு மின்சாரம் வழங்குதல், வாராந்த சந்தைகள், பசுமைப் பூங்காக்கள், பாடசாலை மைதானங்கள் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக நாட்டிலுள்ள ஒவ்வொரு தொகுதிக்கும் அரசாங்கம் நிதியொதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளது. அதாவது ஒரு தொகுதிக்கு 300 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் 70, 80 சத வீதமானவை தற்போது நிறைவு பெற்றுள்ளன.

இவ்வாறான சூழலில் அலரி மாளிகையில் உரையாற்றிய உள்விவகாரம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜே.சி. அலவத்துவல குறிப்பிடுகையில், கம்பெரலிய திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களை உரிய காலத்திற்கு முன்னர் பல தொகுதிகள் நிறைவு செய்துள்ளன. அவ்வாறான தொகுதிகளுக்கு மேலும் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட வுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிவிப்புக்கு பிரதேச மட்டத்தில் வரவேற்பு கிடைக்கப் பெற்றுள்ளது. ஏனென்றால் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் கொண்டு தொகுதி மட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும், மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களும் இருக்கவே செய்கின்றன. அத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நிதி அவசியமாக இருந்து வருகின்றது. இவ்வாறான நிலையில்தான் இராஜாங்க அமைச்சரின் இந்த அறிவிப்பு வெளியாகியது இதனால் ஏற்கனவே எஞ்சியிருந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் இந்த நிதி அடிப்படையாக அமைந்தது மக்களின் தேவையையும் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றி வைக்கப் பெரிதும் உதவியது என்பதில் ஐயமில்லை.

அதேநேரம், இந்த , கம்பெரலிய திட்டத்திக் கீழான சகல வேலைத் திட்டங்களையும் கம்பெரலிய திட்டத்தின் மூலம் மக்கள் அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்வர் என்பது தெளிவாகிறது.

இவ்வேலைத் திட்டம் நாட்டு மக்களின் நலன்களுக்கு முன்னுரிமையளித்து முன்னெடுக்கப்பட்டு வருவதால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் உட்கட்டமைப்பு வசதிகளில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதை தற்போது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்த முன்னேற்றங்கள் உள்நாட்டு வெளி நாட்டு முதலீடுகள் கிராமியப் பிரதேசங்களுக்கு வந்து சேரவும், அப்பிரதேசங்களில் முதலீடுகள் அதிகரிக்கவும் வழிவகுக்கும். இது கிராம மட்ட இளைஞர், யுவதிகளின் வேலையின்மைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும் வழிவகுக்கும். அத்தோடு கிராமியப் பிரதேசங்களும் பொருளாதார ரீதியிலும் வளர்ச்சி அடையும்.

அதனால்தான் கம்பெரலிய திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்படுகின்ற நிதி செலவாக அன்றி முதலீடாகக் கருதப்பட வேண்டும். ஏனெனில் கிராம மட்ட உட்கட்டமைப்பு முன்னேற்றங்கள்தான் தேசிய மட்ட அபிவிருத்திக்கு அடித்தளமாக அமையும். அதுவே யதார்த்தமானது. ஆகவே நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு கிராம மட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் கம்பெரலிய வேலைத் திட்டங்களுக்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அது கிராமங்கள் மாத்திரமல்லாமல் நாடுமே வளம் பெற அடித்தளமாக அமையும்

இதற்கு உதாரணமாக .வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன்

அவரது வவுனியா அலுவலகத்தில் இடம்பெற்ற கம்பரலிய உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். இதன்போது வீதி திருத்தம், குடிநீர், பொது கட்டிட புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களுக்கு என 42 பொது அமைப்புக்களுக்கு 28.2 மில்லியன் ரூபாய் நிதி வழங்கி வைத்தார்அத்துடன் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முழு அமைச்சர்களும் ஜனாதிபதிக்கு முன்னால் சென்று தங்களுக்குரிய நிதிகளை கோரி எடுத்து வந்து வேலை செய்தார்கள். வட, கிழக்கு மாகாணத்திற்கு விசேடமாக எடுத்திருக்கலாம். ஆனால் வடமாகாண சபை சரியான முறையில் அதனை செயற்படுத்த தவறி விட்டது. எங்களுக்கு என்று நியதிச் சட்டங்கள் இருந்தது. இன்று வடமாகாண முன்னாள் முதலமைச்சர் பல பேட்டிகளைக் கொடுக்கின்றார். தான் சொல்லி வந்தது ஐந்து விடயம். அதில் ஒன்றும் செய்யவில்லை. அவர் ஒன்று, இரண்டையாவது செய்திருக்கலாம். இந்த நியதிச் சட்டங்களை உருவாக்குவதற்கே அவரை கொண்டு வந்தோம். நான் பல தடவை நியதிச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என பிரேரணைகள் கொண்டு வந்த போதும், கொண்டு வந்த நியதிச் சட்டங்கள் எல்லாம் அவருடைய ஆலோசர்களின் பெயரில் கொழும்பில் தான் கிடந்தது. அவை திரும்பி நியதிச் சட்டமாக வரவில்லை. அதனால் தான் போக்குவரத்து சபைக்கிடையில் பெரிய பிரச்சனைகள் ஏற்பட்டது. இப்படி பல விடயங்கள் நடந்தது.

இந்நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர்களான ரி.கே.இராஜலிங்கம், க.சுமந்திரன், வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் உதிரியநாதன், தமிழரசு கட்சி மாவட்ட மட்ட உறுப்பினர்கள் வவுனியா மத்திய சபை தலைவர் வரதராசாமற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பிரதான வீதியை புனரமைத்து தருமாறு கோரி ஆர்ப்பாட்டம்

க.கிஷாந்தன்

அட்டனிலிருந்து - எபோட்சிலி வரை செல்லும் ஆறு கிலோ மீற்றர் பிரதான வீதி கடந்த 25 வருடங்க ளுக்கு மேலாக மக்கள் பாவனைக்குதவாமல் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இதனால் இதனை புனரமைப்பு செய்து தரும்படி கோரி பொது மக்கள் ஆர்ப்பாட்டத் தில் ஈடுப்பட்டனர்.

சுமார் 200 பேர் வரை லெதண்டி தோட் டத்தின் மார்பரோ (களனிவத்தை) பிரிவில் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

எபோட்சிலி தோட்டத்தில் வசிக்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இந்த பிரதான வீதியினூடாகவே அட்டன் நகரிற்கு தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய் துக் கொள்ள வந்துச் செல்ல வேண்டும்.

இவ்வீதி தொடர்பில் காலங்காலமாக இப்பகுதி மக்கள் அரசியல்வாதிகள் மற் றும் தோட்ட நிர்வாகங்கள் உள்ளிட்ட பல அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்த போதிலும் இவ்வீதியை சீர்திருத்தம் செய்வ தில் நடவடிக்கை எடுத்ததாக இல்லை.

தேர்தல் காலத்தில் இந்த ஆட்சியின் ஊடாக எமது வீதி சீர்திருத்தம் செய்யபடும் என்ற நம்பிக்கையில் எமது வாக்குகளை அளித்தோம்.

ஆனால் நான்கு வருடங்களாகியும் இந்த ஆட்சியில் கூட எமது பாதை சீர்திருத்தம் செய்யப்படவில்லை.

அன்றாட போக்குவரத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் அவதியுறும் நிலையை கவனத்திற் கொண்டு இவ்வீதியை காலம் தாழ்த்தாது செப்பனிட்டு தரும்படி அரசாங்கத்தையும், நுவரெலியா மாவட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப் பினர்கள் அணைவரையும் கேட்டுக்கொள்வ தாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்ட தொழி லாளர்கள் தெரிவித்தனர்.

மண்சரிவினால் 19 குடும்பங்கள் இடம் பெயர்வு

சுஜீவன்

கொட்டகலை பிரதேச சபை நிர்வாக பிரிவுக்குட்பட்ட தல வாக்கலை லோகி தோட்டத்தில் இவ்வார முற்பகுதியில் இடம் பெற்ற மண்சரிவில் காரணமாக 19 குடும்பங்களைச் சேர்ந்த 89 பேர் லோகி தோட்ட பாடசாலை யில் பாதுகாப்பாக தங்க வைக் கப்பட்டு வருகின்றனர். அன்று முதல் இன்றுவரை இவர்களுக் கான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய வசதிகளை லோகி தோட்ட நிர்வாகம் பிர தேச செயலகம் நலன் விரும்பிகள் மற்றும் கொட்டகலை பிரதேச ச பை ஆகிய அமைப்புக்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் கொட்ட கலை பிரதேச சபை தலைவர் திரு ராஜமணி பிரசாத் உள்ளிட்ட குழுவினர் நேரடியாக பாதிக்கப் பட்ட மக்கள் தங்கியிருக்கும் பாடசாலைக்கு வருகை தந்து மக் களுக்கு தேவையான உலர் உணவு பொதிகள் வழங்கி வைத்தனர். இதன் போது ஒவ்வொரு குடும்பத் திற்கும் ஒவ்வொரு போது என 19 குடும்பங்களுக்கும் கொட்டகலை பிரதேச சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தமது கரங்களால் வழங்கியதோடு பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி அவர்கள் தங்கியிருந்த வீடுகளுக்குப் பின் னால் சரிந்து உள்ள மண்ணை அகற்றும் பணிகளை துரித கதியில் முன்னெடுப்போம் என தெரிவித்த னர் இதன் போது கருத்து வழங் கிய பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் தேசிய

கட்டிட பொருள் ஆராய்ச்சி நிறுவனத் தின் அறிக்கை வரும் வரை பாதிக்கப் பட்ட குறித்த இடத்திலேயே பாதுகாப் பாக பாதுகாப்பாக தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அத்துடன் குறித்த அறிக்கை கிடைத்த வுடன் மண்சரிவு ஏற்பட்ட வீடுகளுக்கான மாற்று வேலை திட்டங்களை முன்னெ டுப்பதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுக்கப் போவதாக கொட்டகலை பிரதேச சபை தலைவர் ராஜாமணி பிரச ாத் தெரிவித்தார். இது தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினருமான கௌரவ ஆறு முகன் தொண்டமான் அவர்களின் கவ னத்திற்கு கொண்டு சென்றிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட 19 குடும்பங்களுக்கும் தேவையான பாதுகாப்பான இடத்தில் வீடு கட்டுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த உள்ளதாகவும் தெரிவித் தார். குறித்த நிகழ்வில் தோட்டக்கலை பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அமைப்பாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நியாயமான முறையில் நிவாரணம் வழங்க வேண்டும்

தலவாக்கலை பி.கேதீஸ்

இயற்கை அனர்த்தங்க ளின்போது ஏனைய பிரதேச ங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் சலுகைகள் உரி மைகள் எமது பெருந்தோட்ட மக்களுக்கும் நியாயமான முறையில் வழங்கப்பட வேண் டும் அதற்கான நடவடிக்கை களை உரிய அரசாங்க அதிகாரி கள் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர்களில் ஒருவரும் முன் னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரு மான பி.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக பல்வேறு தோட்ட பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாளர் மற்றும் இடர் முகாமைத்துவ அதிகாரிகளுடன் அதனை நேரடியாக சென்று பார்வை யிடும்போதே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக் கையில்

கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழையின் காரணமாக மலை யகத்தில் பல்வேறு பகுதிகள் பாதிப் புக்குள்ளாகியுள்ளன. அந்தவகையில் டயகம சந்திரிகாமம் லயன் குடியிருப் பொன்று மின் ஒழுக்கினால் எரியுண்டது இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் அங் குள்ள பாடசாலை ஒன்றில் தங்கவைக் கபட்டுள்ளனர். அதேபோல டயகம சந்திரிகாமம் எரைவல் தோட்ட லயன் குடியிருப்பொன்றில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. இவ்விடத்திலிருந்து மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கடந்த இரண்டு வருடங்க ளுக்கு முன்னரே தேசிய கட்டிட ஆய்வு திணைக்களம் உத்தரவிட்டிருந்தது. ஆனால் மக்கள் அதே இடத்தில் இன் றும் இருக்கின்றனர் காரணம் இப்பிரச்சி னை குறித்து தோட்ட நிர்வாகம் மனித வள நிதியத்திடம் பொறுப்புகளை கொடுத்து விட்டு அமைதியாக விலகி கொண்டது. ஆனால் மனிதவள நிதியத் தினூடாக இதுவரை எவ்வித நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. நோர்வூட் நிவ்வெளிகம தோட்டத்தில் மண்சரிவினால் 12 குடும்பங்களைச் சே ர்ந்த 59 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அதேபோல கொட்டக்கலை மேல்பீல்ட் தோட்டத்தில் கற்பாறை சரிந்து வீழ்ந் ததில் நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. 3 குடும்பங்களைச் சே ர்ந்த 18 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கபட்டுள்ளனர். கொட்டக் கலை கிறிஸ்னஸ்பாம் தோட்டத்தில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் குடியிருப்புகளினுள் வெள்ளநீர் உட்பு குந்தமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அக்கரப்பத்தனை சின்னநாகவத்தை தோட்டத்தில் ஆலமரக் கிளையொன்று முறிந்து வீழ்ந்தமையினால் 5 வீடுகள்

பாதிப்படைந்த நிலையில் 6 குடும்பங் களைச் சேர்ந்த 29 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர். டயகம பகுதிகளில் காலம் காலமாக பெய்யும் மழையினால் விவச ாய நிலங்களும் குடியிருப்புகளும் வெள்ள நீரினால் மூடப்படுகின்றன. இதற்கு காரணம் கழிவு நீர் தேங்கி நிற் றல், வாய்க்கால்கள் பெருக்கெடுத்தல் போன்றவற்றால் மக்கள் பாதிப்படை கின்றனர். இவ்வாறான நிலமைகளின் போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் சலுகைகள் பெரும்பான்மை சமூகத்திற் கும் வேறு பிரதேசங்களுக்கும் தங்கு தடையின்றி வழங்கப்படுகின்றன. ஆனால் எமது பிரதேசங்களுக்கு அவை கிடைக்க பெறுவதில்லை. இவ்வாறான நிலமைகளின்போது கிராம உத்தியோ கத்தர் மூலம் 7 நாட்களுக்கு உலருணவு பொருட்கள் வழங்கப்பட வேண்டும். ஆனால் ஒரு சில இடங்களில் கிராம உத்தியோகத்தர் ஊடாக 2 நாட்கள் 3 நாட்கள் மாத்திரம் உலருணவு பொருட் கள் வழங்கப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். குடியிருப்புகளின் கூரை உடைதல், வெள்ள நீர் குடியிருப் புகளுக்குள் புகுதல், சுவர் வெடிப்புகள் மற்றும் தேசிய கட்டிட ஆய்வு திணைக் களத்தின் அறிக்கை போன்றவற்றிற்கு அரசாங்கத்தினால் குறிப்பிட்ட தொகை பணம் வழங்கப்படும். இப்பணம் எதிர்காலங்களில் எமது மக்களுக்கும் கிடைக்க வேண்டும். மேலும் தோட்ட நிர்வாகங்களும் தோட்ட கம்பனிகளின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும். அதைவிடுத்து தோட்ட நிர் வாகங்கள் அரசியல் வாதிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் உதவிகளை பெற்றுக்கொடுத்துவிட்டு தாங்கள் அதிலிருந்து விலகிகொள்கின் றனர். இவ்வாறான நிலையிருந்து எமது மக்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே நான் பாதிப்பு ஏற்ப்பட்ட இடங்களுக்கு நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாள ரையும் இடர் முகாமைத்துவ அதிகாரிக ளையும் நேரடியாக அழைத்துச்சென்று அவர்களுக்கு காண்பித்தேன். மேலும் அரசாங்கத்தினால் ஏனையோருக்கு வழங்கப்படும் அனைத்து உரிமைகளும் சலுகைகளும் எமது மக்களுக்கும் வழங் கப்பட வேண்டும் என அவர்களுக்கு மிகவும் அழுத்தமாக கூறியிருக்கின்றேன் என்றார்.

தீ விபத்தில் பாதிக்கப்;பட்ட போடைஸ் 30 ஏக்கர் மக்கள் கடந்த எட்டு மாதங்களாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர்

ஹட்டன் கே.சுந்தரலிங்கம்

டிக்கோயா போடைஸ் தோட்டத்தில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக 24 வீடுகள் முற்றாக தீக்கிரையாகின. இத்தீபவித்து காரணமாக அம் மக்கள் அனைத்து உடைமைகளையும் இழந்து 20 குடும் பங்களைச் சேர்ந்த 108 பேர் நிர்கதி நிலைக்கு தளளப்பட்டனர்.

அதனை தொடர்ந்து நாட்டின் நாலா பாகங்களிலிருந்து அவர்களுக்கு நிவா ரண உதவிகள் பெற்றுக்கொடுக்கப் பட்டன.அதனை தொடர்ந்து தோட்ட நிர்வாகமும் இரானுவமும் இணைந்து இவர்களுக்கு போடிடைஸ் விளை யாட்டு மைதானத்தில் தற்காலிக கொட் டில்கள் அமைத்து கொடுக்கப்பட்டன.

குறித்த கொட்டிலகள்; கட்டிக்கொ டுத்து எட்டு மாதங்கள் கடந்த நிலையில் அவர்களுக்கு வீடுகளை கட்டிக்கொ டுப்பதில் இழுபறி நிலவுவதாக அங்கு வாழும் பொது மக்கள் தெரிவிக்கின்ற னர்.

தோட்ட நிர்வாகம் வீடு களை கட்டுவதற்கு இடம் வழங்காமையே காரணம் என தெரிவிக்கப்படுகின் றது.

தோட்ட நிர்வாகம் இவர்களுக்குரிய காணி களை சுமார் ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் அமைத்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவ தாகவும் இதனால் தங்கள் பிள்ளைகள் படிப்பதற்கும் நகரங்களுக்கு செல்வதென்றாலும்,வைத்தியசாலைக்கு செல்வதென்றாலும் பல்வேறு பிரச்சி னைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதாக அவர்கள் தெரிவிக் கின்றனர்.

தோட்டத்தில் வீடுகளை கட்டுவ தற்கு எவ்வளவோ பொருத்தமான இடங்கள் இருக்கின்ற போதிலும் அதனை வழங்காது. பல்வேறு சாக்கு போக்குகளை சொல்லி தோட்ட நிர்வா கம் தட்டிக்கழிப்பதாகவும்,இது குறித்து பொறுப்பு வாய்ந்தவர்கள் மௌனம் காத்துவருவதாகவும் இவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

தற்போது அமைத்து கொடுக்கப்பட் டுள்ள கொட்டில்களுக்கு மழை நேரங் களில் வீட்டினுள் தண்ணீர் கசிவதனால் படுக்கவும் முடியாது. பலர் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்துவருகின் றனர்.ஒரு சிலரின் வீடுகளின் மூங்கில் கள் இத்துப்போய் கொட்டில்களும் உடைந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ள தாக குறித்த மூங்கில்களிலிருந்து தூசிகள் கொட்டுவதாகவும் அவற்றிருந்து வண் டுகள் உருவாகி தமக்கு சாப்பிட கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள்; தெரிவிக்கின்றனர்.

இந்த கொட்டில்களில் கடும் குளிர் காரணமாக பலர் கை குழந்தைகள் சி றுவர்களை வைத்துகொண்டு சொல் லொண்ணா துயரங்களை அனுபவித்து வருவதாகவும் இவர்கள் மேலும் தெரி விக்கின்றனர்.பாதிக்கப்பட்ட 20 குடும்ப் களைச் சேர்ந்த 108 பேரில் பாடசாலை மாணவர்கள் 25 பேர் அடங்குவதாகவும் இம்முறை உயர்தர பரீட்சைக்கு இரு வரும்,க.பொ.த காதாரணதர பரீட்சை க்கு ஒரு இந்த கொட்டில்களிலிருந்தே தங்களது கற்றல் நடவடிக்கைகளை முன் னெடுக்க முடியாது இடர்படுவதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த தற்காலிக கொட்டில்களுக்கு இரண்டு மின் குமிழ்கள் மாத்திரம் வழங் கப்பட்டுள்ளதாகவும் அதுவும் மாலை ஆறு மணி தொடக்கம் காலை ஆறுமணி வரை மாத்திரம் மினசாரம் தோட்ட நிர்வாகத்தினால் வழங்கப்படுவதாகவும் இந்த இரண்டு மின்குமிழ்களுக்காக சுமார் 800 ரூபா சம்பளத்தில் அறவிடப் படுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்ற னர்.

எனவே இது குறித்த சம்பந்தப்பட் டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து தங்களுக்கு உடனடியாக தீர்வு பெற் றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும் என இவர்கள் மேலும் கோரிக்கை விடுக்கின்றனர்.

சீரற்ற காலநிலை காரணமாக விவசாயிகள் பாதிப்பு

அக்கரப்பத்தனை நிருபர்

சீற்ற கால நிலை காரணமாக தொடர்ந்து மலையக பிரதேசத்தில் காற்றுடன் கூடிய கண மழை பெய்து வந்ததினால் பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டது. இதேவேளை பெருந்தோட்ட பகுதியில் உள்ள ஆறுகள் ஓடைகள் மற்றும் வடிக் கான்களில் நீர் பெருக்கெடுத்ததால் அதி கமான விவசாய காணிகளுக்கு பாதிப்பு கள் ஏற்பட்டது.

விவசாய காணிகளில் பயிரிடப்பட்ட மரக்கறி வகைகள் அனைத்தும் வெள்ள நீரினால் அடித்துச்செல்லப்பட்டுள்ளதாக சிறு விவசாயிகள் தெரிவிக்கின்றனர். தாம் விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தினை கொண்டு குடும்பத் தினை நடத்திச்செல்வதாகவும் இப் பாதிப்பு காரணமாக பாரிய அளவில் பொருளாதாரத்தினை இழந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிடுகின்ற னர்.

கரட் ,உருளை கிழங்கு, லீக்ஸ், கோவா, போஞ்சி உள்ளிட்ட மரகரிவ கைகளை உற்பத்தி செய்வதற்கு அதிக பணம் செலவு செய்த போதிலும் எதிர் பார்த்த் விளைச்சல் கிடைக்கவில்லை இதனால் செலவு செய்த பணத்தினை இழந்துள்ளதாக இவர்கள் கூறுகிறார்கள்

மேலும் விவசாயத்தினை மேற் கொண்ட போது விதைகள் மற்றும் உரம் உள்ளிட்ட பொருட்களை வாங்குவதற்கு தங்களிடம் இருந்த தங்க நகைகளை அடகுவைத்தும் கடன் பெற்ற பணத் தினால் விவசாயம் செய்த போதிலும்



பெய்த கடும் மழையால் அனைத்து மரக்கறி வகைகளும் சேதமாகியுள்ளன எப்படி பெற்ற கடனை செலுத்துவது அட குவைத்த தங்க நகைகளை எவ்வாறு மீண் டும் பெறுவது குடும்பத்தினை சமாளிக்க முடியும் என சிந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது . என பாதிக்கப்பட்ட விவ சாயிகள் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் விவசாய தினைகளங்கள் அதிகாரிகள் இருக்கின்ற போதிலும் அதன் மூலம் எந்த உதவிகளும் மலையக பிரதேசத்தில் உள்ள தோட் டங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தேவையான நிவாரண உதவிகளை வழங்க நுவரெலியா மாவட் டத்தில் உள்ள விவசாய நிறுவனங்களின் அதிகாரிகள் உதவி வழங்க முன்வரவேண் டுமென .பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அட்டன் திருச்சிலுவை ஆலயத்தின் வருடாந்த திருவிழா

க.கிஷாந்தன்

அட்டன் திருச்சிலுவை ஆலயத்தின் வருடாந்த புனித அன்னம்மாள் அவர் களின் வருடாந்த திருவிழாவும் திருச் சொரூப பவனியும்கொட்டும் மழையி லும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மத்திய மாகாண அதி வணக்கத்திற் குரிய ஆண்டகை வியாணி பர்னாண்டோ அவர்களின் தலைமையில் ஆரம்பமான இந்த திருவிழாமுதலில் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு விசேட தேவ பிரார்த் தனையினை தொடர்ந்து, திருச்சொரூப ஊர்வலம் அட்டன் திருச்சிலுவைஆல யத்திலிருந்து புறப்பட்டு அட்டன் நகர் ஊடாக சென்று மீண்டும் ஆலயத்தினை சென்றடைந்தது.

இத்திருவிழாவினை முன்னிட்டு அட் டன் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கை களை பலப்படுத்தியிருந்தனர். கடந்த 04 திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்த திருவிழாவில் நவ நாட்கள் பூஜை கள் நடைபெற்று திருவிழா நடைபெற் றது. ஆலய பங்கு தந்தை நிவ்மன் பீரிஸ் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த திருச்சொரூப பவனியில் கொட்டும் மழையினையும்பாராது சுமார் ஆயிரக்க ணக்கான கிறிஸ்த்தவ பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். இந்த திருசொரூப ஊர் வலத்தில் கிறிஸ்த்தவ கீதங்கள் மற்றும் பேன்ட் வாத்தியங்கள், துதிப்பாடல்கள், ஆகியனவும் இடம்பெற்றன.

மாமியார் குணம்!

ஊத்தி ஊற வச்சு சாப்பிட்டாங்க. நேத்து காலையில் இட்லி எப்படி இருந்த துன்னு உனக்கே தெரியும்... அதை பத்தியும் பிரச்னை

''இன்னைக்கு என்னமா பிரச்னை?'' தொலைபேசியை எடுத்த பிரபா கேட்க, ''அதை ஏண்டி கேக்கற? எனக்கு மருமகள்னு வந்து இருக்காளே ஒருத்தி, அவளும், அவ சமையலும். இன்னைக்கு அவ ஒரு ரசம் வைக்கறேன்னு சொல்லிட்டு வைச்சா பாரு... தூ! வாயில் வைக்க முடியலை. ஆனா, உன் அப்பா அவளை பாராட்டி தள்ளுறார்.''

அம்மாவின் பொருமலை பொறுமையாய் கேட்டவள், ''அம்மா, நீ பேசாம கொஞ்ச நாள் இங்க வந்து தங்கிட்டு போ,'' என்ற ழைக்க, வேதாவுக்கும் பெண் வீட்டில் தங்கி வந்தால் தேவலாம் என்று தோன்றியது.

''அம்மா, ஊரில் இருந்து வந்தது களைப்பா இருக்கும். இந்தா காபி குடி,''பிரபா சொல்லி கொண்டிருந்த போதே, கோவிலுக்கு சென்றிருந்த பிரபாவின் மாமியார் வந்தார். ''அடடா வாங்க. எப்போ வந்தீங்க? நல்லா இருக்கீங்களா?'' வேதாவின் அருகில், நாற்காலியை இழுத்து போட்டு அமர்ந்து கொண்டாள். அவருக்கும், தனக்கு மாய் காபி எடுத்து வந்த பிரபா, அவர்களுக்கு அருகே, அப்படியே தரையில் அமர்ந்து கொண்டாள்.

''பிரபா, எனக்கு இன்னைக்கு காபி கொஞ்சம் அதிக தித்திப்பா குடிச்சா நல்லா இருக்கும்ன்னு தோணுது, நான் கொஞ்சம் சர்க்கரை சேர்த்துக்க போறேன், உனக்கும் எடுத்துகிட்டு வரவா?'' என்று பிரபாவின் மாமியார் கேட்க, ''நீங்க இருங்க அத்தை நான் போய்'' சர்க்கரை டப்பாவை எடுத்து வந்தாள்.

அன்று இரவு உணவுக்கு, சப்பாத்தி தயார் செய்தாள் பிரபா. ஆனால், வேதாவால் அதை கடிக்க கூட முடியவில்லை. குருமாவின் சுவையும் ஒன்றும் பிரமாதமாய் இல்லை. பிரபாவின் கணவனும், மாமியாரும் சப்பாத்தியை குருமாவில் ஊற வைத்து, ஏதும் சொல்லாமல் சாப்பிட்டனர். ஏனோ, வேதாவுக்கு, மருமகள் பூஜாவின் மிருதுவான சப்பாத்தியும், சுவையான காய்கறி சப்ஜியும் மனதுக்குள் வந்து போனது.

மறுநாள், பிரபா காலை உணவுக்கு இட்லி, செய்ய, கல் போன்ற இட்லி வேதாவின் தொண்டையில் இறங்க மறுத்தது. எல்லாரும் அமைதியாய் சாப்பிட, வேதாவால் பொறுக்க முடியவில்லை. 'இதுங்க எல்லாம் எதை போட்டாலும் சாப்பிடுங்க போல...' என, மனதுக்குள் பொருமியபடியே, தண்ணீர் குடித்து குடித்து, இட்லியை உள்ளே தள்ளினாள்.

''பிரபா, அடுத்த முறை இட்லிக்கு ஊறப் போடும்போது, ரெண்டு டீஸ்பூன் வெந்தயம், ஒரு கைப்பிடி அவல் சேர்த்து ஊற போடுமா. அப்படி போட்டா, இட்லி இதைவிட மிருதுவா, மல்லிகை பூ மாதிரி இருக்கும்ன்னு என் தோழி சொன்னா,'' என்று சம்மந்தியம்மா, மகளிடம் சொல்வதை கேட்ட வேதாவுக்கு, 'இவங்க முன்னபின்ன மிருதுவான இட்லியே சாப்பிட்டது இல்லையோ...'என்ற கேலி மனதுக்குள் எழுந்தது.

''பிரபா நான் சமைக்கறேண்டி மதியத்துக்கு,'' வேதா சொல்ல, அதை மறுத்தாள் மகள்.

''வேணாம் அம்மா, நான் சமைச்சாதான் அவருக்கும், அத்தைக்கும் பிடிக்கும்,'' என்றாள். இதை கேட்டு வேதாவுக்கு சிரிப்பதா, அழுவதா என்று புரியவில்லை.

வந்ததில் இருந்து, ஒழுங்கான உணவை சாப்பிடாததால், மதியம் சீக்கிரமே பசித்தது. பிரபாவின் சமையலை சாப்பிட வேண்டும் என்று நினைத்த போதே, மனதில் லேசான பயமும் வந்தது. எதிர்பார்த்த மாதிரியே, ஒன்றில் கூட உப்போ, காரமோ இல்லை. ''சமையல் இன்னைக்கு நல்லா அமைஞ் போச்சு பிரபா. அம்மா வந்து இருங்காங்கன்னு, நீ ரொம்ப சிரத்தை எடுத்து சமைச்சு இருக்க,'' என்றார் மாமியார். ''என்ன... இந்த வெண்டைக் காய் பொரியலில் ஒரு துளி காரம் இருந்தால் அருமையோ அருமை. ரசத்துல கொஞ்சம் உப்பு சேர்ந்துகிட்டா இன்னும் ஜோரா இருக்கும்.''

தன் மகளின் கேவலமான சமையலை பாராட்டும் சம்பந்தியம்மாவை, ஒரு மாதிரி பார்த்தாள் வேதா. ''ஏங்க... நான் சொல்றது சரிதானே?'' என்று பிரபாவின் மாமியார் இவரையும் கேட்க, வேறு வழியின்றி பலியாடு போல தலையாட்டி வைத்தாள்.

இங்கேயே இன்னும் இரண்டு நாட்கள் இருந்தால், பசியில் செத்தே போய் விடுவோம் என்று தோன்ற, மறுநாள் விடிந்தும் விடியாததுமாய், ஊருக்கு போயே தீர வேண்டும் என்று நின்றார் அம்மா. ஆனால், மகளும், அவள் மாமியாரும், காலையில் கண்டிப்பா சாப்பிட்டு விட்டுதான் போக வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்க, ஐயோ... இது என்ன கொடுமை என்று எண்ணிக் கொண்டே சாப்பிட அமர்ந்தாள்.

அருமையான மசால் தோசையும், கொத்தமல்லி சட்னியும் பரிமாறினாள் மகள். தோசையை சுவைத்தவர், புரியாமல் மகளை பார்க்க,

''இவ்ளோ நல்லா சமைக்க தெரிந்த நீ, ஏன் ரெண்டு நாளா அவ்ளோ கேவலமா செய்தேன்னு கேக்க நினைக்கற இல்ல?'' பிரபாவே அவர் மனதை படித்தவள் போல கேட்டாள்.

'ஆமாம்...'என்று வேதா தலையாட்ட, ''எல்லாம் காரணமாத்தான். நீ எனக்கு செல்லம் கொடுத்து, கல்யாணம் வரை சமைய லறை பக்கமே விடலே. கல்யாணம் ஆகி வந்த புதுசுல, நான் இப்படித்தான் சுவையே இல்லாம சமைப்பேன். ஆனா, என் மாமியார், என்னையோ, இல்லை உன்னையோ ஒரு வார்த்தை குறை சொன்னது இல்லை தெரியுமா? இங்க என் சமையல் நல்லா இல்லைன்னாலும், என் மாமியார் என்னை பாராட்டியே, அதில் உள்ள குறை என்னன்னு சொல்லிடுவாங்க.

நீ வந்த அன்னைக்கு, அவங்களுக்கு காபியில் கொஞ்சம் கூட நான் சர்க்கரை போடலை, ஆனா, அவங்க அதை குறையா சொல்லாம, இனிப்பா குடிக்கணும் போல இருக்கு,

கொஞ்சம் சர்க்கரை கூட போடுன்னு சொன்னாங்க. அதே மாதிரி, சப்பாத்தி பண்ணின போதும், நான் சாப்பிடும் போது எனக்கே அதில் உள்ள குறை தெரிஞ்சு, சரி செய்துப்பேன்னு ஏதும் சொல்லாம, குருமாவில் ஊற வச்சு சாப்பிட்டாங்க. நேத்து காலையில் இட்லி எப்படி இருந்த துன்னு உனக்கே தெரியும்... அதை பத்தியும் பிரச்னை ஏதும் செய்யா மல், மல்லிகை பூ இட்லி செய்ய டிப்ஸ் சொன்னாங்க. எதையும் நாம சொல்லற விதத்துல சொன்னா, அது கேக்கறவங்க மனசை கஷ்டப்படுத்தாது.''

மகள் தன்னை குத்தி காட்டுகிறாளோ என்று ஒரு கணம் தோன்றியது... ''அதை ஏன் இப்போ என்கிட்டே சொல்ற?''

''அம்மா... என்கிட்டே கோவிச்சிக்காதே. நீ பூஜாகிட்ட செய்யற மாதிரி, என் மாமியார் என்கிட்டே குறை காண ஆரம்பிச்சு இருந்தாங்கன்னா, என்னால இங்க இவ்ளோ சந்தோஷமா வாழ முடியுமா?''

தன் மகள் தனக்கு அறிவுரை சொல்வதா என்ற ஈகோ எட்டி பார்த்தது வேதாவுக்கு. ''சரிடி பிரபா, உன் மாமியார் மாதிரி எனக்கு பக்குவமா பேச தெரியாது. நான் இப்படியே இருக்கேன்.

நீ ஒண்ணும் பெரிய மனுஷி மாதிரி எனக்கு புத்தி சொல்ல வேணாம்''படபட வென பொரிந்தாள் வேதா.

''அம்மா நான் சொல்றத கொஞ்சம் பொறுமையாதான் கேளேன். நேத்து எனக்கு ஏன் நீயா சமையலில் உதவ வந்த? நான் உன் பொண்ணு அப்படிங்கறதையும் மீறி, என் மோசமான சமையலை உன்னால சாப்பிட முடியலை.

அதான் எனக்கு உதவற மாதிரி,

உன் சுவைக்கு ஏற்ப நீ சமைச்சுக லாம்ன்னு நினைச்சே... சரிதானே?''

மகளின் கேள்விக்கு, 'ஆமாம்' என்று தலையாட்டுவது தவிர, வேறு வழி இல்லை அவருக்கு.

''அதே மாதிரி, ஊரிலும் உனக்கு தேவையானதை நீயே சமைச்சுக்கோ. அப்படியே, பூஜாவை பக்கத்துல நிக்க சொல்லு... அவ புத்திசாலி பொண்ணு,

ஒரு வாரத்துல உன் சுவை எல்லாம் அவளுக்கும் பிடிபட்டுடும்.''

இப்படியும் செய்திருக்கலாமோ என்று தோன்றியது வேதாவுக்கு.

''அம்மா, உண்மையில் உன் பிரச்னை சாப்பாடோ, அதன் சுவையோ இல்லை. அதை செய்யற பூஜாவை உனக்கு பிடிக்கலை.

உன் பேச்சை மதிக்காம, அண்ணன் அவளை காதல் கல்யாணம் செய்துகிட்டான்னு கோபம். அந்த கோபத்தை எல்லாம், அவகிட்ட காட்ட நீ கண்டுபிடிச்ச வழி, அவளை குறை சொல்வது. அது ரொம்ப தப்பும்மா.

அவ, உன்கிட்ட பேசணும்ன்னு தமிழ் கத்துகிட்டா, சைவ சமையல் செய்ய பழகிகிட்டா.

கடைசில அவ இவ்ளோ செய்தும், நீ தினமும் அவளை அழ வைக்கறே. அவ ரொம்பவே நல்ல பொண்ணு. அதான், நீ படுத்தறதுக்கு எல்லாம், பேசாம இருக்கா. இதுவே, வேற ஒருத்தியா இருந்தா, இந்நேரம், அண்ணன் தனி குடித்தனம் போய் இருப்பான்''

மகளின் வார்த்தையில் உள்ள உண்மை புலப்பட தொடங்கியது.

வேதா யோசிக்க தொடங்கினாள். தான் வேண்டுமென்றே பூஜாவிடம் அவள் செய்யும், சமையல் மட்டுமல்லாமல், ஒவ்வொரு சின்னச்சின்ன விஷயத்துக்கும் குறை காணுவது புரிந்தது. பிரபாவின் மாமியாருக்கு இருக்கும் பக்குவம், தனக்கு இல்லையே என்ற எண்ணம் வந்தது.

''அப்பா, அவள் செய்வதை எல்லாம் பாராட்டுவது, என் மாமியார் கையாளும் அதே டெக்னிக் தான். அதையும் நீ புரிஞ்சிக்கணும்,'' மகள் சொல்லும் போதுதான், கணவனின் செய்கையின் அர்த்தம் விளங்குவது போல இருந்தது.

''அம்மா, கடைசியா நான் ஒண்ணு சொல்றேன், நாம நம்மை சுற்றி இருக்கற மனிதர்கள் கூட தான் குடும்பம் செய்யணுமே தவிர, உப்பு, புளி, மிளகு கூட எல்லாம் இல்லை. பூஜா, நம்ம வீட்டுக்கு வாழ வந்தவள்,

அவளை நீ மகளாய் நினைக்க வேணாம், ஒரு சக மனுஷியா நினைச்சு, அவக்கிட்ட அன்பா நடந்துக்கலாம் இல்லே.

அம்மா, இனிமேலாவது பூஜாவோட உணர்வுகளை மதிக்க கத்துக்க. தயவு செய்து உன்னை மாத்திக்க பாரு. இதுக்கும் மேல உன் இஷ்டம்,'' என்றவள் அம்மாவின் பதிலை எதிர்பார்க்காமல், கால் டாக்சிக்கு போன் செய்தாள்.

''இப்போ எதுக்கு டாக்சிக்கு சொல்ற? நான் வாயும் வயிறுமா இருக்கற என் மருமகளுக்கு, ஏதாவது செய்து எடுத்துகிட்டு போறேனே!

அவளுக்கு மைசூர் பாக் பிடிக்கும். தேவையான சாமான் வாங்க காசு தர்றேன், நீ வாங்கிட்டு வந்து தந்த பின், இனிப்பு, கை முறுக்கு எல்லாம் செஞ்சு எடுத்துகிட்டு நாளைக்கு போறேன்,'' என்று கொஞ்சும் குரலில் சொல்லும் அம்மாவை, புன்னகை ததும்ப பார்த்தாள் பிரபா.

''அம்மா, உன் மனசு எனக்கு தெரியாதா? நீ ஏதோ குழப்பத்துல இருந்த. அதான் அப்படி பூஜாகிட்ட நடந்துகிட்ட.

நீ மனசு மாறி, இப்படி ஏதாவது சொல்லுவேன்னு தெரிஞ்சுதான், நானே எல்லாம் ரெடி பண்ணி வச்சு இருக்கேன்.

''பிரபா சொல்ல, முகத்தில் கிண்டல் வழிய, ''அச்சோ, நீ பண்ணினதா? வேணாம் வேணாம் என் மருமகள் பாவம்,'' என்ற வேதாவை, தன் இடுப்பில் கை வைத்து பொய் கோபத்துடன் பிரபா முறைத்தாள். மகளின் முகபாவத்தை பார்த்த வேதாவிற்கு, சிரிப்பு பொங்கியது. அதே சந்தோஷம், அவள் வீட்டிலும் இனி தொடரும்.

சாத்விகா

இந்த கண்களுக்கு மட்டும் 10 கோடி நிறங்கள் தெரியும்

டிஸ்கவரி, நேஷனல் ஜியோகிராபிக் போன்ற சனல்களை சாதாரண தொலைக்காட்சியில் பார்ப்பதற்கும், உயர்தர அதிநவீன ஏஈ தொலைக்காட்சியில் பார்ப்பதற்கும் என்ன வித்தியாசம்? வீடியோ மற்றும் ஆடியோ கிளாரிட்டி தவிர, வேறு ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. ஏஈ தொலைக்காட்சியில் வண்ணங்கள் சற்று அதிகமாகவும், துல்லியமாகவும் தெரியும். உதாரணமாக, சாதாரண தொலைக்காட்சியில் கருநீலக் நிறத்தில் தெரியும் ஒரு விஷயம், ஏஈ தொலைக்காட்சியில் நீல நிற குடும்பத்தை சார்ந்த வேறு ஒரு வண்ணத்தில் தெரியலாம். அதுவே அதன் நிஜ வண்ணமாகவும் இருக்கும்! இப்போது இதையே நிஜ உலகில் பொருத்திப் பாப்போம். நம் கண்கள் எல்லாம் சாதாரண தொலைக்காட்சி என்று வைத்துக் கொள்வோம். அப்போது ஒரு சிலருக்காவது ஏஈ தொலைக்காட்சியைப் போன்ற கண்கள் இருக்கலாமல்லவா? நமக்கெல்லாம் 1-7 மில்லியன் நிறங்கள் வரை தெரிகிறது என்றால், அவர்களுக்கு 100 மில்லியன் நிறங்கள் (10 கோடி) வரை தெரிய வாய்ப்புண்டு. அவர்கள் தான் சூப்பர் விஷன் கொண்டவர்கள் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

Tetrachromat மனிதன் தெரியுமா?

அது என்ன Tetrachromat நிறங்களைப் பிரித்து உணர, நம்மைப் போன்ற மனிதர்களுக்கு, நம் கண்களில் 3 வகை கோன் செல்கள் இடம் பெற்றிருக்கும். ஒவ்வொரு கோன் செல்களும் 100 வகை நிற வேறுபாடுகளைச் சுலபமாக கண்டறிய உதவும். மூன்று வகை கோன் செல்களும் ஒன்று சேர்ந்து செயல்படும் போது இந்த எண்ணிக்கை பல மடங்கு உயர்கிறது. சராசரியாக, சில மில்லியன் கணக்கில் வித விதமான வண்ணங்களை நாம் பிரித்தறிய முடியும். இப்படி 3 கோன் செல்கள் இருக்கும் உயிரினங்கள் அனைத்தும் Tetrachromat (Tri - மூன்று) என்று அழைக்கப்படுகின்றன.

ஆனால் ஒரு சாரருக்கு, அதுவும் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு இருக்கும் ஒரு சில வகை மனிதர்களுக்கு மட்டும் இந்தக் கோன் செல்கள் 4 இடம்பெற்றிருக்கும். இந்த வகை மனிதர்களால், நம்மால் பார்க்க முடியாத வண்ணங்களைக் கூட பார்க்க முடியும். அறிவியலாளர்களின் கருத்துப்படி அவர்களால் கிட்டத்தட்ட 100 மில்லியன் நிறங்களை வேறுபடுத்தி புரிந்து கொள்ள முடியும். அதாவது நம்மை விடப் பல மடங்கு நிறங்களை அவர்கள் பூமியில் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தான் Tetrachromat (Tetra - நான்கு) என்று அழைக்கிறார்கள். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், அவர்களுக்கு அப்படி ஒரு திறன் இருப்பது அவர்களுக்கே தெரியாது. ஏதோ இப்படி தான் அனைவருக்குமே உலகம் தெரிகிறது என்று நினைத்துக் கொண்டு வாழ்கிறார்கள் அவர்கள்.

எப்படி உருவாகிறார்கள்?

அறிவியல் உலகில் ஒரு சூப்பர் விஷன் கொண்ட சூப்பர் ஹீரோக்களாக கருதப்படும் இவர்கள் எண்ணிக்கையில் மிக மிகக் குறைவு என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இவர்கள் எப்படி உருவாகிறார்கள் என்பதை அறிவியல் பூர்வமாக இப்படி விளக்குகிறார்கள். நாம் ஒரு வருடத்தில் சந்திக்கும் மனிதர்களில் குறைந்தபட்சம் ஒரு 10 நபருக்காவது நிறக் குருடு என்ற ஒன்று இருக்கக்கூடும். அவர்களால் அனைத்து நிறங்களையும் பார்க்க முடியாது, அல்லது ஒரு சில நிறங்களை மட்டும் பார்க்க முடியாது. இவ்வகை மனிதர்களுக்கு, 3 கோன் செல்கள் செயல்படாமல், வெறும் 2 கோன் செல்கள் மட்டுமே செயல்பட்டுக் கொண்டிருக்கும். இவர்களால் மொத்தமே 10,000 வகை நிற வேறுபாடுகளை மட்டுமே உணர முடியும். இவ்வகை மனிதர்களின் வம்சத்தை ஆராய்ந்த போது ஒரு ஆச்சர்ய மூட்டும் உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இந்த நிறக்குருடு உள்ளவர்களின் பெரும்பாலானவர்களின் தாய் அல்லது மகள்களுக்கு 4 வகை கோன் செல்கள் இருப்பது தெரியவந்துள்ளது. இதில், அவர்களுக்கு 3 கோன் செல்கள் மட்டுமே செயல்படுகிறது. நான்காவது மரபுபிறழ்ந்த ஒன்றாகவே இருக்கிறது. இதனால், 4 கோன் செல்கள் இருந்தாலும், அவர்களால் கூடுதல் நிறங்களைப் பார்க்கமுடியாமல், நம்மைப் போல் சாதாரண மனிதர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

Tetrachromat மனிதனைத் தேடி ஒரு பயணம்

டாக்டர் கேப்ரியே ஜோர்டான் புகழ்பெற்ற நியூரோசயின்ஸ் நிறுவனத்தில் ஒரு ஆராய்ச்சியாளராக இருந்து வருகிறார். இவரின் தேடல், தொட நினைத்த அந்த மைல்கல், சற்றே கடினமான ஒன்று. அவர் இலக்கு எல்லாம் 4 கோன் செல்களும் சீராக இயங்கும் Tetrachromat ஒருவரைக் கண்டுபிடிப்பது தான். அப்படி 4 செல்களும் சிறப்பாக செயல்படும் ஒருவரால், நம்மை விடப் பல மடங்கு நிறங்களைக் காண முடியும் என்று கூறி வந்தார் டாக்டர் ஜோர்டான். அவரின் ஆராய்ச்சிப்படி, இவ்வகை திறன் பெரும்பாலும் பெண்களுக்கே இருப்பதாகவும், அவர்கள் இந்த உலக மக்கள் தொகையில், வெறும் 12 சதவீதமே என்பதையும் கண்டறிந்திருக்கிறார். அப்படி ஒரு பெண்ணை தேடி 20 வருடங்கள் அலைந்திருக்கிறார். அவரைக் கண்டுபிடிக்கும் பட்சத்தில், அவர் பார்வையில் உலகம் எப்படி இருக்கும் என்பதை அறிந்து கொள்ளலாம். கண் மருத்துவத்தில் இது ஒரு மிகப்பெரிய மைல்கல்லாக இருக்கும் என்பது அவர் எண்ணம்.

20 ஆண்டு தேடலின் விடை

அப்படி ஒரு நாள், நிறக்குருடு உள்ள ஆண்களின் மகள்களில், ஒரு 25 பேரைப் பரிசோதனை செய்து கொண்டிருந்தார். அவர்கள் முன், வெவ்வேறு நிறங்கள் கொண்ட மூன்று வகை வெளிச்சங்கள் பாய்ச்சப்பட்டன. 3 கோன் செல்கள் மட்டுமே செயல்படும் ஒருவரால், இந்த நிறங்களைப் பிரித்து அறிய முடியாது. இதே ஒரு Tetrachromat மனிதரால் நிச்சயம் அந்த 3 நிறங்களையும் பிரித்து உணர முடியும். 20 ஆண்டு காலமாக அப்படி ஒருவரைத் தேடிய டாக்டர் கேப்ரியே ஜோர்டானிற்கு அன்று அடித்தது ஜாக்பாட்! கிடைத்தார் ஒரு Tetrachromat! பரிசோதனை எண் cDa29 என்று குறிப்பிடப்பட்ட அந்தப் பெண்மணி, வடக்கு இங்கிலாந்தில் வசிக்கும் ஒரு மருத்துவர். இயல்பாகவே நல்ல பார்வைத் திறன் கொண்ட அவருக்கு, தனக்கு அப்படி ஒரு சூப்பர் பவர் இருக்கிறது என்பதை உணர்ந்ததே இல்லை என்று ஆச்சர்யப்பட்டார். ஆனால், அவரின் பெயர் மற்றும் பிற விபரங்கள் எதுவும் இன்னமும் வெளியிடப்படவில்லை. இது குறித்து மகிழ்ச்சி பொங்க டாக்டர் கேப்ரியே ஜோர்டான் அளித்த பேட்டியில், 1948ஆம் வருடத்தில் இருந்தே Tetrachromat குறித்த ஆராய்ச்சிகள் இருந்து வந்தன. ஆனால், அவை வெறும் தியரிகளாகவே பார்க்கப்பட்டது. இப்போது அது நிஜமாகி விட்டது! ஆனால், 4 கோன் செல்கள் இருக்கும் அனைவராலும் ஏன் ஒரு Tetrachromat ஆகச் செயல்பட முடியவில்லை என்பதை இன்னமும் அறிய முடியவில்லை. இன்னொரு தடை என்னவென்றால், Tetrachromat களின் உலகம் எப்படி இருக்கிறது, நிறங்கள் எவ்வாறு வேறுபடுகிறது என்பதை 3 செல்கள் மட்டுமே இருக்கும் நம்மைப் போன்ற Tetrachromat-களால் உணரவே முடியாமல் போகலாம் என்று தெரிவித்தார்.

Tetrachromat-களால் ஆன உலகம்

இது இப்படி இருக்க, வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் இருக்கும் பார்வை ஆராய்ச்சியாளரான ஜே நெயிட்ஸ் பேசுகையில், கணினி மூலம் விதவிதமான நிறங்களை உருவாக்கி ஒரு Tetrachromat-டை நம்மால் பரிசோதிக்க முடியும். ஆனால், இன்று நாம் காணும் உலகம் என்பது, உங்களையும் என்னையும் போன்ற Tetrachromat-களால் உருவாக்கப்பட்ட உலகம். இதில், Tetrachromat-களுக்கு மட்டும் தெரியும் நிறங்கள் இல்லமாலே இருக்கலாம். அவ்வகை நிறங்கள் பூமியிலேயே எங்கும் இல்லாமலும் இருக்கலாம் என்று வருத்தத்துடன் தன் கருத்தைத் தெரிவித்தார்.

நாம் அன்றாட காணும் நிறங்களில், நம் கண்களில் இவ்வளவு விஷயங்கள் உள்ளது என்பதை நாம் நிச்சயம் உணர்ந்திருக்கவே மாட்டோம். இப்படி நமக்குத் தெரியாமல் இருக்கும் இயற்கையின் ஆச்சர்யங்கள் எண்களில் அடக்கிவிட முடியாத ஒன்று.

கீர்த்தியின் திகில் படம்

தேசிய விருது பெற்ற சந்தோசத்தில் உள்ள நடிகை கீர்த்தி சுரேஷ் அடுத்ததாக புதிய தமிழ் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். வரும் செப்டம்பரில் படப்பிடிப்பு தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது என்ன மாயம் என்ற படத்தின் மூலம் பெரும் எதிர்பார்ப்புடன் தமிழ்த் திரையுலகில் அறிமுகமான நடிகை கீர்த்தி சுரேஷுக்கு அந்தப் படம் பெரிய அளவில் கைகொடுக்கவில்லை. அதற்கு அடுத்ததாக சிவகார்த்திகேயனுடன் நடித்த ரஜினிமுருகன் மற்றும் ரெமோ படங்கள் மட்டுமே வெற்றி பெற்றன. இதற்கு அடுத்ததாக கீர்த்தி சுரேஷ் நடித்த எந்தப் படங்களும் பெரிய அளவில் பேசப்படவில்லை. அதிலும் தளபதி விஜய் உடன் நடித்த பைரவா படமும் பெரிய அளவில் அவருக்கு கை கொடுக்கவில்லை.

இதற்கு இடையில் பழம்பெரும் நடிகை சாவித்திரியின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்ட மகாநடி படத்தில் சாவித்திரியாக நடித்தார். இந்தப் படம் தமிழ், தெலுங்கு என இரு மொழியிலும் வெளியிடப்பட்டது. மகாநடி படத்தில் நடித்ததற்காக நிச்சயமாக கீர்த்தி சுரேஷுக்கு தேசிய விருது கிடைக்கும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்தப் படத்திற்கு பின் இவர் நடிகர் சூர்யா உடன் நடித்த தானா சேர்ந்த கூட்டம் படமும், தளபதி விஜய் உடன் ஜோடி சேர்ந்த சர்கார் படமும் தோல்வியுற்றன. இதனால் சில காலம் படங்களில் நடிப்பதை தவிர்த்துவிட்டு ஓய்வில் இருந்தார்.

கீர்த்தி சுரேஷ் ஓய்வில் இருந்தாலும் அவ்வப்போது தன்னுடைய ஃபோட்டோக்களை சமூக வலைதளங்களில் வெளியிட்டு வந்தார். அந்தப் படங்களில் அவர் உடல் மெலிந்து ஒல்லி பெல்லியாகவே காணப்பட்டார். இது பற்றி விசாரித்தபோது உடல் எடையைக் குறைப்பதற்காக உடற்பயிற்சியும் மசாஜும் செய்து கொள்வதாகக் கூறிவந்தார்.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்பு 2018ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்களுக்கான தேசிய விருது அறிவிக்கப்பட்டது. அதில் மகாநடி படத்தில் நடித்ததற்காக கீர்த்தி சுரேஷ் சிறந்த நடிகையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதனால் இவருக்கு அடுத்தடுத்த படவாய்ப்புகள் குவியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவர் எதிர்பார்த்தது போலவே, தற்போது அறிமுக இயக்குநரின் படம் ஒன்றில் நடிக்கவுள்ளார்.

மேயாத மான் மற்றும் மெர்குரி திரைப்படங்களை தயாரித்த ஸ்டோன் பெஞ்ச் பிலிம்ஸின் அடுத்த திரைப்படம் மர்மங்களும், த்ரில்லும் கலந்த படமாக வரவிருக்கிறது. அறிமுக இயக்குனர் ஈஷ்வர் கார்த்திக் இயக்கும் பெயரிடப்படாத திரைப்படத்தில் நடிகை கீர்த்தி சுரேஷ் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளாராம். இதற்காகவே இவர் உடம்பை குறைத்திருக்கலாம் என்றும் பேசப்படுகிறது.

பெண்ணை மையமாகக் கொண்ட இத்திரைக்கதையை ஸ்டோன் பெஞ்ச் பிலிம்ஸ் பேனரின் கீழ் கார்த்திக் சுப்பராஜ் தயாரிக்கிறார். இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இசையமைக்கவுள்ளார். இந்த புதிய திரைப்படத்தின் படப்பிடிப்பு கொடைக்கானலில் வரும் செப்டம்பர் மாதம் ஆரம்பமாகும் என்று படக்குழுவினர் தெரிவித்துள்ளனர். மற்ற நடிகர்கள் மற்றும் நடிகைகள் தேர்வு நடைபெற்றுவருவதாகவும், அதுபற்றிய அறிவிப்பு விரைவில் வெளிவரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ரெஜினாவின் நண்

தர்மசங்கடமான ஃபிரண்ட்ஸ் பற்றி பேச பலரும் தயங்குவார்கள். அதிலும் நடிகைகள் சு டார்கள். அதிலிருந்து மாறுப்பட்டவராக மாறியிருக்கிறார் ரெஜினா. கேடி பில்லா கில்லாடி ர சிலுக்குவார்பட்டி சிங்கம் போன்ற படங்களில் நடித்தவர் அடுத்து நெஞ்சம் மறப்பதில்லை, ப காக காத்திருக்கிறார். இந்நிலையில் இந்தியில் ஏக் லட்கி கோ டெகஹா டோ ஐசா லகா படத்

இதில் லெஸ்பியன் (பெண்ணுக்கு பெண் காதல்) கதாபாத்திரம் ஏற்று நடித்தார். நடிகை கதாபாத்திரத்தில் நடித்ததுபற்றி ரெஜினா கூறும்போது,இப்படித்தான் நடிக்க வேண்டும் என்ற ருக்கிறேன் என்று எண்ணுகிறேன். லெஸ்பியன் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் நான் நடித்த க வேற்று மெசேஜ் அனுப்பினர்.

உண்மையை சொல்லப்போனால் லெஸ்பியன் சமுதாயத்தில் எனக்கு நெருங்கிய நண்பர் கதாபாத்திரத்தில் நடிக்கிறேன் என்று அவர்களிடம் நான் சொல்லவில்லை. படத்தை திரை ஞுக்கு நான் லெஸ்பியன் வேடத்தில் நடித்திருந்தது தெரியவந்தது. படம் பார்த்த பின் அவ பார்த்தேன். என்னை நினைத்து அவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டதுடன் அவர்களின் க நடித்ததற்காக சந்தோஷம் அடைந்தனர் என்றார்.

இருட்டு அறையில் முரட்டு குத்து, துருவங்கள் 16, நோட்டா, கழுகு போன்ற படங்களில் நடித்துள்ள யாஷிகா ஆனந்த், தற்போது ஜோம்பி என்ற படத்தில் நடிக்கிறார். புவன் இயக்குகிறார். யோகி பாபு, மனோபாலா, கோபி, சுதாகர் நடிக்கின்றனர்.

ஹீரோ, ஹீரோயின் போன்ற கேரக்டர்கள் இல்லாத படமான இதில், சண்டை காட்சிகளில் நடித்துள்ளார் யாஷிகா ஆனந்த். கராத்தேயில் பிளாக் பெல்ட் பெற்றவர் என்பதால், அவர் நடிக்கும் கராத்தே சண்டை காட்சியை படமாக்கியுள்ளனர்.

திரில்லர் கதையில் அதுல்யா

ஜெய் ஜோடியாக கேப்மாரி, சிபிராஜ் ஜோடியாக வட்டம் மற்றும் நாடோடிகள் 2, அடுத்த சாட்டை ஆகிய படங்களில் நடித்து முடித்துள்ளார், அதுல்யா ரவி. அவர் கூறுகையில், கேப்மாரி படத்தில் சாஃப்ட்வேர் கம்பெனியில் பணிபுரியும் பெண்ணாக நடிக்கிறேன்.

மீண்டும் ஜெய் ஜோடியாக திரில்லர் கதை கொண்ட படத்தில் நடிக்கிறேன். இதை வெற்றி இயக்குகிறார். அமலாபால் தமிழ் மற்றும் தெலுங்கில் தயாரிக்கும் கடவர் படத்தில் நடிக்கிறேன். மலையாளம் மற்றும் கன்னடத்தில் நடிக்க பேச்சு வார்த்தை நடக்கிறது என்றார்.

நடிகைகளில் சிலர் திருமணம் செய்யாமல் வாழ்க்கை அமைத்துக் கொள்வதை பேஷனாக்கி வருகிறார்கள். ஏற்கனவே நடிகைகள் ஸ்ருதிஹாசன், ஓவியா திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று அறிவித்திருக்கின்றனர். அந்த வரிசையில் தற்போது வரலட்சுமியும் இடம் பிடித்திருக்கிறார். விமல், வரலட்சுமி ஜோடியாக நடிக்கும் படம் கன்னிராசி. ஷமீம் இப்ராகிம் தயாரிக்கும் இப்படத்தை எஸ்.முத்துக்குமரன் இயக்குகிறார்.

இதில் நடித்ததுபற்றி வரலட்சுமி கூறும்போது தனது திருமண முடிவு பற்றியும் திடீரென அறிவித்து அதிர்ச்சி தந்தார். அவர் கூறியதாவது:

புதிய இயக்குநர்கள் என்றால் எனக்குப் பிடிக்கும். கன்னிராசி படத்தின் ஸ்கிரிப்ட் படிக்கும்போதே விழுந்து விழுந்து சிரித்தேன். இந்த டீமும், படமும் எனர்ஜியாக இருந்தது. காதல் திருமணத்தை மையமாக வைத்து இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

நிஜ வாழ்க்கையில் எனக்கு திருமணத்தில் விருப்பம் இல்லை. நான் யாரையும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன். பாண்டியராஜன், யோகிபாபு, ரோபோ சங்கர் என பலருடன் சேர்ந்து இப்படத்தில் ஜாலியாக நடித்தேன். இந்த படத்தைபோல் வேறு எந்தபடத்திலும் இவ்வளவு நடிகர்களுடன் நான் சேர்ந்து நடித்தது இல்லை. ஹீரோ விமலுடன் பணியாற்றியது புது அனுபவமாக இருந்தது. இது குடும்பங்கள் கொண்டாடும் படமாக இருக்கும். இவ்வாறு வரலட்சுமி கூறினார்.

தமிழ்ப் படங்களில் போதிய வாய்ப்பு இல்லாததால், தற்போது மீண்டு மலையாளப் படங்களில் நடிக்க முடிவுசெய்துள்ளார் நடிகை ஓவியா. புதித படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். 9 ஆண்டுகளுக்குப் பின் த யாளத் திரையுலகம் பக்கம் கவனத்தைத் திருப்பியுள்ளார் நடிகையும் பிக்பா மிகவும் பிரபலமான ஓவியா. அங்கு அவர் பிளாக் காபி என்ற படத்தில் நடி கேரளாவைச் சேர்ந்த ஓவியா, மலையாளத் திரையுலகில் தான் அறிமுகமான படங்கள் அவருக்கு அமையவில்லை. அங்கு அவர் மூன்று படங்கள் நடித்த நமதே என்ற படத்தில் முக்கியக் கதாபாத்திரத்தில் நடித்தார்.

விமல் நடிப்பில் வெளியான களவாணி படத்தின் மூலம் கதாநாயகியாக படத்தின் ஆரவாரமான வெற்றி அவரைத் தமிழகத்தின் பட்டி தொட்டியெங் குத்து பாட்டு ,கிளாமர் நடனம், விளம்பரங்கள் என்று படு பிஸியாக இருந்த காந்த பார்வைக்கும் எத்தனையோ பேர் மயங்கி உள்ளனர்.

அதன்பின் சில திரைப்படங்களில் நடித்து தொடர்ந்து வெற்றியை ருசிக்க வைத் தமிழ்நாட்டு மக்கள் முழுவதும் கொண்டாடித் தீர்த்தது பிக் பாஸ் நிக பாஸ் நிகழ்ச்சியின் மூலம், ஓவியா அளவுக்குப் பிரபலமானது யாரும் இல்ல

உலகம் முழுக்க அவருக்கு ஓவியா என்ற பெயரில் ஆர்மிகள் அமைக்கப அதில் இணைந்து பணியாற்றி பின்னர் ஓய்வு பெற்று இப்பொழுது பென்ஷ டில் முடங்கிவிட்டனர்.

பிக் பாஸ் நிகழ்ச்சியின் மூலம் புகழ் பெற்றாலும் கூட, அடுத்து ஏனோ ஓ வளவாக வாய்ப்புகள் இல்லை. நடுவில் வந்த 90 எம்.எல் என்ற அடல்ட் ப இன்னும் கொஞ்சம் காலி செய்தது. இடையில் கன்னடம், தெலுங்கு, இந்தி ஓவியா 2011ஆம் ஆண்டுக்குப் பின் தாய் மொழியான மலையாளத்தில் ஒரு லை.

தற்போது 9 ஆண்டுகள் கழித்து மீண்டும் மலையாளப் படம் ஒன்றில் ந டுள்ளார். பாபுராஜ் இயக்கும் பிளாக் காபி படத்தில் இணைந்துள்ள இவர், இது ஒரு காதல் கதை. இதில் நான் ஒரு விளம்பர மாடலாக நடிக்கிறேன் எ

எனது கதாபாத்திரம் தனது துறையில் முத்திரை பதிக்க மேற்கொள்ளும் டையாகக் கொண்டு திரைக்கதை வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் உறவுச் பேசும். மலையாளத் திரைப்படத்தில் நடிப்பதாக எனக்கு எந்தத் திட்டமும் யுள்ளார்.

பாபுராஜ் தான் என்னை நடிக்கச் சொல்லி தூண்டினார். அவரை எனக்கு மேலும், நல்ல கதை என்பதால் இந்தப் படத்தில் நடிக்கிறேன், என்று தெரி 3 பற்றி கருத்து எதுவும் இன்னும் சொல்லாமல் அவருடைய ஆர்மியைச் சே னம் காத்துவருகின்றனர்.

வித்யா பாலனை கேட்கவில்லை

மறைந்த முதல்வர் ஜெயலலிதா வாழ்க்கை படத்தை இயக்குனர்கள் விஜய், பிரியதர்ஷினி, பாரதிராஜா இயக்குவதாக அறிவித்தனர். கங்கனா ரனாவத் நடிக்க தலைவி பெயரில் விஜய்யும், நித்யா மேனன் நடிக்க ஐயர்ன் லேடி பெயரில் பிரியதர்ஷனியும் இயக்குகின்றனர். பாரதிராஜா இப்படம் பற்றிய விவரம் எதையும் வெளியிடவில்லை. இதற்கிடையில் ஜெயலலிதா வேடத்தில் நடிக்க வித்யாபாலனிடம் பேசப்பட்டதாக தகவல் வெளியானது.

இதுபற்றி தலைவி பட தலைவி பட தயாரிப்பாளர்களில் ஒருவரான ஷாய லேஷ் ஆர்.சிங் கூறும்போது,ஒரு தயாரிப்பாளராக ஜெயலலிதா வாழ்க்கை படத்திற்காக நான் ஒருபோதும் வித்யாபாலனை நடிக்க கேட்டு அணுகவில்லை. இப்படியொரு தகவல் வெளியானது எனக்கும் தெரியும்.

ஆனால் இப்படத்தின் கதாசிரியர் கே.வி.விஜயேந்திர பிரசாத் என்னிடம் கதையை கூறும்போதே கங்கனாதான் ஜெயலலிதாவாக நடிக்க பொருத்தமாக இருப்பார் என்று முடிவு செய்துவிட்டேன். எனவே நானும் சரி, கதாசிரியரும் சரி கங்கனாவை தவிர வேறு யாரையும் நடிக்க கேட்டு அணுகவில்லை. வேறு யாராவது கால்ஷீட் கேட்டு வித்யா பாலனை அணுகினார்களா என்பது எனக்கு தெரியாது. படகுழுவுடன் இணைந்த நாங்கள் அனைவரும் கங்கனாவை ஜெயலலிதாவாக நடிக்க வைப்பது என்று முடிவு செய்தோம் என்றார்.

பர்கள்

த்தமாக வாயே திறக்க மாட்
ங்கா, மிஸ்டர் சந்திரமவுலி,
ர்ட்டி படங்களின் ரிலீஸுக்
ில் நடிக்க வாய்ப்பு வந்தது.
கள் பலரும் ஏற்க தயங்கும்
மரபுகளை நான் உடைத்தி
தாபாத்திரத்தை பார்த்து வர

கள் இருக்கின்றனர். என்ன
யில் பார்த்தபிறகே அவர்க
ர்கள் கண்களில் கண்ணீரை
தாபாத்திரத்தை நான் ஏற்று

ம் தனது தாய் மொழியான
ாக பிளாக் காபி என்னும்
தன் தாய் வீடான மலை
ஸ் மூலம் ஆர்மி கொண்டு
க்க ஒப்பந்தமாகியுள்ளார்.
னார். தொடர்ந்து மலையாள
பின்பு தான் தமிழில் நாளை

அறிமுகமானார். களவாணி
ும் கொண்டு சேர்த்தது.
தார். ஓவியாவின் சிரிப்புக்கு

க முடியாமல் இருந்த ஓவியா
ழ்ச்சியின் மூலம்தான். பிக்
லை என்று சொல்லலாம்.
ப்பட்டு பல இளைஞர்கள்
ன் வாங்கிக் கொண்டு வீட்

அவருக்குத் தமிழில் அவ்
டம் அவரது செல்வாக்கை
ப் படங்களில் நடித்து வந்த
ந படத்தில்கூட நடிக்கவில்

டிக்க ஒப்பந்தம் செய்யப்பட்
படம் பற்றி கூறும் போது,
ன்றார்.
போராட்டங்களை அடிப்ப
சிக்கல்கள் குறித்தும் படம்
இல்லை. என்றும் கூறி

நீண்ட நாட்களாகத் தெரியும்.
வித்துள்ளார். பிக் பாஸ் சீசன்
சர்ந்தவர்கள் தொடர்ந்து மவு

பிரபாஸின் பயம்

பாகுபலி ஹீரோ பிரபாஸ் தனது படங்கள் வெளியாகும்போது முதல்நாள் முதல் காட்சியை ரசிகர்களுடன் பார்ப்பது வழக்கம். பாகுபலி படம் வெளியான போது முதல் நாள் முதல்காட்சியை ரசிகர் களுடன் பார்க்க பயந்தார். காரணம் அதில் கிளைமாக்ஸில் பிரபாஸ் இறப்பதுபோல் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து பிரபாஸ் கூறும்போது, ‘எப்போதுமே நான் நடித்த படத்தை முதல்நாள் முதல் காட்சியை ரசிகர்களுடன் பார்ப்பேன்.

பாகுபலி ரிலீஸ் ஆகும்போது எனக்கு திக் திக் என்று இதயம் படபடத்தது. படத்துக்கு அதிக எதிர்ப்பார்ப்பு இருந்தது. ஆனால் தெலுங்கில் அது வேறுவிதமாக இருந்தது. இதில் கட்டப் பாவால் நான் கொல்லப்படுவதுபோல் காட்சி அமைக்கப்பட்டிருந்தது தான் காரணம். அதனால் படம் ரிலீஸ் ஆகும் நாளில் என் நண்பர்களை அழைத்து, படம் ஹிட் என்றால் என்னை எழுப்புங்கள் இல்லாவிட்டால் எழுப்பாதீர்கள் என்று கூறினேன்.

படம் வெளியானது. ஆனால் யாரும் என்னை எழுப்பவில்லை. பாகுபலி தோல்வி அடைந்து விட்டது என்று எண்ணினேன். ஆனால் அன்று மாலை முதல் மக்கள் படத்துக்கு திரண்டு வர ஆரம்பித்தார்கள். அதன்பிறகுதான் எனக்கு உயிரே வந்தது. நான் நடித்துள்ள சாஹோ படம் இம்மாதம் வெளியா கிறது. பாகுபலி ரிலீஸ் ஆகும்போது இருந்த அதே திக் திக் நிலைமையில்தான் தற்போதும் இருக்கிறேன்.

காதல் மோதல் 50/50

யோகி பாபுவை மையமாக வைத்து உருவாகும் ஆக்ஷன் கலந்த பேய் கதை கொண்ட படம், காதல் மோதல் 50/50. ஒளிப்பதிவு, பிரதாப். இசை, தரண்குமார். கதை, அலெக்சாண்டர். திரைக்கதை, வசனம், இயக்கம்: கிருஷ்ணா சாய். இவர், கன்னடத்தில் த்ரயா என்ற படத்தை இயக்கியவர். வி.என்.ஆர்., தனது லிபி சினி கிராப்ட்ஸ் சார்பில், காதல் மோதல் 50/50 படத்தை தயாரிக்கிறார்.

மாநாடு போனால் என்ன? மகாமாநாடு படத்தில் சிம்பு

வெங்கட்பிரபு இயக்கத்தில் சிம்பு நடிக்கவிருந்த படம் ‘மாநாடு’. நீண்ட நாட்களாக முதற்கட்ட பணிகளிலேயே இருந்து வந்தது. இதனையடுத்து சிம்புவை படத்தில் இருந்து நீக்குவதாக தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். இந்நிலை யில் மகாமாநாடு என்ற படத்தை சிம்புவே இயக்கி நடிக்க உள்ளதாக தகவல்கள் வெளி யாகியுள்ளது.

மகாமாநாடு படத்தை சிம்புவின் தந்தை டி.ராஜேந்தர் சிம்பு சினி ஆர்ட்ஸ் மூலம் தயாரிக்கிறார். மாநாடு படத்தில் இருந்து சிம்பு நீக்கப்பட்டதால் கவலை யில் இருந்த ரசிகர்களுக்கு இந்த தகவல் மகிழ்ச்சி அளித்துள்ளது. முன்னதாக சிம்பு மன்மதன், வல்லவன் ஆகிய படங்களை இயக்கி நடித்துள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு விரைவில் துவங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மம்மூட்டி ரசிகர்கள் கோபத்தில்

சமீபத்தில் 2018ம் ஆண்டுக்கான தேசிய விருது அறிவிக்கப் பட்டது. இதில் தென்னிந்திய படங்கள் குறிப்பாக தமிழ் படம் புறக்கணிக்கப்பட்டதாக புகார் எழுந்தது. பரியேறும் பெரு மாள், பேரன்பு படங்கள் பெரிய அளவில் விமர்சகர்களிடம் வரவேற்பும், பாராட்டும் பெற்றது. அப்படங்களுக்கு விருது கிடைக்காதது ஏமாற்றதை அளித்தது. குறிப்பாக மம்மூட்டி நடித்த பேரன்பு படத்திற்காக மம்மூட்டிக்கு சிறந்த நடிகர் விருது தராததற்கு அவரது ரசிகர்கள் தேசிய விருது தேர்வு குழு தலைவரை திட்டி தீர்த்திருக்கின்றனர்.

அத்துடன் அவரது குடும்பத்தினரையும் கெட்டவார்த்தை களால் வசைபாடி உள்ளனர். மம்மூட்டி ரசிகர்களின் இந்த போக்கு விருது குழுவை எரிச்சலை அடையச் செய்துள்ளது. இது பற்றி விருது குழு தலைவர் தரப்பில் கூறும்போது, ‘பேரன்பு படம் விருது போட்டிக்கு வரவே இல்லை.

அது பிராந்திய அளவிலான தேர்வு பிரிவி லேயே நிராகரிக்கப்பட்டு விட்டது. அப்படியிருக்கும்போது விருது தேர்வுக்கு எப்படி பரிசீலனை செய் வது. இதை புரிந்துகொள்ளாமல் மம்மூட்டி ரசிகர்கள் மரியாதை குறைவாக நடந்திருக்கிறார்கள். இதற்காக தனது ரசிகர்கள் சார்பில் மம்மூட்டி மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தெரிவித் துள்ளனர். இதையடுத்து, ரசிகர்களின் செயலுக்காக விருது குழுவினரிடம் மன்னிப்பு தெரிவித்தி ருக்கிறார் மம்மூட்டி.

சர்ச்சையில் ரகுல்

நடிகர்களுடன் லிப் டு லிப் முத் கொடுத்து நடித்து நடிகைகளுக்கு போரடித்துவிட்டதோ என்னவோ இப் பவெல்லாம் நடிகைக்கு நடிகையே லிப் டு லிப் முத்தம் தரத் தொடங்கிவிட்டார்கள். நடிகை அமலாபால் தன்னுடன் நடித்த சக நடிகை ரம்யாவுக்கு திடீரென்று லிப் டு லிப் முத்தம் கொடுத்து பரபரப்பை ஏற்படுத்தினார். அவரைத் தொடர்ந்து மற்றொரு நடிகை சக நடி கைக்கு லிப் டு லிப் முத்தம் தந்திருக்கிறார்.

கடந்த சில வாரங்களாகவே சிகரெட் புகைத்து வாங்கிகட்டி கொள்வது, பதிலடி தருவது என சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறார் ரகுல் ப்ரீத் சிங். இவர்தான் தற்போது முத்த சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறார். தெலுங்கில் சீனியர் நடிகர் நாகார்ஜுனாவுடன் ஜோடியாக நடித்திருக் கிறார் ரகுல். இவர் சக நடிகை ஜென்சிக்கு லிப் டு லிப் முத்தம் தந்து நடித்திருக்கிறார். அந்த புகைப்படம் இணையதளத்தில் வைரலாகியி ருக்கிறது.

அஜித்தின் சினிமா பயணத்தின் முக்கிய பக்கம் ‘நேர்கொண்ட பார்வை’

45 வயதுகொண்ட ஒருவருக்கான கோபம், பக்குவம், மெச்சூரிட்டி என்னவென்பதை அஜித்தும் அழகாக வெளிப் படுத்தியிருந்தார். மாஸ் ஹீரோக்களின் படம் என்றால் இதெல்லாம் இருக்கும் என்கிற பொதுவிதியில், வெறும் 10 சதவிகிதம்கூட இல்லாத படம்தான், இந்த ‘நேர்கொண்ட பார்வை’ என உறுதியாகச் சொல்லலாம்.

அஜித்துக்கு வாழ்த்துகள் கூறி இந்தக் கட்டுரையை ஆரம் பித்தால் சரியாக இருக்கும். ‘நோ மீன்ஸ் நோ’ எனச் செ ால்லி இவர் இப்படத்தில் நடிக்க மறுத்திருந்தால், ‘பிங்க்’ படத்தின் தமிழ் ரீமேக்கான ‘நேர்கொண்ட பார்வை’ இவ் வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்குமா என்பது சந்தேகமே. முதலில், இந்தக் கதை சொல்ல வரும் விஷ யத்தைப் புரிந்துகொண்டால் மட்டுமே இந்தக் கதாபாத்தி ரத்தில் நடிக்க முடியும்; அதை எந்தவித தயக்கமுமின்றி வெளிப்படுத்த முடியும். அதில் சற்றும் தடுமாறாத அஜித், அந்தக் கதாபாத்திரத்தின் தன்மையை சிறிதளவும் குறைத் துக்கொள்ளாமல் நல்ல ஒரு தெளிவோடு இப்படத்தை நமக்கு வழங்கியிருக்கிறார். அஜித், ‘அமராவதி’யில் ஆரம் பித்து‘உன்னைத் தேடி’ படம் வரை ரொமான்ஸ் ஜானரை மட்டுமே கையாண்டு வந்தார். காதலுக்கு கால நேரமே இல்லை. காதலை கையில் எடுத்தால் ஹிட்தான் என்பதை உணர்ந்து தன்னுடைய ஆரம்பகட்ட படங்களில் நடித்து வந்தார். அதுபோன்ற படங்களில் இவர் நடித்து வந்தது பெண் ரசிகர்களை இவருக்கு உருவாக்கிக் கொடுத்தது. பால் வடியும் முகம், ஜென்டில்மேன் கண்ணாடி, ஃபார்மல் மீசை யென எந்தவித ஆரவாரமுமின்றி நடித்துவந்தார். அஜித்தின் இந்தப் பிம்பத்தை உடைத்தது எஸ்.ஜே.சூர்யாவின் ‘வாலி’. வசனமே இல்லாமல் வெறும் பபுள்கம்மை மட்டும் மென்று வில்லத்தனத்தை வெளிப்படுத்தியிருந்தார். இதற்காக சிறந்த நடிகருக்கான ஃபிலிம் ஃபேர் விருதும் பெற்றார்.

‘வாலி’ கொடுத்த வெற்றிக்குப் பிறகு, தான் ஏற்று நடிக்கும் கதாபாத்திரத்தின் தன்மையை சில படங்களுக்கு நடுநடுவே மாற்றியமைத்து பரிசோதித்துப் பார்த்தார். அந்த பரிசோதனையில் இவர் முயன்ற படம்தான் ‘அமர்க்களம்’. அவலப்பிள்ளைக்குள் இருக்கும் இருண்ட பக்கத்தை தன்னுடைய கோபத்தின் மூலம் காட்டியிருந்தார். அந்தப் படம்தான் அவரது சினிமா புத்தகத்தில் சிறப்பான பக்கம். தனக்கான‘மாஸ்’ என்ற வட்டத்தை மெதுவாக வரையத் தொடங்கியது அந்தப் படத்திலிருந்துதான்.

தனக்கான சரியான ஃபார்முலாவை வரையறை செய் துகொண்ட அஜித், தன்னுடைய கரியரில் அதை மெள்ள மெள்ள பிரயோகிக்கத் தொடங்கினார். சில ரொமான்டிக் படங்களையும், நடுநடுவே ஒரு மாஸ் படத்தையும் கொடுக் கத் தொடங்கினார். இதற்குக் காரணம், இருபால் ரசிகர்க ளையும் தன்வசம் வைத்துக்கொள்ளும் யுக்திதான். அதன் பிறகு இவரது ஃபார்முலாவை மாற்றியமைக்க நினைத்து, நடித்த படம்தான்,‘பில்லா’. அந்தச் சமயத்தில் அஜித் துக்கென்று ஒரு தனி இமேஜ் உருவாகியிருந்தது. ரஜினி காந்த்தும் பில்லாவின் ரீமேக்கில் அஜித் நடிக்கப்போகிறார் எனத் தெரிந்ததும் மறுப்பு தெரிவிக்காமல், ஓகே சொல்லி விட்டார். மாஸோடு சேர்ந்து க்ளாஸும் உருவானது‘பில்லா’ படத்தின் மூலம்தான்.

அதன்பிறகு முழுக்கவே க்ளாஸ் மற்றும் மாஸ் படங் கள்தான். பில்லாவைத் தொடர்ந்து ‘அசல்’, ‘மங்காத் தா’, ‘பில்லா 2’, ‘ஆரம்பம்’, ‘வீரம்’,‘என்னை அறிந்தால்’ என வரிசையாக மாஸ், க்ளாஸ் படங்களில் நடித்து தனக்கான மாஸ் ரசிகர்கள் பட்டாளத்தை உருவாக் கிக்கொண்டார். இதனால் பெண் ரசிகர்கள் குறைந்ததாக உணர்ந்த அஜித், சிவாவிடம் பேசி ‘வேதாளம்’ படத்தை ஓகே செய்தார்.‘பாவம் ச ார் பொண்ணுங்க...’ என்ற சென்டிமென்ட் வசனத்தையும், தங்கச்சி சென்டிமென்டையும் பெண் ரசிகர்கள் வரவேற்றனர். ‘விவேகம்’ தோல்வியடைந்த தையடுத்து,‘விஸ்வாச’த்தோடு ரசிகர்களை திரையில் சந்தித்த அஜித், அந்தப் படத்தின் மூலம் குடும்ப ரசிகர்களை லாரி லாரியாக சம்பாதித்தார்.

இது எல்லாவற்றுக்கும் மேலாக இவர் தேர்ந்தெடுத்து நடித்த ‘நேர்கொண்ட பார்வை’தான் இவரது சினிமா பாதை யில் முக்கியமான படம். பொதுவாக, இப்படிப்பட்ட வட் டத்திலிருக்கும் பெரிய ஹீரோக்கள் சேஃபர் சைடு, அதாவது பாதுகாப்பான இடத்திலிருந்துதான் கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து நடிப்பார்கள். பெண்ணியம் போன்ற சென்சி ட்டிவான விஷயத்தை தேர்ந்தெடுக்கும்போது வேண்டாம் என்ற யோசனைதான் இறுதியில் வந்திருக்கும். அதைச் சற்றும் பொருட்படுத்தாமல் தற்போது சமூகத்துக்கு மிக வும் தேவைப்படுகிற விஷயத்தை பேசும் படத்தில், இவர் தலைமை தாங்கி நடித்திருப்பது வரவேற்கத்தக்க விஷயமே.

ரொமான்டிக் வட்டத்திலிருந்து மாஸ் என்ற வட்டத்துக் குள் வந்தார். பிறகு ஆன்டி ஹீரோ, அதன் பிறகு க்ளாஸ், இது எல்லாவற்றுக்கும் மேலாக தனது நிஜ முகம், அதாவது சால்ட் அண்டு பெப்பரில் என ஒரு கதாநாயகனுக்கான வரை யறைகளை உடைத்தார். அதுமட்டுமின்றி, அஜித் அவரது படங்களில் பேசும் வசனங்கள் திரையில் மாஸாக பார்க்கப் பட்டாலும், வெளியே வந்தவுடன் அதைக் காமெடியாக மாற்றி, கலாய்த்து மீம்ஸ் போடுவதுதான் வழக்கமாக நடக் கும். உண்மையைச் சொல்லப்போனால் ஒரு கட்டத்துக்கு மேல் அஜித்தின் டயலாக் மாடுலேஷனும் படத்துக்குப் படம் மாறத் தொடங்கியது. முக்கியமாக ‘விவேகம்’படத் தின் டயலாக் டெலிவரி ரசிகர்களையே சோதித்தது. இது அனைத்தையும் தகர்த்தது, ‘நேர்கொண்ட பார்வை’.

முதல் நாள் முதல் ஷோ, ஒரு ரசிகன் அஜித் படம் பார்க்க வருகிறார். திரையில் எவ்வித ஆரவாரமுமின்றி அஜித்தைப் பார்க்கிறார். கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் கழித் துதான் அஜித் முதல் வசனம் பேசுவதையே பார்க்கிறார். மொத்த படத்திலும் ஒரே ஒரு சண்டைக் காட்சிதான். இது வரை அஜித்தை இப்படிப் பார்த்திருக்காதவரின் மனநிலை என்னவாக இருக்கும். இதையெல்லாம் யோசிக்காமலா அஜித் இந்த ஸ்க்ரிப்ட்டைத் தேர்ந்தெடுத்திருப்பார்? ‘இது வும் படம்தான் பாருங்க தம்பிகளா’ என்று சொல்லாமல் செ ால்லி அனைவரையும் அமர்த்தியிருக்கிறார், அஜித்.

‘பிங்க்’ படத்தில் அமிதாப் பச்சனுக்கு வயது, 60. அதை விட இப்படத்தில் அஜித்துக்கு வயது குறைவாகத்தான் காட்டியிருப்பார்கள். இதையே பூஸ்ட்டாக வைத்து வணிக யுக்திக்காக சில மாஸ் விஷயங்களையும், ரொமான்ஸ் போர்ஷனையும் படத்தில் சேர்த்திருப்பார்கள். தவிர, அஜித் தும் அதற்கான மெச்சூரிட்டியோடு நடித்திருப்பார். 60 வயது கொண்ட ஒருவருக்கு எந்தளவு பக்குவமும், மெச் சூரிட்டியும் இருக்குமோ அதை அமிதாப் பச்சனும், ஏறத் தாழ 45 வயதுகொண்ட ஒருவருக்கான கோபம், பக்குவம், மெச்சூரிட்டி என்னவென்பதை அஜித்தும் அழகாக வெளிப் படுத்தியிருந்தார்கள். மாஸ் ஹீரோக்களின் படம் என்றால் இதெல்லாம் இருக்கும் என்கிற பொதுவிதியில், வெறும் 10 சதவிகிதம்கூட இல்லாத படம்தான், இந்த‘நேர்கொண்ட பார்வை’ என உறுதியாகச் சொல்லலாம். அப்படி மாஸ் ஹீரோக்களின் ரசிகர்களுக்கான விஷயங்கள் ஒரு படத்தில் குறைவு என்றாலும், கன்ட்டென்ட் வலுவாக இருந்தால் மாஸ் இல்லாமலும் பாஸ் ஆகும் என்பதை நிரூபித்திருக்கி றது, அஜித்தின் ‘நேர்கொண்ட பார்வை’.

உடற்பயிற்சியின் கால அளவு தெரியுமா?

கழிவு மண்டலங்களின் இயக்கம், செரிமானம் மற்றும் கழிவு மண்டலங்களின் இயக்கம், முதலிய அனைத்து இயக்கங்களுக்கும் சுமார் 400க்கும் மேற்பட்ட தசைகள் காரணமாக உள்ளன. இதற்கு ஒரு நாளில் 30 நிமிடங்களாவது நாம் உடற்பயிற்சி செய்வது மிகவும் அவசியம்.

நாம் செய்யும் உடற்பயிற்சி இந்த 400 தசைகளுக்கும் நீட்டவும், மடக்கவும் பயிற்சி கொடுப்பதாக இருக்க வேண்டும். இதற்கு 5 அல்லது 10 நிமிடங்கள் மட்டுமே உடற்பயிற்சி செய்வது போதாது. குறைந்தது 30 நிமிடங்களாவது இந்த தசைகளுக்கு பயிற்சி கொடுத்தால் தான் நமது உடல் உறுப்புகளுக்கு தேவையான சக்தி கிடைக்கும்.

வனப்பான உடல் பொலிவைப் பெறுவது என்பது, நாம் உடற்பயிற்சி ஆரம்பித்த போது நமது ஆரோக்கியம், உடல் தகுதி முதலியவை எப்படி இருந்தது என்பதைப் பொறுத்து அமையும். சிலருக்கு சில வாரங்களோ வேறு சிலருக்கு சில மாதங்களோ கூட ஆகலாம். ஆனால் ஒன்று நிச்சயம்.

எவராக இருப்பினும், நாளை, நாளை மறுநாள் என்று தள்ளிப் போடாமல் உடற்பயிற்சியை மிதமாகவும், தவறாமலும், ஒழுங்காகவும் செய்து வந்தால் வாழ்நாள் முழுவதும் கட்டுடலுடனும், முழு உடல் தகுதியுடனும், ஆரோக்யமாக வாழலாம்.

வயிற்றில் புண் வராமல் தடுக்க எளிய வழிகள்

நேரம் கடந்த உணவு, அதிக பட்டினி, எளிதில் ஜீரணமாக உணவு, அதிக உணவு போன்ற காரணங்களால் வயிற்றில் புண் உண்டாகிறது. அதுபோல் மன அழுத்தம், மன எரிச்சல், அதிக கோபம், பயம், வெறுப்பு இவைகளாலும் வயிற்றில் புண் உண்டாகிறது. மலச்சிக்கல், அஜீரணக் கோளாறும் வயிற்றில் உள்ள அபாய வாயுவை சீற்றமடையச் செய்து வயிற்றுப்புண்ணை உண்டாக்குகிறது.

★ அதுபோல் மனம் சம்பந்தப்பட்ட காரணங்களால் இயல்புக்கு மாறாக சுரப்பிகள் அதிகம் நீரைச் சுரந்து வயிற்றுப் பாதிப்பை உருவாக்குகிறது.

★ உணவை நன்கு மென்று சாப்பிட வேண்டும்.

★ அதிக சூடான பானங்களை, குடிக்கக்கூடாது. அதுபோல் வேகமாகவும் அருந்தக்கூடாது.

★ சூடான உணவுப்பொருட்களை சாப்பிடக்கூடாது.

★ அதிக குளிரூட்டப்பட்ட உணவுகளையும் தவிர்ப்பது நல்லது.

★ புளி, காரம் இவற்றை கண்டிப்பாக குறைத்துக் கொள்ள வேண்டும்.

★ மது, போதை, புகை போன்றவை இரைப்பையை பாதித்து, குடல்களில் புண்களையும் உண்டாக்கும்.

★ எளிதில் ஜீரணமாகாத உணவுகளை தவிர்த்து, எளிதில் ஜீரணமாகும் உணவுகளை உண்ண வேண்டும்.

★ பசித்த பின் உணவு அருந்த வேண்டும். அதிகமாக உணவு அருந்தக்கூடாது.

★ அதிகமாக புளித்துப்போன உணவுகளைச் சாப்பிட வேண்டாம். இரவில் புளித்த தயிர், மோர் கெடுதலை ஏற்படுத்தும்.

★ கோபம், டென்சன், எரிச்சல், அதிக பயம் இவற்றை குறைத்துக்கொள்ள வேண்டும்.

★ தினமும் குறைந்தது 2 லிட்டர் தண்ணீராவது குடிக்க வேண்டும்.

- மேற்கண்ட நடைமுறைகளை சரியாக கடைப்பிடித்து வந்தால் வயிற்றுப்புண் ஏற்படாமல் ஆரோக்கியமாக வாழலாம்.

ஒற்றைத் தலைவலி காரணங்கள்... தீர்வுகள்!

தாங்கவே முடியாதது எனச் சில வலிகள் உண்டு. அந்தப் பட்டியலில் முதல் வலி... தலைவலி. அதிலும், ஒற்றைத்தலைவலி வந்துவிட்டால்... அதோ கதி. தலையில் ஒரு பக்கமாகத் தொடர்ந்து வலித்துக்கொண்டே இருக்கும்; ஒரு வேலையும் செய்ய முடியாது. கையும் ஓடாது, காலும் ஓடாது. சிலருக்கு மாலை வேளையானால் தலைவலி தொடங்கிவிடும். அதிகச் சத்தம் கேட்டால், மனதுக்குப் பிடிக்காத சம்பவங்கள் நடந்தால்... என தலைவலிக்கான காரணப் பட்டியலின் நீளம் அதிகம். தலைவலிக்கும் நேரத்தில் யாராவது அன்பாகப் பேசினால்கூட எரிச்சலாக வரும்; கோபம் தலைக்கு ஏறும். 'இதற்குத் தீர்வே இல்லையா? எனப் புலம்புவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. காலையில் எழுந்து பல் துலக்கியதுகூட, ஒற்றைத் தலைவலிக்குக் காரணமாக இருக்கலாம் என்றால் நம்ப முடிகிறதா?

ஏன் வருகிறது ஒற்றைத்தலைவலி?

அதிக வேலை, மனக் குழப்பம், மன அழுத்தம் ஆகியவையே, ஒற்றைத்தலைவலி வருவதற்கு முக்கியமான காரணங்கள். உடலின் வெப்பமும் தலைவலி வருவதற்கு ஒரு காரணம். உடலில் வெப்பம் அதிகரிக்கும்போது, தலைக்குச் செல்லும் நரம்பு மண்டலங்களில் ரத்த ஓட்டம் தடைபடும். இதனால், அதன் இயக்கத்தில் மாறுபாடு உண்டாகி, தலைவலி வரும். உடல் வெப்பத்தைச் சமநிலையில்வைக்க, வாரம் ஒரு முறையாவது எண்ணெய்க் குளியல் எடுத்தால் போதும்.

சிலருக்கு மலச்சிக்கல் பிரச்னை இருந்தாலும், உடலில் வெப்பம் அதிகமாகி, தலைவலியை உண்டாக்கும். உணவில் உப்பு, காரம், புளிப்பு சம அளவில் இருக்க வேண்டும். இதில், ஏதேனும் ஒன்றை மட்டும், தொடர்ந்து அதிகமாக எடுத்துக்கொள்வோருக்கும் இந்தப் பிரச்னை உண்டாவதற்கு வாய்ப்புகள் உண்டு.

ரத்தக் குழாய்கள் விரிவடைதல் மற்றும் வீங்குதலாலும் வலி உண்டாகும். அந்த நேரத்தில், நைட்ரிக் ஆக்ஸைடு அமிலம் அதிகமாகச் சுரக்கும். அது, ரத்தக் குழாய்களைத் தூண்டும்.

5-ஹைட்ராக்சிரிப்டமின் (5-Hydroxytryptamine) எனும் அமிலத்தின் அளவும் ரத்தத்தில் அதிகரிக்கும். அப்போது ஏற்படும் சீரற்ற ரத்த ஓட்டத்தினால் நரம்புகள் பாதிக்கப்பட்டு, வலி உணரப்படும். வலி உணர்ச்சியைத் தரக்கூடிய ட்ரைஜெமினல் (Trigeminal) என்னும் அமிலமும் அதிகம் சுரந்து, வலி உணர்வை அதிகரிக்கும். இவ்வாறு உண்டாகும் வலி, அதிகபட்சம் நான்கு மணி நேரம் வரையிலும் நீடிக்கலாம். சிலருக்கு இரண்டு பக்கங்களிலும் வலி வரலாம்.

பார்வை நரம்புகளில் ஏற்படும் பாதிப்புகளாலும் ஒற்றைத்தலைவலி வரும். இரவில் அதிக நேரம் கண் விழித்திருத்தல், காலையில் அதிக நேரம் உறங்குதல், வெயிலில் அதிக நேரம் இருப்பதும்கூட தலைவலிக்குக் காரணமாகிவிடும். உடலின் வேறு பிரச்னைகளுக்காக அடிக்கடி மருந்து, மாத்திரைகள் எடுத்துக்கொள்வோருக்கும், ஒற்றைத்தலைவலி ஏற்படும் வாய்புகள் அதிகம்.

அறிகுறிகள் என்னென்ன?

வலி வருவதை சில அறிகுறிகளை வைத்து முன்னரே கண்டுகொள்ளலாம். திடீரென சில பகுதிகள் வட்டமாகப் பார்வைக்குத் தெரியாமல் போவது (Scotoma), ஒரு பக்கம் மட்டும் தெரியாமல் போவது (Hemianopsia). கண்ணில் பளிச்பளிச் என மின்னுவது (Teichopsia), சமதளமான இடத்திலும் வரிவரியாகக் கோடுகள் தெரிவது (Fortification Spectra), கண்ணுக்குள் பூச்சி பறப்பது, எதிரில் உள்ள உருவம் கறுப்பாகத் தெரிவது எனச் சில அறிகுறிகள் தென்படும்.

சிலருக்கு, தற்காலிகமாகப் பேச்சு வராது. ஒரு பக்கமாக கை, கால்களில் துடிப்பு, மதமதப்பு உண்டாகி சரியாகும். வாந்தி அல்லது குமட்டல் உணர்வு இருக்கும். இந்த நேரத்தில், அமைதியாக அறைக்குள், அனைத்து விளக்குகளையும் அணைத்துவிட்டு, இருளை ஏற்படுத்திக்கொண்டு உறங்குவது சற்று ஆறுதல் தரும்.

உங்க டூத் பேஸ்ட்ல இருக்கு சிக்கல்சமீப காலங்களில் பல் துலக்கும் டூத் பேஸ்ட்களாலும், ஒற்றைத் தலைவலி வருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பல் துலக்கியதும், கடமைக்கு என வாய் கொப்பளிப் போருக்குத்தான் இந்த வாய்ப்பு இன்னும் அதிகம். நாக்கிலேயே ஒட்டியிருக்கும் டூத் பேஸ்ட்டின் வேதிக் கலவை, சாப்பிடும்போது அப்படியே உடலுக்குள் சென்றுவிடும். நேரடியாக நுரையீரலைப் பாதிக்கும்.

பல நாட்களுக்குத் தொடர்ந்து இவ்வாறு நடக்கும்போது, தலைவலியை உண்டாக்கிவிடும். தவிர, உடுத்தும் உடைகளில் ஒட்டியிருக்கும் டிடர்ஜென்ட் பௌடர், வாசனைத் திரவியங்கள் வியர்வை வழியாக உடலில் கலந்தாலும் இப்படியான சிக்கல்கள் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம். சிலருக்கு சாக்லேட், சீஸ், எண்ணெய் உணவு, வெண்ணெய், புளிப்பு அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளைச் சாப்பிடுவதாலும் வலி வரும்.

பாதிப்பது அதிகம் பெண்களே!

ஆண்களைக்காட்டிலும், பெண்களே ஒற்றைத்தலைவலியால் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு, கர்ப்பப்பை பிரச்னை, நீர்க்கட்டிகள், ஒழுங்கற்ற மாதவிலக்கு, வெள்ளைப்படுதல் போன்றவை காரணமாக இருக்கின்றன. தவிர, பூப்பெய்தும் காலம், மாதவிலக்கு வரும் காலக்கட்டம், மெனோபாஸ் நிலையை அடையும்போது, கருத்தடைக்காக ஹார்மோன் மாத்திரைகள் சாப்பிடும் நேரங்களிலும் ஒற்றைத் தலைவலி வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

பீடி, சிகரெட், புகையிலை பயன்படுத்தும் ஆண்களின் உடலில் உண்டாகும் பித்தத்தால், உடலின் ஆற்றல் குறையும். இதனால், வயிற்றுப்புண் உண்டாகி, வெப்பம் அதிகரிக்கும். இதுவும் ஒற்றைத்தலைவலியில் முடியும்.

எப்படிக் குணப்படுத்துவது?

பக்கவாத ஒற்றைத் தலைவலி (Hemiplegic Migraine), கண் நரம்பு ஒற்றைத்தலைவலி (Ophthalmoplegic Migraine) முக நரம்பு ஒற்றைத்தலைவலி (Facioplegic Migraine) என வலிகளில் பலவகை உள்ளன. மனதை அமைதியாக வைத்துக்கொள்ளுதல், தேவையற்ற சிந்தனையைத் தவிர்த்தல், நல்ல தூக்கம் என வாழ்க்கைமுறைகளை மாற்றிக்கொண்டாலே வலி வராமல் தடுத்துக்கொள்ள முடியும். அலுப்பு தரக்கூடிய ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்யாமல் இருத்தல், மனதுக்குப் பிடித்த வேலைகளைச் செய்தல், வயல்வெளி, பூங்கா, இயற்கைக் காட்சிகளை ரசித்தல் எனப் பசுமையான இடங்களுக்குச் செல்வதன் மூலம் மனதை அமைதிப்படுத்தி, வலி உண்டாகாமல் தவிர்க்கலாம். தவிர, உடலில் வெப்பம் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். தலையில் நீர்கோத்தல், மூளையில் கட்டி என ஒற்றைத்தலைவலி ஏற்பட பல காரணங்கள் உள்ளன. எனவே, சாதாரணத் தலைவலி என்று புறக்கணிக்காமல், ஏன் ஏற்படுகிறது எனக் காரணத்தை ஆராய்ந்து, அதற்கான சிகிச்சையை எடுத்துக்கொள்ள வேண்டும். வலி, தாங்கவே முடியாதபட்சத்தில் மட்டும் மருத்துவரின் பரிந்துரைப்படி வலி நிவாரண மாத்திரைகள் எடுத்துக்கொள்ளலாம். ஒற்றைத் தலைவலி தீர்க்கவே முடியாத நோய் என்றுதான் பலரும் பயப்படுகின்றனர். அது, ஓர் அறிகுறி மட்டுமே. நோய்க்கான அறிகுறியை அறிந்து வாழ்க்கைமுறையை மாற்றிக்கொண்டால், ஒற்றைத்தலைவலியில் இருந்து விடுபடுவது நிச்சயம்.

தோசைப்பிரியரா நீங்கள்?

தோசை சாப்பிடுவதிலும் சில நன்மைகள் இருக்கின்றன. ஆனால், தினமும் வெறும் அரிசி மாவு தோசையாக மட்டுமின்றி கம்பு, ராகி என வகை வகையான தோசைகள் சாப்பிடுவது உடலுக்கு நல்லது. தோசைக்கு சேர்க்கப்படும் எண்ணெயை குறைத்துக் கொண்டீர்கள் எனில் தோசையும் இட்லியை போல ஓர் சிறந்த காலை உணவு தான்....

உடற்சக்திக்கு நமது உடலுக்கு கார்ப்ஸ் அவசியம் தேவைப்படுகிறது. தோசையில் இது கிடைக்கிறது. ஆனால் தோசையில் சேர்க்கப்படும் அதிகளவு எண்ணெய் உடலுக்கு நல்லதல்ல. தோசையில் இருந்து நமக்கு மினரல்ஸ் மற்றும் வைட்டமின்களும் கூட சிறிதளவு கிடைக்கிறது. தோசைக்கு சாம்பார் பயன்படுத்துவதன் மூலம் புரதம், வைட்டமின், மினரல்ஸ் போன்ற சத்துக்கள் நிறையவே கிடைக்கின்றன.

தோசையில் கொழுப்பு குறைவு. இதை காலை உணவில் சேர்த்துக் கொள்வதால் இதய நலனை பாதுகாக்கலாம். குறிப்பாக எண்ணெய்யை அதிகம் பயன்படுத்த கூடாது. தினமும் அரிசி தோசையை மட்டும் சாப்பிடுவதற்கு பதில் ராகி, கம்பு, சோளம், என எதை வேண்டுமானாலும் இதில் கலந்து தோசையாக சுட்டு சாப்பிடலாம். ராகி, கம்பி போன்றவற்றை வெறுமென சாப்பிட விரும்பாதவர்கள் கூட தோசையில் கலந்து சாப்பிட விரும்புவார்கள். இதன் மூலம் உடலுக்கு தேவையான அனைத்து சத்துக்களும் கிடைக்கின்றன.

சர்க்கரை நோய் உள்ளவர்கள் உள்ளவர்கள், அரிசி மாவு தோசைக்கு பதிலாக ராகி, கம்பு, கோதுமை போன்ற வற்றை கலந்து தோசை சாப்பிடலாம். இது உங்கள் உடலில் இருக்கும் சர்க்கரையை கட்டுப்படுத்த உதவும். முட்டையை வேகவைத்து சாப்பிட பிடிக்காதவர்கள் முட்டை தோசை செய்து சாப்பிடலாம்.

பார்வைக் கோளாறை சரியாக்கும் கரட் ஜூஸ்

கேரட் மிகவும் சிறப்பான ஊட்டச்சத்து மற்றும் நார்ச்சத்துக்கள் நிறைந்த காய் கறி. இதனை பச்சையாகவோ அல்லது ஜூஸ் வடிவத்திலோ எடுத்துக் கொள்ளலாம். எப்படி எடுத்துக் கொண்டாலும், அதனால் கிடைக்கும் நன்மைகள் ஒன்று தான். ஒரு கப் கேரட் ஜூஸின் எடை 236 கிராம் வரும். அதாவது மூன்று பெரிய கேரட் ஆகும்.

ஒரே நேரத்தில் மூன்று பெரிய கேரட்டுகளை யாராலும் சாப்பிட முடியாது. ஆனால் ஒரு கப் கேரட் ஜூஸை ஒரே நேரத்தில்

குடிக்க முடியும். இதனால் உடலுக்கு கிடைக்கும் சத்துக்களின் அளவு அதிகரிக்கும். கேரட் சாப்பிடுவதற்கு பதிலாக, கேரட்டை ஜூஸ் செய்து தினமும் ஒரு டம்ளர் குடித்து வாருங்கள்.

★ தற்போது கணினி முன்பு வேலைப் பார்ப்போரின் எண்ணிக்கை அதிகம் உள்ளது. அதுமட்டுமின்றி மொபைலை அதிக நேரம் உற்றுப் பார்ப்பதன் மூலமும் பார்வை கோளாறு விரைவில் ஏற்படும். எனவே இத்தகையவற்றை தவிர்க்க தினமும் கேரட் ஜூஸ் குடித்து வந்தால், அதில் உள்ள பீட்டா-கரோட்டீன் மற்றும் லுடீன், பார்வை கோளாறு ஏற்படுவதைத் தடுத்து, நல்ல பாதுகாப்பு வழங்கும்.

★ கேரட்டில் உள்ள கரோட்டீனாய்டு என்னும் பொருள் இரத்த சர்க்கரையின் அளவை சீராக பராமரிக்க உதவும். எனவே தினமும் ஒரு டம்ளர் கேரட் ஜூஸ் குடித்து வந்தால், சர்க்கரை நோய் வருவதைத் தடுக்கலாம்.

★ வைட்டமின் ஏ குறைபாட்டினால் தான் சருமம் அதிகம் வறட்சியடைவதோடு, நகம் மற்றும் முடியும் மிகுந்த அளவில் பாதிக்கப்படுகிறது. கேரட்டில் இந்த வைட்டமின் ஏ அதிகம் உள்ளதால், தினமும் ஒரு டம்ளர் கேரட் ஜூஸ் குடிப்பதன் மூலம் சருமம் வறட்சி அடைவதைத் தடுப்பதோடு, சருமத்தின் பொலிவையும் அதிகரிக்கலாம்.

★ உணவு உண்பதற்கு 20 நிமிடங்களுக்கு முன் கேரட் ஜூஸ் குடித்தால், செரிமான அமிலத்தின் சுரப்பு சீராக தூண்டப்பட்டு, செரிமான பிரச்சனைகள் ஏற்படுவது தடுக்கப்படும்.

★ கேரட் ஜூஸில் வைட்டமின் ஏ வளமாக நிறைந்துள்ளதால், அதனை ஜூஸ் போட்டு தினமும் குடிப்பதன் மூலம், சுவாச பிரச்சனைகள் ஏற்படுவது தடுக்கப்படுவதோடு, சிகரெட் பிடித்தோ அல்லது சிகரெட் பிடிப்போரின் அருகில் இருந்தோ நுரையீரலில் படிந்த நச்சுக்கள் வெளியேற்றப்பட்டு, நுரையீரல் ஆரோக்கியமாக இருக்கும்.

★ தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள், தினமும் ஒரு டம்ளர் கேரட் ஜூஸ் குடிப்பதன் மூலம், தாய்ப்பாலின் அளவு அதிகரிப்பதோடு, கால்சியம் குறைபாடு தடுக்கப்பட்டு, குழந்தைக்கு வேண்டிய வைட்டமின் ஏ சத்து கிடைத்து, குழந்தையின் ஆரோக்கியமும் மேம்படும்.

திருமணத்திற்குப் பின் ஆண்களின் உடல் எடை அதிகரிக்கும் காரணங்கள்

கடைபிடித்து வந்த கொஞ்ச டயட் மற்றும் உடற்பயிற்சியையும் திருமணத்திற்கு பிறகு மறந்துவிடுவோம்.

இதற்கு காரணம் கல்யாணம் ஆக புதிதில் ஏற்படும் சந்தோஷம். விருந்துகளுக்கு செல்வதால் நேரம் கிடைக்காமை.

திருமணம் நிச்சயமான பிறகு ஜிம்மிற்கு சேரும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

ஆனால், திருமணமான பிறகு இவர்கள் அப்படியே நின்றுவிடுவார்கள். பல ஆண்கள் தங்களது திருமண ஆல்பத்தில் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக தான் உடல் எடையில் கொஞ்சம் கரிசனமான அக்கறை எடுத்துக் கொள்கின்றனர். திருமணத்திற்கு பிறகு உடல் எடை பற்றி ஆண்கள் எந்த கவலையும் கொள்வதில்லை.

பெரும்பாலும் திருமணத்திற்கு பிறகு டயட்டை ஆண்கள் கடைபிடிப்பதில்லை. திருமணம் முடிந்தவுடன் பல விருந்துகள், மனைவியின் கையால் சமைத்த சாப்பாடு என டயட் என்றால் என்ன என்பதை மறப்பது தான், திருமணத்திற்கு பிறகு திடீரென உடல் எடை அதிகரிக்க காரணமாக இருக்கிறது.

மனைவியிடம் இருந்து வெளிவரும் அந்த ஆரம்பக்கட்ட அன்பில் திளைத்து, பூரித்து போய். அவர்கள் அதிகமாக எதை வைத்தாலும் வயிற்றில் அடுக்கிக் கொள்ளும் தன்மை ஆண்களுக்கு வந்து விடுகிறது.

காலையில் நடைபயிற்சி செய்துக் கொண்டிருந்த ஆண்கள் கூட, திருமணத்திற்கு பிறகு அதை சிறிது காலத்திற்கு மறந்துவிடுகிறார்கள். உடல் பருமன், தூக்கமின்மை, மன அழுத்தம் போன்றவை தான் நீரிழிவு, இதய பாதிப்புகள் போன்றவை அதிகம் ஏற்பட காரணமாக இருக்கிறது. எனவே, முடிந்த வரை டயட், உடற்பயிச்சி, சரியான நேரத்திற்கு தூக்கத்தை கடைபிடிக்க மறந்துவிட வேண்டாம்.

மொபைல் போனை சுத்தம் செய்வது எப்படி?

வீட்டிலிருக்கும் பொருள்களில் அதிக கிருமிகள் வாழும் பொருள்கள் எவையென நினைக்கிறீர்கள்?

கழிப்பறை போன்ற நமக்குத் தெரிந்த இடங்களை விட்டுவிடுவோம். நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களை எடுத்துக் கொள்வோம். அப்படிப் பார்த்தால் ரூபாய்த் தாள்களும் மொபைல் போனும்தான் டாப் 3-ல் இருக்கும்.ம ருத்துவமனைகள், ஒயின் ஷாப்புகள், மாமிசக் கடைகள் என ரூபாய்த் தாள்கள் பல இடங்களைக் கடந்து வருகின்றன.

அவற்றிலிருக்கும் கிருமிகளின் அளவு அதிகம். அதற்கடுத்த இடத்திலிருப்பது மொபைல்தான். ரூபாய்த்தாள்களை சுத்தம் செய்ய முடியாது. ஆனால், மொபைலைச் சுத்தம் செய்யலாம். எப்போதாவது உங்கள் மொபைலை நீங்கள் சுத்தம் செய்ததுண்டா? பெரும்பாலான மொபைல்கள் வாட்டர் ப்ரூஃப் கிடையாது. எனவே தண்ணீரைப் பயன்படுத்தி சுத்தம் செய்ய முடியாத பொருள்ஸ்மார்ட்போன். இதற்கு வேறு வழிகள் உண்டு.

எப்படிச் செய்ய வேண்டும்?

மாதம் ஒரு முறை ஒரு ஞாயிற்றுக்கிழமையில் 30 நிமிடங்கள் இதற்குச் செலவிட்டால் போதும்.

★ முதலில், மொபைலை சுவிட்ச் ஆஃப் செய்யவும்.

★ மொபைல் கேஸ் ஏதும் போட்டிருந்தால் அதையும் கழற்றவும்.

★ பேட்டரி தனியே எடுக்கக்கூடிய மொபைல் என்றால் அதையும் தனியே எடுக்கவும்.

★ மொபைலுக்கு ஸ்க்ராட்ச் கார்டு போட்டிருந்தால் அது நன்றாக இருக்கிறதா என்பதைச் சோதிக்கவும். மாற்ற வேண்டிய நிலையிலிருந்தால் அதையும் நீக்கவும்.

மொபைலைச் சுத்தம் செய்ய நமக்குச் சில பொருள்கள் தேவை. காட்டன் பட்ஸ், உலர்ந்த துணி, கொஞ்சம் ஆல்கஹால் அல்லது சுத்தம் செய்யக் கிடைக்கும் லிக்விட் க்ளீனர்ஸ், மைக்ரோ ஃபைபர் துணி

★ உங்கள் மொபைல் பிளாஸ்டிக்கால் ஆனதென்றால் காட்டன் பட்ஸை ஆல்கஹாலில் தோய்த்து, அதனால் மொபைல் பாகங்களைச் சுத்தப்படுத்தவும். மெட்டலால் ஆன பாடி என்றால் தண்ணீரில் நனைத்த பட்ஸே போதும்.

★ கேமரா லென்ஸ், சார்ஜிங் போர்ட் என அனைத்தையும் பட்ஸால் சுத்தம் செய்யவும். செய்த உடனே, உலர்வான இன்னொரு காட்டன் பட் மூலம் மீண்டும் சுத்தம் செய்யவும்.

★ திரையை மைக்ரோ ஃபைபர் துணி கொண்டு துடைக்கவும். திரையைத் துடைக்கும்போதும் மேலிருந்து கீழ் வரை ஒரே ஃப்ளோவில் துடைக்கவும்.

★ சில மொபைல்கள் தடிமனாக இருக்கலாம். சில மொபைல்களின் கேஸிங்குகள் மெல்லியவையாக இருக்கலாம். அதனால். உடையாத அளவுக்குச் சரியான அழுத்தம் கொடுக்கவும்.

★ சில மொபைல்களின் பின்புறமும் கண்ணாடியால் செய்யப்பட்டிருக்கும். அவற்றை முன்பக்கத் திரையைத் துடைப்பதுபோலவே துடைக்க வேண்டியிருக்கும்.

★ மொபைலை சுத்தம் செய்வதுபோலவே அதன் துணைக்கருவிகளையும் சுத்தம் செய்வது நல்லது.

★ சிலர் மொபைல் கவர்களை நீண்ட நாள் கழற்றாமலே வைத்திருப்பார்கள். அப்போது உள்ளே நிறைய தூசு படர்ந்திருக்கும். அதை அப்படியே துணியால் துடைத்தால் கீறல்கள் விழலாம். நிறைய தூசு இருந்தால் அதை மெதுவாகச் சுத்தம் செய்ய வேண்டியிருக்கும். போலவே, மொபைலை சுத்தம் செய்த பின்னர் கவரையும் சுத்தம் செய்யவும். ஒருவேளை அதில் அழுக்கு போகவில்லையென்றால் கவரை மாற்றுவது நல்லது.

★ அப்பிள் மொபைல்கள் தூசு எங்கும் உள்ளே நுழைய முடியாதபடி வடிவமைக்கப்பட்டிருக்கும். இருந்தாலும் சார்ஜிங் போர்ட் மற்றும் ஹெட்போன் துளைகளில் தூசு படியலாம். அந்தத் துளைகளை மொபைலோடு வந்த சிம் எஜெக்டர் **(Sim ejector)** பயன்படுத்தி சுத்தம் செய்யலாம்.

★ ஆண்டிராய்டோ அப்பிளோ... இரண்டின் துளைகளையும் சுத்தப்படுத்த இன்னொரு வழி காற்று. அழுத்தப்பட்ட காற்றைத் துளைகளுக்குள் செலுத்தித் தூசியை எடுக்கலாம். ஆனால், அந்தக் காற்றின் அழுத்தம் அதிகமாக இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நிறைய பேர் வீட்டில் மொபைல்களைக் குழந்தைகளிடம் விளையாடத் தருகிறோம். குழந்தைகள் மொபைலை வாயில் வைத்துக் கடிப்பதுண்டு. அதனால் மொபைலைச் சுத்தமாக வைத்துக்கொள்வது குழந்தைக்கும் நல்லது. மொபைலுக்கும் நல்லது.

∴பேஸ்புக் மொபைலில் டார்க் மோட் வசதி

ஃபேஸ்புக் நிறுவனம் 2019 எஃப்8 நிகழ்வில் பல்வேறு புதிய அம்சங்கள் மற்றும் அறிவிப்புகளை வெளியிட்டது. இதில் ஃபேஸ்புக்கிற்கு புதிய தோற்றம் எஃப்.பி.5 என்ற பெயரில் அறிமுகம் செய்யப்படும் என தெரிவித்தது. இது எளிமையாகவும், வேகமாகவும் முன்பை விட சிறப்பானதாக இருக்கும் என தெரிவித்தது.

அந்த வகையில் ஃபேஸ்புக் நிறுவனம் தனது மொபைல் செயலியில் புதிதாக டார்க் மோட் வசதியை வழங்குவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த அம்சத்திற்கான பணிகள் துவக்க நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது.

ஃபேஸ்புக் மொபைலில் டார்க் மோட் வசதி சோதனை செய்யப்படும் விவரங்கள் வெளியாகியுள்ளன. முதற்கட்டமாக இந்த அம்சம் மொபைல் தளத்தில் வழங்கப்படும் என கூறப்படுகிறது. தற்சமயம் வெளியாகி இருக்கும் புகைப்படங்களில் சில பகுதிகளில் மட்டுமே டார்க் மோட் சீராக காட்சியளிக்கிறது.

இதை வைத்தே டார்க் மோட் இன்னும் முழுமையாக தயாராகவில்லை என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது. வரும் வாரங்களில் இந்த அம்சம் முழுமையாக இயங்கும் வகையில் சரிசெய்யப்படும் என எதிர்பார்க்கலாம். புதிய அம்சம் இன்னும் தயாராகவில்லை என்பதால் இதன் வெளியீடு பற்றி எந்த தகவலும் இல்லை.

இதுதவிர ஃபேஸ்புக் தனது இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் சேவைகளின் பெயர்களில் ஃபேஸ்புக் பிராண்டிங்கை சேர்த்திருக்கிறது. அதன்படி இன்ஸ்டாகிராம் ஃபிரம் ஃபேஸ்புக் **(Instagram from Facebook))** மற்றும் வாட்ஸ்அப் ஃபிரம் ஃபேஸ்புக் ***(WhatsApp from Facebook)*** என மாற்றப்பட்டுள்ளன.

வாட்ஸ்அப்பில் கைரேகை அன்லாக் வசதி

அண்ட்ராய்டில் வாட்ஸ்அப் அப்பை பயன்படுத்துபவர்களுக்கு அனைவருக்கும் விரைவில் ஃபிங்கர்ப்ரின்ட் அன்லாக் வசதி கொடுக்கப்படவுள்ளது. நீண்ட காலமாக இந்த வசதியை வாட்ஸ்அப் பயனாளர்கள் எதிர்பார்த்து வந்தனர்.

கடந்த வருடமே இந்த வசதி கிடைத்து விடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் ஐஓஎஸ் பயனாளர்களுக்கு இந்த வசதி கொடுக்கப்பட்டது. தற்போது ஆண்ட்ராய்டில் பீட்டா பயனாளர்களுக்கு மட்டும் பரிசோதனை வசதியாக ஃபிங்கர்ப்ரின்ட் அன்லாக் வசதி தரப்பட்டுள்ளது.

இந்த வசதியை இப்போது பீட்டா டெஸ்டர்கள் பயன்படுத்திப் பார்க்கலாம். இறுதியாக வெளியிடப்பட்டுள்ள அப்டேட்டான 2.19.221 வெர்ஷனை முதலில் டவுன்லோடு செய்துகொள்ள வேண்டும். அதன் பின்னர் **Settings Account Privacy** என்ற பகுதிக்குச் சென்றால் அங்கே புதிதாக **Fingerprint lock** என்ற பகுதி சேர்க்கப்பட்டுள்ளதைப் பார்க்க முடியும்.

கடந்த வருடமே இந்த வசதி கிடைத்து விடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் ஐஓஎஸ் பயனாளர்களுக்கு இந்த வசதி கொடுக்கப்பட்டது. தற்போது ஆண்ட்ராய்டில் பீட்டா பயனாளர்களுக்கு மட்டும் பரிசோதனை வசதியாக ஃபிங்கர்ப்ரின்ட் அன்லாக் வசதி தரப்பட்டுள்ளது. இந்த வசதியை இப்போது பீட்டா டெஸ்டர்கள் பயன்படுத்திப் பார்க்கலாம். இறுதியாக வெளியிடப்பட்டுள்ள அப்டேட்டான 2.19.221 வெர்ஷனை முதலில் டவுன்லோடு செய்துகொள்ள வேண்டும். அதன் பின்னர் **Settings Account Privacy** என்ற பகுதிக்குச் சென்றால் அங்கே புதிதாக **Fingerprint lock** என்ற பகுதி சேர்க்கப்பட்டுள்ளதைப் பார்க்க முடியும்.



அதில் சென்று ஃபிங்கர்ப்ரின்ட் அன்லாக் வசதியை ஆக்டிவேட் செய்து கொள்ளலாம். உடனடியாகவோ, ஒரு நிமிடம் கழித்தோ அல்லது 30 நிமிடம் கழித்தோ லாக் ஆகும் வகையில் செட் செய்து கொள்ளலாம். இதை ஆக்டிவேட் செய்த பின்னர் வாட்ஸ்அப்பை திறக்க ஃபிங்கர்ப்ரின்ட் தேவைப்படும். இதன் மூலமாக தேர்டு பார்ட்டி ஆப் லாக்குக்கான தேவையும் குறையும் வாட்ஸ்அப்பின் பாதுகாப்பும் அதிகரிக்கும்.

சொன்னதை செய்து காட்டிய குவாவே

எந்த இடமாக இருந்தாலும் அதிகாரம் என்பது ஒற்றைப் புள்ளியில் குவியும்போது, அங்கே சிக்கல் எழுவது இயல்பான விஷயம். ஸ்மார்ட்போன் உலகைப் பொறுத்தவரை அந்த ஒற்றைப் புள்ளி ஆண்ட்ராய்டுதான்.

கூகுளின் கையில் இருக்கும் அண்ட்ராய்டுதான் இன்றைக்கு உலகில் அதிகம் பயன்பாட்டில் இருக்கும் இயங்குதளம். சந்தைக்குள் நுழைந்து பத்தாண்டுகளைக் கடந்துவிட்ட ஆண்ட்ராய்டு, இத்தனை வருடங்களில் அதன் போட்டியாளர்கள் அனைவரையும் ஓரம் கட்டியிருக்கிறது.

ஸ்மார்ட்போன்களை எடுத்துக்கொண்டால், இரண்டு இயங்குதளங்கள்தாம் பிரதானமாக இருக்கின்றன. ஒன்று, கூகுளுக்குச் சொந்தமான ஆண்ட்ராய்டு , மற்றொன்று ஆப்பிளுக்குச் சொந்தமான ஐஓஎஸ். ஆண்ட்ராய்டு, ஓப்பன் சோர்ஸ் இயங்குதளமாக இருப்பதால், ஆப்பிள் தவிர்த்து அனைத்து மொபைல் நிறுவனங்களும் அதைத்தான் பயன்படுத்தி வருகின்றன. அந்த நிறுவனங்களில் ஒன்றுதான் சீனாவைச் சேர்ந்த குவாவே.

இரண்டு மாதங்களுக்கு முன், அமெரிக்க அதிபர் ட்ரம்ப், அந்நாட்டு நிறுவனங்கள் சீனாவுடன் வர்த்தகம் மேற்கொள்வதற்குத் தடை விதித்தார். ஏற்கெனவே உளவு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வந்த வாவே-வுக்கு, இந்தத் தடை பெரும் பின்னடைவைக் கொடுத்தது. கூகுள், ஒரு அமெரிக்க நிறுவனம்; அதன் தயாரிப்புதான் ஆண்ட்ராய்டு என்பதால், வாவே-வுக்கு அதைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உருவானது.

அப்படித்தான், அதிபர் ட்ரம்ப்பின் உத்தரவால் சீனா- அமெரிக்கா இடையேயான வர்த்தகப் போரில் ஆண்ட்ராய்டின் பெயர் அடிபடத் தொடங்கியது. அமெரிக்காவின் தயாரிப்புகள் எதுவும் சீனாவுக்கு செல்லக்கூடாது என்பதால், கூகுளுக்கும் வேறு வழியில்லை. உலகச் சந்தையில் இரண்டாம் இடத்தில் இருக்கிறது குவாவே. தீர்மானம் எடுக்கப்பட்ட நொடியில், அதன் தொழிற்சாலைகளில் நொடிக்கு ஆயிரக்கணக்கான ஸ்மார்ட்போன்கள் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. அவற்றுக்கு உயிரூட்டப்போவது, கூகுளின் ஆண்ட்ராய்டுதான். அப்படியிருக்கும்போது, அமெரிக்கா திடீரென எடுத்த இந்த முடிவால் முதலில் திகைத்துப்போனது குவாவே.

ஆனாலும் இந்தப் பிரச்னையைப் பொறுமையாகக் கையாண்டது. பணம் இருக்கிறது, அதையெல்லாம்விட திறமை இருக்கிறது. பிறகு எதற்காகக் கவலைப்பட வேண்டும். தனக்கென ஒரு புதிய இயங்குதளத்தை உருவாக்க முடிவுசெய்தது. அதற்கேற்றவாறு கூகுளும் சில காலத்துக்கு அண்ட்ராய்டைப் பயன்படுத்த அனுமதி கொடுத்தது. புதிய இயங்குதளத்தை உருவாக்கியே ஆக வேண்டிய கட்டாயத்தில் அதற்கான பணிகளை உடனடியாகத் தொடங்கியது. ஆனால் திடீரென யாருமே எதிர்பாராத வகையில் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான பிரச்னை முடிவுக்கு வந்தது.

ஜப்பானில், கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற **G-20** மாநாட்டில் யாரும் எதிர்பார்க்காத வகையில் ஓர் அறிவிப்பை வெளியிட்டார் ட்ரம்ப். அமெரிக்க நிறுவனங்கள், அவர்களது உபகரணங்களை வாவேவுக்கு விற்பனை செய்துகொள்ளலாம் என அவர் தெரிவித்ததால், குவாவேவுக்கு மீண்டும் கூகுளின் தொடர்பு கிடைக்கும் வாய்ப்பு உருவானது.

அதே நேரம், புதிய இயங்குதளத்தை உருவாக்கும் முயற்சியிலிருந்து குவாவே பின்வாங்கவில்லை. கடந்த மாதம், அந்த இயங்குதளம் **HongmengOS** என்ற பெயரில் அழைக்கப்படலாம் என்பது போன்ற தகவல்கள் வெளியாகத் தொடங்கின. இந்நிலையில், சீனாவின் **Dongguan** நகரத்தில் நடைபெற்ற டெவலப்பர் மாநாட்டில் தனது புதிய இயங்குதளத்தை அறிமுகம் செய்திருக்கிறது வாவே.

ஆண்ட்ராய்டின் பாதையில் ஹார்மனி

இரண்டு மாதங்களுக்கும் குறைவான காலத்தில் புதிய இயங்குதளம் ஒன்றை உருவாக்கி சாதித்திருக்கிறது, வாவே. இதற்கு, பொதுவான பெயராக ஹார்மனி **(Harmony OS)** என்ற பெயரையும் சூட்டியிருக்கிறது. அதே வேளையில், இது சீனாவில் **Hongmeng OS** என்ற பெயரிலேயே வெளியாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. குவாவே, போன்களுக்கு மட்டுமல்ல தற்போது ஆண்ட்ராய்டைப் பயன்படுத்தி வரும் அனைத்து போன்களிலும் இதைப் பயன்படுத்தலாம்.

தடையற்ற, மென்மையான, பாதுகாப்பான மற்றும் ஒருங்கிணைந்த அனுபவத்தை ஹார்மனி கொடுக்கும் என குவாவே-வின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் காலங்களில் அதிக அளவில் பயன்பாட்டுக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படும் **IoT** எனப்படும் தொழில்நுட்பத்தை கருத்தில்கொண்டு, இது உருவாக்கப்பட்டுள்ளது. இதை ஸ்மார்ட்போன்கள், ஸ்மார்ட் வாட்ச்சுகள், டி.வி-க்கள் மற்றும் வாகனங்கள் என அனைத்து விதமான ஸ்மார்ட் கேட்ஜெட்களிலும் இதைப் பயன்படுத்த முடியும். ஆண்ட்ராய்டைப் போலவே இதுவும் ஓப்பன் சோர்ஸ் இயங்குதளம் என்பதால், யார் வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

முன்பு ஏற்பட்டதைப் போல ஒரு நிலைமை வந்தால், நாங்கள் கவலைப்பட மாட்டோம். ஆண்ட்ராய்டை மட்டுமே நம்பி நாங்கள் இல்லையென்பதுதான் அவர் சொல்லவரும் விஷயம். ஆண்ட்ராய்டுக்கு எதிராக இருந்துவந்த இயங்குதளங்கள் அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. வேறு எதுவும் போட்டிக்கு இல்லாத காரணத்தால், கூகுள் வைத்ததுதான் சட்டம் என்ற நிலை இருந்து வந்தது. தற்போது, ஹார்மனியின் மூலமாக அந்த நிலை மாறக்கூடும்.

HTML5, லினக்ஸ் மற்றும் ஆண்ட்ராய்டு ஆகிய தளங்களில் உருவாக்கப்படும் ஆப்களை ஹார்மனி ஏற்றுக்கொள்ளும். முதலில் சீனாவிலும் அதன் பின்னர் உலக நாடுகளிலும் இதை வெளியிட குவாவே திட்டமிட்டுள்ளது. அதேநேரம், தற்போது அதன் போன்களில் ஆண்ட்ராய்டுக்கே முன்னுரிமை கொடுக்க முடிவு செய்திருக்கிறது குவாவே. ஆனால், அடுத்த முறை அமெரிக்கா ஏதாவது பிரச்னை செய்தால், தயங்காமல் ஹார்மனிக்கு மாறும்.

இன்றைக்கு மொபைல் சந்தையில் பெரும் பங்களிப்பு, சீன நிறுவனங்களுடையதுதான். அவர்கள் அனைவருமே ஆண்ட்ராய்டையே பயன்படுத்திவருகிறார்கள். திடீரென என்றாவது சீன மொபைல் தயாரிப்பு நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாக ஹார்மனியைப் பயன்படுத்த முடிவுசெய்தால் நிலைமை அப்படியே தலைகீழாக மாறும். சந்தையில் ஹார்மனியின் செல்வாக்கு அதிகரிக்கத் தொடங்கும். தொழில்நுட்ப உலகில், குறுகிய காலத்துக்குள் மாற்றம் நடைபெற்றுவிடும். அப்படி ஒரு மாற்றத்தைக் கொண்டு வரத்தான் இப்போது காத்துக்கொண்டிருக்கிறது, குவாவேவின் ஹார்மனி.

கோடையில் சன் ஸ்கிரீன் அவசியமா?

நமது சருமத்தை பாதுகாக்க தினசரி சன் ஸ்கிரீன் பயன்படுத்துவது அவசியம் என்கிறார்கள் மருத்துவர்கள். இந்தியா போன்ற வெப்பமயமான நாட்டில் சூரியனில் இருந்து வரும் புறஊதாக்கதிர்கள் நமது முகத்தை அதிகமாக தாக்கும். இதனால் சருமம் கருத்துப் போவது, வயதுக்கு முந்தைய முதுமை, சருமச் சுருக்கங்கள் போன்றவை ஏற்படும்.

எனவே புறஊதா கதிர்களின் பாதிப்பில் இருந்து நமது முகத்தை பாதுகாக்க ஸ்கிரீன் பயன்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். இவை சூரியனின் புறஊதாக் கதிர்களை உறிஞ்சிக் கொண்டு, அது சருமத்தின் ஆழத்தில் உள்ள லேயர்கள் வரை ஊடுருவுவதைத் தடுக்கிறது அல்லது அந்தக் கதிர்களின் தாக்கம் சருமத்தை பாதிக்காமல் காக்கிறது.

கிரீம், லோஷன், ஜெல், ஸ்டிக், ஸ்பிரே என பல வடிவங்களில் சன் ஸ்கிரீன் கடைகளில் கிடைக்கிறது. நமது சருமத்தின் டைப்பை பொறுத்து சன் ஸ்கிரீன் பயன்படுத்த வேண்டும். உங்களுக்கு ஆயில் சருமம் என்றால், ஜெல் வடிவிலான சன் ஸ்கிரீனை பயன்படுத்த வேண்டும். மிகவும் வறண்ட சருமம் உள்ளவர்கள் கிரீம் அல்லது லோஷனை பயன்படுத்தலாம்.

நாம் வெளியே செல்வதற்கு 20 அல்லது 30 நிமிடங்களுக்கு முன்பு சன் ஸ்கிரீன் பயன்படுத்த வேண்டும். மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை சன் ஸ்கிரீன் பயன்படுத்துவதற்கு பதிலாக, நாம் வெயிலில் சென்ற 15, 20 நிமிடங்களுக்கு பிறகு இரண்டாவது முறையாக சன் ஸ்கிரீன் போட்டுக்கொண்டாலே போதுமானது.

சன் ஸ்கிரீனை கண்களில் படாமல் உபயோகிக்க வேண்டும். குழந்தைகளுக்கு சன் ஸ்கிரீன் உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

தூங்கச் செல்லும் முன்...

தூங்க செல்வதற்கு முன்பாக சருமத்தை பராமரிக்க போதிய கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் பகல் பொழுதில் சரும ஆரோக்கியத்தை பேணுவது பயனற்றதாகி போய்விடும்.

சருமத்தை பராமரிப்பதற்கு பகல் பொழுதில் காண்பிக்கும் அக்கறையை பெரும்பாலானோர் இரவு பொழுதில் கடைப்பிடிப்பதில்லை. தூங்க செல்வதற்கு முன்பாக சருமத்தை பராமரிக்க போதிய கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் பகல் பொழுதில் சரும ஆரோக்கியத்தை பேணுவது பயனற்றதாகி போய்விடும்.

★ இரவில் தூங்க செல்லும் முன்பாக முகத்தை நன்றாக கழுவ வேண்டும். ஆர்வக்கோளாறில் முகத்தை அதிகமாக அழுத்தி தேய்த்து கழுவக்கூடாது. அப்படி தேய்த்தால் முகத்திலுள்ள எண்ணெய் பசைத்தன்மை வெளியேறிவிடும். வெதுவெதுப்பான நீரில் முகத்தை கழுவுவது நல்லது. அது சருமத்தில் உள்ள துவாரங்கள் திறக்க வழிவகுப்பதுடன் அதிலிருக்கும் அழுக்குகளையும் வெளியேற்றும்.

★ மேக்கப் போட்டிருந்தால் முதலில் எண்ணெய் தன்மை கொண்ட கிளிசனரை பயன்படுத்தி மேக்கப்பை நன்கு நீக்க வேண்டும். அதன் பின்னர் தண்ணீரால் முகத்தை கழுவ வேண்டும்.

★ வாரம் இருமுறை முகத்திற்கு நீராவி பிடிப்பது நல்லது. அது முகத்தில் படிந்திருக்கும் அழுக்கு, தூசுகளை நீக்கும்.

★ ஈரமான தலையுடன் தூங்க செல்வதை தவிர்க்க வேண்டும். இல்லையென்றால் தலை முடி பிசுபிசுப்பு தன்மையுடன் மாறி, மயிர்கால்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

★ தலைமுடியை இறுக்கமாக கட்டிக்கொண்டு தூங்க செல்வதை தவிர்க்க வேண்டும். அதிலும் நீளமாக கூந்தல் உடையவர்கள் தலை முடியை தளர்த்தி கட்டிக்கொள்வது நல்லது.

★ தினமும் ஆறு முதல் எட்டு மணி நேரமாவது தூங்க வேண்டும். அது உடலுக்கு மட்டுமல்ல முகத்திற்கும் நல்லது. கண்களுக்கு அடியில் கருவளையம் ஏற்படுவதை தவிர்க்கும். முகம் சோர்வடைவதும் தடுக்கப்படும்.

வீட்டிற்கு அழகிய அலங்காரம்!

சிறிய அளவு 'பட்ஜெட்' கொண்ட வீடாக இருந்தாலும் கண் கவரும் அலங்கார பொருட்கள் மற்றும் அமைப்புகள் மூலம் ஒவ்வொரு அறையையும் அழகாக காண்பிக்கவே பெண்கள் விரும்புவார்கள்.

சிறிய அளவு 'பட்ஜெட்' கொண்ட வீடாக இருந்தாலும் கண் கவரும் அலங்கார பொருட்கள் மற்றும் அமைப்புகள் மூலம் ஒவ்வொரு அறையையும் அழகாக காண்பிக்கவே அனைவரும்(பெண்கள்) விரும்புவார்கள். பொதுவாக, எல்லா அறைகளுக்கும் உள் அலங்காரம் தேவை என்ற நிலையில், ஒரு சில அறைகளை நமக்கு பிடித்தமான வகையில் அழகுபடுத்த முடியும்.

ஒரே தோற்ற

சமையல் அறை,'வார்ட்ரோப்ஸ்' என்ற அலமாரிகள், பூஜை அறை, டி.வியை வைப்பதற்கான 'கேபினட்டுகள்', குட்டி பசங்களின் ஸ்கூல் புராஜக்ட் மற்றும் பரிசு கோப்பைகள் வைக்கும் கண்ணாடி பொருத்திய அலமாரிகள், பல்வேறு 'லேமினேஷன்கள்' ஆகிய வற்றை ஒரே மாதிரியாக அமைத்தால், வித்தியாசமான அழகாக இருக்கும். சமையல் அறையில் 'வாட்டர் புரூப்'கொண்ட பொருட்களையும் பயன்படுத்தலாம்.

அலமாரிகள் அவசியம்

சுவர் அலமாரிகள் 'ஸ்லைடிங்' கதவுகள் கொண்டதாக இருப்பது வழக்கம். வீட்டில் குறைவான உபயோகம் கொண்ட பொருட்களை சுவர் அலமாரிகள் அல்லது மர கதவு பொருத்தப்பட்ட 'லாப்ட்' அமைப்புகளில் வைத்து பராமரிப்பது வழக்கம்.

பொதுவாக கான்கிரீட் பரண்கள் அதிகமாக அமைப்பதில் பலரும் ஆர்வம் காட்டுவதில்லை.

'வார்ட்ரோப்' அமைக்கும்போது மேற்கூரையை தொடும் வகையில் உயரமாக அமைத்துவிட்டால், சூட்கேஸ்கள் உள்ளிட்ட 'டிராவல் பேக்' போன்ற வற்றை அவற்றில் வைப்பது சுலபமாக இருக்கும்.

சுவர் அலமாரிகள்

'வால்க் இன் க்ளோசட்' என்ற அலமாரிகளை உள்ளே அமைத்து ஒற்றை கதவு பொருத்தப்படும் முறையானது இப்போது மெதுவாக பல இடங்களில் பரவி வருகிறது. இந்த முறையில் அதிக செலவில்லை என்பது கவனிக்கத்தக்கது. ஒற்றைக் கதவு என்பதால் பொருட்கள் வைக்க நிறைய இடம் கிடைக்கும். நமது செலவுகளை பொறுத்து இரண்டு அறைகளுக்கு இடைவெளிகளில் இதை அமைத்துக்கொள்ளலாம். வீட்டு கட்டுமான பணிகளின்போதே இந்த முறைக்கான இடத்தை கச்சிதமாக தேர்வு செய்து கொள்வது சிறப்பு.

'ஸ்கர்டிங்'பலகைகள்

நவீன சமையலறை அமைப்பில் கவனிக்க வேண்டிய விஷயம், கேபினட்டுகளை தாங்கக்கூடிய 'புஷ்' அமைப்பை மறைக்கும் 'ஸ்கர்டிங்' என்ற சிறிய பலகைகள் ஆகும். மேலும், அங்கே குப்பைகள் சேராமல் தடுக்கவும் இந்த அமைப்பு பயன்படும். அந்த 'ஸ்கர்டிங்' அமைப்பை மரத்தால் செய்யப்பட்டதாக இல்லாமல் 'பி.வி.சி' தயாரிப்பு களான 'பிளாஸ்டிக்'பொருள்கள் மூலம் அமைத்து, தண்ணீர் பாதிப்புகள் வராமல் தடுக்கலாம்.

அழகிய படுக்கையறை

பொதுவாக, படுக்கையறை கதவு திறந்தவுடன் கண்ணில் படுக்கை படாதவாறு அமைக்கவேண்டும். படுக்கையறைக்கு போதுமான வெளிச்சம் இருக்குமாறு ஜன்னல்களை கச்சிதமாக அமைக்கவேண்டும். அறை நடுவில் கட்டில் போடும்போது 'சைடு டேபிள்' இருப்பின் அவற்றின் மீது புத்தகங்களை வைத்து உபயோகப்படுத்தலாம். சிறிய அறையாக இருந்தாலும் முக்கியமாக கருதப்படுவது படுக்கை அறையாகும்.

படிக்கும் இடம்

அலுவலக பணிகள் மற்றும் பள்ளி மாணவர்களின் வீட்டுப்பாடம் போன்றவற்றை செய்வதற்காக பல வீடுகளில் 'லேப்டாப்' பயன்படுத்தப்படுவது வழக்கம். அதை பயன்படுத்தும்போதும், 'சார்ஜ்' செய்யும்போதும் தனியாக வைத்து பராமரிப்பதற்காக தனியிடம் தேவைப்படும். முக்கியமாக பசங்கள் படிக்கும் போது அமைதியாக இருப்பது அவசியம். அந்த அறைகளில் 'டிரெஸ்ஸிங் டேபிள்' வைக்கப்படும் சூழலில் அலமாரிகளில் கண்ணாடியை பதித்துக்கொள்ளலாம்.

ஒருநாளைக்கு எத்தனை முறை...?

அழகு பராமரிப்பு என்று வரும் போது நிபுணர்கள் முதலில் பரிந்துரைப்பது பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை அதிகம் உண்பதோடு, ஜூஸ், தண்ணீர் போன்ற வற்றையும் அதிகம் பருக வேண்டும் என்று தான்.சொல்லப்போனால் நீர்மபானங்களை அதிகம் பருகுவதால் சருமத் துளைகள் திறக்கப்பட்டு, வியர்வை வழியே அழுக்குகள் வெளியேற்றப்பட்டு, சரும அழகு மேம்பட்டு காணப்படும்.அதோடு நீங்கள் அடிக்கடி முகத்தைக் கழுவும் பழக்கம் கொண்டிருந்தால், உங்கள் சருமத்திற்கு உருப்படியான ஒன்றை செய்கிறீர்கள் என்று அர்த்தம். ஆனால் அதற்கும் ஒரு அளவு உள்ளது. ஒரு நாளில் அளவுக்கு அதிகமாக முகத்தை கழுவினால், சருமம் தான் பாதிக்கப்படும்.

வறட்சியான சருமம்

வறட்சியான சருமத்தைக் கொண்டவர்கள் ஒரு நாளைக்கு நான்கு முறை முகத்தைக் கழுவுவது தவறான ஒன்று. இத்தகைய சருமத்தினர் பகலில் ஒரு நாளைக்கு ஒருமுறை தான் முகத்தைக் கழுவ வேண்டும்.

பருக்கள்

ஒருவேளை உங்களுக்கு பருக்கள் அதிகம் இருப்பின், ஒரு நாளைக்கு குறைந்தது 4 முறை முகத்தைக் கழுவ வேண்டும். அதுவும் சோப்பு எதுவும் பயன்படுத்தாமல் வெறும் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

விதிமுறைகள்

இங்கு முகத்தைக் கழுவுவதற்கான ஒருசில விதிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதிலும் கோடையில் அதிகம் வியர்ப்பதால், பலரும் எந்நேரமும் முகத்தைக் கழுவியவாறே இருப்பார்கள். எனவே ஒவ்வொருவரும் தங்கள் சருமஆரோக்கியத்தைப் பாதுகாக்க, அந்த விதிமுறைகள் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

காலை

காலையில் எழுந்ததும் முகத்தைக் கழுவிவிட்டு தான், எந்த வேலையையும் செய்வோம். வேண்டுமானால் இந்நேரத்தில் முகத்தைக் கழுவும் போது மைல்டு சோப்பைப் பயன்படுத்திக் கழுவலாம். இதனால் முகத்தில் உள்ள அழுக்குகள் வெளியேற்றப்பட்டு, முகம் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

மதியம்

எண்ணெய் பசை சருமம் உள்ளவர்கள், மதிய வேளையில் கட்டாயம் முகத்தைக் கழுவ வேண்டும். அதிலும் எண்ணெய் பசையைக் கட்டுப்படுத்தும் ஃபேஸ் வாஷ் என்னவென்று நிபுணர்களிடம் கேட்டு பயன்படுத்த வேண்டும்.

இல்லையெனில், குளிர்ந்த நீரில் மட்டும் முகத்தைக் கழுவலாம். இதனால் சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் வெளியேற்றப்படும்.

மாலை

அலுவலகம் முடிந்து வீட்டிற்கு வந்ததும் குளிப்பது மிகவும் நல்லது.இதனால் சருமத்தில் உள்ள அழுக்குகள் முழுமையாக வெளியேற்றப்படும்.ஆனால் கோடையில் மாலை வேளையில் முகத்தைக் கழுவுவதுடன், பழங்கள் அல்லது காய்கறிகளால் ஆன ஃபேஸ் பேக் போடுவது, உங்களை எப்போதும் புத்துணர்ச்சியுடன் வைத்துக் கொள்ளும்.

மாதவிடாய் நாட்களில் தவிர்க்க வேண்டிய உடற்பயிற்சிகள்

ஓய்வு தேவைப்படும் மாதவிடாய் நாட்களில், உடலுக்கு சிரமம் தர வேண்டாம். அவரவர் மனம் மற்றும் உடல்நிலைக்கு ஏற்ற எளிய உடற் பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.

மாதவிடாயின் போது குறைந்தது 3 முதல் 5 நாட்கள் வரை கடுமையான உடற்பயிற்சிகள் செய்யாமலிருப்பது நல்லது. ஹார்மோன்களின் சுரப்புகளில் ஏற்படும் மாறுபாடுகளின் காரணமாக உடலில் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும். வயிறு மற்றும் உடல் வலி இருக்கும். மனமும் உடலும் சோர்ந்து காணப்படும். அந்த நேரத்தில் உடற்பயிற்சி செய்யும் போது ஒரு குறிப்பிட்ட நிலையில் செய்தால் சிலருக்கு ரத்தப்போக்கு அதிகமாகலாம்.

குறிப்பாக வயதான வர்களும், கர்ப்பப்பை பலவீனமாக இருப்பவர்களும் இந்த நாட்களில் உடற்பயிற்சி செய்தால், ரத்தப்போக்கு அதிகரிக்க வாய்ப்புண்டு. கர்ப்பப்பை பலவீனமாக இருப்பவர்களுக்கு ஆட்டோவில் பயணம் செய்தால் கூட ரத்தப்போக்கு அதிகரிக்கும். இப்படிப்பட்டவர்கள் இந்த நாட்களில் உடற்பயிற்சி செய்யாமல் இருப்பதே நல்லது.

உடற்பயிற்சி செய்ய விரும்புபவர்கள் மெதுவான நடைப்பயிற்சி, எளிய வகை ஏரோபிக்ஸ் பயிற்சிகள் செய்யலாம். யோகாசனம் செய்பவர்கள் மாதவிடாய் நாட்களில் பத்மாசனம் போன்று தரையில் அமர்ந்து செய்யக்கூடிய எளிய ஆசனங்களைச் செய்யலாம். தலைகீழாக நிற்கும் யோகாசனங்கள் செய்யக்கூடாது. கர்ப்பப்பைக்குச் செல்ல வேண்டிய ரத்த ஓட்டம் மாறுபடும். மாதவிடாய் நாட்களில் உடலில் நீர்ச்சத்துக் குறைபாடு ஏற்படும். உடற்பயிற்சி செய்யும் போது, சிலருக்கு மயக்கம், தலைச்சுற்றல் ஏற்பட வாய்ப்புண்டு. அதனால், தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும். சில பெண்கள் கருத்தரிக்க வேண்டி காத்திருப்பார்கள். அவர்களில் சிலருக்கு மாதவிடாய் கொஞ்சம் வந்திருக்கும். அதனால் கர்ப்பம் இல்லை என நினைத்து தவறுதலாக உடற்பயிற்சிகளில் ஈடுபடுவார்கள்.

அதில் ஒரு சிலர் கர்ப்பம் தரித்திருக்க வாய்ப்புண்டு. குழந்தைப்பேற்றுக்காக காத்திருப்பவர்கள் மாதவிடாய் வந்தாலும் கர்ப்பப் பரிசோதனை செய்து கர்ப்பம் இல்லையென்று தெரிந்த பின்னர் தான் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.

ஓய்வு தேவைப்படும் மாதவிடாய் நாட்களில், உடலுக்கு சிரமம் தர வேண்டாம். அவரவர் மனம் மற்றும் உடல்நிலைக்கு ஏற்ற எளிய உடற் பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.

ஆதி மனிதர்கள் மழை, விலங்குகள், இருட்டு போன்றவற்றிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள குகைகளில் வாழ்ந்திருக்கிறார்கள். அதற்கான சான்றுகள் குகைகளில் உள்ள ஓவியங்களில் இருந்தும், அவர்கள் பயன்படுத்திய பொருட்களிலிருந்தும் அறிந்து கொள்ள முடிகிறது. இந்தியாவில் சுமார் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் குகைகளில் வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. நூற்றுக்கணக்கான குகை வாழ் இடங்கள் இந்தியாவில் இருந்தாலும் சில குகைகள் அவற்றின் காலத்தாலும், அமைப்பாலும் குறிப்பிடத்தக்கவை. அவற்றில் ஆந்திராவின் கர்னூல் மாவட்டத்தில் உள்ள பேலும் குகை முக்கியமானது.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே இரண்டாவது மிகப் பெரிய குகையும் சமவெளியில் அமைந்துள்ள மிக நீளமான குகையும் இதுதான்! இது நிலத்தடி

நீரோட்டங்களால் அமைந்த இயற்கையான குகை. குவார்ட்ஸ் மற்றும் கறுப்பு சுண்ணாம்புக்கல்லால் ஆனது. குகையின் கூரைகளில் கூம்பு வடிவ அமைப்புகள் காணப்படுகின்றன.

கி.மு. 4500-ல் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்களை இங்கிருந்து கண்டெடுத்துள்ளனர். மிகப் பழமையான குகையாக இருந்தாலும், வெளி உலகத்துக்கு நீண்ட காலம் தெரியவில்லை. உள்ளூர் மக்களுக்கு மட்டும் இதைப் பற்றித் தெரிந்திருக்கிறது.

கி.பி 1884-ல் பிரிட்டிஷ் நிலவியல் ஆய்வாளர் ராபர்ட் ப்ரூஸ் ஃபூட், பேலும் குகையைக் கண்டறிந்தார். அதற்குப் பிறகும் மக்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. குப்பைகளையும், கழிவுகளையும் கொட்டும் இடமாகப் பயன்படுத்தினர்.

1992-ல் டேனியல் கெபார் என்ற ஜெர்மனியர் தலைமையிலான குழுவினர், இந்தக் குகையைப் பற்றி நீண்ட ஆராய்ச்சி செய்து, இதன் மகத்துவத்தை உலகறியச் செய்தனர். நாராயண ரெட்டி, சலபதி ரெட்டி ஆகியோர் எடுத்த தொடர் முயற்சியின் பலனாக, 1999-ல் ஆந்திர அரசு இதைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்தது.

2002-ம் ஆண்டிலிருந்து ஆந்திரா வின் முக்கிய மான சுற்றுலாத் தலமானது. 3.5 கி.மீ. நீளம் கொண்ட பேலும் குகையில் 1.5 கி.மீ. நீளம் வரையே பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

2000 ஆண்டுகளுக்கு முன் புத்த, ஜைன துறவிகள் தங்கவும் தியானம் செய்யவும் உதவியாக இருந்திருக்கிறது இந்தக் குகை. புத்தத் துறவிகள் பயன்படுத்திய பொருட்களை இங்கிருந்து எடுத்து அருகில் உள்ள அனந்தபூர் அருங்காட்சியகத்தில் வைத்துள்ளனர். 150 அடி ஆழத்தில் சிறிய நீர்வீழ்ச்சி இங்கே இருக்கிறது.

இதைப் பாதாள கங்கை என்கிறார்கள். குகைக் குள் சில இடங்கள் சமதரையாக உள்ளன. சில இடங்களைக் கடக்க மிக குறுகிய வழியே உள்ளது. வெளியிலிருந்து பார்க்கும்போது சிறிய குகையாகக் காட்சியளித்தாலும், 90 அடி இறங்கியவுடன் மிகப் பிரம்மாண்டமாகக் காட்சியளிக்கிறது.

குகைக்குள் ஒளி விளக்குகளும் மின் விசிறிகளும் பொருத்தப்பட்டிருக்கின்றன. குகை முழுவதும் இயற்கையாக பலவித உருவங்கள் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளன.

வானில் இரண்டாவது பெரிய கருந்துளை

கருந்துளை என்பது அண்டவெளியின் ஒரு பகுதிதான். இதன் எல்லைக்குச் செல்லும் ஒளி, மின் காந்த அலைகள் உட்பட அனைத்தையும் ஈர்த்துக் கொள்ளும். இதிலிருந்து எதுவும் தப்பித்து வெளியே வர முடியாது. உள்ளே என்ன நடக்கிறது என்பதைக்கூட அறிந்துகொள்ள இயலாது. அதனால்தான் இதைக் கருந்துளை என்று அழைக்கிறார்கள். .

இந்தக் கருந்துளை உறுதி செய்யப்பட்டால் நமது பால்வெளி மண்டலத்திலேயே இருக்கும் இரண்டாவது பெரிய கருந்துளையாக இருக்கும்.

எப்படிக் கண்டுபிடிக்கிறார்கள்?

150 ட்ரில்லியன் கி.மீ. அகல முள்ள நீள்வட்ட வாயுக் கூட்டங்கள், பூமியிலிருந்து 200 ஒளி ஆண்டுகள் தொலைவில் வேகமாக நகர்ந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். வழக்கத்துக்கு மாறான இந்த நகர்தல் வானியலாளர்களைக் குழப்பமடையச் செய்தது. சிலி நாட்டின் அடகாமா பாலைவனத்தில் நிறுவப்பட்ட சக்தி வாய்ந்த தொலைநோக்கியை அந்த வாயுக் கூட்டங்களை நோக்கித் திருப்பினார்கள் .

கார்பன் மோனாக்சைடு, ஹைட்ரஜன் சயனைடு களால் ஆன அந்த மேகங்கள் அளவுக்கு அதிகமான ஈர்ப்பு விசையால் நகர்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. இது ஒரு கருந்துளையின் ஈர்ப்பாக இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர். ஒளியே இல்லாத கருந்துளையை அவற்றின் ஈர்ப்பு விசையையும், அவற்றைச் சுற்றி உருவாகும் கதிர் வீச்சையும் கொண்டு கண்டுபிடிக்கிறார்கள். நமது பிரபஞ்சத்தில் 100 மில்லியன் கருந்துளைகள் இருக்கலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

2017, செப்டெம்பர் 5 ஜப்பான் வானியலாளர்கள் நமது பால்வெளி மண்டலத்தில் நடுத்தர அளவுள்ள ஒரு கருந்துளை இருப்பதற்கான ஆதாரங்களைக் கண்டறிந்தார்கள். இது நமது சூரியனை விட 1,00,000 மடங்கு அதிக நிறை கொண்டதாக இருக்கும் என்றும் இது நமது பால்வெளி மண்டலத்தின் மையத்துக்கு அருகில் இருப்பதாகவும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அலிகேட்டரும் முதலையும்

அலிகேட்டர் நன்னீர் நிலைகளில்தான் வாழும். முதலை நன்னீரிலும் உப்பு நீரிலும் வாழக்கூடியது. அலிகேட்டரின் வாய் U வடிவில் இருக்கும். முதலையின் வாய் V வடிவில் இருக்கும். அலிகேட்டர் வாயை மூடியிருக்கும்போது மேல்தாடைப் பற்கள் வெளியே தெரியும். முதலை வாயை மூடியிருக்கும்போது மேல்தாடை, கீழ்தாடைப் பற்கள் வெளியே தெரியும்,



மேலேயுள்ள பாம்புகள் வெளியே வர முடியாமல் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டிருக்கின்றன. எந்தக் கூடையில் எந்தப் பாம்பு உள்ளது.

விடுகதைகளும் விடைகளும்

முழு உலகமும் சுற்றி வரும், ஆனால் ஒரு மூலையிலேயே இருக்கும் அது என்ன?

முத்திரை

ஆகாரமாக எதையும் தந்தால் சாப்பிடுவேன், ஆனால் நீரை குடிக்க தந்தால் இறந்து விடுவேன், நான் யார்?

நெருப்பு

கண்டு பிடித்தவனும் வைத்திருக்க வில்லை, வாங்கியவனும் உபயோகிக்க வில்லை, உபயோகிப்பவனுக்கு அதனை பற்றி எதுவும் தெரியாது அது என்ன?

சவப்பெட்டி

ஒரு குற்றத்தை செய்ய முயற்சித்தால் தண்டனை உண்டு, ஆனால் குற்றத்தை செய்தால் தண்டிக்க முடியாது, அக் குற்றம் என்ன?

தற்கொலை

முட்டையிடும், குஞ்சு பொரிக்காது. கூட்டில் குடியிருக்கும், கூடு கட்டத் தெரியாது. குரலில் இனிமையுண்டு, சங்கீதம் தெரியாது அது என்ன?

குயில்

வெளியே உள்ளதை எறிந்து உள்ளே உள்ளதை சமைத்தான். பின் வெளியே உள்ளதை சாப்பிட்டு விட்டு உள்ளே உள்ளதை எறிந்தான் அது என்ன?

சோளம்

ஆற்றங்கரையில் நின்றிருந்த ஓர் ஆலமரத்தின் பொந்தில் தாய்க் கிளியும் குஞ்சுக் கிளியும் வசித்துவந்தன.

கிளிக்குஞ்சு தானே இரை தேடும் அளவுக்கு வளர்ந்தாலும் இரை தேடுவதற்குத் தாய்க் கிளி இன்னும் அனுமதிக்கவில்லை.

ஆலமரத்தில் சிவப்பு வண்ணப் பழங்கள் அழகாகக் காய்த்துக் குலுங்கின. அதனால் தாய்க் கிளியும் நீண்ட தூரம் சென்று உணவு தேடாமல், தன் குஞ்சுடன் நேரத்தைச் செலவிட்டது.

அம்மா, எனக்கு இந்த ஆலம் பழங்கள் சாப்பிட்டுச் சாப்பிட்டு, சலிப்பாகிவிட்டது. கொய்யா, நாவல், சீதா, மிளகாய்ப் பழம் போன்றவற்றைச் சாப்பிடுவதற்கு ஆசையாக இருக்கிறது என்றது குஞ்சுக் கிளி.

இப்போது எங்கும் வறட்சி. பழங்களே கண்ணில் தட்டுப்படவில்லை. நல்லவேளை, ஆலமரத்திலாவது பழங்கள் இருக்கின்றன. அதனால்தான் இரை தேடிச் செல்லாமல் உன்னுடனே இருக்கி

றேன் என்றது தாய்க் கிளி.

நேற்று என் அணில் நண்பன் வீட்டுக்கு ஒரு விருந்தினர் அணில், கூடை நிறைய கொய்யாப் பழங்களுடன் வந்திருந்தார். எனக்கும் ஒரு கொய்யா கிடைத்தது. அத்தனை சுவையாக இருந்தது. அதனால் நான் இன்று ஆலம் பழங்களைச் சாப்பிட மாட்டேன். எனக்குச் சுவையான பழங்கள் வேண்டும் என்று அடம்பிடித்தது குஞ்சுக் கிளி.

அவர் வெளியூர்க்காரராக இருப்பார். இங்கே கொய்யாப் பழங்களே இல்லை என்ற தாயின் பேச்சைக் கொஞ்சமும் நம்பவில்லை குஞ்சுக் கிளி.

சரி, நீயும் என்னுடன் வா. இருவரும் உணவு தேடலாம் என்றதும் மகிழ்ச்சியுடன் கிளம்பியது குஞ்சுக் கிளி.

இரண்டும் பறக்கத் தொடங்கின. சிறிது நேரத்தில் முதல் முறை பறந்ததால் சோர்வுற்ற குஞ்சுக் கிளி, சற்று ஓய்வெடுக்க வேண்டும் என்றது. தாயும் குஞ்சும் ஒரு மரத்தில் ஓய்வெடுத்துவிட்டு, மீண்டும் பறந்தன. நீண்ட நேரம் அலைந்தும் ஒரு பழம் கூடக் கிடைக்கவில்லை. இரண்டு கிளிகளும் மிகவும் களைப்புற்றன.

அம்மா, இனிமேல் என்னால் பறக்க முடியாது. பொந்துக்குத் திரும்பலாம் என்றது குஞ்சுக் கிளி.

குஞ்சுக் கிளியை அழைத்துக் கொண்டு ஆலமரத்தை நோக்கித் திரும்பிவந்தது தாய்க் கிளி. பொந்தில் ஏற்கெனவே பறித்து வைத்திருந்த ஆலம் பழங்கள் இருந்தன. பசியோடு இருந்த குஞ்சிடம் நீட்டியது தாய்க் கிளி.

உடனே வேக வேகமாகத் தின்று முடித்தது குஞ்சுக் கிளி.

''கண்ணே, பசி தீர்ந்ததா? பழங்கள் எப்படி இருந்தன?''

''பசி தீர்ந்தது அம்மா. அது எப்படி இப்போது மட்டும் பழங்கள் அத்தனை சுவையாக மாறின?'' என்றது குஞ்சுக் கிளி.

''சற்று முன்பு நான் இந்த ஆலம் பழங்களைத் தந்தபோது வேறு சுவையான உணவு வேண்டும் என்றாய். ஆனால் இப்போது இந்தக் கனிகளே சுவையாக இருக்கிறது என்கிறாய். பசி இருந்தால் எந்த உணவும் ருசியாக இருக்கும். இந்தப் பசியை நீ உணர்வதற்காகவே நான் உன்னை வெகுதூரம் அழைத்துப் போனேன். களைத்துப் பசித்த உனக்கு ருசியும் தெரிந்து விட்டது!'' என்று சிரித்தது தாய்க் கிளி.

வர்ணம் தீட்டுவோம்

எதற்கும் அஞ்சாதே, எதையும் வெறுக்காதே, யாரையும் ஒதுக்காதே. உன் பணியை ஊக்கமுடன் செய்.

அரவிந்தர்

தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாத மனிதன் தனக்குள் உள்ள திறமையையும் வெற்றியாக மாற்ற முடியாது.

எட்கார்

எந்தக் கடினமான காரியத்தையும் செய்து முடிக்க சுலபமான வழி ஒன்று இருக்கும். அதைக் கண்டு பிடிப்பதுதான் கெட்டிக்காரத் தனம்.

அலெக்ஸாண்டர்

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ வைப்பதில்தான் இருக்கிறது.

மெஹர்பாபா

உலகம் மிகப் பரந்தது. அதில் அவர்கள் முயற்சியைப் பொறுத்தும், திறமையைப் பொறுத்தும் எல்லோரும் முன்னேறுகின்றனர்.

ஐன்ஸ்டீன்

தவறுக்கு வருந்தாதே. திருத்திக் கொள்வதில் வெட்கப்படாதே.

சாக்ரடீஸ்

ஆறு வித்தியாசங்கள் கண்டுபிடிப்போம்

இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்

இவ்வாரம் தனம், பொருள், மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி அடையும். செய்தொழில் விருத்தி, வங்கி இருப்புக்கள் உண்டு. புருஷன், மனைவி ஐக்கியம், புத்திரர்களுடன் அன்பு, பாசம் நிலவும். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் நல்ல ஆதாய முன்னேற்றம் காண்பர். மாணவர் கல்வியில் ஊக்கமும், விடா முயற்சியும் அடைவர்.

இவ்வாரம் ஈடுபடும் கரும காரியங்கள் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர் பதவி சிறப்படைவர். அதிகாரம் கொள்வர். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேளையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு அமையும். மாணவர்கள் கல்வி விளையாட்டுத்துறைகளில் புதிய உத்வேகம் கொள்வர். குடும்பப் பெண்களின் இல்லற நிர்வாகம் புத்திரர் உதவி, அனுகூலமுடன் நன்கு நடைபெறும். ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவு வளரும்.

இவ்வாரம் புத்திர பாவத்தில் குரு, குஜன் சஞ்சரிப்பதால் புத்திரர் உதவி, அனுகூலம் உண்டு. புத்தி சாரியம் மிகும். ஈடுபடும் கருமகாரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர் இவ்வாரம் ஏற்றம் மிகும். பஞ்ச குரு சஞ்சரிப்பதால் வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை கூடும். விவசாயிகளுக்கு நவீன முறைகளால் பயில் உற்பத்திகளைப் பெருக்கலாம். பெண்கள், மாணவர்கள் சௌபாக்கிய யோகமடைவர்.

இவ்வாரம் கருமகாரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். தொழில் உயர்வு, விருத்தி உண்டு. உத்தியோகத்தர் சக ஊழியர்களின் உதவி ஒத்துழைப்புகளை பெறுவதால் வேலைப்பழு குறையும். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய முன்னேற்றம் அடைவர். விவசாயப் பண்ணைகளாலும், விளைப்பொருட்களை சந்தைப் படுத்தலினாலும் நல்ல ஆதாயத்தை பெறமுடியும். நிதி வசதிகள், வங்கி இருப்புக்களையும் பெறுவர்.

இவ்வாரம் 3இல் வியாழ சுகவீனம், 4இல் கண்டச் சனி தோஷம் இருப்பதால் தோஷ நிவர்த்தி செய்ய வேண்டும். வியாபாரிகள் கூட்டு வாணிபத்தை மட்டுப்படுத்தல் வேண்டும். புதிய முதலீடுகளையும் கொள்முதல்களையும் மட்டுபடுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு விவசாயப் பண்ணைகளில் கூலியாட்களின் மேலதிக உதவி, ஒத்துழைப்புக்கள் பெறுவது கடினமாகும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் சிரமத்தின் மத்தியில் நடைபெறும்.

இவ்வாரம் தனபாவத்தில் குரு சஞ்சரிப்பதால் தனம், பொருள் , மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி பெறும். வங்கி வசதிகள் மனநிறைவைக் கொடுக்கும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கூட்டு வாணிபத்தையும் தொடங்கலாம். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேலையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் நிர்வாகம் புத்திரர் உதவியுடன் நன்கு இடம்பெறும். ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவு வளரும்.

ஏழரை கடைக்கூறு முடிவு, ஜென்மத்து வியாழதோஷம் உண்டு. கிரக தோஷ நிவர்த்தி இவ்வாரம் செய்யவேண்டும். தன ஸ்தானத்தில் ரவி புதனுடன் சஞ்சரிப்பதால் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன, குடும்ப விருத்திகள் உண்டாகும். உத்தியோகப் பெண்கள் தம் பணிகளில் புது உத்வேகம் கொண்டு ஏற்றம் காண்பர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற இலாபமடைவர். ஆசிரியர், மாணவர், மாணவர் உறவு வளரும்.

ஏழரை கடைக்கூறு 12 இல் விரய பாவத்தில் குரு இருப்பது விஷேமாகும். தனம், பொருள் வரவுண்டு. மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி அடையும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு அரச மாணியம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் புத்திரர் உதவி இன்றிச் சிரமத்தில் மத்தியில் நடந்தேறும்

ஏழரை நடுக்கூறு ஆரம்பம் 11இல் இலாபத்தில் வியாழ சுகம் உண்டு. இவ்வாரம் நன்மை, தீமை கலந்த பலன்களே உண்டாகும். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு ச்சி புழுக்களின் தொல்லைகளின் இருந்து பயிர் பாதுகாப்புகளை மேற்கொள்ளலாம். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயம் பெற்றுத் திருமணப் பேச்சுக்கள் இவ்வாரமும் தொடரும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு நடைபெறும்.

செய்தொழில் விருத்தி உண்டு. சேமிப்பு, வங்கி வசதிகள் உண்டாகும். ஈடுபடும் கருமங்கள் நிறைவுபெறும். உத்தியோகத்தர் தம் பணிகளில் உத்வேகம் அடைந்து ஏற்றம் காண்பர். வியாபாரிகள் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேளையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு இடம்பெறும்.

புண்ணிய பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதால் தர்ம காரியங்களில் ஆர்வ ஈடுபாடு கிட்டும். பிதாவழி உதவி, சொத்துச்சேர்க்கை உண்டு. உத்தியோகத்தர் அதிகாரிகளின் ஊக்குவிப்பையும், பாராட்டையும் பெறுவர். வியாபாரிகள் , விவசாயிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய முன்னேற்றம் அடைவர். பெண்கள் இவ்வாரம் சௌபாக்கியம் பெறுவர். ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவு வளரும். மாணவர் கல்வியில் ஊக்கமும், விடாமுயற்சியும் பெறுவர்.

இவ்வாரம் அஷ்டமத்தில் குரு சஞ்சரிப்பதால் ஆயுட்பலம் உண்டு. செய்தொழில் விருத்தி, வங்கி வசதிகள் உண்டாகும். உத்தியோகத்தர் அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் , விவசாயிகள் புதிய முதலீடுகளையும், கொள்முதல்களையும் கொள்வர். விவசாயகள் விவசாயப் பண்ணைகளாலும் விளைப்பொருட்களின் சந்தைப் படுத்தலினால் நல்ல இலாபத்தை ஈட்டமுடியும். நல்ல ஆதாயத்தை ஈட்டுக்கொள்ளலாம். பெண்கள் , மாணவர் இவ்வாரம் சௌபாக்கிய யோகம் அடைவர்.

மதத்தைச் சிறுமைப்படுத்தாதீர்கள்

நம் கைகளில் குழந்தையின் ரத்தம் கட்டுரை படித்தேன். வரலாற்று இயங்கியலை விளங்கிக்கொள்ளும் ஒருவருக்கு அவற்றின் மூலத்தை ஓரளவு யூகிக்கும் வாய்ப்பு கிட்டுகிறது. இனக் குழுக்கள் சாதிகளாகவும், இனக் குழுக்களின் தொகுப்பே மதமாகவும் சமூகத்தில் நிலைபெற்றிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள ஆழ்ந்த வரலாற்றாய்வுகள் தேவையில்லை. துவக்கத்தில் நிறுவன மயமாக்கப்படாமல் இருந்த சாதிகளும், மதங்களும் காலப்போக்கில் நிறுவன வடிவம் பெறுகின்றன.

என் மதம் பெரிதா, உன் மதம் பெரிதா என்று அடித்துக்கொள்பவர்கள் நிச்சயம் மதத்தைப் புரிந்துகொண்டவர்களாக இருக்க முடியது. எந்த மதமும் வன்முறையையோ, கோபத்தையோ, உயிர்க் கொலையையோ ஒருபோதும் வலியுறுத்தியதில்லை. அப்படியிருக்க, மதங்கள் அதிகம் இருக்கும் நாட்டில் அமைதியும், சமதர்மமும்தானே நிலவியிருக்க வேண்டும். ஆனால், வன்முறையல்லவா வெறியாட்டம் போடுகிறது? மக்கள் கொத்துக் கொத்தாக சாகும்படியான வன்முறையை மதங்களின் பெயராலேயே கட்டவிழ்த்து விடுகின்றனர் மூடர்கள்.

குறிப்பாக, அந்த வன்முறை நிகழ்வுகளில் காரணம் தெரியாமல் பலியான பிஞ்சுகளின் எண்ணிக்கையே மிகமிக அதிகம். ஒரு மதத்தைக் காக்கிறேன் பேர்வழி என்று அதைச் சிறுமைப்படுத்தும் முயற்சி மேற்கொள்பவர்களை அம்மதத்தைச் சேர்ந்தவர்கள் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

360 எண்ணிக்கை ரகசியம்

''ஒரு பெண் இரக்கமன்றி ஒரு பூனையை உணவு கொடுக்காமல் கட்டிப் போட்ட பாவத்தின் காரணமாக அவள் நரகத்தில் தள்ளப்பட்டாள்,'' என்கிறார்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள்.

தர்மசிந்தனையின் முக்கியத்துவம் பற்றி, அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் நெஞ்சை நெகிழவைப்பதாக உள்ளது.

எண்ணங்களைப் பொறுத்தே செயல்கள் அமைகின்றன. தனது வாழ்நாளெல்லாம் ஒருவன் தர்மம் செய்யாத கஞ்சனாக இருந்து விட்டு, மரணவேளையில் கொடைவள்ளலாக மாறுவதால் என்ன பயன் விளைந்து விடும்? மாறாக, இவர்களைப் பார்த்து இறைவன் கோபம் அடைகின்றான். ஒருவன் பாவியாகவே இருந்தாலும், தர்மம் செய்கின்ற கொடையாளியாக இருந்தால், அவன் அல்லாஹ்வின் தோழனாவான். தொழுகையாளியாக இருந்துகொண்டு தர்மம் செய்யாத கஞ்சனாக இருந்தால் அல்லாஹ்வின் பாவியாவான்.

மனித உடலில் 360 எலும்புகளை ஏன் இறைவன் இணைய வைத்தான் தெரியுமா? ஒவ்வொரு இணைப்புக்கும் தினமும் தர்மம் செய்வது மனிதனுக்கு அவசியமான செயலாகும் என்பதற்காக.

நபிகள்நாயகம்(ஸல்) அவர்கள், ''''கஞ்சத்தனம் ஷைத்தானின் குணமாகும். கருணை உள்ளவன் தங்கும் இடம் சொர்க்கமாகும். கஞ்சத்தனம் கொண்டவன் தங்குமிடம் நரகமாகும். கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை, எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் நம்மை நாசப்படுத்தி விடும். செல்வந்தனிடத்தில் கஞ்சத்தனம் இருப்பதை அல்லாஹ் வெறுக்கின்றான். கஞ்சன் அல்லாஹ்வை விட்டும் தூரமாகி விட்டான். தர்மம் செய்வதன் மூலம் உங்கள் பொருட்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்கள் நோய்களைக் குணப்படுத்துங்கள்,'' என்கிறார்கள். கஞ்சத்தனத்தை விடுத்து தர்மசிந்தனையுடன் வாழ்வோமே!

தும்முவதற்குரிய விதிமுறை

அண்ணல் நபிகளார் (ஸல்) அவர்களுக்கு தும்மல் வந்தால், தங்களின் இரு கைகளாலோ அல்லது துணியாலோ முகத்தை மூடிக்கொண்டு சப்தத்தைக் குறைத்துக்

கொள்வார்கள். மேலும், தும்மும் போது, ''அல்ஹம்துலில்லாஹ்' என்று கூறச்சொல்லியுள்ளார்கள். மேலும், ''அவர்களுடைய தோழர் அல்லது சகோதரர் யர்ஹமுகல்லாஹ் (அல்லாஹ் உமக்கு நல்லருள் புரிவானாக) என்று சொன்னால், தும்மியவர் இவருக்கு ''யஹ்தீகுமுல்லாஹு வயுஸ்லிஹு' (அல்லாஹ் உமக்கு நேர்வழிகாட்டி, உமது காரியத்தை சீராக வைப்பானாக) என்று கூற வேண்டும்,'' என அவர்கள் சொல்லியுள்ளார்கள்.

பொன்மொழி கேளாயோ!

இஸ்லாம் வழங்கும் இனிய பொன்மொழிகளைக் கேட்போமா!

★ தனிமனிதனின் உரிமைகளைப் பறிக்கக் கூடாது. சமுதாயத்தின் தேவைகளைப் புறக்கணிக்கக் கூடாது. இவ்விரண்டிற்குமிடையில் இணக்கமும் நடுநிலையும் வேண்டும்.

★ படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பமாகும். படைப்புகளுக்கு நன்மை புரிபவரே இறைநேசத்திற்கு உரியவர்.

★ அன்பு என்பது உங்கள் உறவினர்கள் மீது மட்டும் செலுத்தப்படுவதல்ல. அனைவர் மீதும் செலுத்தப்படுவதாகும்.

★ இறைவன் ஒருவனே. அவனே அகிலத்தையும், அகிலத்தாரையும் படைத்தான். எனவே, அனைத்து நாடுகளும், அனைத்து மனிதர்களும் சமமே. இறைவனின் வழிகாட்டுதலும் அனைவருக்கும் பொதுவானதே.

★ (இறைவனின் உண்மையான அடியார்கள் யாரெனில்) அவர்கள் பொய்மைக்கு சாட்சியாக இருப்பதில்லை. அவர்கள் ஏதேனும் வீணானவற்றின் அருகில் செல்ல நேர்ந்தால், கண்ணிய மானவர்களாய்க் கடந்து சென்று விடுவார்கள்.

★ திண்ணமாக, இறைநம்பிக்கையாளர்கள் வெற்றி பெற்றுவிட்டனர். அவர்கள் எத்தகையவர்கள் எனில், தங்களுடைய தொழுகையில் பயபக்தியை மேற்கொள்கின்றனர். மேலும், வீணான வற்றை விட்டு விலகியிருக்கின்றார்கள்.

உனக்குள்ளே கடவுள்!

மனிதர்கள் கடவுளிடம் சென்று பல புகார்களைக் கூறியபடியே இருந்தார்கள். அது சரியில்லை, இது சரியில்லை, இதைக் கொடு, அதைக் கொடு, தன்னை ஏமாற்றுகிறார்கள், சோதனை வருகிறது, வேலையில்லை, கடன் தொல்லை, புது வீடு வேண்டும், காசு வேண்டும், உன் ஆசீர்வாதம் வேண்டும், வழக்காளியும் எதிரியும் தங்கள் பக்கம் வெல்வதற்காக நேர்த்தி, உன்னை நம்பி புது வியாபாரம், சாவியை உன் காலடியில் வைக்கிறேன், உன்னை நம்பி முதல் போடுகிறேன், என்னைக் கவனித்துக் கொள், என்னைச் சுகப்படுத்து இப்படி ஏகப்பட்ட புகார்கள், வேண்டுகோள்கள்.. ஒவ்வொரு புகாரையும் எடுத்துச் சரிசெய்து கொடுத்தால் அடுத்தவரைப் பாதிக்கிறது, பின்பு வேறொரு புதிய பிரச்னையுடன் வருகிறார்கள்!

இவ்வளவு தொல்லைகளில் இருந்தும் விடுபட என்ன செய்யலாம்? எங்கு செல்லலாம்? இமயமலை உச்சிக்குப் போகலாமா? ம்ஹூம். அங்கு மலை ஏறுபவர்கள் வந்து விடுவார்கள். சந்திரனில் போய் இருப்போமா அங்கே மனிதனை அனுப்பி சில காலம் தங்க வைக்க ரஷ்யாவும், அமெரிக்காவும் போட்டா போட்டி போட்டுக்கொண்டு அனுப்பும் விஞ்ஞானிகள் அங்கு என்னைக் கண்டதும் பிரயாண நிறுவனம் ஆரம்பித்து சந்திர மண்டல இன்பச் சுற்றுலா யாத்திரை ஆரம்பித்து விடுவார்களே!

மனிதர்களிடமிருந்து தப்ப யாரும் பார்க்க முடியாத இடம், யாரும் தேட முடியாத இடம், யாரும் யோசிக்க முடியாத இடம் என்று கடவுள் நெடுநேரம் யோசித்தும் அவருக்கு ஓர் இடமும் புலப்படவில்லை. ரொம்ப நாள் ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு கடவுளுக்கு அப்படிப்பட்ட ஓர் இடம் இருப்பதை அறிந்து கொண்டார்! அங்கு யாரும் வரவே மாட்டார்கள்!

இந்த மனிதர்கள் தங்களைத் தவிர பிறரை ஆராய்வார்கள். தங்கள் மீது நம்பிக்கை அற்றவர்கள் தங்களுக்குள் பார்ப்பதில்லை. பிற இடங்களில் தேடுவார்கள். தங்களுக்குள் தேடுவதில்லை. தங்களை அறிவதில்லை. தங்களை உணர்வதில்லை. கோயில், பூசை, அபிஷேகங்கள், மசூதி, தேவாலயம், தர்மசாலை, சினாகோஜ் என்று தங்களுக்கு விரும்பிய இடங்களில் தங்களைத் தாங்களே புறக்கணித்து விடுவார்கள். சரியான, பாதுகாப்பான, தொந்தரவு இல்லாத தான் இருப்பதற்கு ஏற்ற இடம் இந்த மனிதனின் உள்ளே இருப்பது எனக் கடவுள் முடிவு எடுத்துவிட்டார்! கடவுள் மனிதனின் உள்ளே புகுந்து விட்டார்! என்ன ஆச்சரியம்! அவரை யாரும் கண்டு கொள்ளவே இல்லை! கடவுளின் முடிவு சரியானதாகவே அமைந்துவிட்டது!

(மறுபிறப்பு பற்றிய ஆச்சரியமான தகவல்கள் என்ற நூலில் எஸ்.குருபாதம்)

நரைத்த தலையா... கவலைப்படாதீங்க!

பைபிள் பல பயனுள்ள போதனைகளை மனிதகுலத்துக்கு அறிவிக்கிறது. இதோ, படியுங்கள்.

★ வாலிபர்களின் கீர்த்தி அவர்களுடைய பலம்; கிழவர்களின் அழகு அவர்களுடைய நரைத்த தலை.

★ மனிதர்கள் தங்களுக்கு மேற்பட்ட வேறொருவரை குறிப்பிட்டுக் கூறி சத்தியம் செய்கிறார்கள். எவ்விதமான பிரச்னையையும் முடிப்பதற்கு சத்தியம் செய்வதே உறுதுணையாக இருக்கிறது. நீங்கள் உங்கள் தலைமீது கைவைத்து சத்தியம் செய்ய வேண்டாம். ஏனெனில், ஒரு ரோமத்தையேனும் வெள்ளையாகவோ, கறுப்பாகவோ உங்களால் மாற்றமுடியாது. எதற்காகவும் சத்தியம் செய்ய வேண்டாம். பரலோகத்தின் மீதும் ஆணையிட்டுச் சொல்ல வேண்டாம். ஏனெனில், அது பரமபிதாவின் சிம்மாசனம். பூமியின் மீதும் ஆணையிட வேண்டாம். ஏனெனில், அது அவரது பாதபீடத்தில் இருக்கிறது.

★ கத்தியை எடுப்பவர்கள் எல்லாம் அந்த கத்தியாலேயே மடிந்து போவார்கள்.

★ அழிவுள்ளதாய் விதைக்கப்படுவது அழிவில்லாததாக எழுந்திருக்கும். அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிக்க முடியாது.

★ மண் மண்ணுக்குள் திரும்பிப் போகும். கடவுள் கொடுத்த ஆவி அவரிடமே திரும்பிப் போகும்.

★ அழுகிறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவார்கள்.

★ நீங்கள் எந்த அளவினால் அளப்பீர்களோ, அதே அளவு உங்களுக்கு திரும்ப அளிக்கப்படுவது மட்டுமின்றி, கூடுதலாகவும் கொடுக்கும்.

★ வானத்தின் உயரம், பூமியின் ஆழம், ராஜாக்களின் அந்தரங்கம் ஆகியவற்றை ஆராய்ந்து அறிய முடியாது.

★ மாபெரும் மனிதர்கள் அனைவருமே அறிஞர்களாக இருந்து விடுவதில்லை.

★ அறிவாளியின் வாயில் உள்ள வார்த்தைகள் கருணையானவை. ஆனால், முட்டாள்களின் உதடுகளோ அவனையே விழுங்கிவிடும். முட்டாள்களின் பாட்டைக் கேட்பதை விட, அறிவாளிகளின் நிந்தனையைக் கேட்பது மிகவும் சிறந்தது. ஏனெனில், அறிவுள்ளவன் வார்த்தைகளை அடக்கிக் கொள்வான்.

★ எந்த மனிதனாவது தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பான் என்றால் அவனுக்கு எதுவுமே தெரியாது என பொருளாகும்.

★ உங்களை நிந்தித்து துன்புறுத்துபவர்களும், பழி தூற்றுபவர்களும் உலகில் இருக்கிறார்கள். அவர்களுக்காக பிரார்த்தனை செய்யுங்கள். உங்களை நேசிப்பவர்களையே நீங்கள் நேசிப்பதாயின், அதில் வெகுமானம் எதுவுமில்லை.

★ பலமும், மானமுமே ஒரு பெண்ணின் ஆடைகள். உன் ஆடைகள் எப்பொழுதும் வெள்ளையாகவே இருக்கட்டும்.

திருப்தியுடன் வாழ பழகுங்கள்

★ போதும் என்ற மனதுடன் திருப்தியுடன் வாழுங்கள். பேராசை நம்மை துன்பத்தில் தள்ளி விடும்.

★ மனிதன் பழி பாவத்திற்கு அஞ்சி நடக்க வேண்டும். குற்றமில்லாத வாழ்வே உயர்வுக்கு வழிவகுக்கும்.

★ கற்ற நல்ல விஷயங்களை மறப்பது கூடாது. அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்வதே அறிவுடைமை.

★ பிறருக்கு அடிமையாக வாழ்வதைக் காட்டிலும் கொடிய நரகம் வேறு கிடையாது.

★ இளமை, செல்வம், ஆயுள் இவையெல்லாம் நிலைத்து நிற்பதில்லை. செய்த தர்மத்தின் பயன் என்றென்றும் நிலைத்திருக்கும்.

ஜெயேந்திரர்

நேர் வகுப்பறை ஒன்றின் செயற்பாடுகள் எவ்வாறு காணப்பட வேண்டும்?

பொதுவாக வகுப்பறை முகாமைத்துவம் என்கிறபோது அது நிருவாகமல்ல. அது நிருவாக மாக இருந்தால் ஆசிரியர் அதிகாரத்தைக் காண்பிப் பார். எனவேதான் வகுப்பறை முகாமைத்துவம் என்பது சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட் டதும், பயனுள்ள முறையில் ஒரு வகுப்பறையை நடைமுறைப்படுத்துவதுமான செயற்பாடு களாகும். இதன் ஊடாக ஆசிரியருக்கு கிடைக்கும் பயன்களாக திறன் விருத்திக்கு சந்தர்ப்பம் கிடைத் தல், ஆசிரியர் தம்பொறுப்பினை நிறைவேற்றக் கூடியதாக இருத்தல், நடத்தைக்கோலத்தை தாமே சீரமைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிட்டு தல், மாணவர்களும் விருப்போடு கற்பர். ஆசி ரியருக்கும் மாணவரும் விரும்பும் சூழல் ஒன்று ஏற்படுகின்றது. ஆசிரியருக்கு தொழில் நிறைவில் திருப்தியும், போன்ற விடயங்களை இதன் ஊடாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இன்றைய மாணவர்களி;ன் எண்ணத்தில் உதிப் பதானது, கற்றல் என்றால் அதன் ஊடாக பரீட் சையில் சித்தியடைவது என்பதாகும். பரீட்சை மையக் கல்வி முறைதான் இது என்கிற தவறான எண்ணத்தைக் கொண்டுள்ளமையே இதற்குக் காரணமாகும். கற்றல் என்றால் அறிவினையும், திறன்களையும் பெற்றுக் கொள்வதாகும். கற்றல் என்பதை சரியான முறையில் அறிந்தவர்கள்தான் சிறந்தவர்கள் எனலாம். ஆனால் இதனை சரிவர புரிந்து கொள்ளாதவர்கள் பின்வரும் பிரச்சினை களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகின்றது.

★ முழுமையாக கற்றல் செயற்பாடுகளில் ஈடு பட முடியாதிருத்தல்

★ கல்வி கற்பதைத் தவிர்த்து நேரத்தை வீணாக் குதல்

★ கற்பதற்கான ஆயத்த நிலையிலிருந்து தவிர்ந்த கொள்ளல்

★ சிறந்த கற்றலுக்கான நுட்பங்களை அறிந்து கொள்ள முயற்சிக்காமை போன்றவைகளாகும்.

பெற்றோர் தம் குழந்தையை பாடசாலைக்குள் கொண்டு செல்கின்றபோது பல்மீறு எண்ணக்கருக் களுடனே செல்வர். தம்பிள்ளை பெரியவனானதும் தனக்கும் தனது குடும்பத்திற்கும் சம்பாதித்து தமது கஷ்டங்களை போக்குவான் என்கிற நம்பிக்கை யும் இதனுள் அடங்கும். கல்வியி;ன் நோக்குகள் பலவாராக இருந்த போதிலும் சமூகத்தில் அவன் ஒரு சிறந்த நற்பிரஜையாக மிளிர வேண்டும் என்பதாகக் கொள்ளப்படுகின்றது. நல்லதொரு பிரஜையாக அவன் வாழத் தலைப்படுவானாக இருந்தால் அவன் தன் பெற்றோருக்கு சிறந்த மக னாகவும், பெற்றோர் விரும்பும் வகையில் தமது குடும்பத்தை காப்பவனாகவே மாறுவான். இந்த உளத்தாக்கத்தை ஆரம்பத்திலிருந்தே தான் கற்றுக் கொள்ளும் கல்வியின் ஊடாக ஆசிரியரினதும், பாடசாலையினதும் செயற்பாடுகளில் தங்கியிருக் கிறது என்பதுதான் யதார்த்தமாகும்.

நேர் வகுப்பறை முகாமைத்துவத்தின் பங்குகளில் கூறப்படுகின்ற விடயங்களில் முதன்மையானது தண்டனை அற்ற வகுப் பறையாகும். நாம் மேலே கூறியதுபோல தண்டனை என்பது ஆரம்பத்திலிருந்தே வழங்கப்படுமாக இருந்தால் அவன் தாம் எதிர்பார்க்கின்ற நற்பிரஜையாக மாறுவான் என்று எதிர்பார்க்க முடியாது. தனது உள்ளம் பாதிக்கப்பட்ட ஒருவனாகவே காட்சியளிப் பான். தண்டனை ஊடாக தாம் கற்கும் கல் வியினை வெறுப்போடுதான் பார்ப்பான். சந்தர்ப்பம் ஒன்று வருகின்றபோது அவன் அந்தச் சமூகத்தையே எதிர்ப்பவனாக மாறு வான் என்பதை நாம் பல்வேறு உண்மைச் சம்பங்கள் ஊடாக கண்டுள்ளோம். என வேதான் நேர் வகுப்பறை முகாமையில்

வடமாகாணப் பாடசாலைகளை தரிசித்தமை பற்றிய அனுபவப் பகிர்வு தொடர்பான பயணக் கட்டுரை

தண்டனை அற்றதும், பிரம்புகள் மாணவருக்கு தண்டனை அளிக்கும் ஒரு கருவியாக அல்லாது உதவுகின்ற கோலாக காணச் செய்தலில் ஆசிரி யர் முதன்மையாளனாகின்றார். நமது பாடசாலை பார்வைகளின்போது பிரம்பு பயன்படுத்தப்படுகி றது அந்தப் பிறம்பு நாம் கூறியதுபோல மாணவர் களுக்கு தண்டனைக்குரியதாக இல்லாமல் அது கரும்பலகையில் எழுதியவற்றை தொட்டுக்காண் பிக்கவும், உயரமான பொருட்களை எடுப்பதற்கும் என்று பல்வேறு உதவியானாகவே நாம் அதனைப் பார்க்கக்கூடியதாக இருந்தது.

அடுத்த ஒரு முக்கியமான விடயம் ஒழுக்கச் செயற்பாடுகளாகும். அந்த ஒழுக்காறு நடவடிக்கை களில் அப்பாடசாலைகளின் நிலைமைகள் மாண வர்கள் விரும்பக் கூடியதாகவும், பெற்றோருக்கு அந்த ஒழுக்காறு விடயங்கள் கூறப்பட்டு பாட சாலையின் சட்டதிட்டங்கள் அனைத்தும் மாணவர் நலன் சார்ந்ததாகவே காணப்படுவதுவும் முக்கிய மான அம்சமாகும். உதாரணமாக ஒரு மாணவன் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தொட

அட்டாளைச்சேனை
எஸ்.எல். மன்சூர்

ராக பிந்தி வருகை தருபவனாக காணப்படுவானாக இருந்தால் அந்த மாணவனின் ஊடாக வராமைக் கான காரணங்களை எழுத்து மூலம் கோரப்படு கின்றது. அந்தக் காரணங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தால் அது அங்கீகரிக்கப்படும். ஏற்றுக் கொள்ள முடியாதவையாக இருக்குமாக இருந்தால் பெற்றோர் வரவழைக்கப்பட்டு அவை சீராக்கப்படும். இந்த சீராக்கத்தின் விளைவு ஓரிரு மாணவர்களைத் தவிர அனைத்து மாணவர்களும் தினந்தோறும் பாடசாலைக்கு வருகின்ற அற்புதத் தினை கண்டுகொண்டோம்.

ஆனால் நாம் வழமையாக பிரவேசிக்கின்ற பல பாடசாலைகளில் மாணவர்கள் வரவினை உரிய நேரத்திற்குள் பதிவிட மாட்டார்கள். காரணம் ஒவ் வொரு வகுப்பிலும் பல மாணவர்கள் வருகை தந்திருக்க மாட்டார்கள். இவர்கள் அனைவரும் வருகை தந்ததாக நினைத்து அங்கே வரவுக்குறி இடப்பட்டிருக்கும். காரணம் போஷாக்குணவுக் குரிய பணம். பணம் பாதாளம் பாயும் என்பார் கள். மாணவர்கள் வரவில்லை என்றால் பெற்றோர் தக்க காரணம் கூறுவதும், இனிமேல் எக்காரணம் கொண்டும் தனது குழந்தை பாடசாலைக்கு வரா மல் நிற்கமாட்டார் என்றெல்லாம் ஒப்பந்தம் செய் யப்படுகின்ற அதேவேளை இவன் வந்தால் என்ன வராவிட்டால் என்ன? என்கிற நிலைப்பாடுகள் காணப்படுகின்ற பாடசாலைகளும் எம்மத்தியில் காணப்படுவதன் காரணமாக கல்வியில் உயர்ச்சி யும், மாணவர் அடைவில் முன்னேற்றமும் எங்கே சார் ஏற்படப்போகிறது.

வாசிப்பு அறைகள் சம்பந்தமான கருத்தாடல் கள் அண்மைய நாட்களில் பேசப்பட்டு வருகின் றன. ஒரு மாணவன் வாசிப்பாளாக மாறாதபோது எப்படி அவன் மொழியைக் கற்றறிந்தவனாக மாற்றம் காண்பான். இன்றைய நவீன காலத்திற்கு ஏற்றவிதமாக எழுத, வாசிக்க முடியாத பிள்ளைக ளையா நாம் உருவாக்க முனைந்திருக்கிறோம். சில பாடசாலைகளில் தரம் 4, 5 வகுப்பு மாணவர்களை பார்வையிடச் சென்றால் வகுப்பொன்று சப்பென்று காணப்படும். அந்த வகுப்பைப் பார்க்கும்போதே அது படிக்காத மேதைகளின் வகுப்பு என்று ஓர் ஆசிரியர் குறிப்பிடுவார். அதிபரோ மக்களுகளு டைய வகுப்பு. அவனுகளுக்கு எதுவுமே ஏறாது. அந்த மாணவர்கள்தான் அப்பாடசாலையின் எடு பிடிகள். பெற்றோருக்கு இவை தெரியாது. மாலை வேளைகளில் அதே பாடசாலையில் ஆசிரியர் ஒரு வர் பல நூறுகளை பெற்று டியூசன் வேறு.

இதற்கிடையில் மக்கு மக்கு வகுப்புக்கள் என்று கூறி இறுதியில் பூச்சியம் பெற்றுக் கொண்ட மாணவர்களும் உண்டு. அப்படியானாலஇவர்க

ளுக்கு ஐந்து வருடங்களாக குறிப்பாக மூன்று ஆசி ரியர்களை கண்ட இவர்கள் எதனைத்தான் கற்றார் கள். இவர்களுக்கு கற்பித்தவர்களைக் கண்டு ஏன் இந்த நிலை அந்த மாணவனுக்கு ஏற்பட்டது என்று விசாரணை செய்தால் அவன் தரம் ஒன்றிலும், இரண்டிலும் கெட்டிக்கார மாணவன் என்று அந்த ஆசிரியரும், தரம்3, 4 கற்பித்த ஆசிரியரும் சிறந்த மாணவன் என்கிற முத்திரையும் குத்தப்பட்டிருந்த போதிலும் தரம் 5க்கு வந்தவுடன் அனைத்தும்

32 ஆம் பக்கம் பார்க்க....

குறைவடைந்து வரும் நாட்டார் இலக்கியங்கள்

நாட்டார் இலக்கியங்கள் இன்று தனித்துவம் பெற்ற இலக்கியங்களாக விளங்கு கின்றன. இவை கிராம மக்களின் அனுபவங்களி னையும் அவர்களின் வாழ்வியலையும் அவர்களே பேசுகின்ற இலக்கியங்களாகும். கிராமங்களில் பாரம்பரிய குறியீடுகளாக விளங்கும் நாகரிக வர லாற்றினையும், பண்பாட்டினையும், பாரம்பரிய சடங்கு முறைகளையும், நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் யதார்த்தமாக எடுத்துக் கூறுகின்றன.

தமிழ்பாரம்பரியத்தில் இருந்து வரும் நாட் டாரியல் பண்புகள் சிந்துவெளி காலத்துப் பண்பாட்டு விழுமியங்கள், கிராமிய சிறுதெய்வ வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் என்பன வற்றின் எச்சங்களாக உள்ளன. நாட்டார் இலக்கி யத்திற்கான வித்தை தொல்காப்பியத்தில் காண லாம். (தொ.நூ.பா.79) ஏட்டிலக்கியம் என்று கூறப்படுகின்ற செந்நெறி இலக்கியம் தோற்றம் பெறுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வாய்மொழி மரபில் வரும் நாட்டார் இலக்கியம் தோற்றம் பெற்றுள்ளது.

நாட்டார் இலக்கியங்கள் பற்றி டாக்டர் சு. சத்தி வேல் கூறுகையில் ஒரு நாட்டு மக்களின் நாகரிகத் தை, பண்பாட்டை, பழக்கவழக்கங்களை, வரலாற் றை, நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம்பிடித்துக் காட்டுவதே நாட்டுப்புறவியலாகும். பழங்காலப் பண்பாட்டின் எச்சம் **(Cultural Survial)** நாட்டுப்புறவியலாகும். நாட்டுப்புறவியல் என்பது நாட்டுப்புற மக்களின் மரபு வழிப்பட்ட படைப்புக்கள் **(Traditional Creations** எனலாம். இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்றால், நாட்டுப்புறவியல் சமுதாய வளர்ச்சியைக் காட்டும் கண்ணாடி எனலாம் என்றார்.

கிராம மக்கள் மத்தியில் வாய்மொழி இலக்கி யங்களே காலம் காலமாக இருந்து வருகின்றன. இவை உயிர்த்துடிப்புள்ள இலக்கியங்களாகவே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மனித வாழ்வில் ஏற்படும் பல்வேறு உணர்ச்சிகளுக்கேற்ப பண்டைய வாழ்க்கை முறை, போரியல் முறை கள், பண்பாடு, சமுக பொருளாராதாரச் சூழல் பற்றியெல்லாம் எளிய பாடல்களாகவும், கலை வடிவங்களாகவும், பரம்பரை பரம்பரையாக பேசப் பட்டு வந்துள்ளன. இவை எழுத்தில் எழுதப்படாது வாய்மொழியாக உயிர்த்துடிப்புடன் இருக்கின்றது.

நாட்டார் இலக்கியங்கள் பிரதேசத்தின் தனித் துவம் மற்றும் சமூக அமைப்பின் நேரடிப் பிரதி பலிப்பாகவும், எளிய மொழிநடையிலான தெளி வான கருத்து வெளிப்பாட்டு தன்மையினையும், உள்ளதை உள்ளவாறு கூறும் பாங்கிலும், எளிமை யான இசையுடனும் காணப்படுகின்றன. நாட்டார் இலக்கிய வகைகளாக நாட்டார் பாடல்கள், நாட் டார் கதைகள், கதைப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், நாட்டார் கலைகள் போன்றவற்றைக் கொள்ளலாம்.

பிறரது துன்ப துயரங்களில் பங்கேற்று அவர் களது துன்பங்களைக் குறைத்தல், உடல் உழைப் பில் உதவும் பாங்கும் தொழில் முயற்சியில் உற்சாகத்தை ஏற்படுத்தலும், சமுதாய உறவுகளைப் பேணும் வகையில் அன்புணர்சியை வெளிப்ப டுத்தும் நோக்கிலும், நாட்டுப் புற விளையாட்டுக் கள் ஊடாக பிறருக்கு அறிவுரை வழங்குதல், ஒற்று மையை உணர்த்தும் தன்மை, நாட்டு நடப்புக்களை பரிமாறிக் கொள்ளுதல், மக்களது வீரம், பேராற்றல், புனிதத்தன்மை போன்றவற்றினை வெளிப்படுத்தும் நோக்கிலே நாட்டார் இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

மகிழையாள்

ஈழத்தைப் பொறுத்தவரையில் நாட்டார் இலக்கி யங்கள் மூன்று பிரதேசங்களைக் கொண்டதாகவே அமைகின்றது. அவை வடக்கிலங்கை நாட்டார் இலக்கியங்கள், கிழக்கிலங்கை நாட்டார் இலக்கி யங்கள், மலையக நாட்டார் இலக்கியங்கள் என்ப னவாகும். மக்களால் வாய்மொழியாக வந்தவை பிற்காலங்களில் ஆய்வுகளாக மேற்கொள்ளப்பட்டு நூல்களிலும் வெளிவந்துள்ளன.

இன்று பலர் நாட்டார் இலக்கியங்கள் தமக்கு தேவையற்றது என்று அவற்றை ஒதிக்கிவிடுவத கைக் காணக்கூடியதாக உள்ளது. வாய்க்கு வந்தபடி படித்துள்ளார்கள் என்று கூறி அதனை ஒதுக்குகின் றனர். மேலும் காலவோட்டத்தில் மொழியிலும் கருத்திலும் சிதைவடைந்தும் திரிவடைந்தும் சென் றுள்ளமையினால் மூல இலக்கியத்திலிருந்து தற் போது எமக்கு கிடைப்பது வேறுபட்டு நிற்கின்றன.

கிராம மக்களால் பேணப்பட்டு வந்துள்ள மையினால் அதில் பாண்டித்திய பாரம்பரியம் பேசப்படாமையினால் இலக்கியச் செந்நெறியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நவீன இசைக் கருவி கள் தோற்றம் பெற்றமையினால் புதிய இசை வடி வங்கள் தோற்றின. இதனால் மக்கள்ணீன் நாட்டம் அதில் சென்றமையினால் நாட்டார் இலக்கியத்தின் செழுமையும் தனித்துவமும் சிதைக்கப்பட்டது. நாட்டார் இலக்கியங்கள் இலக்கண நெறிமுறைக ளைக் கொண்டவையல்ல. எனவே இவற்றை ஆவ ணப்படுத்தும் நோக்கில் அறிஞர்களால் நூலுருப் பெறும்போது திருத்தங்களுக்குட்படமையினால் வடிவங்கள் மாற்றமைடைந்தன.

எம்முடைய முன்னோர்களால் பேணப்பட்டு வந்த இவ்விலக்கியங்கள் கல்வியல் சிந்தனைகளை வளர்க்கும் நோக்கில் முன்னெடுக்கப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. நாட்டார் விளையாட்டுக ளில் உள்ள உளவியலும் சிந்தனை ஆற்றலும் விடுக தைகளில் உள்ள நுட்பங்கள், நாட்டார் பாடல்களில் உள்ள கருத்தாளங்கள், நாட்டார் கதைகளில் ஒன் றான அறிவுரைக் கதைகள் போன்றவற்றில் கல்வி யல் சிந்தனைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இவ் நாட்டார் இலக்கியங்கள் அம்மக்களி டையே அக் கணமே உருவாகிய ஒரு விடயம். மனப்பாடம் பண்ணி இதனை அவர்கள் ஒப்புவிக்க வில்லை. உடனே தோன்றியதை வாய்மொழியாக வெளிப்படுத்தினார்கள். ஆனால் பிற்பாலத்தில் வந்தவர்கள்தான் அதனை மனனம் செய்து கொண் டார்கள். நாட்டார் பாடல்களிலே தாலாட்டு, ஒப் பாரி, தெம்மாங்கு, காதல், தொழில் சார்ந்த பாடல், சமய வழிபாட்டுப் பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள் என்பன காணப்படும். இது மக்களின் அன்றாட வாழ்வியலோடு தொடர்புபட்டவைகள் தான். அவர்கள் தொடர்புகள் இல்லாத ஒன்றினைக் கூறவில்லை.

நாட்டர் இலக்கியங்கள் பற்றி 1830 களில் இருந்து இன்றுவரையிலும் ஆய்வுகளும் நூல்களும் வெளிவந்தவண்ணமே உள்ளன. எமது மக்களினு டைய பொக்கிஷங்களை பாதுகாப்பதும் பேணுவ தும் எமது கடமையாகின்றது. கிராமங்களில் இன்று குறைவடைந்து கொண்டே செல்கின்ற நாட்டார் இலக்கியங்கள் எவ்வாறு தமது வளர்ச் சியினை அடையும் என்பதில் சந்தேகங்கள் எழுந்துள்ளன. இன்றைய கிராம மக்கள் தங் களை நவினத்துடன் தொடர்பு கொண்டவர்களாக மாற்றியுள்ளனர். நாட்டார் இலக்கியங்கள் பற்றி அவர்களிடம் குறைவான விடயங்களே தெரிந் துள்ளன. ஆனால் ஒருசிலரே இன்றும் நாட்டார் பாடல்கள் பாடுகின்றவர்களாகவும், கவிகள் கூறு கின்றவர்களாகவும் உள்ளனர்.

நாட்டார் இலக்கியங்கள் தோற்றம் பெறு வதிலும் சரி, அதனைப் பின்பற்றுவதிலும் சரி இன்றைய காலப்பகுதியில் மக்களிடையே குறை வடைந்து கொண்டு செல்வதனை அவதானிக்க முடிகின்றன. பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடுகின்றார்கள் இல்லை, வேளாண்மை தொடர்பான நாட்டார் பாடல்களைப் பாடுகின்றார் கள் இல்லை, தாய் மார்கள் தாலாட்டுப் பாடல் களை பாடுகின்றார்கள் இல்லை. நாட்டார் கதை களினை கூறுகின்றார்கள் இல்லை. இன்று கல்வி பாடத்திட்டத்;தில் நாட்டார் இலக்கியங்கள் பற்றி தமிழ் பாடப்புத்தகங்களில் ஓர் அலகு உள்ளமையி னால்தான் அதனை மாணவர்கள் தெரிந்து கொள் கின்றார்கள்.

அன்று வாய்மொழியாகப் பாடப்பட்டுவந்த பாடல்கள், கதைகள் இசைக்கருவிகள் இன்றி உடனடியானதாக தோன்றியதாக இருக்க, இன்று கல்வி கற்றிவர்களால் உருவாக்கப்படுகின்ற நாட் டார் பாடல்களோ, கதைகளோ இசைக்கருவிக ளைப் பயன்படுத்தி உருவாக்கப்படுகின்றன. இது ரசனையை ஏற்படுத்துவதனால் மக்களின் நாட்டம் அதனை நோக்கியதே. அதனாலும் கிராம மக்க ளிடம் நாட்டார் இலக்கியங்கள் குறைவடைந்து கொண்டு செல்வதனை அவதானிக்கலாம். நாட் டார் இலக்கியங்கள் எமது முன்னோர்களினுடைய சொத்துக்கள். அதனை நாம் எமது அடுத்த தலை முறையினருக்கு கடத்துவதுடன் அவர்களையும் இதன்பால் ஈர்த்து செயற்பட வைத்தல் சாலச் சிறந்ததாகும்.

சூழலை பாதுகாப்பது எமது கடமையாகும்!

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையில் சுற்றுச் சூழல் தினம் கொண்டாடப்படுகிறது. அதற்கேற்ப இளைஞர்களும், குழுக்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், தொழில் வர்த்தக ஊடக அமைப்புகளும், சுற்றுச் சூழலை மேம்படுத்தி அதை பாதுகாப்பதில் தங்களின் உறுதிபாட்டை வெளிப்படுத்தும் விதமாக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதற்கேற்ப இளைஞர்களும், குழுக்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், தொழில் வர்த்தக ஊடக அமைப்புகளும், சுற்றுச் சூழலை மேம்படுத்தி அதை பாதுகாப்பதில் தங்களின் உறுதிபாட்டை வெளிப்படுத்தும் விதமாக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நாம் வாழும் இந்த பூமியில், எதிர் கால தலைமுறையும் நலமாக வாழ வேண்டுமெனில் சுற்றுச்சூழலை பாதுகாப்பது அவசியம். உலக நாடுகளுக்கு சவாலான பிரச்னையாக, சுற்றுச்சூழல் பாதிப்பு உருவெடுத்துள்ளது. உலகின் வெப்பநிலை உயர்கிறது. மழை குறைகிறது.

அன்டார்டிகா, இமயமலை பகுதிகளில் பனிகட்டிகள் உருகுவதால், கடல் மட்டம் உயர்ந்து, தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் எழுந்துள்ளது. சுற்றுச்சூழலை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக, ஜூன் 5ம் தேதி உலக சுற்றுச்சூழல் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

உணவை வீணாக்காதீர்

உலகில் ஆண்டுதோறும் 130 கோடி டன் உணவு வீணாக்கப்படுகிறது என ஐ.நா., உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவிக்கிறது. 7 பேரில் ஒருவர் பசியுடன் தூங்குகிறார். ஐந்து வயதுக்குட்பட்ட 20 ஆயிரம் குழந்தைகள் பசியால் இறக்கின்றன. 700 கோடி மக்களுக்கு உணவளிக்க, தற்போதைய பூமி தடுமாறுகிறது. உணவுப் பொருளுக்கு மூல காரணம் தண்ணீர். சுற்றுச்சூழல் மாசுபாட்டை தடுப்பதற்கு, ஒருவர் நினைத்தால் முடியாது. கோடிக்கணக்கான மக்கள் நினைத்தால் சாத்தியமாக்கலாம். இதற்கு என்ன செய்யலாம்?

★ தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

★ வீடுகள், அலுவலகங்களில் குறைந்தது 2 மரங்களையாவது வளர்க்க வேண்டும்.

★ பயணங்களுக்கு சொந்த வாகனங்களை தவிர்த்து, பேருந்தை பயன்படுத்தலாம்.

★ வழக்கமான குண்டு பல்புகளுக்கு பதிலாக 'சி.எப்.எல்.,' 'எல்.இ.டி.,' பல்புகளை பயன்படுத்தலாம்.

★ 'ஏசி'யில் பயன்படுத்தப்படும் 'ஏர்-பில்டர்'களை மாதத்துக்கு ஒருமுறையாவது சுத்தப்படுத்த வேண்டும்.

★ வீட்டிலிருந்து புறப்படும் முன், மின்சாதன பொருட்கள் 'சுவிட்ச்-ஆப்' செய்யப்பட்டுள்ளதா என பார்க்க வேண்டும்.

★ மரம் மற்றும் கிரானைட் கற்களால் செய்யப்படும் பொருட்களை குறைத்துக் கொள்ளவும்.

★ சூரிய சக்தியில் இயங்கும், 'வாட்டர்-ஹீட்டர்'களை பயன்படுத்தலாம்.

★ கடிதம் எழுதுவதை விட, இ-மெயில் மூலமான தொடர்புகளை அதிகரித்துக்கொள்ளலாம்.

★ ஸ்பிரே பெயின்ட்களுக்கு பதில், பிரஷ்களையோ, ரோலர்களையோ பயன்படுத்தலாம்.

★ கடைகளுக்கு செல்லும் போதே துணிப்பை எடுத்துச் சென்றால், பிளாஸ்டிக் பைகளை தவிர்க்கலாம்.

★ வீடுகளில் மழைநீர் சேகரிப்பு முறைகளை அமல்படுத்த வேண்டும்.

★ பேப்பரின் இரு புறங்களையும் பயன்படுத்த வேண்டும்.

இது போல ஒவ்வொருவரும், அன்றாட வாழ்க்கை முறையில் மாறுதல்களை செய்வதன் மூலம், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு பங்களிக்க முடியும்.

ழல் சீர்கேட்டால், தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, 'சிந்தித்தல், உண்ணுதல், சேமித்தல்' - என்பது இந்தாண்டு இத்தினத்தின் மையக்கருத்தாக வைக்கப் பட்டுள்ளது. இதன்படி உணவுப்பொருளை வீணாக்குவதை தடுப்பது; அனைவருக்கும் உணவு கிடைப்பது என்ற கருத்து முன் வைக்கப்படுகிறது.

உணவு சாப்பிடுவதற்கு முன் சிந்தியுங்கள். சுற்றுச்சூழலை பாதுகாக்க உதவுங்கள் என அந்த அமைப்பு வலியுறுத்துகிறது.

எப்படி பாதுகாப்பது:

சுற்றுச்சூழல் மாசுபாட்டை தடுப்பதற்கு, ஒருவர் நினைத்தால் முடியாது. கோடிக்கணக்கான மக்கள் நினைத்தால் சாத்தியமாக்கலாம். இதற்கு என்ன செய்யலாம்?

★ தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

★ வீடுகள், அலுவலகங்களில் குறைந்தது 2 மரங்களையாவது வளர்க்க வேண்டும்.

★ பயணங்களுக்கு சொந்த வாகனங்களை தவிர்த்து, பேருந்தை பயன்படுத்தலாம்.

★ வழக்கமான குண்டு பல்புகளுக்கு பதிலாக 'சி.எப்.எல்.,' 'எல்.இ.டி.,' பல்புகளை பயன்படுத்தலாம்.

★ 'ஏசி'யில் பயன்படுத்தப்படும் 'ஏர்-பில்டர்'களை மாதத்துக்கு ஒருமுறையாவது சுத்தப்படுத்த வேண்டும்.

★ வீட்டிலிருந்து புறப்படும் முன், மின்சாதன பொருட்கள் 'சுவிட்ச்-ஆப்' செய்யப்பட்டுள்ளதா என பார்க்க வேண்டும்.

★ மரம் மற்றும் கிரானைட் கற்களால் செய்யப்படும் பொருட்களை குறைத்துக் கொள்ளவும்.

★ சூரிய சக்தியில் இயங்கும், 'வாட்டர்-ஹீட்டர்'களை பயன்படுத்தலாம்.

★ கடிதம் எழுதுவதை விட, இ-மெயில் மூலமான தொடர்புகளை அதிகரித்துக்கொள்ளலாம்.

★ ஸ்பிரே பெயின்ட்களுக்கு பதில், பிரஷ்களையோ, ரோலர்களையோ பயன்படுத்தலாம்.

★ கடைகளுக்கு செல்லும் போதே துணிப்பை எடுத்துச் சென்றால், பிளாஸ்டிக் பைகளை தவிர்க்கலாம்.

★ வீடுகளில் மழைநீர் சேகரிப்பு முறைகளை அமல்படுத்த வேண்டும்.

★ பேப்பரின் இரு புறங்களையும் பயன்படுத்த வேண்டும்.

இது போல ஒவ்வொருவரும், அன்றாட வாழ்க்கை முறையில் மாறுதல்களை செய்வதன் மூலம், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு பங்களிக்க முடியும்.

தண்ணீர் மாசுபடுவது ஏன்

ஏ.பாக்கியம், மாநில அமைப்பாளர், தமிழ்நாடு சுற்றுச்சூழல் கழகம், திண்டுக்கல்:தண்ணீர் மாசுபடுவதற்கு தற்போதைய முறைகளே காரணம். பழைய முறைகளில் வீடுகட்டும் போதே சுற்றிலும் மரங்களை நடுவது என்று இருந்தது. இதன் மூலம் வீட்டில் இருந்து வெளியேறும் கழிவுநீரை, மரங்கள் உறிஞ்சுவதால் தண்ணீர் மாசுபடுவது தவிர்க்கப்பட்டது. தற்போது வீட்டுக்கழிவு நீர், சாக்கடைகள் வழியாக வெளியேறுகிறது. இவை நகர்புறங்களில் உள்ள நீர்நிலை ஆதாரங்களில் தேங்கி மழை நீர் தேங்கும் இடத்தில் மாசு ஏற்படுத்துகிறது.திண்டுக்கல்லில் தோல் தொழிற்சாலை கழிவுகளை மழை காலங்களில் சுத்திகரிக்காமல் திறந்துவிடுவதால் இவை குடகானாற்றில் சென்று கலப்பதால் குடிநீர் ஆதாரங்களும் மாசுபடுகிறது.

மரம் வளர்த்தால் போதும்

சுற்றுச்சூழல் ஆர்வலர் ஜெசி ஜெயகரன், சுற்றுச்சூழலை பாதுகாக்க மரம் வளர்ப்பது மிக அவசியம். சொந்த வீடானாலும், வாடகை வீடு என்றாலும் தோட்டங்கள் அமைக்கலாம் அல்லது முருங்கை, பப்பாளி அல்லது செம்பருத்தி போன்று ஏதாவது ஒரு மரம் வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட வேண்டும்.

அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள், 2 லிட்டர் வாட்டர் கேனை கட்டாக்கி, அதில் மணல் நிரப்பி, கீரை, கொத்தமல்லி, வெந்தையக் கீரை, பசலிக்கீரை போன்றவை வளர்க்கலாம். இதற்காக, வீடுகளில் வீணாகும் காய்கறிகளை உரமாக பயன்படுத்தலாம். வார்டுகள் அல்லது தெருக்களில் வீடுகளில் மரம் வளர்க்கும் போட்டிகளையும் அரசு அறிவித்து, நன்றாக வளர்த்தவர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை அமல்படுத்தலாம்.

மாணவர்கள் நட்ட 1.37 லட்சம் கன்றுகள்!

சுற்றுச்சூழலை காக்க மரங்கள் நடுவதே ஒரே வழி. மதுரையில் 200 பள்ளிகளில், 2 ஆண்டுகளில் 1.37 லட்சம் மரக் கன்றுகள் மாணவர்களால் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. 'பிளாஸ்டிக்' இல்லாத பள்ளி வளாகங்களாக மாற்றும் முயற்சியில், சுற்றுச்சூழல் மன்றங்கள் செயல்படுகின்றன.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனியாண்டி, மாணவர்களின் பிறந்த நாட்களை முன்னிட்டு, அந்தந்த மாணவர்களே அவர்கள் படிக்கும் பள்ளி வளாகம் அல்லது வீடுகள் அருகே மரக் கன்றுகள் நட்டு, பராமரிக்கும் திட்டம் உள்ளது. 393 பள்ளிகளில், 50 மாணவர் உறுப்பினர்கள் கொண்ட'சுற்றுச்சூழல் மன்றங்கள்' செயல்படுகின்றன. இந்த மன்றங்கள் செயல்பாட்டிற்காக, தமிழக அரசு ஆண்டுக்கு ரூ.2500 நிதி ஒதுக்கியுள்ளது. இந்தாண்டு 50 ஆயிரம் மரக் கன்றுகள் நடுவதற்கான திட்டம் உள்ளது.

பொறுமைக்கும் எல்லையுண்டு

பொறுமைக்கு பூமி தாயை உதாரணம் காட்டுவதுண்டு. பூமி தாயின் பொறுமையை, நாம் அன்றாட செயல்களால் முடிந்தளவு சோதிக்கிறோம். எளிதாக, மலிவாக கிடைக்கிறது என்பதற்காக, பயன்படுத்தும் பிளாஸ்டிக், பூமியின் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. 20 மைக்ரானுக்கும் குறைவான பிளாஸ்டிக், 300 ஆண்டுகளானாலும் மக்காதவை. கண்ட இடங்களில் போடப்படும் பிளாஸ்டிக், பாலிதீன் பைகள் மண்ணில் மக்காமல் கிடக்கின்றன. மழை காலங்களில் தண்ணீர் அடியில் செல்வதில்லை. புதைக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து, மீதேன் வாயு வெளியாகி, நிலத்தடி நீரையும் பாதிக்கிறது.

இந்திய பொறியாளர் கழக தலைவர் ராஜாமணி, 'பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து, காகித, துணி பைகளை மக்கள் பயன்படுத்த வேண்டும். வீடுகளில் சேரும் குப்பைகளை மக்கும், மக்காதவை என தரம் பிரிக்க வேண்டும். பிளாஸ்டிக், பாலிதீன் கழிவுகளை முடிந்தளவு மக்காத பெட்டிகளில் போட வேண்டும். இதன் மூலம் ஓரளவு பிளாஸ்டிக் கழிவுகள் சேருவதை தவிர்க்கலாம்,' என்றார்.

நேர்...

31 ஆம் பக்கத் தொடர்ச்சி

மறந்து விட்டதாக கூறுகின்ற ஆசிரியர்களும் உண்டு. ஆனால் தேர்த்திகள் அனைத்திலும் முழுமையான அடைவினை பெற்றிருப்பான்.

ஆகவே, இந்த மாணவனுக்கு என்ன தான் நடந்தது என்று பின்புலத்தை சற்று ஆழமாக நோக்கினால் அந்த மாணவனுக்கு எவ்விதமான தேர்ச்சிகளோ, எழுத வாசிக்கவோ தெரியாமல் இருப்பதன் காரணமாக ஆசிரியருக்கு பிடிகள் ஏதாவது வந்துவிடுமோ என்கிற உள்ளார்ந்தமான நிலைப்பாடு காரணமாக இரவோடு இரவாக வீட்டுக்குக் கொண்டு வந்து அவன் முழுமையான தேர்ச்சியுடையவனாக அங்கு சரி அடையாளம் இடப்பட்டு அடுத்தநாள் வெளிவாரி மதிப்பீட்டின் போது காண்பிக்கப்பட்டு முழுமையான புள்ளிகள் பெறுவதற்கு உதவியிருக்கும். இப்போது அந்தப் பிரதேசத்தில் அதிகூடிய புள்ளிகளும் பெற்றிருக்கும். ஆனால் வருடந்தோறும் பல நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் உளக்குறைபாடுடன் கற்றலில் பின்தங்கியவனாக பாடசாலைச் சமூத்தினாலும், வெளிச் சமூகத்தினராலும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அவன் பாடசாலைக்கு முழுக்குப் போடுவதற்கு முயற்சிக்கிறான் அநேகமாக அவன் தரப்பு வெற்றிபெறும். சில காலங்களின் பின்னர் அவன் வெளிநாடு சென்று சிறந்த முறையில் சம்பாதித்துக் கொண்டு ஊர்வந்து கட்டிடம் கட்டி வியாபாரம் செய்கின்றான். அவனது வியாபார நிலையத்தில் அவனுக்கு கற்பித்த மொக்கு என்று ஏசிய ஆசிரியரையே வேலையாளனாக வைத்திருந்த சம்பவங்களும் உண்டு.

இதிலிருந்து விடுதலை பெறவேண்டுமாக இருந்தால் ஒழுக்கமுள்ள, பாடசாலைக்கு கட்டுப்பட்டு நடக்கக் கூடியவனாக, சிறந்த கற்றலை பெறுகின்றவனாக, அதிகூடிய புள்ளிகளை பெறுகின்றவனாக, முரண்பாடுகள் அற்ற நிலையில் ஆசிரியருடன் தோழமை கொண்டு, ஆசிரியரும் இவன் என் மாணவன் இவனுக்கு சிறந்த கல்வியை வழங்க வேண்டும் என்று நோக்குகின்ற பாடசாலைகளே நாம் சென்ற பாடசாலைகளாக எமக்கு தெரிந்தன. வகுப்பறையில் ஒவ்வொரு மாணவனும் சிறந்த முறையில் போஷிக்கப்படக் கூடியவனாக இருப்பதையும் நாம் காணக்கூடியதாக இருந்தது.

உண்மையான ஆசிரியன் சிறந்த சேவகனாவான். ஆசிரியன் சமூக மேம்பாட்டுக்காக தன்னையே உருக்கிக்கொள்கின்றான். இவ்வாறெல்லாம் ஆசிரியர் பணிக்கு கூறுவதுண்டு. அவ்வாறாகப்பட்ட ஆசிரியரின் மேம்பாட்டுக்காக மாதாந்தம் வழங்கப்படுகின்ற ஊதியத்தைத் தவிர வேறு என்னதான் கிடைக்கிறது. ஆனால் யாழ் மண்ணில் நாம் பார்வையிட்ட பாடசாலைகளில் தரம் 5க்கு விசேடமான முறையில் மேலதிகமாக கற்றுக் கொடுக்கின்றார்கள். பாடசாலையில் கற்பித்த அதே ஆசிரியர் மாலையில் பல நூறுகள் பெற்றுக் கற்பிக்கிறார். இது நமது பிரதேசப் பாடசாலைகளில் காணப்படுகின்ற வழி முறையாகும். அதுமட்டுமல்ல ஆசிரியர்களுக்கு செயலமர்வு நடாத்தப்படும். செயலமர்வு முடிகின்றபோது தலைமைகளைக் காணமுடியாதிருக்கும். அது மட்டுமன்றி களப்பயணங்களுக்கு மாணவர்களை ஆசிரியர்களை அழைத்துச் செல்கின்றவர்களும் இடைநடுவில் விட்டுவிட்டு கைகழுவி விடுகின்றவர்களும் உண்டு. ஆனால் வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள ஆசிரியர்கள் புண்ணியம் செய்தவர்கள். அவர்களுடைய மேலதிகக் கொடுப்பனவுகள், சம்பள உயர்வுகள், பென்சன் செல்கின்ற போது அவர்களுடைய அனைத்து விடயங்களையும் முடிவுறுத்தி அன்றைய தினமே பென்சன் கொடுப்பனவினையும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வலயக் கல்விப் பணிமனை இயங்கி வருகிறது.

எந்தவொரு ஆசிரியரும் வலயம் சென்று ஏன் எனது சம்பள உயர்ச்சி வழங்கப்படவில்லை. ஏன் எனது மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவில்லை போன்றவைகளை ஆசிரியர் நேராகச் சென்று கேட்பதுண்டு. ஆனால் அந்த தென்மராட்சி கல்வி வலயத்தில் எந்தவொரு ஆசியரும் இது சம்பந்தமான எவ்வேளையிலும் வலயப் பணிமனைக்குச் செல்லாமலே காரியம் அனைத்தும் முடிவு செய்யப்படும். நமது மண்ணில் அண்மையில் இளைபாறும் ஆசிரியர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தபோது அவர் கூறினார் நான் கடந்த ஆறுமாதமாக இந்தப் பணிமனைக்கு வருவதும் போவதுமாகவே இருக்கிறேன். என்னுடைய பென்சன் இன்னும் கிடைக்கவில்லை என்கிற பதில்கள்தான் வருகின்றன. என்று தன் ஆதங்கத்தைக் கூறினார். இவ்வாறான செயற்பாடுகளும், அதிகாரிகளின் நேர் முகாமைத்துவமும், ஆசிரியர்களின் விடாமுயற்சியும், தியாகத்தின் வெளிப்பாடுகளும் அமைந்திருக்கலாம் என எண்ணத் தோன்றியது.

எனவேதான், இன்றைய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் சிறந்த முறையில் கற்றுத் தேர்ச்சியடைந்து ஆரம்பத்திலிருந்தே தமக்குரியத்தான விடயங்களைப் பெற்று சிறந்த நற்பிரஜையாக உருமாற்றம்பெற நேர் வகுப்பறை செயற்பாடுகள், பிள்ளை நேயமிக்கதான மாணவர் அணுகுமுறைகள் சிறந்த பலனைத் தரும் என்பதில் நான் அறிந்த வகையில் கண்டுகொண்ட விடயமாகும். ஆதலால்தான் இந்தநேர் வகுப்பறை முகாமைத்துவமுடைய பாடசாலைகள் சிலவற்றை யாழ்ப்பான மண்ணில் பார்வையிடக் கூடியதாக இருந்தது. நீங்களும் சென்றுபார்வையிடுங்கள். இந்த பயணக் கட்டுரையை கடந்த ஐந்து வாரங்களாக எழுதியிருக்கிறேன். என் பயண அனுபவத்தையும், எனது கல்வித்தேடலையும் இணைத்து இக்கட்டுரைகளை வழங்கியிருந்தேன். மீண்டும் ஒரு அனுபவப் பகிர்வொன்றில் சந்திப்போம்.

முற்றும்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 18.08.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.